தமிழ் வினையடிகளின் வரலாற்று மொழியியல் ஆய்வு

A HISTORICAL LINGUISTIC ANALYSIS OF TAMIL VERBAL BASES

முனைவர் ச. இராசேந்திரன்

பணிநிறைவுற்ற பேராசிரியர்

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர்

தற்போது: பேராசிரியர்

அமிர்தா பல்கலைக்கழகம்

கோயம்புத்தூர்

பொருளடக்கம் **பக்கம்**

இயல் 1: முன்னுரை

இயல் 2: வினையடிகளின் வரலாற்று மொழியியலுக்கான தரவு தளம்

இயல் 3: மரபிலக்கணங்களில் வினையடிகள்

3.0 முன்னுரை

3.1 தொல்காப்பியத்தில் வினையடிகள்

3.2 வீரசோழியத்தில் வினையடிகள்

3.3 நேமிநாதத்தில் வினையடிகள்

3.4 நன்னூலில் வினையடிகள்

3.5 பிரயோக விவேகத்தில் வினையடிகள்

3.6 இலக்கணக்கொத்தில் வினையடிகள்

3.7 இலக்கண விளக்கத்தில் வினையடிகள்

3.8 தொன்னூல் விளக்கத்தில் வினையடிகள்

3.9 சுவாமிநாதத்தில் வினையடிகள்

3.10 முத்துவீரியத்தில் வினையடிகள்

3.11 சுருக்கவுரை

இயல் 4: வினையடிகள் பற்றிய முந்தைய ஆய்வுகள்

4.1 எல்.வி. இராமசாமியின் ஆய்வு

4.2 மு. வரதராசனின் ஆய்வு

4.3 வசு.ப. மாணிக்கத்தின் ஆய்வு

4.4 சிவதாணுவின் ஆய்வு

4.5 சுருக்கவுரை

இயல் 5: வினையடிகளின் பாகுபாடு

இயல் 6: வினையடிகளின் அசை அமைப்பு

இயல் 7: வினையடிகளின் சொற்பிறப்பியல்

இயல் 8: முடிவுரை

பின்னிணைப்பு: திராவிடச்சொற்பிறப்பு அகராதியல் வரும் வினையடிகளும்

சங்ககால நூற்களில் வரும் வினையடிகளும்

துணைநூல் பட்டியல்

இயல் 1
முன்னுரை

தமிழ் மொழியின் அமைப்பைப் பற்றி வரலாற்று மொழியியல் ஆய்வுகள் பல மேற்கொள்ளப்பட்டு வெளிவந்துள்ளன. இவற்றில் முக்கியமாகக் குறிப்பிடப் படவேண்டியன தெ.பொ.மீயின் A History of Tamil Language (Meenakshisundaram, 1961) மற்றும் சுலபில், கிளாசோவ், ஆண்ட்ரனோவ் ஆகியோர் எழுதிய Introduction to the Historical Grammar of Tamil Language (Part 1) ஆகும். இவை தமிழ் மொழியின் அமைப்பை வரலாற்று மொழியியல் நோக்கில் ஆய்கின்றன. கால்டுவெல்லின் ஒப்பிலக்கணம் தமிழ்மொழியின் அமைப்பை வரலாற்று மொழியியல் நோக்கில் ஆய்ந்து தருகின்றது. தமிழ் வினையடிகளைப் பற்றி பல ஆய்வுகள் முன்னரே மேற்கொள்ளப்பட்டு ஆய்வேடுகளாகவும் ஆய்வுக் கட்டுரைகளாகவும் வெளிவந்துள்ளன. மிக முன்னோடியான ஆய்வாக எல்.வி. ராமசாமி ஐயரின் "The Old Tamil Verb" (Ramasami Ayyar, 1939) என்ற கட்டுரையைக் குறிப்பிடலாம். வ.சுப. மாணிக்கத்தின் The Study of Tamil Verbs என்ற நூலும் முன்னோடியான ஆய்வாகும். பி.எஸ். சுப்பிரமணியத்தின் (Subrahmanyam, 1971) Dravidian Verb Morphology (A comparative Study) என்பதிலும் வரலாற்று மொழியியல் கோட்பாடு அடிப்படையில் தமிழ் வினைகள் ஆயப்பட்டுள்ளன. மிக முக்கியமாகக் குறிப்பிடப்படவேண்டிய ஆய்வு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டத்திற்காகச் சிவதாணுவால் அளிக்கப்பட்ட "A History of Early and Middle Tamil Verbal Bases" என்பதாகும். மீனாக்குமாரியின் (2004) முனைவர்பட்ட ஆய்வேடான "தமிழ் வினையடிகள்-ஓர் வரலாற்றுப்பார்வை" என்ற ஆய்வேடும் இங்குக் குறிப்பிடப்படவேண்டும். இவ்வாய்வுக்கு முன்னோடியாக அமைவது பிஎச். கிருஷ்ணமூர்த்தியால் எழுதப்பட்ட "Telugu Verbal Bases" என்ற ஆய்வாகும். இவ்வாய்வேடு அதன் தலைப்பின் அடிப்படையில் தெலுங்கு வினையடிகள் என்ற சுருங்கிய நிலையில் தெரிந்தாலும் உண்மையில் இது ஒருபடி முன்னேசென்று வரலாற்று மொழியியல் கோட்பாட்டு அடிப்படையில் திராவிட மொழிகளின் வினையடிகளாய்வு என்ற விரிந்த நிலையில் அமைகின்றது.

தற்போது எடுத்துள்ள ஆய்வு இரண்டு முக்கியமான நோக்கங்களைக் கருத்திற் கொண்டுள்ளது:

1. தமிழில் வினையடிகளைப் பற்றி இதுவரை வெளிவந்த ஆய்வுகளை விரிவாகத் தமிழில் தருவது.
2. தமிழ் வினையடிகளை வரலாற்று மொழியியல் அடிப்படையில் குறிப்பாக அக மீட்டுருவாக்கம் அடிப்படையில் ஆய்வது.

இயல் 2

வினையடிகளின் வரலாற்றுமொழியியல் ஆய்வுக்கான தரவுத்தளம்

தமிழ் வினையடிகளின் வரலாற்றுமொழியியல் ஆய்வுக்காக ஒரு தரவுதளம் (data base) உருவாக்கப்பட்டுள்ளது. இது தமிழ் வினையடிகள், (அவை ஏற்கும் கால ஒட்டுகள் அடிப்படையில்) அவற்றின் வகைப்பாடு, அவற்றின் பொருள், அவற்றின் காலம் (முன்பழந்தமிழ், பின் பழந்தமிழ், முன் இடைத்தமிழ், பின் இடைத்தமிழ்), அவை வரும் தமிழ் இலக்கியம், திராவிட சொல்பிறப்பு அகராதியில் (Dravidian Etymological Dictionary) அவற்றின் பதிவெண் என்ற தகவல்களைத் தரும். தகவல் மீட்புமூலம் வேண்டிய தகவல்களைப் பெறவியலும். இத்தகவல்தளத்திலிருந்து பின்வரும் தகவல்கள் அல்லது விளக்கங்கள் பெறப்படும்:

1. வினையடியின் வகுப்பு
2. சொல் மாற்றம்
5. பொருண்மை மாற்றம்
6. கடன்சொற்கள்
7. வினைச் சொற்களின் இழப்பு
8. மொழிக்குரிய இயல்பு வினைச் சொற்கள்
9. வடிவமாற்றம்
10. உருபொலியனியல் மாற்றம்
11. இலக்கண மாற்றம்

சீரான மற்றும் சீரற்ற வினையடிகள், சீரான மற்றும் சீரற்ற உருபொலியனியல் கொண்ட வினையடிகள் போன்ற தகவல்களும் பெறப்படும். புதிய வினைச்சொற்கள் பின்வரும் வழிகளில் பெறப்படுவதை அறியமுடிகின்றது:

- பெயர் அடிகளிலிருந்து புதிய வினைகள்
- பெயரடை அடிகளிலிருந்து புதிய வினைகள்
- செய்து அமைப்பொழுங்குள்ள வினை எச்சங்களிலிருந்து புதிய வினைகள்

- வடிவாக்க ஒட்டின் சேர்க்கை அல்லது இழப்பு அடிப்படையில் புதிய வினைகள் (பொருண்மை மாற்றத்துடன் சேர்க்கை, பொருண்மை மாற்றமில்லாமல் சேர்க்கை, வடிவாக்க ஒட்டின் இழப்பு, வடிவாக்க ஒட்டின் மாற்றம்)
- செயப்படுபொருள் குன்றிய வினைகளிலிருந்து புதிய செயப்படுபொருள் குன்றா மற்றும் காரணவினைகள்

இயல் 3

மரபிலக்கணங்களில் வினையடிகள்

3.0. முன்னுரை

தமிழ் மொழியில் வினைச் சொற்கள் மிக இன்றியமையாத பங்கு வகுக்கின்றன. வாக்கியத்தின் இன்றியமையாத உறுப்பாக வினைச்சொல் அமைந்துள்ளது. ஒரு சொற்றொடரை அமைக்கும் ஆற்றல் வினைச்சொல்லுக்கு உண்டு. வினை அல்லது தொழிலைக்குறிப்பிடும் சொல் வினைச்சொல் ஆகும். வினைச்சொல் சொல்நிலையில் காலம் ஏற்கும் வேற்றுமை ஏற்காது. வாக்கிய நிலையில் எழுவாயும் செயப்படுபொருளும் ஏற்று வரும். வினைச் சொல் திணை, பால், எண், இடம், காலம் உணர்த்தக் கூடியது. "கால இடைநிலைகளையும் பாலிட விகுதிகளையும் ஏற்கவல்லதாக அமைந்த சொற்களை வினைச்சொற்கள்" (பொற்கோ, 2002: ப.25) எனப் பொற்கோ வினைச்சொற்களுக்கு வரையறை விளக்கம் தருகின்றார் வினைச் சொற்களை மரபிலக்கணங்கள் பல வகைகளாகப் பாகுபடுத்துகின்றன. திரிபுற்ற வினைச் சொற்களைப் பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் எனப் பகுபத உறுப்புகளாக மரபிலக்கணங்கள் பிரிக்கும். பெரும்பாலும் ஏவலை உணர்த்த வினையடிச் சொற்கள் (பகுதி) பயன்படுத்துகின்றன. "இன்றைய தமிழில் இலட்சக்கணக்காண பெயர்ச்சொற்கள் இருக்க இரண்டாயிரத்திற்கும் குறைவாகவே வினைச்சொற்கள் உள்ளன என்றும், சங்கக்காலத்திலும் ஆயிரத்து நூறை ஒட்டியே வினைச்சொற்கள் காணப்படுகின்றன." (அகத்தியலிங்கம், 1982:18) என அகத்தியலிங்கம் குறிப்பிடுகின்றார். தொல்காப்பியத்தைத் தொடர்ந்து பல இலக்கண நூல்கள் வெளி வந்துள்ளன. அவற்றில் வினையடிகள் பற்றி இலக்கணநூலார் பல்வேறு கருத்துக்களைத் தருகின்றனர். வினைச்சொல் தொடரியலில் முதன்மை பங்கு வகிக்கிறது. தமிழ் மொழித் தொடர்கள் பொதுவாக வினையைப் பயனிலையாகக் கொண்டு முடிகின்றன. மொழியியலார் வினையை மொழியின் சொல்லியல் மற்றும் தொடரியல் அடிப்படையில் செயப்படுபொருள் குன்றாவினை (transtive verb), செயப்படுபொருள் குன்றியவினை (intranstive verb) எனப் பாகுபாடுத்துவர். பொருள் அடிப்படையில் மரபிலக்கணத்தார் வினைச்சொற்கள் ஒரு செயலினைக்காட்டும் பயனிலை எனக் கொள்வர். "Verbs were terms which could express action" (Lyons 1971:10) மேலை நாட்டு அறிஞர் பிளேட்டோ குறிப்பிடுவது நோக்கத்தக்கது.

பொருளடிப்படையில் மரபிலக்கணத்தார் வினையின் செயல்பாடு குறித்து வினைகளைத் தன்வினை, பிறவினை எனப் பாகுபாடு செய்துள்ளனர். இவ்வியலில் தொல்காப்பியம் முதல் வீரசோழியம் வரையிலான மரபிலக்கணங்கள் வினையடிகள் பற்றிக் கூறும் தகவல்களும் அவை குறித்து உரையாசிரியர்களின் தரும் கருத்துகளும் தொகுத்து ஆராயப்பட்டுள்ளன.

3.1 **தொல்காப்பியத்தில் வினையடிகள்**

தமிழ் மொழிக்குக் கிடைக்கப்பெற்றுள்ள முதல் இலக்கண நூல் தொல்காப்பியம் ஆகும். தொல்காப்பியார் சொல்லதிகாரத்தில் வினையியலில் வினைச் சொல் இலக்கணத்தைக் கூறுகின்றார். வடிவ அடிப்படையில் முற்று, எச்சம் என்று இருவகையாக வினை சொற்களைப் பாகுப்படுத்துகிறார். வினையடிகள் பற்றிய கருத்துக்கள் தொல்காப்பியத்தில் பல இடங்களில் கூறப்படுகின்றன. மேலும் வினையடிகள் பற்றிய விரிவான செய்திகளை உரையாசிரியர்கள் மூலமாகவும் அறிய முடிகின்றது. தொல்காப்பியத்தில் வினையடிகள் ஏவலை உணர்த்தியும் குறை வினையடிகளாகவும் பயின்று வருகின்றன. வினைச் சொற்களுக்கு இலக்கணம் கூறுகையில் வினைச் சொற்கள் வேற்றுமை ஏற்காமல் காலத்தைக் காட்டுவதாக அமையும் என்று தொல்காப்பியர் பின்வரும் நூற்பா வழி விளக்குகிறார்.

"வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங் காலை காலமொடு தோன்றும்" (தொல்.சொல்., 198)

பின்வரும் தொல்காப்பிய நூற்பா தன்வினை பிறவினை பற்றிய குறிப்புகளைக் காட்டுகின்றன.

"இது செயல் வேண்டுமென்னுங்கிளவி
இருவயி னிலையும் பொருட்டாகும்மே
தன்பா லானும் பிறன்பாலானும்" (தொல். சொல்., 243)

மேல்வரும் நூற்பா தொல்காப்பியம் தன்பால் எனத் தன்வினையையும் பிறன்பால் எனப் பிறவினையையும் குறிப்பிடுகின்றதை உணராலம். சேனாவரையர் தன்பால், பிறன்பால் என்பதற்குப் பின்வருமாறு விளக்கம் தருகிறார்.

"இது செயல் வேண்டும் என்பதுபடவருஞ்சொல் தன்பாலானும் பிறன்பா
லானும் என ஈரிடத்தும் நிலை பெறும் பொருண்மையை யுடைத்தாம்"
(தொல். சொல், 243, சேனா)

"தன் என்றது செயலது வினைமுதலே" என்று சேனாவரையர் கூறுகிறார். "ஓதல் வேண்டும் என்ற வழி வேண்டும் என்பது ஓதற்கு வினை முதலானாருக்கும், அவன் ஓதலை விரும்புந் தந்தைக்கும் ஏற்றவாறு கண்டு கொள்க" என்று தன்வினை, பிறவினை அமைப்பு பற்றி சேனாவரையர் கூறுகிறார். தொல்காப்பியர் எழுத்ததிகாரத்திலும் தன்வினை, பிறவினை பற்றிய தமது கருத்தினைக் கூறிச்செல்லுகின்றார். பின்வரும் நூற்பாவிற்கு உரை கூறும் இளம்பூரணர் உகரத்தோடு கூடிய பகரம் ஒரு மொழிக்கு இறுதி என்று கூறுகிறார்.

"உப்பகாரம் ஒன்றென மொழிப
இருவயி னிலையும் பொருட்டாகும்மே" (தொல். எழுத்து., 76)

"அதுதான் தன்வினை, பிறவினை என்னும் இரண்டிடத்தும் நிலைபெறும் பொருண்மைத்தாம்" என்று கூறுகிறார். இளம்பூரணர் தன்வினை, பிறவினை அமைப்பு பற்றி எழுத்ததிகாரத்தில் விளக்கிக்காட்டுகிறார். "*தடு* என்பது 'நீ சா' என்று படுத்துச் சொல்ல தன் வினையாகவும், அதனை எடுத்துச் சொல்ல 'நீ ஒன்றனைச் சாவி' எனப் பிறவினையாம் வரும்." (தொல்.எழுத்து. 76, இளம்). வினையைத் தான் செய்தால் தன்வினை, பிறரைச் செய்வித்தால் பிறவினை என்ற மு.வரதராசன் கூற்றுக் குறிப்பிடத்தக்கது.

தொல்காப்பியர் மூவிடத்திற்கு உரிய விகுதிகளைக் விளக்குகையில் -*இ*,- *ஐ*, -*ஆய்* என்ற மூன்று விகுதிகளை முன்னிலை ஒருமைக்குச் சான்றாகக் காட்டுகிறார். இவற்றில் -*ஆய்* என்னும் விகுதி வினையடிகளோடு வரும்பொழுது 'செய்' என்னும் வினையடிப் பொருளையே உணர்த்துகின்றது (செய்-ஆய் = செய்யாய்) என்கிறார். இது பின்வரும் தொல்காப்பிய நூற்பாவால் விளங்கும்.

"செய்யா என்னும் முன்னிலை வினைச்சொல்
செய்யென் கிளவி யாகிடன் உடைத்தே" (தொல். சொல்., 450)

இந்நூற்பாவின் படி செய்யாய் வகை வினை வடிவங்கள் ஈற்றில் வரும் -ஆய்- விகுதி கெட்டு *உண், தின், நட, தா, வா, போ* என வினையடிச் சொற்களாய் நிற்கும்.

உண்ணாய் தின்னாய் நடவாய் தாராய் வாராய் போராய்	(-ஆய்- விகுதி கெட்டு) ->	உண் தின் நட தா வா போ

ஈ, தா, கொடு என்ற ஒருபொருள்பன்மொழிகளைப் பயன்படுத்துவதிலுள்ள சூழல் கட்டுப்பாடுகளை தொல்காப்பியர் பின்வரும் நூற்பாக்களில் கூறுகின்றார். *ஈ* என்ற வினையை இழிந்தோன் (இரப்போன்) உயர்ந்தவனிடம் பயன்படுத்தவேண்டும் என்றும் "*தா* என்ற வினையடிச் சொல்லை ஒப்பானவர்கள் பயன்படுத்துவர்" (சேனாவரையர்) என்றும் *கொடு* என்ற வினையடியை உயர்ந்தோர்கள் பயன்படுத்த வேண்டும் என்றும் வினையடிச் சொற்களின் தேர்வுக்கட்டுப்பாட்டை இரப்போன், ஒப்போன், மிக்கோன் போன்ற மூவகையினருக்கும் வரையறுக்கிறார்.

"ஈ தா கொடுவெனக் கிளக்கும் மூன்றும்
இரவின் கிளவி ஆகிடன் உடைய" (தொல். சொல்., 444)
"ஈயென் கிளவி இழிந்தோன் கூற்றே" (தொல். சொல்., 445)
"தாவென் கிளவி ஒப்போன் கூற்றே" (தொல். சொல்., 446)
"கொடுவென் கிளவி உயர்ந்தோன் கூற்றே" (தொல். சொல்., 447)

இவ்வாறு *ஈ, தா, கொடு* என்ற மூன்று வினையடிகள் தொல்காப்பியர் காலத்தில் ஒரே பொருண்மையோடு (ஒருபொருள்பன்மொழிகளாக) ஆனால் வேறுபட்ட பயன்பாட்டுடன் வழக்கில் இருந்ததை மேற்காணும் நூற்பாக்களின் வழி அறிய இயலுகின்றது.

3.2. வீரசோழியத்தில் வினையடிகள்

கி.பி 11-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஐந்திலக்கண நூலான வீரசோழியம் என்பதன் ஆசிரியர் புத்தமித்திரனார் அதன் தாதுபடலத்தில் வினையடிகள் பற்றிய தகவல்களைக் கூறுகின்றார். *சர, பச* என்ற வடமொழித் தாதுகளுக்கு நிகராகத் தமிழில் முன்னிலை ஏவல் ஒருமைச் சொற்களைப் படைத்துக்கொள்ளப் பின்வரும் நூற்பாவில் கூறுகின்றார்.

"மன்னிய சீர்வட நூலிற் சரபச வென்றுவந்து
துன்னிய தாதுக் களின்பொலி போலத் தொகுதமிழ்க்கும்
பன்னிய தாதுக் களைப்படைத் துக்கொள்க முன்னிலையின்
உன்னிய வேவ லொருமைச்சொற் போன்று கிற்கொக்கவே " (வீரசோ., 60)

"சரவென்னுந் தாதுவின் பொருட்போலியும், பச என்னுந்தாதுவின் பொருட்போலியும் போல, *நட* என்பதும் *அடு* என்பதுமாம். அப்பரிசே கிடந்தன எண்ணிறந்த தாதுக்களுளவாதலால் தமிழினுக்கும் *நட, அடு* என்னும் இவை முதலாகிய தாதுவாய் அவை முன்னிலை இடனில் ஏவற்பொருளில் ஒருமைப்போலி போன்றன. *நட* என்பது ஒருவனை *நட* என்றும் *அடு* என்றது ஒருவனை *அடு* என்றும் ஏவினாற் போன்றது" என்று நூற்பா 60-இன் உரை கூறுகின்றது.

புத்தமித்திரனார் வினையடிச் சொற்கள் சிலவற்றைப் பட்டியலிட்டுக் கூறுகின்றார். *நட, அடு, செய், பண்ணு, போ, சிந்து, நவில், உண், இரு, கிட, விடு, கூறு, பெறு, கொள், அழை, வாழ், கிளை, வெல், கட, நடு, தங்கு, கசி, ஒசி, பூசு, மிகு, புகு, செல், இடு, முடி, ஏந்து, கொல்* போன்றவற்றை வினையடிகளாகக் கீழ்வரும் நூற்பா மூலம் தெளிவுபடுத்துகிறார்.

"நடவடு செய் பண்ணுபோ சிந்த நாவிலுண்ணிரு
கிடவிடு கூறு மெறுமறு கொள்ளழை வாழ், கிளைவெல்
கடநடு தங்கு கசியொசி பூசு மிகு புகுசெல்
இடுமுடி யேந்து கொல் இவ்வண்ண மற்ற மியற்றிக் கொள்ளே" (வீர. சோ., 61)

தன்வினை, பிறவினை பற்றிய செய்திகளைத் தருகையில் தன்வினையைக் கேவலத் தாது என்றும் பிறவினையைத் காரிதத்தாது என்றும் குறிப்பிடுகின்றார். *இட்டு, ஆற்று, தீற்று* இவை காரித தாதுக்களாம். இதில் *ஆடு* என்பது கேவலத்தாது (தன்வினை) *ஆட்டு* என்பது 'செய்வி' என்னும் பொருண்மேல் ஏற்றிக் கூறினால் அது பிறவினையாகும் என்பது குறிக்கப்படுகிறது.

ஆடினான் - கேவலத் தாது (தன்வினை)
ஆட்டினான் - காரிதத்த் தாது (பிறவினை)

இவற்றின் பின்பு *வி, பி* என்னும் விகுதிகள் சேர்ந்தால் அவை காரிதத் தாதுவாகின்றன (எ.கா. *வார்ப்பிப்பி, உண்பிப்பி, தின்பிப்பி)*.

3.3. நேமிநாத்தில் வினையடிகள்

கி.பி 12-ஆம் நுற்றாண்டைச் சேர்ந்த நேமிநாதம் எழுத்து, சொல் ஆகிய இரண்டிற்கும் இலக்கணம் கூறும் நூலாகும். தமிழ் இலக்கண வரலாற்றில் வீரசோழியத்தை அடுத்துத் தோன்றியது நேமிநாதம் ஆகும். இந்நூலில் எழுத்ததிகாரம் வீரசோழியத்தையும் சொல்லதிகாரம் தொல்காப்பியத்தையும் அடியொற்றி எழுதப்பட்டுள்ளது. நேமிநாதத்தில் வினையடிகள் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. வினையின் இலக்கணம் கூறுகையில் வினைச்சொற்கள் காலம் ஏற்று வரும் என்றும் முற்று, எச்சம் என்ற இருவகையில் இருதிணை ஐம்பால், முவிடத்திற்கும் உரித்தாய் வரும் (எ.கா. *உண்மின், உண்பீர், உண்ணா நின்றீர்)* என்றும் பின்வரும் நூற்பா விளக்குகிறது.

"இறப்பு நிகழ்வெதிர்வாங் காலங்கள் ஏற்றும்
குறிப்பும் உருபேற்றல் கூடாத் திறத்தவுமாம்
முற்றெச்ச மென்றிரண்டில் முவகைத்தாய் முன்றிடத்து
நிற்கும் வினைச்சொற்கள் நேர்ந்து" (நேமி., 67)

மேலும் வினையெச்சங்களான *செய்து, செய்யா, செய்பு* போன்ற சொற்கள் வினையடிப் பொருளையே உணர்த்தும் என்று நேமிநாதம் உரைக்கின்றது. சான்றாக *உண்ணா வந்தான், உண்குடி வந்தான்* போன்றவற்றுள் *உண்* என்பது வினையடிச் சொல்லாகும். *செய்யும்* என்ற

பெயரெச்ச சொல் இறுதி உகரம் மெய்யொடு கெட்டுச் *செய்* வினையடிப் பொருளையே உணர்த்தும் என்று நேமிநாதம் கூறுகின்றது.

3.4. நன்னூலில் வினையடிகள்

பவணந்தி முனிவரால் கி.பி.13-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட நன்னூல் எழுத்து, சொல் இரண்டிற்கும் இலக்கணம் கூறும் நூலாகும். நன்னூல் வினையின் இலக்கணத்தைப் பின்வரும் நூற்பா மூலம் விளக்குகின்றது.

"செய்பவன் கருவி நிலம்செயல் காலம்
செய்பொருள் ஆறும் தருவது வினையே" (நன்., 320)

வினையைச் செய்பவன் (கருத்தா), கருவி, இடம், செயல், காலம், செய்பொருள் (செயப்படுபொருள்) இவை அனைத்தையும் தருவது தெரிநிலை வினை என்று வினைக்குப் பவணந்தி முனிவர் இலக்கணம் கூறுகின்றார். மேலும் வினையைத் தெரிநிலைவினை, குறிப்புவினை என்று இரண்டு வகைப்படுத்திக் கூறுகின்றார்.

தொல்காப்பியத்தின் வழிநூல் என்று நன்னூல் கருதப்படுகிறது. இந்நூலைப் பவணந்தி முனிவர் இளம்பூரணர் உரையை ஒட்டி எழுதியுள்ளார். நன்னூல் வினைச்சொற்களின் தன்மையைச் சிறப்பானதாகக் கூறுகிறது. பவணந்தி முனிவரின் பகுப்பு தன்வினை, பிறவினை அல்லது செயப்படுபொருள் குன்றியவினை குன்றாவினை என்ற அடிப்படையில் அமையாமல் மொழியின் ஈற்றெழுத்து அடிப்படையில் அமைந்துள்ளது. நன்னூல் தமிழ் வினையடிகளை மொழியீற்று எழுத்து அடிப்படையில் தொகுத்துச் சுட்டியுள்ளது. மேலும் மொழியீற்றில் வரும் உயிர்மெய் எழுத்துக்களை அகர நிரல் அடிப்படையில் நிரல்படுத்திக் கூறுகிறது. எல்லா வகையான வினையடிகளையும் இவற்றுள் அடக்கினாலும் எவை எவை கால இடநிலை ஏற்கும் தன்மையில் ஒன்றுபடுகின்றன என்பதை அறியமுடியாது. *நட, வா, மடி, சீ, விடு, கூ, வே, வை, நொ, போ, வெள, உரிஞ், உண், பொருந், திரும், தின், தேய், பார், செல், வவ், வாழ், கேள், அ.:கு* என்ற இருபத்து மூன்று வகையான வினையடிகளின் தொகுப்பினைப் பின்வரும் நூற்பாவில் சுட்டுகிறார்.

"நட வா மடிசீ விடுகூ வேவை

நொப்போ வெளவுரிஞ் உண்பொருந் திருந்தின்
தேய்பார் செல்வவ் வாழ்கேள் அ.ஃகென்று
எய்திய இருபான் முன்றாம் ஈற்றவும்
செய்யென் ஏவல் வினைப்பகாப் பதமே" (நன்.,137)

இவர் *எ* தவிர பிற பதினொன்று உயிரும் மொழியீற்றில் (வினையடிகளின் ஈற்றில்) வரும் என்கின்றார்.

வ.எண்	**ஈறு**	**ஒலிப்பு விளக்கம்**	**ஏடுத்துக்காட்டு**
1	அ	கீழ் இதழ் விரி நடு உயிர் குறில்	நட
2	ஆ	கீழ் இதழ் விரி நடு உயிர் நெடில்	வா
3	இ	மேல் இதழ் விரி முன்னுயிர் குறில்	மடி
4	ஈ	மேல் இதழ் விரி முன்னுயிர் நெடில்	சீ
5	உ	மேல் இதழ் குவி பின்னுயிர் குறில்	விடு
6	ஊ	மேல் இதழ் குவி பின்னுயிர் நெடில்	கூ
7	ஏ	உயர்ந்த இடை இதழ் விரி முன்னுயிர் நெடில்	வே
8	ஐ	ஒத்த குற்றெழுத்தை தவிர்த்தும், இரு ஒலியென்களைப் பெற்றுள்ளன அ+ய்	வை
9	ஒ	இடை இதழ் குவி பின்னுயிர் குறில்	நொ
10	ஓ	இடை இதழ் குவி பின்னுயிர் நெடில்	போ
11	ஔ	ஒத்த குற்றெழுத்தை தவிர்த்தும், இரு ஒலியென்களைபெற்றுள்ளன அ+வ்	வௌ

மொழியீற்றில் (வினையடிகளின் ஈற்றில்) வரும் மெய்யெழுத்துக்களில் மெல்லெழுத்துகள் ஐந்திற்கும் இடையெழுத்துகள் ஆறினுக்கும் மொழியீற்றில் வராத ஆய்தத்திற்கு ஆய்தத்தொடர் குற்றியலுகர ஈற்று வினையடி ஒன்றுக்கும் பவணந்தி முனிவர் சான்றுகளைத் தருகின்றார்.

வ. எண்	**மெய்ஈறு**	**ஒலிப்பு விளக்கம்**	**ஏடுத்துக்காட்டு**
1	ஞ்	இடையண்ண ஒலி (Palatal)	உரிஞ்
2	ண்	பின் நுனியண்ண நாவளை ஒலி (Black Alveolar)	உண்

3	ந்	பல் ஒலி (Dental)	பொருந்
4	ம்	ஈரிதழ் ஒலி (Bilabial)	திரும்
5	ன்	நுனியண்ண ஒலி (Alveolar)	தின்
6	ய்	இடையண்ண ஒலி (Palatal)	தேய்
7	ர்	நுனியண்ண ஒலி (Alveolar)	பார்
8	ல்	நுனியண்ண ஒலி (Alveolar)	செல்
9	வ்	பல்லிதழ் ஒலி (Labio Dental)	வவ்
10	ழ்	பின் நுனியண்ண நாவளை ஒலி (Back Alveolar))	வாழ்
11	ள்	(பின் நுனியண்ண நாவளை ஒலி (Back Alveolar))	கேள்
12	∴	-	அ∴கு

பின்வரும் நூற்பாவில் ஈரேவல் பற்றி நன்னூல் கூறுகிறது.

"செய்யென் வினைவழி விப்பி தனிவரின்
செய்வியென் ஏவல் இணையின் ஈரேவல்" (நன்.,138)

வினையடிச் சொற்கள் பெரும்பாலும் ஏவலை உணர்த்துகின்றன. *செய்* என்ற தனிவினையோடு *வி, பி* இரண்டும் சேர்ந்தால் அது ஈரேவலாக அமையும்.

எ.கா.
செய் + வி > செய்வி
நட + பி > நடப்பி

மேலும் நன்னூலார் ஏவலின் கீழ் காரணவினையைக் கொண்டு வருகிறார். "ஏவலின் கீழ்க் காரணவினையைக் கூறுகின்ற நன்னூல் ஏவலை மூன்று வகையாகப் கூறுகின்றது" என்று சித்திரபுத்திரன் (சித்திரபுத்திரன், 1981, ப.47) கூறுகின்றார்.

எ.கா.
1 நட, வா } செய் ஏவல்

2 நட – ப்பி
வரு – வி } செய்வி ஏவல்

3 நட – ப்பிப்பி
வரு – விப்பி } ஈரேவல்

காரண வினைகள் விகுதிகளின் இணைவாலும் துணை வினைகளின் இணைவாலும் உருவாக்கப்படுகின்றன. முதல் வகை வினைகள் சொல்லியல் வரம்பிற்கும் இரண்டாவது வினைகள் தொடரியல் வரம்பிற்கும் உட்பட்டவை.

எ.கா.

1. சொல்லியல் காரண வினைகள்

செய்வி _ (= செய் + வி)
படிப்பி – (= நட + த்து)

2. தொடரியல் காரண வினைகள்

செய்ய – வை
படிக்க – வை
நடக்க – வை

3.5. பிரயோகவிவேகத்தில் வினையடிகள்

சுப்ரமணியத் தீட்சிதரால் பதினேழாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட இலக்கண நூல் பிரயோகவிவேகம் ஆகும். பிரயோகவிவேகம் என்பது 'மொழிக்கு உறுப்பாகிய சொற்களைப் பொருட் சிறப்பு ஒளிர நெறியறிந்து பொருத்தப் பயன்படுத்தும் அறிவு தரும் நூல்' என்று பொருள்படும். இந்நூல் சொல்லிலக்கணத்தில் கூடுதல் கருத்தூன்றி அதைப் பற்றி விளக்கம் தருகின்றது. சமஸ்கிருதத்திற்கும் தமிழுக்கும் அடிப்படை வேறுபாடுகள் பல இருப்பினும் இலக்கணக்கூறுகளில் பல ஒன்றுபடுவதைச் சுப்பிரமணிய தீட்சிதர் ஆய்ந்து விளக்கியுள்ளார்.

பிரயோக விவேகம் வினையடிகள் பற்றி தரும் செய்திகள் இங்குக் கருத்தில் கொள்ளப்படவேண்டும். செயப்படுபொருள் குன்றிய வினைகளைச் 'சகன்மகம்' என்றும் செயப்படுபொருள் குன்றா வினைகளை 'அகன்மகம்' என்றும் பிரயோக விவேகம் குறிப்பிடுகின்றது. இதனைப் பின்வருமாறு காரிகை உரைக்கின்றது.

"முன்னிலை ஏவல் ஒருமைச்சொல்
போலும் முதல் நிலைகள்
இன்னிலைத் தாது பகுதி என்றாம்
செப்பு இளமுலையாய்!
அந்நிலைத்தாது சகன் மகத்தோடும்
அகன்மகமாய்
பின்னிலை விபி – வரின் காரிதம்
எனப் பேர் பெறுமே" (பிர.விவே., 35)

முதனிலைத் தொழிற் பெயர்கள் தாது எனவும் பிரிகிருதி எனவும் பெயர் பெறும் அவை சகன்மகத்தாது, அகன் மகத்தாது எனவும் *வரவி, நடப்பி* என *வி, ப்பி* என்பதோடு சேர்ந்து காரிதம் எனவும் பெயர் பெறும்.

இந்நூல் வீரசோழியம் போன்று கேவலத் தாது என்று தன்வினையையும் காரிதத்த் தாது என்று பிறவினையையும் கூறுகின்றது. கீழ்க்கண்டவாறு தன்வினை, பிறவினைகளுக்குச் சான்றுகள் காணப்பெறுகின்றன.

தன்வினை	**பிறவினை**
ஒழுகு	ஒழுக்கு
உண்	ஊட்டு
கூடு	கூட்டு
தேறு	தேற்று

3.6. இலக்கணக் கொத்தில் வினையடிகள்

பதினேழாம் நூற்றாண்டில் சுவாமிநாத தேசிகரால் எழுதப்பட்ட எழுத்துக்கும் சொல்லுக்கும் இலக்கணம் கூறும் நூல் இலக்கணக் கொத்து ஆகும். இந்நூல் சொல்லுக்கு முக்கியத்துவம் தருகின்ற நூலாகும். வடமொழி செல்வாக்குத் தமிழ் இலக்கண, இலக்கியங்களில் மிகுந்திருந்தமையால், வடமொழிச் சொற்கள் இந்நூலில் மிகுதியாகப் பயின்றுவந்துள்ளன. இதனை "வடமொழிக் கருத்துகளைக் கூறினாலும் தமிழாக்கிக் கூறவேண்டும் என்று எண்ணியும் அறிஞர்களிடையே வழங்கி வந்த கருத்துக்களைத் தொகுத்துக் கூறவேண்டும் என்று நினைத்துச் சாமிநாத தேசிகர் இந்நூலை இயற்றியிருக்க வேண்டும்" என்று செ.வை. சண்முகம் (செ.வை. சண்முகம், ப.130,1985) கூறுகின்றார்.

இந்நூல் தொடர்வினை, தன்வினை, பிறவினை, செய்வினை, செயப்பாட்டுவினை முதலிய பல்வேறு வினை வடிவங்களுக்கு விளக்கம் கூறுகின்றது. இலக்கணக்கொத்து வினையடிகள் பற்றிய செய்திகளைப் பிற இலக்கண நூல்களை விட மிகுதியாகத் தருகிறது.

வினைச்சொற்கள் பெயர், வினை, இடை, உரி, பண்பு முதலியவற்றின் அடியாகத் தோன்றும். இவ்வினைச் சொற்களை முதனிலை, தொழிற்பெயர், முற்று, எச்சம் என்ற பகுப்பு முறையில் அடக்கலாம். முதனிலை வினையோடு விகுதி முதலியவை சேர்ந்தால் தொடர்வினையாக மாறும் என்பதைக் கீழக்காணும் நூற்பா தெரிவிக்கின்றது.

"தனிவினை தொடர்வினை என இரு வினையிலும்
நடவா முதலிய முதல்நிலைத் தனிவினை
விகுதிமுத லானவை கூடின தொடர்வினை" (இல.கொத்., 65)

நட, வா முதலிய முதனிலை வினைகள் விகுதி முதலியவை சேர்ந்தால் தொடர் வினையாகின்றன. இத்தொடர்வினையை இலக்கணக் கொத்து, பத்து வகையாகப் பாகுபாடு செய்கின்றது. முதனிலைத் தனிவினை செயப்படுபொருள் குன்றியும் குன்றாமலும் இயல்பாகவும் வரும்.

"முதல்நிலைத் தனிவினை
செயப்படு பொருள்குன் றாமையும் குன்றலும்
பொதுவும் இடங்குன் றாமையும் ஆதல்" (இல.கொத். 66)

என்று, விடு, ஏ, வை, வௌ, உண், தின், பார், கேள் என்ற வினைச்சொற்களில் செயப்படுபொருள் குன்றாமல் வந்துள்ளது. *முடி, மடி, போ, வாழ்* என்பனவற்றில் பொதுவாக வந்துள்ளது.

சாமிநாததேசிகர் தொடர் வினையைப் பதினைந்து வகைகளாகவும் தனிவினையைப் பத்து வகைகளாகவும் பகுத்துக் கூறியுள்ளார். தன்வினை, பிறவினை இரண்டையும் பொதுவினை என இந்நூல் கூறுகின்றது.

"தொடர்வினை
தன்வினை பிறவினை அவ்விரு வினைப்பொது ஆகும்" (இல.கொ., 67)

பெயர், வினை, இடை, உரி இவை நான்கையும் அடிப்படையாகக் கொண்டு வினை பிறக்கும் என்று இலக்கணக்கொத்து கூறுகின்றது. இதனைப் பின்வரும் நூற்பாவால் அறியமுடிகிறது.

"பெயர்வினை இடைஉரி நான்குஅடி யானுட
பிறக்கும் வினைஎனப் வேசுவர் புலவர்
பண்பு அடி முதலாப் பலவும் பகர்வர்
அவை இவை யுள்ளே அடங்கும் என்க" (இல.கொத்., 70)

சான்றாக *நட, நடத்தல், நடந்தான், நடந்த சாத்தன், நடந்து வந்தான்* என்ற ஐந்தும் வினையடியாகப் பிறந்த வினை ஆகும்.

3.7. இலக்கண விளக்கத்தில் வினையடிகள்

இலக்கண விளக்கம் கி.பி 17-ஆம் நூற்றாண்டில் எழுந்த ஐந்திலக்கண நூலாகும். இந்நூல் தொல்காப்பியத்தையும் நன்னூலையும் ஒட்டி எழுதப்பட்டுள்ளது. வைத்தியநாததேசிகரால் எழுதப்பட்ட இந்நூல் அளவு கருதிக் 'குட்டித் தொல்காப்பியம்' என்ற சிறப்புப் பெயரும் பெறுகிறது. மரபு நிலையால் தொல்காப்பியத்தையும் சூழ்நிலையால் பிற இலக்கண நூல்களையும் தழுவி எழுதப்பட்டுள்ளது. வினையின் பொது இலக்கணத்தைப் பின்வரும் நூற்பா கூறுகிறது.

"வினையெனப்படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங் காலை காலமொடு தோன்றிப்
பொருட்புடை பெயர்ச்சி புலப்படும் பதுவே" (இல.விள.,227)

மேற்கண்ட நூற்பா தொல்காப்பியத்தை ஒட்டி அமைந்துள்ளது. வினைச்சொல் வேற்றுமை ஏற்காது. காலத்தை உணர்த்திப் பொருளது புடைபெயர்ச்சியை விளக்குவதாக அமையும் என இந்நூற்பாவால் அறியலாம். சான்று: உண்டனன், உண்ணா நின்றனன், உண்பன்

வினைச்சொல் முதனிலையடியாகத் தோன்றுகிறது என்பதைப் பின்வரும் நூற்பாவால் விளக்குகின்றார்.

"முன்ன ரிசைத்த முதனிலை யவற்றா
னின்ன வினைச்சொ லியலுத லுடைத்தே" (இல.விள., 228)

வினையின் பொது இலக்கணம் கூறும் இந்நூல் வினையடிச் சொற்களை நன்னூல் போலவே அகர நிரல் அடிப்படையில் வரிசைப்படுத்திக் கூறுகின்றது. இதைப் பின்வரும் நூற்பா உணர்த்தி நிற்கின்றது.

"நட வா மடி சீ வடு கூ வேவை
.....
றின்னலை முதல வெல்லா வினையுந்
தெரிநிலை வினையின் முதனிலை யாகும்" (இல. விள., 43)

இந்நூற்பாவில் இருபத்து மூன்று வினையடிச் சொற்களைப் பட்டியலிடுகின்றார். இது நன்னூலைப் பின்பற்றியே எழுதப் பெற்றுள்ளது. ஏவல் வினை பற்றிக் குறிப்பிடும் வைத்தயநாத தேசிகர் வினையடிச் சொற்களோடு *–வி, –பி* என்ற விகுதிகள் இணையுமாயின் அவை ஈரேவலாக வரும் என்று நன்னூலை ஒட்டியே கூறியுள்ளார். ஏவல் பற்றிய இலக்கண விளக்கத்தைப் பின்வருமாறு இந்நூலின் உரை குறிப்பிடுகின்றது.

"உயிரீறு பதினொன்றும் ஒற்றீறு பதினொன்றுந் தன்வினையும்
பிறவினையுமாகிய இருவகைக் குற்றுகரவீறு ஒன்றுமாகிய
இருபத்து முன்று ஈற்றவாகிய இவ்வியல்பினவற்றை.முதலாக
வுடையவாய் அவ்வாறு வரும் மேற்கூறிய பகுதிகளின்
இறுதிக்கண் வகர இகரமும் பகர இகரமுமாகிய இரண்டனுள்
ஏற்பது தனியே வந்து இசையுமாயின் அவற்றை ஏவல் வினை
முதலான் நிகழ்த்தப்படுந் தெரிநிலை வினைமுதற்றுப்
பகுபதத்தினுடைய பொருந்திய பகுதிகளாமென்று கூறுவர்" (இல.விள.,44)

சான்றாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்:

நட - நடப்பித்தான்
மடி - மடிவித்தான்
சீ - சீப்பித்தான்
விடு - விடுவித்தான்

இந்நூல் விளக்கவியல், வரலாற்றியல், ஒப்பியல் என்னும் மொழியியற் பிரிவுகள் மூன்றும் விரவ விளக்குகிறது என்று சொ.சிங்காரவேலன் (சொ.சிங்காரவேலன்,ப.55,1985) குறிப்பிடுகின்றார்.

3.8. தொன்னூல் விளக்கம்

வீரமாமுனிவரால் கி.பி. பதினெட்டாம் நுற்றாண்டில் எழுதப்பட்ட ஐந்திலக்கண நூல் தொன்னூல் விளக்கம் ஆகும். வினை இலக்கணம் கூறும் வீரமாமுனிவர் முதலில் வினையின் அமைப்பு பற்றியும் பிறகு இறப்பு, நிகழ்வு, எதிர்வு என முக்காலத்தையும் உணர்த்தும் முற்றுவினை, ஏவல் முற்றுவினை, வியங்கோள் முற்றுவினை என்ற மூவகை வினைமுற்றுக்கள் பற்றியும் கூறுகின்றார். இந்நூல் இருவகை எச்சம் பற்றியும் குறிப்புவினை பற்றியும் பின்வரும் நூற்பாவால் விளக்குகிறது.

"வினைமுற்று ஒருமூன்று எச்சம் இரண்டு
வினைக்குறிப்பு என இவை வினையின் வகுப்பே" (தொன்.விள., 103)

"வீரமாமுனிவர் சொல்லை, மொழி, பதம் என்று இரண்டாகப் பிரிப்பது புதுமையானது. இப்பாகுபாடு மொழி ஆராய்ச்சியில் ஏற்பட்ட வளர்ச்சியையே காட்டுகிறது" என்று கருணாகரன் (கருணாகரன், 1987: 64,) கூறுவது குறிப்பிடத்தக்கதாகும். வீரமாமுனிவர் வினைமுற்றுச் சொற்களெல்லாம் பகுபதம் என்றும் *நட, வா* போன்ற ஏவல் வினைப் பகாபதங்களே பகுதிகள் என்றும் குறிப்பிட்டு வினைமுற்று விகுதிகள் பலவற்றையும் சுட்டிக்காட்டுகிறார். ஏவலை உணர்த்தக்கூடிய *ஈ, தா, கொடு* என்ற வினையடிச் சொற்கள் முறையே இழிந்தோன், ஒப்போன், மின்கோன் ஆகியோர்கள் பயன்படுத்தும் கூற்றாக அமைகின்றது என்கிறார்.

"ஈதா கொடு எனும் மூன்றும் முறையே
இழிந்தோன் ஒப்போன் மிக்கோன் இரப்பு உரை" (தொன். விள., 115)

வரல், தரல், கொடை, செலல் என்ற சொற்களை முறையே மரபு வழியே விளக்குகின்றார். இச்சொற்கள் *வா, தா, கொடு, செல்* என்ற வினையடிப் பொருளை உணர்த்தும். இவை முவிடத்திற்கும், *வரல், செலல், கொடை* என்பன படர்க்கைக்கு மட்டுமே வரும் என்று வீரமாமுனிவர் கூறுகிறார்.

"வரல் தரல் முவிடம் மருவுதற்கு உரிய
செலல் கொடை சேரும் படர்க்கை ஒன்றே" (தொன். விள., 122)

என்ற நூற்பாவால் அறியலாம். ஏவல் வினை பற்றித் தெளிவாகக் கூறும் நூல் இதுவேயாகும். தொன்னூல் விளக்கம் மேற்கூறியவாறு வினையடிகள் பற்றிய செய்திகளைக் கூறுகிறது.

3.9. சுவாமிநாதத்தில் வினையடிகள்

சுவாமி கவிராயரால் பத்தொன்பதாம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட ஐந்திலக்கண நூல் சுவாமிநாதம் ஆகும். இந்நூல் நன்னூலைப் போலவே மொழி ஈற்று எழுத்துக்களின் அடிப்படையில் வினையடிச் சொற்களைப் பட்டியலிட்டுக் கூறுகின்றது.

"புல்லும் நட வா மடிசீ விடு கூ வேலை நொப்
போ வெள வொடு எய் உரிஞ் உண், பொருந் திருந்தின், தேய்பார்

செல் வவ் வாழ் கேள் அ! இருபான் மூன்று; ஈற்றிற்
சேர்த்த முன்னிலை ஈண்டு தெரிநிலையின் வினைக்கே
சொல் பகுதி; வினை மரபிற் பிறவினைக்கு என்வகையாகச்
சொல்லும் ஈரேவலின் வினைக் குப்பகுதியாம் பொருளே
நல்லிடங் காலஞ்சினையே குணந்தொழில் என்றா
நாட்டுவினைக் குறிப்பின் வரும் பகுதியெனக் கொளுமே" (சுவாமி.24)

பிறவினை, ஈரேவல், ஏவல்வினை என்பன பற்றி இந்நூற்பா குறிப்பிடுகின்றது. தனிவினை, தொடர்வினை என இருவகையான வினையமைப்பைப் பற்றிச் சுவாமிநாதம் குறிப்பிடுகின்றது. சுவாமிநாதம் முதனிலையைத் தனிவினை என்றும் ஏனையவற்றைத் தொடர்வினை என்றும் கூறுகின்றது. மேலும் செய்வினை, செயப்பாட்டுவினை, தன்வினை, பிறவினை, உடன்பாட்டுவினை, எதிர்மறைவினை, முதல்வினை, சினைவினை என்று வினைகளை வகைப்பாடு செய்கின்றது.

3.10. முத்துவீரியத்தில் வினையடிகள்

முத்துவீரியம் பத்தொன்பதாம் நூற்றாண்டில் எழுந்த ஐந்திலக்கணம் கூறும் நூலாகும். இந்நூல் சொல்லதிகாரத்தில் தொல்காப்பியச் சொல்லதிகாரக் கருத்துக்களைப் பெரும்பான்மையாகவும் நன்னூலைச் சிறுபான்மையாகவும் தழுவி அமைந்துள்ளது. வினையின் இலக்கணத்தைத் தொல்காப்பியம் போலவே இந்நூலும் கூறுகின்றது. வினையைத் தெரிநிலை, குறிப்பு, முற்று, எச்சம் என்ற அமைப்பில் விளக்குகின்றது. இந்நூல் வியங்கோள்வினை, முன்னிலைவினை, வினையெச்சம் போன்றவை இரு திணைக்கும் பொதுவாய் வரும் என்று கூறுகிறது. மூவிடத்திற்கும் உரிய வினை விகுதிகளையும் தொகுத்துக் கூறுகின்றது. தன்வினை பற்றியும் பிறவினை பற்றியும் பின்வருமாறு கூறுகின்றது.

"இது செயல் வேண்டு மென்னுங் கிளவி
இருவயி னிலையும் பொருட்டா கும்மே" (முத்.வீரி.,637)

மேற்கண்ட நூற்பாவில் இருவயின் நிலை என்பது தன்வினையையும் பிறவினையைம் குறிக்கின்றது. இந்நூற்பா தொல்காப்பிய நூற்பா போன்றே அமைந்துள்ளது.

பிறவினைச் சொற்கள் முதல்வினையைக் கொண்டு முடியும். முதல் வினை என்பது வினையடியைக் குறிக்கின்றது. *செய்தென, செய்யியர், செய்யிய, செயிற், செய, செயற்கு* என்ற எச்ச வாய்பாட்டுச் சொற்கள் *செய்* என்ற வினையடிச் சொல்லோடு பொருந்தி வரும். இதனைப் பின்வரும் நூற்பா உணர்த்துகிறது.

"செய்தெனச் செய்யியர், செய்யிய செயிற்செய
செயற்குப் பிறவினை முதலொடுஞ் சிவணும்" (முத். வீரி.,627)

செய்யாய் என்ற எச்ச வாய்பாட்டு முன்னிலை வினைச்சொல் *ஆய்* (எ.கா. *நடவாய், வாராய், உண்ணாய், தின்னாய்*) ஈறு கெட்டு *செய்* என்ற வினையடிச் சொல்லை உணர்த்தி நிற்கும் என்பதைப் பின்வரும் என்ற நூற்பா உணர்த்துகிறது.

"செய்யா யென்னும் முன்னிலை வினைச்சொல்
செய்யென் கிளவி யாகிட னுடைத்தே" (முத்.வீரி., 759)

இவை ஈறுகெட்டு *நட, வா, உண், தின்* என்ற வினையடிச் சொற்களையே உணர்த்துகிறது. *ஈ, தா, கொடு* என்ற வினையடிச் சொற்கள் எந்த இடங்களில் வரவேண்டும் என்பதை முத்துவீரியம் விளக்கிக் கூறுகின்றது. *ஈ* என்ற வினைச் சொல் இழிந்தோன் பயன்படுத்தவேண்டும் என்பதையும் *தா* என்ற வினையடிச் சொல்லை ஒப்போன் பயன்படுத்தவேண்டும் என்பதையும் *கொடு* என்ற வினையடிச் சொல்லை உயர்ந்தோன் இரப்பவனிடம் கேட்கப் பயன்படுத்துவான் என்பதையும் முத்துவீரியம் பின்வருமாறு கூறுகின்றது.

"அவற்றுள்,
ஈயென் கிளவி யிழிந்தோ னிரப்புரை" (முத்.வீரி., 753)
"தாவென் கிளவி சமானன் மேற்றே" (முத்.வீரி., 754)

இவ்வாறு தொல்காப்பியத்தை அடியொற்றி வினையடிகள் பற்றிய செய்திகளைத் முத்துவீரியம் கூறுகின்றது.

3.11.சுருக்கவுரை

ஐந்திலக்கணம் மற்றும் எழுத்து, சொல்லுக்கு இலக்கணம் கூறும் தொல்காப்பியம் முதல் முத்துவீரியம் வரையுள்ள பத்து நூல்களிலிருந்து வினையடிகள் பற்றிய செய்திகள் இவ்வியலில் தொகுத்தும் வகுத்தும் கூறப்பட்டுள்ளன. இலக்கணக் கருவூலமாக விளங்கும் தொல்காப்பியத்தில் வினையடிகள் ஏவலாகவும் தன்வினை, பிறவினை அமைப்புகள் தன்பாலனும் பிறன்பாலனும் என்று குறிப்பிடப்படுவதும், *-ஆய்* என்னும் விகுதி வினையடிகளோடு வரும்பொழுது 'செய்' என்னும் வினையடிப் பொருளையே உணர்த்துகின்றது (*செய்-ஆய் = செய்யாய்*) எனக் குறிப்பிடப்பட்டுவதும் கருத்தில் கொள்ளத்தக்கதாகும்.

வீரசோழீய ஆசிரியர் புத்தமித்திரனார் வினையடிச் சொற்கள் சிலவற்றைத் தாதுப்படலத்தில் பட்டியலிட்டுக் காட்டுகின்றார். மேலும் தன்வினையைக் கேவலத்தாது என்றும் பிறவினையைக் காரிதத்தாது என்றும் குறிப்பிடுகிறார். வினையச்சங்களான *செய்து, செய்யா, செய்பு* போன்ற சொற்கள் வினையடிப் பொருளையே உணர்த்தும் என்று நேமிநாதம் கூறுகிறது.

நன்னூல் தமிழ் வினையடிகளை மொழியீற்று எழுத்து அடிப்படையில் தொகுத்துச் சுட்டுகிறது. மொழியீற்றில் வரும் உயிர், மெய் எழுத்துக்களை அகர நிரல் அடிப்படையில் நிரல்படுத்திக் கூறுகிறது. வினையெச்சச் சொற்கள் பெரும்பாலும் ஏவலை உணர்த்துகின்றன என்று கூறுவதுடன் ஈரவேல் பற்றியும் காரண வினை பற்றியும் கூறுகின்றது. பிரயோகவிவேகம் செயப்படுபொருள் குன்றியவினை, குன்றாவினை மற்றும் தன்வினை, பிறவினை அமைப்புகள் பற்றி கூறுவதுடன் குன்றியவினைகளை 'சகன்மம்' என்றும் குன்றாவினைகளை 'அகன்மம்' என்றும் குறிப்பிடுகின்றது.

பெயர், வினை, இடை, உரி இவை நான்கையும் அடிப்படையாகக் கொண்டு வினை பிறக்கும் என்றும், மேலும் தன்வினை, பிறவினையைப் பொதுவினை என்றும் இலக்கணக்கொத்து குறிப்பிடுகின்றது. ஏவல் வினை பற்றிக் குறிப்பிடும் வைத்தியநாத தேசிகர் வினையடிச் சொற்களோடு *-வி, -பி* என்ற விகுதிகள் இணையுமாயின் அவை ஈரேவலாக வரும் என்று தம் இலக்கணவிளக்கத்தில் குறிப்பிடுகின்றார். *வரல், தரல், கொடை, செலல்*, என்ற சொற்களை முறையே மரபு வழியே விளக்கி இவை, *வா, தா, கொடு, செல்* என்ற வினையடிப் பொருளையே உணர்த்தும் என்று தொன்னூல்விளக்கம் கூறுகின்றது.

நன்னூலைப் போலவே மொழியீற்று அடிப்படையில் வினையடிச் சொற்களைப் பட்டியலிட்டு, பிறவினை, ஏவல்வினை, ஈரேவல் பற்றியும் சுவாமிநாதம் விவரிக்கிறது. பிறவினைச் சொற்கள் முதல் வினையைக் கொண்டு முடியும் என்றும் முதல் வினையென்பது வினையடியைக் குறிக்கும் என்றும் எச்ச வாய்பாட்டுச் சொற்கள் வினையடிச் சொல்லோடு பொருந்திவரும் என்றும் முத்துவீரியம் தெளிவுபடுத்துகிறது.

மரபிலக்கணங்களில் வினையடிகள் பற்றிய செய்திகள் வெளிப்படையாக இல்லாமல் குறிப்பாகவே உள்ளன. "பெயர்ச் சொற்களைப் போல் வினைச் சொற்களையும் திணையடிப்படையில் பாகுபடுத்தியதால் வினைகளின் உண்மையான பாகுபாடான வினையடிகளின் பாகுபாடு பற்றி வினையியலில் நேரடியாக எதுவும் பேசப்படவில்லை. எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் முழுமையும் பார்க்கும் போது வினையடிகள் பற்றி இலைமறை காயாகச் சில பாகுபாடுகள் குறிப்பிடப்பட்டிருப்பது தெரியவருகிறது" என்று செ.வை.சண்முகம் (செ.வை.சண்முகம்,1989:9) கூறுகின்றார். பெரும்பான்மையான இலக்கணங்கள் வினையடிகளைத் தன்வினை பிறவினை எனப் பாகுபடுத்திக் கூறுகின்றன. இவற்றுள் நன்னூல் ஏவல் வினைப்பகாப்பதம் என்றும் வீரசோழியம் தாது என்றும் வினையடிகளைக் கூறுகின்றன.

இயல் 4

வினையடிகள் பற்றிய முந்தைய ஆய்வுகள்

தமிழ் வினையடிகள் பற்றிய முந்தைய ஆய்வுகளின் விரிவான விளக்கம் இவ்வியலில் தரப்பட்டுள்ளது. எல்.வி. இராமசாமி ஐயர், மு.வரதராசன், வ.சுப. மாணிக்கம், சி. சிவதாணு ஆகியோர் வினையடிகளைப் பற்றிக் கூறிய செய்திகள் திரட்டப்பட்டு இங்குத் தரப்பட்டுள்ளன. பெரும்பான்மையும் அவர்கள் கருத்துகள் எந்த வித மாற்றமுமின்றி தர முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

4.1. எல்.வி. இராமசாமி ஐயரின் ஆய்வு

தமிழ் வினையடிகளின் மிக முன்னோடியான ஆய்வாக எல்.வி. ராமசாமி ஐயரின் "The Old Tamil verb" (Ramasami Ayyar, 1939) என்ற கட்டுரையைக் குறிப்பிடலாம். இதில் இவர் தமிழ் வினையடிகளைப் பற்றிக் கூறிய கருத்துக்கள் மிக முக்கியமாகக் கருதத்தக்கவையாகும். இவர் தமிழ் வினையடிகளைப் பின்வரும் தலைப்புகளில் வகைப்படுத்தவியலும் என்று குறிப்பிடுகின்றார்.

அ. தனிநிலை அல்லது முதன்மை அடிகள்

1. (அ) குற்றுயிர்களையும் ல், ள், ன், ண், ய் என்ற இறுதி மெய்யெழுத்துக்களையும் கொண்ட ஓரசை அடிகள்:

   செல்-, உள்-, தின்-, உண்-, செய்-, கொய்-

   இவற்றின் இறந்தகாலப் பகுதி த் என்பதால் உருவாக்கப்படும் மற்றும் ல், ள், ன், ண் என்பன புணர்ச்சி மாற்றங்களுக்கு உள்ளாகும்.

   (ஆ) ழு மற்றும் ரு என்பவற்றால் பின்தொடரப்படும் வேர்ச்சொல் குற்றுயிர்களைக் கொண்ட அடிகள்; இவற்றின் இறந்தகால மற்றும் எதிர்காலப் பகுதிகளில் உ தோன்றும்:

   அழு- (ஒப்பிடுக அழுதனள்; புறநானூறு, 143)

   தொழு- (ஒப்பிடுக தொழுதனன்; புறநானூறு, 150)

   பொரு- (ஒப்பிடுக பொருது; (புறநானூறு, 2)

   எழு- (ஒப்பிடுக எழுந்து (புறநானூறு, 128)

தர் மற்றும் *வர்* அவற்றின் எதிர்காலப் பகுதியிலேயே உ-ஐக் காட்டும்.

2. -ல்-ல்-, -ள்-ள்-, -ன்-ன்-, -ண்-ண்- கொண்ட அடிகள்; இவை அவற்றின் எதிர்காலப் பகுதிகளில் ஓர் உயிரைக் காட்டும், ஆனால் அவற்றின் இறந்தகாலப் பகுதியில் -இ- என்பதை ஏற்கும்.

உள்-ள்- (ஒப்பிடுக உள்ளி; புறநானூறு, 135)
சொல்-ல்- (ஒப்பிடுக கா. சொல்லினையே; குறுந்தொகை, 21)
எண்-ண்- (ஒப்பிடுக எண்ணி (நற்றிணை, 32)
முன்-ன்- (ஒப்பிடுக முன்னி-; நற்றிணை 71)

3. வேர்ச்சொல் நெட்டுயிர்களையும் ல், ள், ண், ன், ய், ர், ழ் என்பனவற்றையும் கொண்ட ஓரசை அடிகள்; இவற்றின் இறந்தகாலப் பகுதிகள் பொதுவாக (ந்)த் என்பதால் உருவாக்கப்படும்:

போல், ஆள், ஈன், காண், மாய், தீர், தேய், வீழ், பேண், நாண் என்பன -த்- என்பதை இறந்தகால வினைப் பகுதியிலும் -உ-வ்- என்பதை அவற்றின் எதிர்காலப் பகுதியிலும் கொண்டிருக்கும்.

4. குற்றுயிர்களையும் இறுதியில் -ல், -ள், ர், ழ் என்பனவற்றைக் கொண்டிருக்கும் ஈரசை அடிகள்; இவை ந்த்- அல்லது ன்ற்- (அல்லது புணர்ச்சி மாற்றங்களை) என்பதை இறந்தகாலப் பகுதியில் காட்டும்.

உடல் (ஒப்பிடுக உடன்று; புறநானூறு, 17)
உயர் (ஒப்பிடுக உயர்ந்தன்று; புறநானூறு, 204)
மகிழ் (ஒப்பிடுக மகிழ்ந்தன்றும்-இலமே;)
மருள் (ஒப்பிடுக மருண்டு; புறநானூறு, 46)

அருள் (எ.கா. *அருள்-இ*; நற்றிணை) மற்றும் *முயல்-* (எ.கா. *முயலி*, ஐங்குறுநூறு, 379) என்பனவைக்கு இறந்தகாலப் பகுதி –இ என்பதைக் கொண்டிருக்கும்.

5. வேர்ச்சொல் குற்றுயிர்களையும் ட், க், ற் என்பனவற்றைக் கொண்ட ஓரசை அடிகள் தமது இறந்தகாலப் பகுதிகளில் -ட்ட், -க்க் மற்றும் -ற்ற் என்பனவற்றைக் கொண்டிருக்கும்; இவை ஒலி இரட்டிப்பால் விளைந்தது என்று பொதுவாக விளக்கப்படுகிறது; இருப்பினும் இவற்றை முதன்மையாகவும் அடிப்படையாகவும் -த்- என்ற இறந்தகால ஒட்டு முறையே –ட், -க், ற் என்பனவற்றைச் சந்திப்பதால் ஏற்பட்ட வரலாற்றிற்கு முந்தைய புணர்ச்சிச் செயல்பாட்டின் விளைவாகக் கருதவியலும்.

பட்- (இறந்தகாலப் பகுதி பட்ட்-); இதுபோன்று இட், விட், தொட் போன்றன.
பெற்- (இறந்தகாலப் பகுதி பெற்ற்-); இதுபோன்று அற்-, உற்- போன்றன.
புக்- (இறந்தகாலப் பகுதி புக்க்-); இதுபோன்று நக்-, தொக்-, மிக்- என்பன.

6. (அ) வேர்ச்சொல் குற்றுயிர்கள் அல்லது நெட்டுயிர்கள் மற்றும் இறுதி மெய்க் குழுமங்களைக் கொண்ட மற்றும் (ஆ) வேர்ச்சொல் நெட்டுயிர்கள் மற்றும் இறுதி –ட்-, -ற், -க் என்பனவற்றைக் கொண்ட ஓரசை அடிகள். இவற்றின் இறந்தகாலப் பகுதிகள் -இ- என்பதையும் எதிர்கால அடிகள் -உ-வ்- என்பதையும் காட்டும்.

அஞ்ச்-, அலக்-, எய்த்-, நீங்க்-, ஓங்க்-, மாந்த்-, தோன்ற்-, ஆட்-, போக்-, கூற்-

4-இல் கூறப்படாத இறுதிகளைத் தவிர) ஒத்த இறுதிகளைக் கொண்ட ஈரசைகளான நடுங்க்-, குறுக்- என்பன –இ- என்பதை அவற்றின் இறந்தகாலப் பகுதிகளில் காட்டும்.

7. உயிர்களை மட்டும் அல்லது இறுதியில் உயிர்களைக் கொண்ட ஓரசை அடிகள்:

ஈ- [(ஈத்த்- (ஒப்பிடுக ஈத்தனை; புறநானூறு, 91) அல்லது ஈந்த்- (ஒப்பிடுக புறநானூறு, 364)]
நொ- (இறந்தகாலம் நொந்த்-)

8. இறுதி –இ மற்றும் -ஐ கொண்ட ஈரசை அடிகள்; பொதுவாக ந்த் கொண்ட இறந்தகாலப் பகுதியை ஆக்கும்.

அணி-, இழி-, அறி-; அமை-, அடை-, மிடை-

ஆ. –க்க்- ஒட்டைக்கொண்ட சில அடிகள்

1. –க்க் ஒட்டு (-உம் கொண்ட) இடைப்பட்ட காலத்திலும் வியங்கோள்களிலும் பெயர் ஊக்கம் கொண்ட எச்சங்களிலும், சிலசமயங்களில் எதிர்கால முற்றுக்களிலும் (இன்-கொண்ட) நிபந்தனைகளிலும்; இறந்தகாலப் பகுதிகள் -ந்த்- என்பதால் ஆக்கப்படும்; எதிர்காலப் பகுதி –க்க்-உ-வ் என்பதற்குப் பதிலாக –ப்ப்- என்பதையும் காட்டும்.

இரு(க்க்)- (எ.கா. இருந்து; புறநாநூறு, 3)
கிட(க்க்)- (ஒப்பிடுக கிடந்த்-ஓர்; (புறநாநூறு, 19)
சிற(க்க்)- (ஒப்பிடுக சிறந்து; பத்துப்பாட்டு, 7, 33)
நினை(க்க்)- (ஒப்பிடுக நினைந்து; புறநானூறு, 176)

(நினை-ய்-உம் புறநானூறு, 213-இல் உள்ள எதிர்காலப் பெயரெச்சமாகும்; நினை-க்க்-உம் புறநானூறு, 217-இல் தோன்றுகின்றது. நினைந்த்- பின் சங்கத்தமிழில் இறந்தகாலப் பகுதியாகும். நினைத்த்- ஒப்பீட்டு அடிப்படையில் பிற்பகுதியில் தான் பெருபான்மை பெறுகின்றது.

2. இந்தக் குழுமத்தில் -க்க் மேலே ஆ.1-இல் தோன்றுகிற எல்லா வினை வடிவங்களிலும் தோன்றுகின்றது. இவ்விரு குழுமங்களுக்கு இடையேயுள்ள வேறுபாடு, தற்போதைய குழுமத்தில் -த்த் என்பதை இறந்தகாலப் பகுதிகளிலும் -ந்த் என்பதை ஆ.1-இன் இறந்தகாலப் பகுதிகளிலும் கொண்டிருக்கும் என்ற உண்மையின் அடிப்படையில் அமையும். பின்வருவன எடுத்துக்காட்டுகளாகும்.

பிழை-(க்க்)- (ஒப்பிடுக பிழைத்தனேன்; புறநாநூறு, 43)
எடு-(க்க்)- (ஒப்பிடுக எடுத்து; புறநானூறு, 169)
குளி-(க்க்)- (ஒப்பிடுக குளிக்கும்; புறநானூறு, 2)
பசி-(க்க்)- (ஒப்பிடுக பசித்தன்று; புறநானூறு, 318)

இ. செயப்படுபொருள்குன்றா-காரண வினைகளின் ஆக்கங்கள்

இவை தமிழ் இலக்கணக் கலைசொல்லில் பிறவினை என்பதுடன் பொருந்தும். பின்னர் கூறப்படும் எல்லாக் குழுக்களும் உண்மையான காரண வினைகளாகும்; ஏனென்றால் அவை பிறரால் (நபர்களாலோ பொருட்களாலோ) செய்யப்படும் செயல்களின் காரணத்தை வெளிப்படுத்துகின்றது.

பின்வரும் 1, 2, மற்றும் 3 என்பனவற்றைச் சார்ந்த அடிகள் செயப்படுபொருள்குன்றிய அடிகளிலிருந்து உருவாக்கப்பட்டவை. பல நிகழ்வுகள் செயப்படுபொருள்குன்றிய அடிகளின் ஆக்கங்களாகும்; சில முதன்மை செயப்படுபொருள்குன்றா அடிகளின் அடிபடையிலானவை. (இடைக்காலத் தமிழில் அதிகமாக நிகழும்) 5-ஐச் சார்ந்த அடிகள் (முதன்மையான மற்றும் ஆக்கப்பட்ட) செயப்படுபொருள் குன்றிய அடிகளிலிருந்து ஆக்கப்பட்டவையாகும்.

1.(அ) அடிகள் (சிலவற்றில் -க்க்- என்ற ஒட்டுடன் தோன்றும் வினை வடிவங்கள்) செயப்படுபொருள் குன்றிய அடிகளிலிருந்து ஆக்கப்பட்டவையாகும்.

விட்-உ-(க்க்)- (புறநானூறு, 210)
புக்-உ-(க்க்)- (கலித்தொகை, 101)
தொக்-உ-(க்க்)- (புறநானூறு, 13)
உதிர்-(க்க்)- (புறநானூறு, 29)
வீழ்-(க்க்)- (கலித்தொகை, 97)
ஒழி-(க்க்)- (புறநானூறு, 216)

-க்க்- என்ற ஒட்டு உறுதிக் காலத்திலும் (“determinate” tense), பெயர்களின் ஊக்கத்தைக் கொண்ட எச்சங்களிலும் வியங்கோளிலும் சிலசமயங்களில் எதிர்கால முற்றுக்களிலும் சில சமயங்களில் -இன் என்பதைக் கொண்ட நிபந்தனைகளிலும் தோன்றும். இறந்தகாலப் பகுதிகள் -த்த்- என்பதையும் எதிர்காலப் பகுதிகள் சிலசமயங்களில் -ப்ப்- என்பதையும் கொண்டிருக்கும்.

இந்த குழுவிற்கும் மேலேயுள்ள ஆ.2. என்பதற்கும் உள்ள வேறுபாடு என்னவென்றால், தற்போதையக் குழு மொழியிலுள்ள செயப்படுபொருள்குன்றாதன அல்லா அடிகளின் (non-

transitival bases) அடிப்படையிலானது; ஆனால் மேலேயுள்ள ஆ.2.-க்குப் பொருத்தமான தனிநிலை அடிகள் இருப்பதாகத் தெரியவில்லை.

(ஆ) சங்கவிலங்கியங்களில் காணப்படும் தொலைச்ச்- (எ.கா. தொலைச்சி; புறநானூறு, 29) மற்றும் அடைச்ச்- (எ.கா. அடைச்சிய; கலித்தொகை, 5) போன்ற அடிகள் அவற்றின் -ச்ச்- என்பதை அடை-(க்க்)-, தொலை-(க்க்)- போன்ற செயப்படுபொருள்குன்றா வினைகளின் இறந்தகாலப் பகுதிகளின் இடையண்ணமாக்கப்பட்ட ச்ச் மாற்றத்திற்கு ஒருவேளைக் கடமைப்பட்டிருக்கலாம். இந்த 'ச்ச்' தெலுங்கு மற்றும் கன்னடாவின் பல வினையடிகளின் 'ச்' என்பதுடன் ஒப்பிடத்தக்கதாகும்.

2.(அ) செயப்படுபொருள்குன்றாதன அல்லா அடிகளுடன் சேர்க்கப்பட்டுள்ள –த்- என்ற ஒட்டு கொண்ட செயப்படுபொருள்குன்றா ஆக்கங்கள்:

சேர்-த்த்- (பதிற்றுப்பத்து 4, 165, புறநானூறு, 245)
வாழ்-த்த்- (புறநானூறு, 260)
சார்-த்த்- (பத்துப்பாட்டு, 4, 120, பரிபாடல், 19)
உணர்-த்த்- (புறநானூறு, 28)
கொள்-உ-த்த்- (எ.கா. கொளுத்தாமல்; பரிபாடல் 11, 1.126)

(ஆ) பின்வருவன அதே வகையைச் சார்ந்தது; ஆனால் அவை அகப்புணர்ச்சி மாற்றங்களைக் காட்டுகின்றன.

தீட்ட்- (புறநானூறு, 337)
அகட்ட்- (புறநானூறு, 66)
உருட்ட்-

(இ) பின்வரும் செயப்படுபொருள்குன்றா அடிகளின் இறுதிகள் -க்க்-, -த்த்-, -ற்ற்- என்பனவற்றைக் காட்டுகின்றன. இவை பெரும்பாலும் ஒலி இரட்டிப்பால் ஏற்பட்டவை என விளக்கப்படும்; ஆனால் இது முதன்மையாகக் குரலிலா த் என்பது –க், -ங்க்-, -ற் மற்றும் -ட்

என்பனவற்றை அல்லது அவற்றின் பிரதிநிதிகளைச் சந்திப்பதால் ஏற்பட்ட வரலாற்றிற்கு முற்பட்ட அகப்புணர்ச்சி மாற்றங்கள் அடிப்படையில் நிகழ்ந்திருக்கலாம்.

போக்கும் (புறநானூறு, 60)
ஓட்டி (புறநானூறு, 66)
கூட்டி (புறநானூறு, 95)
ஏற்றுக (புறநானூறு, 172)
ஆக்க்-உ-க (புறநானூறு, 172)
நீக்க்-இ (புறநானூறு, 5)

2. (அ), (ஆ), (இ) என்பதற்குரிய இறந்தகாலப் பகுதிகள் -இ என்பதைக் காட்டுகின்றன.

3. நில் என்பதிலிருந்து ஆக்கப்பட்ட நிற்-, நிற்-உ-க்க்- என்ற அடிகள் அவற்றின் ற் (<த்) என்பதைப் பழைய புணர்ச்சி மாற்றத்திற்குக் கடன்பட்டிருப்பது சாத்தியமாகும்.

நிறீஇ (பதிற்றுப்பத்து, 20; புறநானூறு, 165)
நிறுத்தான் (கலித்தொகை, 55)
நிற்-உ-க்க்-உ-வ்-ஏன் (கலித்தொகை, 58)

4. பல செய்தென் இறந்தகால எச்சங்கள் மற்றும் அரிதாக முற்றுக்கள் மற்றும் பிற வினை வடிவங்கள் செயப்படுபொருள்குன்றா-காரணப் பொருள்களுடன் சங்கவிலக்கியங்களில் (transitive-causatival meanings) வரும்.

கொளுவி (ஒரு வினையெச்சம்; பரிபாடல் 5) தவிர கொளீஇ (ஒரு இறந்தகால செய்தென் எச்சம்; புறநானூறு 55)
இரீஇ (புறநானூறு, 50)
படீஇ (புறநானூறு, 16)
உறுவி தவிர (நற்றிணை, 130) உறீஇ (ஐங்குறுநூறு, 246)
எழீஇ (பதிற்றுப்பத்து, 14)
அறீஇனேன் (ஒரு கால முற்றுவடிவம் ; கலித்தொகை, 140)

உரீஇனான் (ஒரு வினையாலணையும் பெயர்; கலித்தொகை, 84)

படியினை (ஒரு கால முற்று; புறநானூறு, 15)

அறீஇய (ஒரு நோக்க எச்சம்; கலித்தொகை, 84)

செயப்படுபொருள்குன்றா-காரணப் பொருள்கள் கொண்ட இவ்வடிவங்களுக்குப் பக்கத்தில் அமைப்பு அடிப்படையில் காரண வினைகள் அல்லாதவற்றின் இறந்தகால எச்சங்களின் குறிப்பீட்டைக் கொண்ட ஒத்த வடிவங்கள் உள்ளன.

இரீஇ (= இருந்து; ஐங்குறுநூறு, 388)

எழீஇ (கலித்தொகை, 36)

வழீஇ படீஇ (கலித்தொகை, 9)

ஒருஉப (ஒரு பன்மை முற்று; பதிற்றுப்பத்து, 33) மற்றும் ஒருவி (ஒரு இறந்தகால எச்சம்; நாலடி, 33 மற்றும் 36) தவிர ஓரீஇ (புறநானூறு, 29)

காரணம் சாராத இறந்தகால எச்சங்கள் *ஈ* 'to give' என்பதன் மீள்வலுவாக்கத்தின் (reinforcement) உதவியால் ஆக்கப்பட்டது என்பது சாத்தியமாகும்; மாறாகக் காரணவாக்கங்களில் *ஈ* என்பது காரணத்தைக் குறிப்பிடுவது என்றும் கொள்ளலாம். இச்செய்தி மேலும் ஆயப்படவேண்டும். மேலும் சங்கத் தமிழில் ஒப்பீட்டு அடிப்படையில் குறைவாய் உள்ள *-உவ்-* என்பதைக் கொண்ட அடிகள் உள்ளன; எ.கா. *கொள்-உவ்-அ* (பரிபாடல், 5), *கொளுவுவேன்* (கலித்தொகை, 144), *தழுவி* (பத்துப்பாட்டு, 9, 96; பத்துப்பாட்டு 6, 302-இல் *தழீஇ* தவிர), உறுவி (நற்றிணை, 138), *ஒருவுக* (குறள், 800); ஆனால் இது பின்னர் ஆழ்வார்கள் மற்றும் சைவர்களின் தமிழில் அதிகமானது. இவை முன்னர்க் குறிப்பிட்ட *-இ* என்பதைக் கொண்ட முன் சங்க வடிவங்களிலிருந்து தனிமைப்படுத்தப்பட்டிருக்க இயலும். வேர்ச்சொல்லின் இறுதிக்கும் *ஈ* என்பதற்கும் இடையில் *-உ* (ஒரு ஆதார உயிர் அல்லது ஒலி இசைவு உயிர்) வந்திருக்கலாம்; இதனால் ஒரு பின் உடன்படுத்தி *வ்* தோன்றி அது (அம்மாதிரியான ஆக்கங்களிலிருந்து *கொழுவ்-*, *தொழு* பிரசித்தமாகத் தனிமைப்படுத்தப்பட்டிருக்கலாம். ஒப்பிடுக: முன் சங்க குரீஇ உடன் பின் சங்க குருவி.

5. *-வி-(க்க்)-*, *-பி-(க்க)-*, *-ப்பி-(க்க்)-* கொண்ட (மேலே ஆ.2-இல் அல்லது இ.1-இல் உள்ளது போல் சில வினை வடிவங்களில் *-க்க்-* ஒரு ஒட்டாகத் தோன்றும்) மற்றும் *-த்த்-*

கொண்ட இறந்தகாலப் பகுதிகள் உள்ள அடிகள் முன் சங்கப் பனுவல்களில் ஓரளவுக்கு அரிதாகும். பின்வரும் எடுத்துக்காட்டுகள் சங்கப் பனுவல்களிலிருந்து சேகரிக்கப்பட்டவை:

கேட்பிக்கும் (தொல்காப்பியம், 276) கேட்-(க்)- என்பதிலிருந்து
போர்ப்பித்திலது (புறநானூறு, 286) போர்-(க்க்)- என்பதிலிருந்து
மரப்பித்தாய் (கலித்தொகை, 50) மர-(க்க்)- என்பதிலிருந்து
இனைவித்தல் (கலித்தொகை, 147) இனை- என்பதிலிருந்து
படர்வித்தவள் (கலித்தொகை, 141) படர்- என்பதிலிருந்து
களிப்பிக்கும் (கலித்தொகை, 72) களி-(க்க்)- என்பதிலிருந்து
கொட்பித்தான் (வினையாலணையும் பெயர்; கலித்தொகை, 145) கொட்-(க்)- என்பதிலிருந்து
தாழ்ப்பிக்கும் (பரிபாடல், 5, 1.75) தாழ்-(க்க்)- என்பதிலிருந்து
உணர்ப்பித்தல் (பரிபாடல், 18, 1.44) உணர்-(க்க்)- என்பதிலிருந்து
பிறப்பித்தோர் (, 3, 1.73) பிற-(க்க்)- என்பதிலிருந்து
புணர்வித்தல் (, 20, 1.110) புணர் என்பதிலிருந்து
ஏற்பிக்கும் (பரிபாடல், 18, 1.61) ஏற்-(க்)- என்பதிலிருந்து
சேர்வித்தல் (, குறள் 938) சேர் என்பதிலிருந்து
உழப்பிக்கும் (குறள், 938) உழ-(க்க்)- என்பதிலிருந்து
நயப்பித்தோர் (குறள், 1190) நய-(க்க்)- என்பதிலிருந்து
அறிவிப்ப (குறள்) அறி- என்பதிலிருந்து

இம்மாதிரியான வடிவங்கள் பக்தர்களின் மொழியில் மிக அதிகரித்தன.

மேலுள்ள அ2, இ1 என்பவைகளிலுள்ளது போல் இவ்வடிகளில் -க்க்- ஒரு ஒட்டாகும்.

வி, பி, ப்பி என்ப காரணம் குறிபிடுவன; மற்றும் இவற்றில் *பி* (முன்வரும் மூகொலியின் ஓரினமாக்க ஊக்கத்தால் வரும் ப்) மற்றும் ப்பி (இது அதன் ப்ப் என்பதை முன்வரலாற்று –க்க்-+வ்>ப்ப் மாற்றத்தின் விளைவுக்குத் தொடர்புபடுத்தும்) என்பன இரண்டாம் நிலையாகவும் *வி* முதன்நிலையாகவும் காரணக் குறியீடாகக் கருதப்படும்.

கால்டுவெல் (திராவிடமொழிகளின் ஒப்பிலக்கணம், பக்கம், 461) –வ்- ஆரம்ப அருவப் பெயர்களின் பகுதியாகும்; இது காரண இடைச்சொல்லின் சேர்க்கையால் காரணவினைகளாக மாற்றப்பட்டிருக்கும் என்று அனுமானிக்கிறார்; இதை இவர் இ< ஈ 'to give' என்று கருதுகிறார். –வ்- என்பது பட்-உ போன்ற தனிநிலை அடிகளுக்கும் (உ என்பது ஆதார உயிராகவோ ஒலியிசைவு உயிராகவோ உட்படுத்தப்பட்டிருக்கும்) காரணவாக்க ஒட்டு இ > ஈ என்பதற்கும் இடையில் உருவாகும் உடன்படுத்தியாக வந்திருக்கலாம் என்று கருதலாம். இவ்வாறு உருவான பட்-உ-வ்-இ போன்ற வடிவங்கள் -க்க்- என்ற ஒட்டால் மீள்வலுவாக்கப்படுத்தப்பட்டிருக்கலாம்.

3.2. மு.வரதராசனாரின் ஆய்வு

மு.வரதராசன் அவர்கள் தமது 'மொழிநூல்' (வரதராசன், முதற்பதிப்பு, 1947) என்ற நூலில் அடிச்சொற்கள் என்ற பகுதியில் கூறியுள்ள வினையடிகள் குறித்த கருத்துக்கள் இங்கு தொகுக்கப்பட்டு அவ்வாறே தரப்பட்டுள்ளன.

அடிச்சொற்கள்

திராவிட மொழிகளில் அடிச்சொற்கள் (roots) தெளிவாய்ப் பிரித்தறியும் நிலையில் உள்ளன. சொற்களின் அடிப்படையான கருத்துக்களை உணர்த்தி நிற்கின்றன. அவை பெரும்பாலும் ஓரசைச் சொற்களாகவே இருக்கின்றன.

சொல்கின்றான் - சொல்: அடிச்சொல்
வருகின்றாள் - வா: அடிச்சொல்
பழுத்தது – பழு: அடிச்சொல்
(உகரம் - ஒலிநயம் பற்றி வந்தது)

"திராவிட மொழியில் முதல் முதலில் ஓரசைச் சொற்களே இருந்து வந்தன" (A comparative Grammar of the Dravidian Languages - P. 196 – Dr, Caldwell). "எல்லா மொழிகளிலும் தொடக்கத்தில் பல வகைச் சொற்கள் இருந்தன என்றும், படிப்படியே அவை மருவியும் திரிந்தும் ஓரசைச் சொற்களாக மாறுவதே மொழிகளின் இயல்பு" (Progress in Language, P. 18. Dr. Jespersen.). இது இன்று மொழி வளர்ச்சியில் காணத்தக்க உண்மையாகும். "பழைய திராவிடத் தாய் மொழியில் நீண்ட சொற்கள் இருந்து வந்தன என்றும்,

அவையே சிறு சிறு சொற்களாகக் கல் மண் முதலியனவாக நின்றுள்ளன என்றும் எண்ணவேண்டுவதாக உள்ளது" (Jespersen, progress in Language, P.18). "had" என்ற முன்றெழுத்துடைய ஆங்கிலச் சொல் habaidedelme என்ற பன்னிரண்டு எழுத்துக்களை உடைய சொல்லின் திரிபு என்பர். இது சொற்கள் நீண்டிருந்து பின்னர்க் குறகியமையும்" (Jespersen, progress in Language, P.18).

இவ்வாறு பலவகைச் சொற்கள் ஓரசைச் சொற்களாக மாறுவதற்குக் காரணமான மொழி வளர்ச்சியை அளந்து கூறல் இயலாது. நெடுங்காலம் சென்றிருக்கும் இடையிடையே ஒலித்திரிபுகளும் பல வகையாக நிகழ்ந்திருக்கும். இறுதியில் பேசுவதற்கு எளியனவாகவும் தக்கனவாகவும் இப்போது வழங்கும் வடிவங்களைப்பெற்று நிற்கின்றன. இவ்வாறு திரிந்து கல், மண் முதலியசொல் வடிவங்கள் பழந்தமிழ் செய்யுட்களிலும் காணப்படுகின்றன. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பழைய செய்யுட்களிலும் காணப்படுவதால், இந்த சொற்களின் பழமை தெளிவாகின்றது. திராவிட மொழிகளின் அடிச்சொற்களுக்கும் இந்தோ-ஐரோப்பிய மொழிகளின் அடிச்சொற்களுக்கும் வேறுபாடு பெரிது.

"இந்தோ-ஐரோப்பிய மொழிகளின் அடிச்சொற்கள் பேச்சு மொழியில் என்றும் வழங்காதன என்று யெஸ்பர்சன் (யெஸ்பர்சன் -ப.113) கருதுகின்றார். அடிச்சொற்கள் என்பவை ஒத்த சொற்களை ஆராய்ந்து கண்டெடுக்கப்பட்டவையே அன்றி, பழங்காலத்தில் மக்களால் பேசப்பட்டு வந்தவை அல்ல. என்ற கருத்தே புளூம்பீல்டு (புளூம்பீல்டு –ப.240) முதலான மொழி நூலார் பலரிடையிலும் நிலவியது. ஆனால் "திராவிட மொழிகளின் அடிச்சொற்கள் இலக்கண நூலார் படைப்பு அல்ல; நாள்தோறும் வழங்கும் சொற்கள் இலக்கியத்திலும் பண்டைக்கால முதல் இடம் பெற்று வாழும் சொற்கள் (கே. இராமகிருஷ்ணய்யா – ப.106).

நடந்தான் என்னும் வினைமுற்றின் அடிச்சொல்லாக உள்ள நட என்பது இன்றும் பேச்சு வழக்கில் உள்ளது. *நட* என்பது ஏவலொருமையாக வழங்குகின்றது. இவ்வாறே வினைச் சொற்களின் அடிச்சொற்கள் எல்லாம் ஏவலொருமையாக வழங்கக் காணலாம். வினையடிகளை 'ஏவல் வினைப் பகாப்பதம்' என்று பவணந்தி முனிவர் குறிப்பிடுகிறார்" (நன்னூல்-பவணந்தி முனிவர்-எழு-137).

"நடவா மடி சீ விடுகூ வேவை

நொப்போ வேளஉரிஞ் உண்பொருந் திருந்தின்
தேய்பார் செவ்லவ் வாழ்கேள் அ.ஃ.கென்
றெய்திய இருபான் முன்றும் ஈற்றவும்
செய்யென் ஏவல் வினைப்பகாப் பதமே"
(நன்னூல்-எழுத்து-137)

"திராவிட மொழிகளின் பொது இயல்பாகிய இது, நெடுங்காலத்திற்கு முன்பே தனித்துப் பிரிந்து பெலுஜிஸ்தானத்தில் வழங்கும் பிராஹிய் மொழியிலும் இன்றும் காணப்படுகின்றது" (Denys De .S.Bray-The Brohvi Language Part I,P.117) இவ்வுண்மையை உணராத வீரசோழிய ஆசிரியர் வடமொழியைப் பின்பற்றித் தமிழ் வினைச் சொற்களுக்குப் பகுதிகளைப் புதியனவாகப் படைத்துக் கூறலானார்" (வீரசோழியம்-தாதுப்படலம்-1கிரியாபதப் படலம்). அடிச்சொற்கள் தனித்தனியே நின்று சொற்றொடராகிப் பொருள் தருதல் உண்டு.

1. 'நீ வா'
2. 'கல் பார்'

சீன மொழியில் தொடர்கள் அவ்வாறு அமைந்தனவை. அம்மொழியில் அடிச்சொற்களே சொற்கள். அவற்றை விட, வேறு சொற்கள் இல்லை. 'கல்லைப் பார்த்தான்' என்ற தொடரில், *கல், பார்* என்னும் அடிச்சொற்கள் தனித்தனியே நிற்காமல் *ஐ* முதலான இடைச்சொற்கள் சேர்ந்து சொற்களாய் நின்று பொருள் தருகின்றன. இந்த முறையே திராவிட மொழிகளில் பெரும்பாலும் உள்ளது.

பொருள் வேறுபாடு புலப்படுத்த அடிச்சொல்லோடு சேர்க்கப்படும் பிற சொற்களை இடைச்சொற்கள் எனத் தமிழ் இலக்கணம் கூறும். அந்த இடைச்சொற்கள் பல வகைப்படுவன. அவைகளும் தொடக்கத்தில் தனித்தனிப் பொருள் உணர்த்தி அடிச்சொற்களாக இருந்தவையே. படிப்படியே அவை தமக்குரிய பொருளை இழந்து துணை உறுப்புகளாக நிற்கின்றன.

அடிச்சொல்	**சொல்**	**சேர்ந்த உறுப்பு**
ஆ	ஆகு	கு
விழு	விழுங்கு	

பன்	பஞ்சு	சு
நீர்	நீந்து	து
கால்	காம்பு	பு

இந்தோ - ஐரோப்பிய மொழிகளிலும் இவ்வாறு அடிச்சொல்லோடு பிறச்சொல் சேர்ந்து சொல்லாய் வழங்குதல் உண்டு. ஆனால் அம்மொழிகளில் அடிச்சொல்லும் சேர்ந்த சொல்லும் இன்னன்னவை என தனித்தனியே பிரித்தறிதல் அரிது. அவை, சிதைந்து கலந்து பிரிக்க முடியாதனவாக மாறியுள்ளன. திராவிட மொழிகளில் அவற்றைப் பிரித்தல் எளிது. இது பற்றியே இந்தோ-ஐரோப்பிய மொழிகளை உட்பிணைப்பு நிலை (ஐஇகடநஒடிஇ) மிக்கவை என்றும், திராவிட மொழிகளை ஒட்டுநிலை (யபபடரவஇயவடிஇ) மிக்கவை என்றும் குறிப்பர்.

திராவிட மொழிகள் ஒட்டுநிலை மிக்கனவாக இருத்தலால் இருவகை இயல்பு அவற்றிடைக் காண்கின்றோம். அடிச்சொல் தெளிவாக அறிய நிற்றல். அடிச்சொல் சிதையாவாறு நிற்க வேண்டி, அதனுடன் சேரும் உறுப்புக்கள் தெளிவாக ஒட்டி நிற்றலால் பலவகைச் சொல்லாய் நீளல். கற்பிக்கின்றான்-கல் எனும் அடிச்சொல் தெளிவாக தெரிகிறது. சேர்ந்த உறுப்புக்கள் சிதைந்து ஒன்றாகமல், ஒட்டி வளர்ந்து நாலசைச் சொல்லாய் நீளலும் உண்டு. திராடவிட மொழிகளில் பலவகைச்சொற்கள் பெருகி இருக்க காரணம் இதுவே. ஆசியாவிலும், ஐரோப்பாவிலும் உள்ள மொழிகளின் சொற்களை விடத் திராவிட மொழி சொற்கள் நீண்டவை என்றும், நீட்சியில் அமெரிக்க மொழியின் பலவகைச் சொற்களுக்கு அடுத்தப்படியாகக் கருதத்தக்கவை என்று கூறுவார் கால்டுவெல் (தி. மொ. ஒப்பிலக்கணம் -பக்-196)

மண் என்னும் அடிச்சொல்லோடு 'கு' என்னும் உருபைச் சேர்க்கும் போது *மட்கு* என்று ஒட்டுதல் பொருந்தும். ஆயின் அவ்வாறு ஒட்டுதல் அருகிய வழக்காகும். இந்தே-ஐரோப்பிய மொழியாயின், அவை மட்கு என்றோ, மணு என்றோ சேர்ந்து மணு **(அரஇ)** என்று சிதைந்து ஓரசையாய்த் திரிந்திருக்கும். தமிழில் மண்ணுக்கு என்று உகரச் சாரியை பெற்றோ, மண்ணிற்கு என்று இரு சாரியையும் பெற்றோ பலவகைச் சொற்களாக வளர்ந்து நிற்கக் காண்கிறோம்.

அனுப்பு, எழும்பு, நிரம்பு முதலான தமிழ் முதனிலைகளை ஆராய்ந்தால் பலவகைச் சொற்களாகக் காணப்படினும், *அன்* (*அனு*), *எழ்* (*எழு*), *நிர்* (*நிர*) என்பவையே

அடிச்சொல்லாகக் கருதத்தக்கவை. ஒலிநயம் பற்றி 'உகரமும்' பொருள் வேறுபாடு கருதி '4' என்னும் துணைச் சொல்லும் பெற்று இவை நீண்ட முதனிலைகளாக அமைந்தன. அடிச்சொற்கள் பொருளை உணர்த்தும் பெயர்களாக அமையும்போது, திணை, பால் முதலியவற்றை உணர்த்தும் விகுதிகள் சேரும்; அவற்றோடு வேற்றுமை உணர்த்தும் உருபுகள் சேரும்.

ஊர் ஊரான் ஊரானை
கால் காலன் காலனுக்கு

அடிச்சொற்கள் தொழிலை உணர்த்தும் வினைகளாக அமையும் போது, காலத்தை உணர்த்தும் இடைநிலை சேரும்; பிறவினை விகுதி முதலியன சேரும்; திணை பால் உணர்த்தும் விகுதிகளும் சேரும்;

பார் பார்த்து பார்த்தான்
செய் செய்வி செய்வித்து செய்வித்தான்

இவ்வெடுத்துக்காட்டுகளிலிருந்து நாம் எவ்வாறு இரு குற்றுயிர்கள் மையத்திலுள்ள மெய்யை முழுவதுமாக நீக்கி ஒரு நெட்டுயிருடன் தொடர்புடையதாய் இருக்கின்றது என்று காண்கின்றோம். ஆர்வத்திற்குள்ளாக்குவது என்னவென்றால் இக்களங்கமுற்ற வினைகள் அவை உண்மையானவை போன்று ஒரே இலக்கண வடிவங்களை எடுக்கின்றன:

பகு: பகுத்தது, பகுத்து
பா: பாத்தது, பாத்து
'பாத்தரும் பண்ப' (சிலம்பு, 11)
மிகு: மிக்கது, மிகுந்து
மீ: மீந்தது, மீந்து
புகு: புகுந்தது, புகுந்து
போ: போந்தது, போந்து
'போந்து அசைந்த முரல்வாஇச் சங்கம் (சிலம்பு, 7)

இக்களங்கமுற்ற வேரான *போ* 'to enter' (புகு) *போகு* என்பதன் மற்றொரு களங்கமுற்ற வினையான *போ* என்பதுடன் குழப்பிக்கொள்ளக்கூடாது; சில புலவர்களும் அறிஞர்களும் அவற்றை ஒன்றெனக் கொண்டு பயன்படுத்தியுள்ளனர். *போ* 'to go' என்பது *போனேன், போன* அல்லது *போகிய, போயின* போன்ற வடிவங்களை எடுக்கும்; ஆனால் *புகு* என்பதன் களங்கமுற்ற வடிவம் *போந்தேன், போந்த, போந்தன* போன்ற வடிவங்களை எடுக்கும். இவ்விரு குழும எடுத்துக்காட்டுகளும் மூலநிலையில் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டவை என்பது தெளிவு; இருப்பினும் பிற்காலத்தில் தவறான பயன்பாட்டால் குழப்பம் விளைந்துள்ளது. இது போன்று வடிவங்கள் ஒன்றாக இருந்தாலும் பகு 'to divide' என்பதன் களங்கமுற்ற வடிவமான *பா* மூலநிலை வடிவமான *பா* 'to spread' என்பதிலிருந்து வேறுபட்டது. வினைத்திரிபாக்கத்தில் பா 'to spread'

என்பது பாயது, *பாய, பாயின* போன்ற வடிவங்களை எடுக்கும்; மாறாக *பா* 'to divide' என்பது *பாத்தது, பாத்த, பாத்தன* போன்ற வடிவங்களை எடுக்கும். இவை இலக்கியத்தில் இன்றும் தனிப்பட்ட பயன்பாடுகளைக் கொண்டிருக்கின்றன.

மெய் ஈறுகள்:

12. ஞ் ஈறு

ஒரே ஒரு வினைதான் இவ்வீற்றைக் கொண்டுள்ளது. இது உரிஞ் 'to rub one's self' ஆகும். இது இறுதியில் எப்போதும் சு என்பதை ஓசை இயைபுக்காக ஏற்கும். இவ்வாறு உரிஞ்சு என்பது எல்லா இலக்கண வெளிப்பாட்டிற்கும் பொதுவான அடியாகும்.

'திங்கால் நறுங்குறடு உரிஞ்சிய' (முருகா. 32)

'ஆ உரிஞ்சு தறி' போன்ற வினைத்தொகையில் கூட உரிஞ்சு பயன்படுத்தப்படுகின்றது.
ஞ் ஈறு இப்பொழுது இல்லை என்று சொல்லவியலும்.

13. ந் ஈறு

இவ்வீற்றுடன் பொருந் என்ற வினையும் வெரிந் என்ற பெயருமாக இரு சொற்கள் உள்ளன. *பொருந்* 'to act' *து* என்பதை ஒலி இசைவுக்காக ஏற்றுப் *பொருந்து* என மாறியுள்ளது; இது பொருத்து என்ற பிறவினை வடிவத்தைக் கொண்ட பொருந்து 'to agree' என்ற ஒத்த வடிவத்திலிருந்து பொருண்மை அடிப்படையில் வேறுபட்டது.

14. ம் ஈறு

இவ்வீற்றில் *திரும்* 'to return' என்ற ஒரு வினைதான் உள்ளது. இது *பு* என்ற ஒலி இசையுடன் *திரும்பு* என மாறியுள்ளது. எவ்வாறு உறிஞ், *பொருந், திரும்* என்ற மூன்று ஈறுகள் அல்லது சொற்கள் முறையே *உறிஞ்சு, பொருந்து, திரும்பு* என மாறியுள்ளது என்பது ஆர்வமூட்டுவதாகும். *சு, து* மற்றும் *பு* என்பன வடிவாக்கிகள் (formatives) அல்ல; இவற்றின்

நோக்கம் டாக்டர் கால்டுவல் கூறியது போன்று செயப்படுபொருள்குன்றியவைகளைக் காட்ட அல்ல. உறிஞ், *பொருந், திரும்* என்பன தாமே தன்வினைகளாகும். அப்படியென்றால் இச்சேர்க்கையின் இயல்பு என்ன? நாம் திரும் என்பதை விளக்கத்திற்காக எடுத்துக்கொள்வோம். *புறம்* 'outside' *புறம்பு* என மாறுகின்றது. ஒப்பிடுக 'புறம்பு அணைந்தான் வாள்கோட்டம்' (சிலம்பு 9). இது ம் என்பது உச்சரிப்புக்காக உ என்பதுடன் ஒலியிசைவுக்காக வல்லின மெய்யான ப் என்பதை ஏற்கிறது என்பதைக் காட்டுகின்றது. இம்முறையில் திரும் என்பது திரும்பு என மாறியுள்ளது. இவ்விதிக்கு 'அளிதோ தானே பாரியது பறம்பே' (புறம், 09) என்ற புறநானூற்று வரியில் வரும் பறம்பு என்ற சொல்லில் மற்றொரு எடுத்துக்காட்டு உள்ளது. 'பற நாட்டுப் பெண்டிர் அடி' என்ற செய்யுளிலிருந்தும் அகநானூறின் 323-ஆம் செய்யுளின் ஆசிரியரான 'பறநாட்டுப் பெருய்கொற்றனார்' என்ற வெளிப்பாட்டிலிருந்தும் அறிவதுபோல் பறம் என்பது உண்மையான சொல்லாகக் கருதப்படவேண்டும்; இதில் *புறம்பு* மற்றும் *திரும்பு* என்பவைகளில் உள்ளது போல் *பு* சேர்க்கப்பட்டுள்ளது. இவ்வாறு நாட்டின் பெயரான புறம் அல்லது *புறம்பு* எனபதன் பொருளை நாட்டிலுள்ள மலை என்பதற்கு மாற்றியுறள்ளதாகத் தோன்றுகிறது; இவ்வாறு இது மலை என்பதுடன் ஒருபொருள் பன்மொழியாக இருக்கின்றது. உச்சரிப்பதற்கு வேண்டி சேர்க்கும் போக்கு அயல் சொற்களை உச்சரிப்பதிலும் காணப்படுகின்றது. எடுத்துக்காட்டாக room என்பது *ரும்பு* எனத் தமிழில் மாறியுள்ளது.

திரும்பு என்பதில் *ம்* வேர் ஈறாக உள்ளது போல் *உரிஞ்சு* மற்றும் பொருந்து என்பவைகளில் முறையே *ஞ்* மற்றும் *ந்* என்பன மூலநிலை ஈறுகளாக எடுக்கப்படவேண்டும். இவற்றை பெருஞ் சுவர் மற்றும் பெருந் திணை என்பதன் ஒப்புமை அடிப்படையில் உரிம்+சு மற்றும் பொரும்+து எனப் பிரிப்பது தவறாகும். தொல்காப்பியர் கூறியது போல் உ மட்டும் தான் இம்மெய்யீற்று வினைகளுடன் சேர்க்கப்படுகின்றது; *ச், த், ப்* என்பவையெல்லாம் பிற்கால வளர்ச்சியாகும். திருப்பு மற்றும் பொருத்து என்ற பிறவினைகளுடன் உள்ள தொடர்பு திரும்பு மற்றும் பொருந்து என்பனவற்றை அவற்றின் தன்வினை என்று தவறாகக் கருதத் தூண்டியுள்ளது. உருட்டு மற்றும் உருள் என்பன பிறவினை வடிவங்களாக உள்ளன என்பதால் உருண்டு மற்றும் உண்டு என்பனவற்றை அவற்றின் தன்வினை என்று எவரும் எடுப்பதில்லை. உருள் மற்றும் உண் என்பன அவற்றின் தன்வினைகளாகும். எனவே திரும், பொருந் மற்றும் உறிஞ் என்பனவற்றைத் தன்வினை எனக் கொள்வது சரியாகும். பவணந்தியார் அவருடைய காலத்தில் பயன்படுததப்பட்டு வந்த *உறிஞ்சு, பொருந்து* மற்றும் *திரும்பு* எனப்படும் நேர்வுகளுக்கு எதிராகத்

தொல்காப்பியத்தைப் பின்பற்றி இவ்வீறுகளுக்கு உ மட்டும் தான் தேவைப்படும் என்று தவறாகக் கூறுவதாகத் தெரிகின்றது.

15. ண் ஈறு

இவ்வீற்றின் கீழ் நாம் *உண், மண், பண்* போன்ற குற்றுயிரால் தொடங்கும் வினைகள் மற்றும் காண், பூண் போன்ற நெட்டுயிரால் தொடங்கும் வினைகள் என இரு குழும வினைகளைப் பார்க்கின்றோம்.

உண் 'to eat': இது வினைப் பெயரில் *ஊண்* எனவும் பிறவினையில் *ஊட்டு* எனவும் நீள்கின்றது காண்: இது இறந்தகால கண்டான் என்பதில் குறுகுகின்றது.

சொற்களின் சேர்க்கையில் ண் என்பது ட் ஆகும் பொதுவான மாற்றம் அதன் முக்கியத்துவமின்மையால் இங்கு கருத்தில் கொள்ளப்படவில்லை.

16. ன் ஈறு

மின் மற்றும் தின் என்பன பெயர்களில் மீன் என்றும் தீன் அல்லது தீனி என்றும் மாறுகின்றன.

17. ய் ஈறு

தீய் 'to be charred' என்பது பழங்காலத்திலேயே அதன் ஈற்றை இழந்துவிட்டது. 'இலை தீந்த உலவையால்' (கலி: 11).

பேச்சு வழக்கில் தேய்ந்த, காய்ந்த மற்றும் ஓய்ந்த என்பன தேஞ்ச, காஞ்ச மற்றும் ஓஞ்ச என்பனவற்றிற்கு பதிலாகப் பயன்படுத்தப்படுகின்றன.

18. ர் ஈறு

ஆர்ந்து என்பது அகநானூறு 3-இல் அருந்துபு (ஆர்>அரு) என மாறியுள்ளது.

19. ல் ஈறு

(அ) *ல்* பல சொற்களில் சீர்மையற்று மாறியுள்ளது.
கற்றான், சென்றான், புல்லினாம்
வேர்கள்: *கல், செல், புல்*

(ஆ) *கொல்* மற்றும் *நில்* என்பன வினையெச்சத்தில் கொலைஇய மற்றும் நிலைஇய என மாறுகிறது.

(இ) செல், வெல், கொல் என்பன அவற்றின் வினைப்பெயர்களைத் தொடக்க உயிரின் நீட்சியாலும் *சேறல், வேறல்* மற்றும் *கோறல்* போன்ற வினைப் பெயர்களின் ஒட்டின் சேர்க்கையாலும் ஆக்குகின்றது. இதன் தொடர்பாக *சேல்* 'a fish' 'ஒரு மீன்', *வேல்* 'a spear' மற்றும் *கோல்* 'a rod' என்பன செல், வெல் மற்றும் *கொல்* என்பனவற்றிலிருந்து ஆக்கப்பட்டிருக்கலாம் என்பதை அறியவேண்டியது அவசியம்.

(உ) *இவல்* 'to move' என்பது *ஏல்* என மாறி *ஏன்று, ஏன்றான்* போன்ற வடிவங்களை எடுக்கின்றது.

(ஊ) *நோனான், நோனார், நோன்றாள்* மற்றும் *நோன்பு* என்ற நேர்வுகளிலிருந்து நோல் 'to suffer' என்பதன் வேர் நோன் தான் என்று அனுமானிப்பர்; ஆனால் நோலாதவர் (குறள் 270) அதற்கு மாறாக இருக்கின்றது. நாம் இதைத் தவிர பிற நேர்வுகளைக் கண்டுபிடிக்காததால் நோல் என்பதை வேராக எடுப்பது கடினமாகும். நோற்றாள் மற்றும் நோற்பார் என்பன *ல்* ஆகவோ *ன்* ஆகவோ பிரிக்கப்படலாம். *மேல* என்பதிலிருந்து வரும் *மேன, நால்கு* என்பதிலிருந்து வரும் *நான்கு, அல்* என்பதிலிருந்து வரும் தன்மையிடத்தின் ஒட்டான *அன்* என்ற பிற எடுத்துக்காட்டுகளுடன் ஒப்பிடுவது நோல் என்பதை வேராகக் கொள்வதற்கு உந்துகின்றது. தமிழ் விதி *ல்* என்பது *ன்* ஆக மாற அனுமதிக்கின்றது; மறுதலையாக மாற அனுமதிப்பதில்லை. *ஏல்* என்ற வேர்

உடன்பாட்டில் ஏன்றான் மற்றும் எதிர்மறையில் ஏலாதவர் எடுக்கும் என்பது நோன்றான் மற்றும் நோலாதவர் என்ற வடிவங்களில் நோல் என்பது வேர் என்பதை உறுதிசெய்யும்.

20. வ் ஈறு

இவ்வீற்றில் வினைகளில்லை.

21. ழ் ஈறு

ழ் என்பது எந்த முற்காலத்தில் மாற்றமும் அடையவில்லை. ஆனால் இடைக்காலத்தில் ழ் என்பது ள் என உச்சரிக்கப்பட்டபோது அதன் மாற்றம் ள் என்பதன் மாற்றம் போல் அமைந்தது. இவ்வாறு வீழ்த்தி என்பதற்குப் பதிலாக வீட்டி மற்றும் வாழ்நாள் என்பதற்குப் பதிலாக வாணாள் என்பன உருவானது. பேச்சு வழக்கில் ழ் பெரும் மாற்றம் அடைந்தது மற்றும் அதன் இருப்பை இழந்தது. தமிழுக்கு என்று தனிப்பட்டப் பண்புக்கூறாய் அமைந்த ழ் என்ற எழுத்தின் விதி இவ்வாறு அமைந்தது.

வி 'to die' என்பதை வீழ் என்பதுடன் தொடர்புபடுத்தலாம்.

'இணையடி தொழுது வீழ்ந்தநாளே' (சிலம்பு 20)

இங்கு வீழ்ந்தநாள் என்பதற்கு வீந்தநாள் என்ற பொருள் இருப்பதாகத் தோன்றுகின்றது.

22. ள் ஈறு

கொள் என்பது வினைப் பெயரில் கோள் என நீண்டுள்ளது. இரு சொற்களின் சேர்க்கையின் போது *ள்* என்பது *ண்* ஆக மாறும் பொதுவான மாற்றம் அதன் முக்கியத்துவமின்மை காரணமாக இங்கு கருத்தில் கொள்ளவில்லை.

23. குற்றுயிர் உ

பல தமிழ் வினைகள் உ-இல் இறுதியுறுகின்றன.

(அ) வினைப் பெயர்கள் இறுதி மெய்யின் இரட்டிப்பால் உருவாகுகின்றன. எ.கா. போகு – போக்கு; கூடு – கூட்டு.

இந்த மாற்றம் பெரும்பாலும் நெடிற்றொடர் குற்றியலுகரத்தில் நிகழ்கின்றது.

(ஆ) குற்றியலுகரத்தின் ஆறு பகுதிகளில் ஒன்றின் வினை வேர் அகமாற்றத்தால் மட்டும் மற்றொன்றாக மாறுகின்றது.

எ.கா. முழுகு – முழ்கு; தேடு – தேண்டு; கூடு - கூண்டு

ஈற்று அடிப்படையில் பகுக்கப்பட்ட வினைவேர்களின் மாற்றங்களைப் பற்றிய முன்னர் கூறிய ஆய்வு ஒரு வினை அது எடுக்கவியலும் எல்லா வடிவங்களிலும் மற்றும் ஒவ்வொரு உருக்களிலும் அதன் வேரடி மாற்றமுறாமல் இருக்கிறது அல்லது அதிக சிரமமின்றி தெரிந்துகொள்ளுமாறு மூலமுதல் வடிவத்தில் சிறிது மாற்றம் ஏற்பட்டுள்ளது என்று நிருபிக்கின்றது. டாக்டர் கால்டுவெல்லின் கூற்றுப்படி "ஒரு குடும்ப துணை ஒட்டுக்களால் சூழப்பட்டாலும் வேரானது மறைக்கப்படாமல் தனிப்பட்டு நிற்கின்றது".

4. சில வினை வேர்கள்: ஒரு ஆய்வு

1. ஆகு 'to become' மற்றும் போகு 'to go'

வேர் *ஆ* அல்லது *ஆகு* என்பது வேரா மற்றும் *போ* அல்லது *போகு* என்பது வேரா என்பது இடைக்காலத்திலிருந்தே தமிழறிஞர்களின் மனதைக் குழப்புகின்றது. எந்த மூலநிலை வினை வேர்கள் இலக்கியத்திலும் பயன்பாட்டிலும் உருவானது என்பது ஐயத்திற்குரியதாகும்.

ஆ அல்லது ஆ	**போ அல்லது போகு**
ஆயின	போயின அல்லது போகின
ஆய	போய அல்லது போகிய
ஆய்	போய் அல்லது போகி

ஆயின்	போயின் அல்லது போகின்
ஆதல்	போதல் அல்லது போகுதல்
ஆகுவது	போதல் அல்லது போகல்

இந்நேர்வுகளிலிருந்து அவை பல எண்ணிக்கையில் இருந்தாலும் நாம் எந்த வடிவம் மூலநிலையானது என்று இறுதியாகத் தீர்மானிக்கவியலாது.

சேனாவரையர் தொல்காபியச் சூத்திரம் 228-ஐ விமர்சிக்கும் போது ஆய் மற்றும் ஆகி, போய் மற்றும் போகி என்ற வடிவங்களைக் குறிப்பிடுகிறார்; அவர் ஆ மற்றும் ஆகு, போ மற்றும் போகு என்பனவற்றை ஒரே வினையின் இரு வடிவங்களாக ஏற்றுக்கொண்டுள்ளார் என்று கருத வேண்டியிருக்கின்றது. ஆனால் மற்றொரு இடத்தில் எதிர்கால வினை எச்சங்களான *போகியர்* மற்றும் *போகிய* என்ற எடுத்துக்காட்டுகள் *க்* என்பது செருகப்பட்டவை என விளக்குகிறார். இதன்படி *ஆ* மற்றும் *போ* என்பனவற்றை மூலநிலை வினைகளாகக் கருதுவது அவர் பார்வையாகும். நச்சினாக்கினியர் நேரடியாக ஆ மற்றும் போ என்பன மூலநிலையானது என்று கூறுகிறார்; ஆனால் அவர் உரையாசிரியராக இருக்கும் தொல்காப்பித்தில் காணப்படும் ஆகு, போகு என்பன குறித்து மௌனம் சாகிக்கின்றார். நன்னூல் ஆசிரியரான பவணந்தியார் மறைமுகமாக ஆனால் தெளிவாக *போ* என்பதை மூலநிலையாகச் சூத்திரத்தில் குறிப்பிடுகின்றார். பரிமேலழகர் ஆகு மற்றும் *போகு* என்பன வேர்களாகும் என்ற கருத்தைக் கொண்டிருக்கிறார் (குறள் 317). இச்சொற்களின் மூலநிலைக் கண்டுபிடிப்பது கடினமாகையால், இலக்கணக் கொத்து என்பதன் ஆசிரியரான சாமிநாத தேசிகர், இச்சொற்களைப் பற்றிய அறிஞர்களின் வேறுபட்ட கருத்துக்களைக் கூறி மௌனம் சாதிக்கின்றார். கால்டுவெல் ஆகு மற்றும் போகு என்பனவற்றை மூலநிலையாகக் கருதுபவர்களை ஆதரிப்பதாகத் தெரிகின்றது; ஆனால் அவர் இறுதி கு-ஐ வடிவாக்கியாகக் கொள்வதை விட்டுவிட விருப்புகிறார்.

பழம்பெரும் தமிழ் இலக்கணமான தொல்காப்பியம் இவ்விரண்டு சொற்களின் உண்மையான இயல்பை நிச்சயமாகத் தீர்மானிக்க நமக்குக் கைகொடுக்கின்றது. நாம் முதலில் ஆ அல்லது ஆகு என்பதைக் கருத்தில் கொள்வோம். தொல்காப்பியப் பனுவலில் க் என்ற மெய் கூடுதலாக உடன்பாட்டிலும் விடாப்பிடியாக எதிர்மறையிலும் வருகின்றது. *ஆகும், ஆகா, ஆகாது, ஆகிய, ஆகிடன், ஆக்கம்,* இரண்டாகுவதே போன்றன எடுத்துக்காட்டுகளாகும். நாம் உடன்பாட்டில் *ஆய* மற்றும் *ஆய்* என்பனவற்றை *ஆகிய* மற்றும் *ஆகி* என்பவனவற்றுடன்

பயன்படுத்தும் பழக்கம் இருந்தாலும் எதிர்மறையில் *ஆகாது, ஆகாதன, ஆகாத* மற்றும் *ஆகா* போன்றவற்றில் *க்* வருவது தவிர்க்க இயலாததாகும்.

ஐயப்பாடுள்ள வினைகளின் மூலநிலை வடிவங்களைக் கண்டுகொள்ளவும் தீர்மானிக்கவும் இரு வழிகள் இருக்கின்றன. ஒரு வழி, டாக்டர் கால்டுவெல் மற்றும் பிற திராவிட மொழியாராய்சி வல்லுனர் கருத்துப்படி ஏவல் ஒருமையின் வடிவத்தைக் கண்டுபிடிப்பது மற்றும் இவ்வாறு வினையின் மூலநிலை வேரை நிச்சயமாகத் தெரிந்துகொள்வது பெரும்பாலான நேர்வுகளில், இக்கொள்கைச் சரியானதாகத் தெரிகின்றது. இவ்வழி நமது ஐயத்தைத் தெளிவுபடுத்தத் தவறும் போது நம்மை ஏமாற்றாத மற்றொரு வழி இருக்கின்றது. வினைத்தொகை தமிழில் ஆறு கூட்டாக்கங்களில் ஒன்றாகும். இது இரண்டு உறுப்பினர்களைக் கொண்டது. முதலாவது வினை வேராகும் மற்றும் இரண்டாவது பெயராகும். வினைத்தொகையைக் கொண்டிருக்கும் முதல் உறுப்பினர் எந்த வினையின் மூல வடிவத்தையும் தீர்மானிக்கும் நிச்சயமான வழியாகும். *ஆகூழ், ஆகாறு, ஆகிடன்* மற்றும் அளவாகு மொழிமுதல் என்ற நேர்வுகளில் *ஆகு* என்பது வினை வடிவங்களாக பயன்படுத்தப்படுவதைக் நாம் காணலாம். கு என்பது எதிர்மறையில் தவிர்க்கவியலாது என்பதாலும் கூட்டுச்சொற்களில் தோன்றுவதாலும், ஆகு என்பது மூலநிலை வடிவமாகும் மற்றும் கு என்பது *ஆட, ஆவது, ஆதும், ஆதி* போன்ற உடன்பாட்டு நேர்வுகளில் புரிந்துகொள்ளப்படும் என்ற கோட்பாடு ஆதரவுக்குரியதாகும்.

இப்போது *போ* அல்லது *போகு* என்பதைக் கருத்தில் கொள்ளுவோம். மேற்சொன்ன விளக்கங்களிலிருந்து, போகு என்பது மூலநிலையாகும் மற்றும் *போ* அதன் குறுக்கப்பட்ட வடிவமாகும். யாரும் உரிச்சொல் வினைச்சொல்லாக மாறியதை கற்பனை செய்யவியலாது. இம்மாற்றம் உண்மையிலேயே போகு என்பதில் நிகழ்ந்துள்ளது. இந்த மாற்றம் தமிழ் இலக்கணக் களத்தில் மிகப் பெரிய ஒன்றாகும். *போகு* பழைய இலக்கணத்தார்களால் வினையாகக் கருதப்படாமல் உரிச்சொல்லாகக் கருதப்பட்டது. மேலும் போகு தொல்காப்பியத்தில் 'to go' என்ற பொருளில் பயன்படுத்தப்படவில்லை. நேராக மற்றும் நீளமாக இருக்கும் நிலை இதனால் அர்த்தப்படுத்தப்பட்டது. இவ்வுண்மைகள் உரியியலில் காணப்படும் சூத்திரத்திலிருந்து தெரியவரும்.

"வார்தல் போகல் ஒழுகல் முன்றும்

நேர்வும் நெடுமையும் செய்யும் பொருள" (தொல். 799)

தொல்காப்பியத்தில் எந்த விதிவிலக்குமின்றியும் சங்க இலக்கியங்களில் பலவிடங்களிலும், போகு என்ற சொல் மேற்சொன்ன அர்த்தத்தில் பயன்படுத்தப்பட்டள்ளது.

'போகிஅ திறத்து நாற்றை புலம்பல்' (தொல். 981)
'கள்ளி போகிய களரியம் பறந்தலை' (புறம் 237)
'புண்ணிய நெடுவரை போகிய நெடுங்காலை' (சிலம்பு 3)

செல் என்ற வினை அக்காலங்களில் 'to go' என்ற பொருளை வெளிப்படுத்தப் பொதுவாகப் பயன்படுத்தப்பட்டது.

'தமே செல்லும் தாயரும் உளரே' (தொல். 982)
'சென்று பயனேதிரச் சொன்ன பக்கமும்' (தொல். 1036)
'செலவிடை அழுங்கால் செல்லாமை அன்றே' (தொல் 1130)

தொல்காப்பியத்தின் இவ்வரிகளில் நாம் *போ* என்பதை *செல்* என்பதற்குப் பதிலாக எளிதில் பதிலீடுசெய்யலாம். எனவே இலக்கியத்திலிருந்து மறையும் *செல்* என்பதன் இடத்தைப் போ என்பது எடுத்துக்கொண்டுவிட்டது என்பது தெளிவாகும். போகு என்ற உரிச்சொல்லுக்கு அது ஒரு வினை போன்று எல்லாப் பயன்பாடுகளும் உள்ளன. *போ* அல்லது *போகு* மற்றும் *செல்* என்பன இடைக்காலத்திலிருந்து ஒருபொருள்பன்மொழிகளாகக் கருதப்பட்டு வருகின்றன; ஆனால் தொல்காப்பியர் காலத்தில் அவற்றிற்கு ஒரு தனிப்பட்ட பயன்பாடு இருந்தது என்பது '*புடை கெதப் போகிய செலவே* (தொல் 1003) என்ற அடியிலிருந்து தெரியவருகின்றது.

பின் சங்கத்தமிழ் காலத்தின் அறநூலான திருக்குறள் *செல்* என்பதற்குப் பதிலாகப் *போகு* என்பதன் களங்க வடிவமான *போ* என்பதை அடிக்கடி பயன்படுத்துகின்றது.

'புறத்தாறிற் போயப் பெறுவது எவன்' (46)
'அவ்வுயிர் போமளவும் நோய்' (848)
'கண்ணுள்ளீர் போகர்' (1126)

இவ்வாறு திருக்குறள் காலத்திலிருந்து இது இவ்வர்த்தத்தில் தாரளமாகப் பயன்படுத்தப்படலானது.

வினைத்தொகையின் இணைப்பாக்கத்தில் *போ* என்பதல்லாமல் போகு என்பதுதான் முதல் அங்கத்தினராக இருந்தது. 'போகிடை கழியன' (சிலம்பு 11) மற்றும் 'போகுயர் புற்றளை' (மணி. 20) என்பன எடுத்துக்காட்டுகளாகும். மேற்சொன்ன எடுத்துக்காட்டுகளிலிருந்து *போகு* என்பதுதான் மூலநிலை வடிவம் மற்றும் *கு* என்பது *போய, போய், போவது* போன்ற நேர்வுகளில் நீக்கப்பட்டாலும் எதிர்மறை வடிவங்களில் இது இடைவிடாமல் தோன்றுகின்றது. தொல்காப்பியத்தின் வரைவிலக்கணம் அடிப்படையில் போகு அதன் மூலநிலையில் உரிச்சொல்லாகும் மற்றும் இது 'இசையினும் குறிப்பினும் பண்பினும் தோன்றி' (781) என்ற அடியில் கூறப்படும் மூன்று மூலங்களில் ஒன்றான பண்பு என்ற வகுப்பைச் சார்ந்தது. மேற்சொன்ன கருத்தைத் தெளிவாக்க இப்போதும் முறை அல்லது வழி எனப் பொருள்படும் போக்கு என்ற மற்றொரு எடுத்துக்காட்டைக் கூறலாம்; இதை போகு என்பதிலிருந்த வந்த பிற வினையாகக் கருதுவது கடினம்.

உரிச்சொல் வினைச்சொல்லாக மாறிய ஒரு ஒப்புமையை *உவ* 'to be happy' என்ற சொல்லில் காணலாம். இது அதன் மூலநிலையில் ஒரு உரிச்சொல் என்பது 'உவப்பே உவகை' (தொல். 788) என்ற சூத்திரத்தால் தெரியவரும். இது 'உவ இனி வாழி தோழி' என்ற அகநானூறு (65) அடியில் ஏவல் வினைப்பாங்கில் ஒரு சுத்தமான வினையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

3. வா 'to come' மற்றும் தா 'to give'

இவ்விரு வினைகளின் மூலநிலை வடிவத்தை ஆய்வதற்கு முன் சில ஆரம்ப தெளிவுக்கான கூற்றுகளைச் செய்வது விரும்பத்தக்கது ஆகும். முதலில் வா மற்றும் தா என்பன இப்போது தரப்பட்டுள்ள பொருள்களை மட்டும் கொண்டிருக்கவில்லை என்பதை நினைவுகூறவேண்டும். அவை 'to jump over' என்றும் பொருள்படும். *வா* மற்றும் *தா* என்பன பல பொருள்களைக் கொண்ட சொற்கள் என்று கருதுவதும் தவறாகும். 'to jump over' என்ற பொருள்கொண்ட *வா* மற்றும் *தா* என்பன 'to come' மற்றும் 'to give' என்ற பொருள்களைக் கொண்ட ஒத்த வடிவங்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டனவாகும்.

(அ) 'வா மானது வகை உரைத்தன்று (வெண்பாமாலை 90)

(ஆ) 'வாம் புரவி வழுதி'

(இ) 'அடி அளாந்தான் தாயது' (குறள் 610)

(உ) 'தாவிய சேவடி சேப்ப' (சிலம்பு 17)

இம்மேற்கோள்களிலிருந்து விவாதத்திற்குரியவைகளிலிருந்து வேறுபடுத்தப்பட வேண்டிய வா மற்றும் *தர* என்ற இரண்டு வினைகள் உள்ளன என ஒருவர் எளிதில் கண்டுகொள்ளலாம். 'to jump over' என்ற பொருள்கொண்ட இந்த *வர* மற்றும் *தர* என்பன உண்மையில் ஆ என்ற ஈற்றைக் கொண்டவை என்று கூறலாம். எல்லா இறந்தகால வினைத் திரிபாக்கத்திலும் மற்றும் இடங்களிலும் (persons) இவற்றின் எளிமை இவ்விரு வினைகள் தாம் உண்மையிலேயே ஆ ஈறு கொண்டவை என்பது தாமாகவே தெளிவாகும். மாறாக கேள்விக்குரிய வா மற்றும் தா என்பன வினைத்திரிபாக்கமுறும் ஒழுங்கற்ற நிலையும் அவை எடுக்கும் வேறுபட்ட வடிவங்களும் குறைந்தது ஆ என்பது இவ்வினைகளின் மூலநிலை ஈறு அல்ல என்பதைக்காட்ட உதவும். வினைத்திரிபாக்கத்தில் *வர* 'to come' மற்றும் *தர* 'to give' வரும் வேறுபட்ட வடிவங்கள் பின்வருவனவாகும்:

	வா	**தா**
1. ஏவல் ஒருமை	வா	தா
2. ஏவல் பன்மை	வம்மின்	தம்மின்
	அல்லது	அல்லது
	வம்மோ	தம்மோ
3. எதிர்காலம்	வருவன்	தருவான்
4. நிகழ்காலம்	வருகிறான்	தருகிறான்
5. இறந்தகாலம்	வந்தான்	தந்தான்
6. வினையெச்சம்	வர	தர
7. நிபந்தனை	வந்தால்	தந்தால்
	அல்லது	அல்லது
	வரின்	தரின்
8. எதிர்மறை	வாரான்	தாரான்
9. வினைப்பெயர்	வருகை	தருகை

அல்லது	அல்லது
வரவு	தரவு

ஏவல் ஒருமை பன்மைகளில் *ர்* என்பது காணப்படவில்லை. எதிர்கால மற்றும் இறந்த காலங்கள், வினையெச்சம் மற்றும் நிபந்தனை வினைப்பாங்குகள், எதிர்மறை வினைப்பாடு மற்றும் வினைப்பெயர்கள் என்பன மாற்றமின்றி *ர்* என்பதைக் கொண்டிருக்கின்றன. நெட்டுயிர் *ஆ* ஏவல் ஒருமையிலும் எல்லா எதிர்மறை வடிவங்களிலும் தோன்றுகின்றன. சில இடங்களில் எதிர்மறையிலுள்ள வராதே மற்றும் தராதே மற்றும் ஏவல் பன்மையிலுள்ள வாரும் மற்றும் தாரும் என்பனவற்றில் *ர* மற்றும் *ஆ* என்பன காணப்படும். இவ்வினைகளின் மூலநிலை வடிவங்களை கண்டுகொள்வதில் குழப்பம் வருமாறு பல வடிவங்கள் உருப்படுத்தப் பெற்றுள்ளன. இப்பல்வடிவங்களுக்குள் உண்மை வேர் மறைந்துள்ளது.

பிறரைக் காட்டிலும் இவ்வினைகளின் உண்மையான வடிவங்களைக் கண்டுபிடிப்பதில் சிரமம் எடுத்துள்ள டாக்டர் கால்டுவெல் இவற்றின் விளக்கவியலாத் தன்மையைப் பற்றி பின்வருமாறு கூறுகிறார்: தமிழில் *'வர'* "'to come' மற்றும் *தர* 'to give' என்ற இரு வினைகள் ஒரு திருப்தியான விளக்கம் தருவது கடினம் எனுமாறு தனித்தன்மைகளைக் கொண்டிருக்கின்றன." மற்றும் "இதை நிலைநிறுத்திக்கொள்ளாமல் *வர* மற்றும் *தர* என்பன தவறாக வினைகளின் வினைத்திரிபுகளைப் பெற்றுள்ளன எனத் தட்டிக்கழிக்க இயலாது. வர் மற்றும் தர் என்பனவற்றிலிருந்து அல்லாமல் *வர* மற்றும் *தர* என்ற வடிவங்களிலிருந்து தாம் இறந்தகால வந்தேன் மற்றும் தந்தேன் என்பன ஆக்கப்பட்டன மற்றும் இவை ஏவலில் சுத்தமாக இருக்கின்றன. நாம் *வர* மற்றும் *வர்* மற்றும் *தர* மற்றும் தர் என்பன மாறுபட்ட வேர்கள் அதாவது ஒரே வேரின் வேறுபட்ட வடிவங்கள் என்ற குண்டர்ட்டின் அலோசனை ஏற்றுக்கொள்ளத் உந்தப்படுகிறோம்." என்ற முடிவை எய்துகின்றார்.

டாக்டர் குண்டர்ட்டால் ஆதரவளிக்கப்பட்ட டாக்டர் கால்டுவெல்லின் கருத்து ஏற்றுக்கொள்ளவியலாது. ஏனென்றால் நாம் தமிழில் ஒரு ஒப்பாக்கத்தை அதாவது ஒரு வேரின் வேறுபட்ட வடிவங்கள் இருப்பைக் காணவில்லை. அவருடைய கருத்தை ஏற்றுக்கொள்ளவேண்டுமானால் *செ* மற்றும் *வெ* என்பன இறந்தகாலத்தில் இருப்பதால் சா மற்றும் *செ* மற்றும் *வே* மற்றும் *வெ* என்பனவற்றை உறழ்ச்சியுற்ற வேர்களாகக் கொள்ளவேண்டும். மேலும் இது தமிழ் அசையாக்கக் கோட்பாட்டிற்கு எதிராக அமையும்;

ஏனென்றால் "ரகார ளகார குற்றொற்று ஆகா" (தொல். 49) என்ற விதிப்படி குற்றுயிருக்கு முன்வரும் *ர்* ஒரு சொல்லை ஆக்காது. இருப்பினும் அவர்களின் கருத்துக்கள் உண்மையான வேரைக் கண்டுபிடிக்கத் துப்பு-தருகின்றது. *வரு* மற்றும் *தரு* என்பன வினையடிகளாகும்; இவை தமிழ்மொழியின் மிகப் பழங்காலத்தில் ஏவல் ஒருமையாகப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். இக்கோட்பாடு தமிழ்மொழியின் தொன்மையைக் கணக்கில் கொண்டால் நடப்பிலிருக்கிற பழமையான ஒரே இலக்கணமான தொல்காப்பியம் நம்மில் பலர் எண்ணுவதுபோன்று அவ்வளவு பழமையானதல்ல.

வா மற்றும் *தா* என்பனவற்றிலுள்ள *ஆ* அவற்றின் மூலநிலை ஈறல்ல. *பகு, மிகு, புகு* என்பன *பா, மீ, போ* என மாறும் தனிப்பட்ட மாற்றமும் முதல் மெய்யைத் தக்கவைத்துக்கொண்டு இறுதி மெய்யை நீக்கி தொடக்க *அ, இ,* அல்லது *உ* மற்றும் இறுதி *உ* என்பன ஒலியியல் அடிப்படையில் *ஆ* என ஒன்றுபடுகின்றது என்ற விளக்கமும் முன்பகுதியில் கூறப்பட்டது. இவ்வழியில் *வரு* என்பது *வா* என்று தொல்காப்பியத்திற்கு முன்னரே மாறிவிட்டது. *போ* என்ற சொல் போன்று *வா* என்பது ஏவலில் *வரு* என்பதன் இடத்தை எடுத்துக்கொண்டது.

நாம் வெந்தான் என்பது *வெ* என்பதிலிருந்து ஆக்கப்படுவதை ஒப்பாக்கமாகக் கூறவியலும் என்றாலும் வந்தேன் என்பது *வா* என்பதிலிருந்து ஆக்கப்படவில்லை. இதை வரு என்பதிலிருந்து பாதுகாப்பாக ஆய்ந்து கண்டுபிடிக்க இயலும். வருந்தாய் என்பதை அடைப்புக்குறிக்குள் வந்தாய் என்பதன் பதில் வடிவாகக் தந்திருப்பதிலிருந்து டாக்டர் கால்டுவெல் தாமே மேற்சொன்ன அனுமானத்தை வலியுறுத்துவதாகத் தெரிகின்றது.

உயிர்-மெய் *ரு* உட்கொள்ளப்படும் போக்கை எப்போதும் காட்டுகின்றது என்பதற்குப் பல சான்றுகள் இருக்கின்றன. *அரும்பல்* 'to bud' என்பதற்குப் பதிலாக *அம்பல்,* உருண்டை 'ball' என்பதற்குப் பதிலாக உண்டை, *ஒருத்தன்* 'a man' என்பதற்குப் பதிலாக *ஒத்தன்* என்பன எடுத்துக்காட்டுகளாகும். இவ்வாறு *ரு* முன் ஒரு குற்றுயிர் வருகையில் அது மறைந்துபோகும் போக்கு இருக்கிறது.

5. பழைய வினை வேர்களின் இழப்பு

தமிழ்ச் சொற்றகையின் மாற்றங்களின் அறிமுகம்

தேவையற்ற சொல்லின் இழப்பு, புதிய சொற்களின் வரவு, விரிதல், கட்டுப்படுதல் மற்றும் மாறுதல் போன்ற சொற்களில் பொருள் மாற்றம் என்பன மொழிநூலார் அடிப்படையில் ஒரு மொழியின் சொற்றொகையின் மாற்றத்திற்குக் காரணமாகும். பழைய இலக்கண ஆசிரியரான தொல்காப்பியர் சொற்களின் பயன்பாட்டிழப்பையும் புதிய சொற்களின் வரவையும் ஏற்றுக்கொண்டு பின்வரும் சூத்திரத்தில் தமது அனுமதியைத் தருகின்றார்.

கடிசொல் இல்லைக் காலத்துப் பாட்டினே (தொல் 934)

கடன்வாங்கலின் விளைவு

சில வினைகள் சமஸ்கிருத மற்றும் ஆங்கில நிகரன்களின் இடப்பெயர்ச்சியால் மக்களின் நினைவிலிருந்து படிப்படியாக மறைந்து விட்டதாகத் தோன்றுகின்றது.இப்படிப்பட்ட இடப்பெயர்ச்சி எந்த நோக்கத்தையும் பூர்த்திசெய்யவில்லை மற்றும் மொழியையும் வளப்படுத்தவில்லை,

தொல்காப்பியத்தின் உரையாசிரியர்கள் சொற்களைக் கடன்வாங்கல் தமிழ் சொற்றொகையை அதிகரித்தல் என்று கருதப்படக்கூடாது மற்றும் அவற்றிற்குத் தமிழ் இலக்கணத்தில் எந்த இடமும் இல்லை என்று கூறியுள்ளனர் (தொல்காப்பித்தின் சூ. 62, 65 மற்றும் 75). ஆனால் 6-வது நூற்றாண்டிலிருந்து தமிழ்மொழிக்குச் சமஸ்கிருதச் சொற்களின் விரைவான வரவு பிற்கால இலக்கணத்தார்களைத் தமிழ் ஒலியியல் விதிகள் மற்றும் இலக்கணக் கொள்கைகளின் அடிப்படையில் கடன்வாங்கப்பட்ட சொற்களை ஏற்றுக்கொள்வதற்கு விதிகளை உருவாக்கத் தேவையை உருவாக்கியது. தமிழ் அறிஞர்களால் சமஸ்கிருத சொற்கள் ஏராளமாகப் பயன்படுத்தப்பட்டபோது 'பழையன கழிதலும் புதியன புகுதலும்' என்பது தான் அந்நாளில் வற்புறுத்தப்பட்ட முறையாக அமைந்தது. தூயதமிழ்வாதிகளால் தூய மற்றும் தேவையான தமிழ்ச் சொற்கள் இலக்கியத்திலும் பயன்பாட்டிலும் அவற்றின் முந்தைய இடத்தைப் திரும்பப்பெறத் தொடங்கியுள்ளன.

வினைகள் மிக அரிதாகத்தான் மறைந்துபோயின. ஆனால் இக்கருத்துடன் முரண்படும் சில நேர்வுகளைக் காணலாம். ஆயும் போது இவ்வினை வேர்களில் ஒன்றிரண்டு தவிர பிற இருப்பதற்குத் தகுதியுடையன.

1. செத்து, செத்தான் மற்றும் செத்தனள்

இவ்வடிவுகளின் வேர் எது? நாம் இவ்வேர்கள் இறந்தகால வினையெச்சம் மற்றும் முற்று வினை தவிர பிற இடங்களில் வருவதைக் காணவில்லை. செத்து என்பதன் பயன்பாடு சங்க இலக்கியங்களில் ஏராளமுள்ளது. ஆனால் பழைய தமிழ் இலக்கியத்தில் இரு இடங்களில்தான் முற்று வினையாக வருவதாகத் தோன்றுகின்றது. அவைகள்:

வெப்படை ஆகூஉ செத்தான் (பதிற்று. (86)
காணுனர் இனிமையின் செத்தனள் பேணி (அகம் 16)

இவ்வடிவங்களின் வேர் 'to resemble' அல்லது 'to suppose' எனப்பொருள்படும். இவ்வடிவங்களின் வேர் எது என யாரும் எண்ணியதில்லை. இறந்த கால எச்சத்தையும் வினை முற்றையும் எடுக்கும் சா 'to die' என்பதுடன் அவற்றின் ஒற்றுமை காரணமாக நாம் தற்போது *சா* என்பதை *செத்து*, *செத்தான்* மற்றும் *செத்தாள்* என்பனவற்றின் வேர் என எண்ணுவோம். இந்தச் *சா* 'to suppose' மற்றும் 'to resemble' என்ற பொருள்களைக் கொண்டிராத காரணத்தால் இந்த அனுமானம் உறுதிப்படுத்த இயலாததாக மாறுகின்றது. *சாவா*, *சாகின்* மற்றும் *சாவாமல்* என்ற பிற இலக்கண வடிவங்களும் இப்பொருளைக் கொண்டிருக்கவில்லை. சில வடிவங்களில் இரு வேறுபட்ட வேர்களின் ஒற்றுமை அந்த வேர்கள் ஒன்றாகத்தான் இருக்கவேண்டும் என்பதை நிருபிக்காது. ஒரு வேருக்கு ஒரு அர்த்தம் இருக்கையில் அதன் வினை வடிவங்கள் காலங்கள் மற்றும் இடங்கள் (persons) வழி இரு மடங்குப் பொருள்களை வெளிப்படுத்தும் என்று அனுமானிக்கும் ஒப்பாக்கம் தமிழில் இல்லை. செது என்பது தான் கேள்விக்குரிய வடிவங்களின் வேர் என்று யோசனை கூறலாம். செது என்பது வேர் என்றால், அது இறந்தகாலத்தில் இரட்டித்திருக்காது. *டு, று*, அல்லது *கு* என்ற ஈற்றைக் கொண்ட குற்றுயிர் முன்வரும் சொற்கள் தாம் இறுதி மெய்யின் இரட்டிப்பால் இறந்தகாலத்தை வெளிப்படுத்தும்: எ.கா. *விட்டு*, *உற்று* மற்றும் புக்கு, மேலும் குற்றுயிர் முன்வரும் *து* என்பதை இறுதியாகக்கொண்ட வினைவேர்கள் தமிழில் இல்லை. பது அல்லாது *பதுக்கு* 'to hide' என்ற வேரைக் கொண்ட *பதுக்கை* என்பதைப் போன்று *செதுக்கை* என்ற அதன் வினைப்பெயரிலிருந்து இது தெளிவாகும்.

செ என்பது ஓரசை வேர் என்று அனுமானிக்கலாம். *செ* என்பதை வேராகக் கருதும் வழியில் சில வாதங்கள் இருக்கின்றன. எல்லாக் காலத்திற்கும் உரிய தமிழ் இலக்கணத்தார் *எ*

ஈற்றைக் கொண்ட உயிர்-மெய் சொல் இல்லை என ஒருமனதாகக் கூறுகின்றனர். சங்க இலக்கியங்களுக்கு முன்னர் தோன்றிய இலக்கண நூலான தொல்காப்பியம் பின்வருமாறு உறுதிசெய்கின்றது:

"எ யென வரும் உயிர் மெய்யீறு ஆகாது" (தொல். 71)

சங்க இலக்கியங்களுக்குப் பிற்பட்ட பன்னிரண்டாம் நூற்றாண்டின் இடைக்கால இலக்கணமான நன்னூல் தொல்காப்பியத்தின் கூற்றைப் பின்வரும் சூத்திரம் உறுதி செய்கின்றது:

'எகாரம் மெய்யோடு ஏலாது' (நன்னூல் 108)

தொல்காப்பியரின் காலத்தில் *செ* என்பது இருந்தால், அவர் ஒரு சொல் எ இறுதியுடன் உள்ளது என்று நிச்சயமாகக் கூறியிருப்பார்; ஏனென்றால் *சு* ஈற்றில் இரு சொல்லும் *பு* ஈற்றில் ஒரு சொல்லும் இருப்பதைக் கூறுகிறார்:

'உச்சகாரம் இருமொழிக்கு உரித்தே' (தொல். 75)
'உப்பகாரம் ஒன்றென மொழிப' (தொல். 76)

இதிலிருந்து நாம் செ என்பது இவரது காலத்திற்குப் பின்னர்தான் தோன்றியிருக்கவேண்டும் என்று தீர்மானிக்கலாம். உண்மையைக் கூறினால் *செத்து, செத்தான், செத்தனள்* என்ற வெளிப்பாடுகளை நேரிட்ட பவணந்தியார் எ என்பது ஒரு உயிர்-மெய் சொல்லின் ஈறாக இருக்கலாம் என்று கூறுவதை எதிர்பார்க்கலாம். ஆனால் இவ்வெளிப்பாடுகள் இடைக்கால இலக்கியங்களில் காணப்படாத காரணத்தால் அவர் இவற்றை கூறுவதற்குத் தவறிவிட்டார். கேள்விக்குரிய வெளிப்பாடுகள் சங்க இலக்கியங்களில் மட்டும்தான் காணப்படுகின்றன. அவற்றிற்கு சங்ககாலத்திற்கு முற்பட்ட தொல்காப்பியத்திலும் அல்லது சங்ககாலத்திற்குப் பிற்பட்ட இலக்கியங்களான திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை போன்றவற்றிலும் இல்லை. இவ்விளக்கங்களிலிருந்து *செ* என்பது ஒரு வேராக தொல்காப்பியர் காலத்திற்குப் பின்னர் தோன்றி சங்க இலக்கிய காலத்தில் வளமாக வாழ்ந்து பவணந்தியார் காலத்திற்கு முன்னர் பயன்பாட்டை இழந்தது என்ற பாதுகாப்பான முடிவுக்கு வரலாம்.

செ என்பது *ஓ* 'to be like' என்பது போன்று வினையெச்சத்தில் *ஒத்து* என்பதுபோல் செத்து என்ற வடிவத்தையும் வினைமுற்றில் ஒத்தான் என்பதுபோல் செத்தான் என்பதையும் எடுக்கும். அதன் இலக்கண வடிவங்களுடன் இவ்வேரின் அழிவுக்கு காரணத்தை ஆய்வது ஆர்வமூட்டுவதாகும். *செத்து, செத்தான்* என்ற ஒற்றுமையுள்ள வடிவங்களை எடுக்கும் 'to die' என்று பொருள்படும் *சா* என்பது *செ* என்ற வேரை அதன் பயன்பாட்டிலிருந்து வெளியேற்றிய ஒரு முக்கியக் காரணியாக இருக்கவேண்டும். 'to resemble' மற்றும் 'to suppose' என்று பொருள்படும் *செ* என்ற வேரின் வழக்கின்மைக்கு எந்த மத, அரசியல் அல்லது சமூக காரணத்தையும் கூறவியலாது. இதை வழக்கிழக்கச் செய்வதற்கு உளவியல் கரரணிகள் காரணமாகும். காலப்போக்கில் புலவர்கள் செத்து மற்றும் செத்தான் என்பன ஆபத்தான பொருளை உருவாக்கும் மற்றும் மக்களின் உணர்சிகளைப் பாதிக்கும் என்ற காரணத்தால் அவற்றைப் பயன்படுத்துவதற்கு வெறுப்பு காட்டினர். பழைய இலக்கியத்தில் 'good' என்ற அர்த்தத்தில் பயன்படுத்தப்பட்டு பிற்காலத்தில் 'dead' என்ற ஒரே அர்த்தத்தில் மட்டும் பயன்படுத்தப்பட்ட *மாண்ட* என்ற பெயரெச்சத்தில் நாம் ஓர் ஒப்பாக்கத்தைக் காணலாம்; இரு நேர்வுகளிலும் வேர் (*மாண்* அல்லது *மாள்*) வேறுபட்டவை. சேத்து எல்லா அகராதிகளிலும் ஒப்புமையைக் குறிக்கும் ஒரு சார்படை என்று தவறாகக் கூறப்பட்டுள்ளது. தொல்காப்பியச் சூத்திரம் 1231-இல் ஒப்புமை இடைச்சொல் என செத்து தவறாகக் குறிப்பிடப்பட்டுள்ளது என பேராசிரியர் சரியாகக் கூறியுள்ளார். *செத்து, செத்தான், செத்தனள்* என்பனவற்றில் *செ* என்பதன் சரியான நிலை இது 'to resemble' என்று பொருள்படும் வேராகும்.

2. சிவண் 'to join'

இவ்வேர் தொல்காப்பியம் முழுவதும் பல இடங்களில் வருகின்றது. மாறாக அகநானூறு, பத்துப்பாட்டு, திருக்குறள், சிலப்பதிகாரம் மற்றும் மணிமேகலை என்ற தொகுப்புகள் தவிர எந்த ஒரு பயன்பாடும் எட்டு தொகையில் இல்லை. எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான அகநானூற்றில், சிவண் என்பதற்கு அரிதான பயன்பாடு உள்ளது.

'மணிபுரை செவ்வாய் மார்பகம் சிவண்' (அகம் 66)

இச்செய்யுளின் ஆசிரியர் செல்லூர்க்கோசிகன் கண்ணனார். இவர் இதைத் தவிர வேறு எந்த செய்யுளும் தரவில்லை. சங்க இலக்கியத்தில் கூடுதல் பங்களிப்பு செய்துள்ள கபிலர், பரணர்,

நக்கீரர், மாமூலநார், கல்லாடர் போன்றோர் அவர்களின் மொத்தச் செய்யுள்களிலும் சிவண் என்ற சொல்லை நிச்சயமாகப் பயன்படுத்தாததாலும் ஒரு செய்யுளின் ஆசிரியரான செல்லூர்க்கோசிகனார் பயன்படுத்தியுள்ளதாலும், அவர் தொல்காப்பியரின் காலத்தைச் சார்ந்தவராகவோ சங்க இலக்கியங்களின் பிற ஆசிரியர்கள் வாழந்த காலத்திற்கு முன் வாழ்ந்தவரராகவோ இருக்கலாம். சங்க இலக்கியத்தில் அரிதாகப் பயன்டுத்தப்பட்டுள்ள சிவண் என்பதன் பயன்பாட்டை பெருந்தொகை ஆசிரியர் திருப்பிக்கொண்டுவந்துள்ளார்.

'இசையொடு சிவணிய யாழ்' (காதை 32)

இது தொல்காப்பியம் 33-இன் 'இசையொடு சிவணிய நரம்பின் மறைய' என்பதன் சுவீகாரமாகும். எனவே சிவண் என்ற சொல் அதன் மறுபிறப்பை நீண்ட இடைவேளைக்குப் பின்னர் பெற்றுள்ளது என்று கூறலாம். இருப்பினும் இது மீண்டும் பயன்பாட்டை இழந்துள்ளதாகத் தெரிகின்றது. தொல்காப்பிய இலக்கணத்தில் விருப்பத்துடன் பயன்படுத்தப்பட்ட சிவண் பிற்கால இலக்கணங்களில் பயன்படுத்தப்படவே இல்லை என்பது ஆர்வமூட்டுவதாகும்.

3. ஆன் 'to cease'

ஆன ஈகை அடுபோர் அண்ணல்' (புறம் 42)
'ஆனாது உருவும் புகழும் ஆகி' (புறம் 6)
'அட்டு ஆனானே குரிசில்' (பதிற்று. 47)

ஆன, ஆனது, மற்றும் *ஆனானே* என்பனவற்றின் வேர் 'to cease' எனப் பொருள்படும் *ஆன்* என்பதுதான். இதன் உடன்பாட்டு வடிவுகளும் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றது:

'ஆன்று அவிந்து அடங்கிய கொள்கை (புறம் 191)
'அருவி ஆன்ற பெருவரை' (அகம் 91)

இவ்வடிவங்கள் ஆன் தான் அவற்றின் வேர் எனத் தெளிவாகக் காட்டுகின்றன. நாம் ரெவ். மிரொன் வின்ஸ்லொ என்பவரின் "Comprehensive Tamil and English Dictionary" என்பதில்

ஆன்றாமை மற்றும் ஆன்றால் என்ற இரு சொற்களுக்குப் பின்வரும் விளக்கங்கள் தந்திருப்பதைப் பார்க்கின்றோம்.

"ஆனாமை – an abstract noun belonging to a kind of defective negative verb-that which is inseparable; not leaving; unceasing".

"ஆன்றல் - an irregular defective noun".

விளக்கத்தில் "குறையுள்ள" என்ற சொல்லைக் குறிப்பாகக் கவனிக்கவேண்டும். இவ்வடிவங்களில் குறை என்ன? இவற்றின் வேர் 'to cease' என்ற பொருளை வெளிப்படுத்துவதால் இது சரியான வினை என்பதில் ஐயமில்லை. அகராதியைத் தொகுத்தவர் தமிழ் இலக்கியத்தில் எங்கும் ஆன் என்ற செப்பமற்ற வேரை நேரிடவில்லையாதலால் அவற்றைக் "குறையுள்ளவை" என்று கூறியுள்ளார். ஆன் சொல்லுக்குப் பல பொருள்கள் இருக்கின்றன. அவை எல்லா அகராதிகளிலும் தரப்பட்டுள்ன. அவற்றில் 'to cease' வினைப் பொருள் காணப்படுவதில்லை; ஏனென்றால் யாரும் ஒரு வினை வேர் இருப்பதைக் கற்பனை செய்திருக்கமாட்டார்கள். அவர்கள் ஆனாமை, ஆன்றால், ஆன்று போன்றவற்றின் வேர் கண்டுபிடிக்கவியலாதது என்று எண்ணினார்கள்; ஏனென்றால் அவர்கள் அது எங்கேயும் ஏவலாகப் பயன்படுத்தப்படுவதைக் காண இயலவில்லை.

சான்று, சான்றோள் மற்றும் சான்ற என்பனவற்றுடன் உள்ள ஒப்புமையால் ஆன்று, ஆன்றோள் மற்றும் ஆன்ற என்ற வடிவங்களின் வேர் ஆல் என்பதில்லை என்று முதல் பார்வையிலேயே அனுமானிப்பது இயல்பு. உடன்பாட்டு வடிவம் எடுப்பதன் அடிப்படையில் தீர்மானத்திற்கு முந்தலாகாது. *ஆல்* என்பது வேராய் இருந்தால், *சாலாமல், சாலா, சாலாது* என்பனவற்றுடன் உள்ள ஒற்றுமையின்படி எதிர்மறை வடிவங்கள் *ஆலாமல், ஆலா, ஆலாது* என்றிருக்கவேண்டும். ஆனால் உண்மையில் நாம் *ஆனாமல், ஆனா, ஆனாது* என்ற வடிவங்களைத்தான் எதிர்மறையாகக் காண்கிறோம். எனவே ஆல் என்பது வேராக இருக்கவியலாது; ஆன் தான் வேராக இருக்கவேண்டும். நாம் *ஆன்* என்பதன் எல்லா நோக்குகளையும் நிரூபிக்க மற்றொரு எடுத்துக்காட்டை எடுத்துக்கொள்வோம். *ஈன்* 'to bring fourth' என்பது எல்லா நோக்குகளிலும் ஆன் என்பதுடன் ஒத்திருக்கின்றது. இது ஈன்று, ஈன்றாள் மற்றும் ஈன்ற என்ற உடன்பாட்டு வடிவங்களையும் *ஈனாமல், ஈனாத, ஈனாமை* என்ற வடிவங்களை எதிர்மறையாகவும் எடுக்கின்றது. எனவே *ஆன்*-ஐ *ஈன்*-உடன் ஒப்பிடும் போது ஆன் அல்லாது

ஆல் தான் வேராக இருக்கவேண்டும் என்ற கருத்து முழுவதும் நியாயப்படுத்தப்படுகின்றது. திருக்குறளில் 'அருள் என்னும் அன்பீன் குலவி' என்பதில் *ஈன்* அதன் சீரற்ற வடிவத்தில் வினைத்தொகைக் கூட்டில் பயன்படுத்தப்படுகின்றது. ஆனால் ஆன் என்பது ஏவலிலோ வினைத்தொகையிலோ பயன்படுத்தப்படுகின்றது என்பதைக் காட்டும் ஒரு நேர்வு கூட இல்லை. எனவே *ஆன்* 'to cease' இவ்வெல்லாத் தொடர்புகளிலும் அதன் பயன்பாட்டிலிருந்து விடப்பட்டுள்ளது எனக் கருதலாம்.

ஏன் ஆன் அதன் செப்பமற்ற வடிவில் பயன்படுத்தப்படவில்லை? அது ஏன் வழக்கிழந்தது? ஆன் என்பதை அசைநிலை, வேற்றுமைக் குறியீடு அல்லது ஒரு காகம் அல்லது காளை எனப் பொருள் தரும் ஒரு பெயர் என்று பெரும்பான்மையும் பயன்படுத்துவதில் இதன் காரணம் இருக்கிறது. மொழியை மயக்கமில்லாமல் செய்யும் பார்வையின் காரணத்தால் தமிழறிஞர்கள் செப்பமற்ற வடிவத்தை பயன்பாட்டிலிருந்து விட்டுவிட்டு அதிலிருந்து வந்த பிற வடிவங்களைத் தக்கவைத்துள்ளனர். இவ்வாறு மூலநிலை வேரான ஆன் வழக்கிழந்தது. வழக்கிழந்த *ஆன்* என்பதன் 'to cease' என்ற பொருள் *ஆன்* என்பதற்கு கிட்டத்தட்ட இணையாக இருந்த நீங்கு என்பதால் பொதுவாக வெளிப்படுத்தப்பட்டது.

4. நூழில்

'Killing and heaping the killed' (கொன்று குவித்தல்) என்ற பொருள் தான் எல்லா உரையாசிரியர்களாலும் நூழில் அல்லது நூழிலாட்டு என்பதற்கு எந்த மாற்றமுமின்றி தரப்பட்டுள்ளது.

'ஒள்வாள் வீசிய நூழில்' (தொல் 1017)
'வேளப் பழனத்து நூழிலாட்டு' (மதுரை 257)
'நூழி லாட்டி நுகம்படக் கடந்து' (மலை, 87)
'நூழி லாட்டிய சூழ்கழல் வேந்தன்' (சிலம்பு 26)

இவ்வடிவங்களைத் தாம் நாம் இலக்கியத்தில் நேரிடுகின்றோம். நூழில் என்ற சொல்லின் மூலநிலை வேரைச் கண்டுபிடிப்பது கடினம். எனவே நூழில் ஒரு சொல்லோ அல்லது இரு சொற்கள் அவை ஒன்றும் எனும்படிக்கு கலந்துள்ளதா என்ற ஐயம் எழுகின்றது. இது குறில்

மற்றும் நெடில் என்பவைகளைப் போன்று வினைப்பெயராகத் தோன்றுகின்றது. வினைப் பெயரின் பின்னொட்டான இல்-ஐ நீகியபின்னர் மீதமிருக்கிற நூழ் செப்பமுறாத வேராகக் கருதப்படும். தொல்காப்பியர் நூழில் என்பதைத் தான் வினைப்பெயராக ஒரே ஒரு இடத்தில் மட்டும் பயன்படுத்தி இருக்கிறார். தொல்காப்பியத்துக்கு முந்திய இலக்கியங்கள் *நூழ், ஊழ், தாழ், வாழ்* போன்று *நூழ்த்த, நூழ்த்திய* போன்ற பிற வடிவங்களைக் கொண்டிருக்கலாம். ஆனால் மிகப்பழைய தமிழ் இலக்கியத்தில் இம்மாதிரியான வினைத்திரிபுகள் காணப்படவில்லை. *நூழ்த்தி, நூழ்த்திய* மற்றும் என்பனவற்றைச் சாதாரணமாகப் பயன்படுத்துவதற்குப் பதிலாக *ஆடு* என்ற துணைவினையுடன் *நூழிலாட்டி* மற்றும் நூழிலாட்டிய என பயன்படுத்துவதைப் புலவர்கள் வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

நூழில் என்ற வினைப்பெயருடனேயே *ஆட்டு* என்ற மற்றொரு வினைப்பெயர் சேர்க்கப்படுகிறது என்பது ஆர்வத்துடன் கூறத்தக்கதாகும். இரு வினைப்பெயர்கள் பொருண்மையை எந்த வழியிலும் மாற்றவில்லை. அவை அறியாமை அல்லது தவறான புரிந்துகொள்கைக் காரணமாக மக்கள் சொற்களைத் தளர்வாகப் பயன்படுத்துவதற்கு எடுத்துக்காட்டுகளாக இருக்கின்றன. நூழிலாட்டு போன்ற பல எடுத்துக்காட்டுகள் தமிழில் உள்ளன. *கோள்* என்பது *கொள்* 'to get' என்பதன் வினைப்பெயராகும்; இருப்பினும் நாம் கோட்படு அல்லது கோடல் என்று கூறுகின்றோம். இவ்வாறு 'to kill in heaps' என்று பொருள்படுகின்ற நூழ் என்ற வேர் சங்க இலக்கியத்திற்கு முன்னரே வழக்கிழந்து விட்டது. நூழ் என்பதிலிருந்து *நூழிலாட்டு* தவிர வேறு எந்த இலக்கண வடிவங்களும் உருவாகாமைக்கு இதுதான் காரணம். இக்காலத்தில் *நூழில், நூழிலாட்டு* என்பனவும் அதே வழக்கின்மையை அடைந்துள்ளன.

5. என் 'to say'

நாம் இவ்வேர் முன்னிலை ஒருமை ஏவல் தவிர என்ப, என்றனன், என்போய், என்று என பிற எல்லாச் சேர்க்கைகளிலும் வருவதைக் காண்கின்றோம். செப்பமுறா வடிவத்தில் இதன் பயன்பாடு வினைத்தொகைக் கூட்டிலும் காணப்படுகின்றது.

'யா என் சினைமிச்சை உரையசைக் கிளவி (தொல் 34)

'சொல் என் எச்சம் முன்னும் பின்னும்' (தொல் 923)

'to say' எனப்பொருள்படும் *என்* என்பதன் செப்பமற்ற வேர் திருக்குறளில் சில சூழல்களில் முன்னிலை ஒருமை ஏவலில் பயன்படுத்தப்படுவதை அதிஷ்டவசமாகக் கண்டுகொள்ள முடிகின்றது; இருப்பினும் உரையாசிரியர் பொருள்கோள் வேறானது.

'கற்றதனால் ஆய பயன் என் கொல் (குறள் 2)

இங்கு 'பயன் என்' என்பதில் இரண்டாம் வேற்றுமை *ஐ* புரிந்துகொள்ளப்பட்டு 'பயனைச் சொல்' என்று பொருள்கொள்ளப்படும்.

'இல்லது என் இல்லவள் மாண்பானால் உள்ளது என்
இல்லவள் மாணாக் கடை' (குறள் 53)

இங்கு *இல்லதென், உள்ளதென்* என்பனவற்றில் வேற்றுமை உருபு *ஐ* என்பது இரண்டு இடத்திலும் புரிந்துகொள்ளப்பட்டு 'say what is not' மற்றும் 'say what will be' எனப் பொருள்கொள்ளப்பட வேண்டும். கேள்வி வடிவ என் என்பதற்கும் வினைவடிவ என் என்பதற்கும் இடையில் உள்ள வேறுபாடு மிகச் சிறியது. முந்தையது பிந்தையதிலிருந்து மூலநிலையை எடுத்திருப்பது போல் தெரிகின்றது. இடைக்காலத்தைச் சார்ந்த அறிஞர்கள் கேள்வி வடிவ என் என்பதுடன் உள்ள மோதலைத் தவிர்ப்பதைக் கருத்தில்கொண்டு வேண்டுமென்றே செப்பமற்ற வேரான என் என்பதை ஏவல் வினைப்பாங்கில் பயன்படுத்துவதிலிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொண்டார்கள்; அதே சமயம் அதிலிருந்து உருவான எல்லாப் பிற வடிவங்களையும் பயன்படுத்தினார்கள். இவ்வழியில் என் என்பது வழக்கிழந்த போது அதனிடத்தில் சொல் பெரும்பான்மையும் பயன்படுத்தப்பட்டது. இதன் காரணமாகத்தான் தமிழ் அகராதி என் என்பதற்கு 'to say' என்ற பொருள் தரவில்லை மற்றும் என் என்பதை ஒரு வினையாகக் கூறவில்லை.

6. சொலி 'to remove'

'படுகடும் களிற்றின் வருத்தம் சொலிய' (அகம். 8)
'புறவின் அல்லல் சொல்லிய கறையடி' (புறம். 39)

இவ்வடிவங்களின் வேர் என்ன? சொல் என்பதா சொலி என்பதா? செய வினைஎச்ச வடிவைப் போன்று ஒரே இலக்கண வெளிப்பாட்டில் *சொல்லிய, சொலிய* என்ற வடிவங்களின் இருப்பு வேர் என்ன என்ற கேள்விக்கு வெளிச்சம் தரவில்லை. இதன்படி நாம் இலக்கியத்தில் பிற வடிவங்களுக்கு வேண்டி தேடுவதற்கு உந்தப்படுகின்றோம்.

'காம்பு சொல்லித்தன்ன அறுவை உடீஇ' (சிறுபாண். 236)
'திங்கள் உகிரிற் சொலிப்பது போல்' (சிந்தாமணி 350)

இறந்தகால வினையெச்சமான சொலித்து மற்றும் வினையாலணையுவும் பெயரான சொலிப்பது என்பன சொலி என்பது தான் வேர் என்று காட்டுகின்றன. சொல் என்பது வேரானால் இவ்வடிவங்கள் சொல்லியன்ன மற்றும் சொல்லியது என்றிருக்கவேண்டும். இதை முடிவு செய்ய மற்றொரு வடிவமும் இருக்கின்றது. சொலி என்பது சில மரங்களின் பட்டை எனப் பொருள்படும் பெயராகப் பயன்படுத்தப்படுகின்றது. நீக்கப்பட்ட அல்லது உரிக்கப்பட்ட ஒன்று சொலி என்று அழைக்கப்படுகின்றது; கழைபடு சொலி (புறம் 383). எனவே சொல்லிய எனச் சில இடங்களில் வருவது ஓசை இசைவுக்காக ஏற்பட்ட இரட்டிப்பு எனக் கருதப்படவேண்டும்.

வேறு பொருள்கொண்ட ஆனால் ஒத்த ஓசையைக் கொண்ட சமஸ்கிருத சொல் இதை முந்திக் கொண்டு பேச்சுவழக்கில் மட்டுமல்லாமல் செய்யுள் உருவாக்கத்திலும் இடத்தைப் பிடித்துக்கொண்ட போது சொலி என்ற வேர் வழக்கிழந்து விட்டது.

7. எய்யாமை 'ignorance'

தொல்காப்பியர் உயிரியல் என்ற பகுதியில் பின்வரும் சூத்திரத்தை யாத்துள்ளார்:

'எய்யாமையே அறியாமையே' (தொல். 824)

எதிர்மறை வடிவம் நம்மைக் குழப்பதிலாக்குகின்றது மற்றும் இவ்வடிவத்தை உடன்பாட்டில் பயன்படுத்தவியலுமா என்ற ஐயத்திற்குக் கொண்டுசெல்கின்றது. ஆசிரியரால் எதிர்மறை வடிவத்தில் இப்பகுதி முழுவதிற்குள்ளும் தரப்பட்ட ஒரே சொல் இதுதான். 'knowing' எனப் பொருள்படும் எய்தல் அல்லது எய்த்தல் போன்ற எந்த உடன்பாட்டு வடிவத்தையும் இலக்கியங்களில் நேரிடாததால் இதை எதிர்மறையாகக் கருதலாகாது என்று சேனாவரையர்

கருத்து தெரிவிக்கிறார். இக்கருத்திலிருந்து மாறுபடும் வேறு உரையாசிரியரான நச்சினாக்கினியர் தாம் உரை எழுதிய பத்தாவது நூற்றாண்டைச் சார்ந்த சீவக சிந்தாமணி என்ற நூலிலிருந்து ஒரு வரியைக் குறிப்பிட்டுக் காட்டி *எய்த்தல்* என்பது *எய்யாமை* என்பதன் உடன்பாட்டு வடிவமாகும் என்று சுட்டிக்காட்டுகின்றார். தொல்காப்பியத்திலிருந்து மணிமேகலை வரை எதிர்மறை வடிவம் மட்டும் தான் மாற்றமில்லாமல் பயன்படுத்தப்பட்டு வருகின்றது என்பது கவனத்திற்குரியதாகும். சிந்தாமணிக்கு முற்பட்ட பெருங்கதை என்ற செய்யுள் நூல் முதல்முறையாக இச்சொல்லை உடன்பாட்டில் பயன்படுத்தியுள்ளதாகத் தோன்றுகின்றது.

'அத்தொழில் நிர்த்தென்ன எய்த்தனன்' (மகத. 8)

இதைத் தொடர்ந்து திருத்தக்க தேவர் 2481 மற்றும் 2683 என்ற செய்யுள்களில் இரு தடவை வினை உடன்பாட்டு எச்சத்தில் பயன்படுத்தியுள்ளார்.

தொல்காப்பியர் எதிர்மறை வடிவங்களும் உரிச்சொல்லாகக் கருதப்படவேண்டும் என்று குறிப்பிட எதிர்மறை வடிவத்தைப் பயன்படுத்தியுள்ளார் என்று நச்சினார்க்கினியர் கூறுகின்றார். இது ஆசிரியரின் கருத்து என்றால், ஒரு குறிப்பிட்ட சொல்லுக்குக் குறிப்புரையாக இதைக் கூறுவது தவறாக இருந்திருக்கவேண்டும்; ஏனென்றால் இது நிச்சயமாக மாணவரை இதைத் தவிர வேறு சொற்கள் எதிர்மறையாக மாறாது என்ற அனுமானிக்கத் தூண்டும். தொல்காப்பியர் இக்கருத்தைத் தெரிவிக்க விரும்பினால் இதேபோன்ற நேர்வுகளில் செய்தது போன்று அவர் தம்முடைய விருப்பத்தைத் தனியான சூத்திரத்தில் எழுதியிருக்கவேண்டும்.

"பெயரெஞ்சு கிளவியும் வினையெஞ்சு கிளவியும்
எதிர்மறுத்து மொழியினும் பொருளிலை திரியா" (தொல். 720)

இதற்கு உடன்பாட்டு வடிவம் உண்டு என நச்சினார்க்கினியருடன் உடன்படலாம்; ஆனால் அவர்காட்டும் காரணத்தில் உடன்படவியலாது. தொல்காப்பியர் எய் என்பதன் எதிர்மறை வடிவத்தை மட்டும்தான் குறிப்பிட்டுள்ளார் என்ற உண்மை ஆசிரியரின் காலத்திற்கு முன்னரே இதை உடன்பாட்டில் பயன்படுத்துவது வழக்கிழந்துவிட்டது என்று கருதலாம். இது எதிர்மறை வடிவங்கள் மட்டும் காணப்படும் சங்க இலக்கியங்களிலிருந்து பிறந்திருக்கவேண்டும்.

'எய்யா யாயினும் உரைப்பல் தோழி' (அகம் 28)

'எய்யாது ஆகின்று எஞ்சிறுசென் நாவே' (புறம். 148)

'எய்யா மையாலை நீயும் வருந்துதி' (குறிஞ்சி 8)

தமிழறிஞர்களில் ஒருவரான பரிமேலழகர் பின்வரும் பத்தியில் காணப்படும் எய்யாமை என்ற வெளிப்பாட்டிற்குத் துரதிருஷ்டவசமாகத் தவறான பொருள் தந்துள்ளார்.

"பொய்யாமை அன்ன புகழ் இல்லை எய்யாமை
எல்லா அறமும் தரும்" (குறள் 296)

இங்கு எய்யாமை அவரால் 'without exertion' என பொருள்கொள்ளப்பட்டுள்ளது. இது 'பொய்பேசுவதற்கு அறியாமை' என்று பொருள்படவேண்டும். இச்சூழலில் இப்பொருள்கோள் தொல்காப்பியர் தந்துள்ள பொருளோடு ஒக்கும்.

மேற்சொன்ன விளக்கங்களிலிருந்து எய் என்பது தொல்காப்பியத்திற்கு முன்னர் உள்ள இலக்கியத்தில் கூட அதன் உடன்பாட்டுப் பயன்பாட்டிலிருந்து வழக்கிழந்து விட்டது எனத் தீர்மானிக்கலாம். பெருங்கதை மற்றும் சீவகசிந்தாமணி ஆசிரியர்கள் அவர்களின் செய்யுள்களில் பழஞ்சொற்களுக்குப் புத்துயிர் கொடுக்க முயன்றுள்ளார்கள் என்று தெரிகின்றது; ஆனால் இவ்வாறு புத்துயிர் கொடுக்கப்பட்ட சொல் குறைந்த காலம் தான் வாழ்ந்துள்ளதாகத் தெரிகின்றது.

8. பழிச்சு 'to praise'

இதன் பயன்பாடு தொல்காப்பியத்தில் ஏராளம் இருக்கின்றது மற்றும் சங்க இலக்கியங்களில் *பழி* என்பது ஒரு வினையாக குறைந்த பயன்பாட்டைக் கொண்டுள்ளது. தொல்காப்பியர் காலத்திலிருந்தே *பழி* என்பது அதன் எல்லா இலக்கணவடிவங்களிலும் பெரும்பான்மையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. *பழிச்சு, பழி* என்பன வேரிலும் பொருளிலும் ஒன்றிற்கொன்று எந்தத் தொடர்பையும் கொண்டிராவிடினும் பழிச்சி என்பதிலிருந்து *பழிச்சல், பழிச்சிய, பழிச்சி* மற்றும் பழி என்பதிலிருந்து *பழித்தல், பழித்த, பழித்து* என்பன போன்று இலக்கண உறவுகளில் அவை எடுக்கும் வடிவங்களில் நெருங்கிய ஒற்றுமை இருக்கின்றது. *ச்*

என்பது *த்* ஆக மாறும் போக்கை எப்பொழுதும் காட்டும். பழங்கால இலக்கியத்தில் பெரும்பான்மையான பயன்பாட்டைக் கொண்ட தலைச்சு பிற்காலத்தில் தலைத்து என மாறியது. *த்* என்பது *ச்* என்பதை இடம் பெயர்க்கத் தொடங்கியருந்தால், இடைக்காலத்தைச் சார்ந்த புலவர்கள் *பழிச்சல்* 'to praise' என்பதை அது *பழித்தல்* 'to blame' என்பதற்கு நிகராக மாறும் என எண்ணி அதைப் பயன்படுத்தப் பயந்தார்கள்.

தொல்காப்பியர் 907 மற்றும் 908 என்ற இரு சூத்திரங்களில் *கண்டீர், கொண்டீர், சென்றது, போயிற்று, கேட்டை, நின்றை, காத்தை, கண்டை* என்பனவற்றை முன்னிலை இடத்தின் அசைநிலை என்று குறிப்பிட்டுள்ளார். அக்காலத்தில் அவை பயன்படுத்தப்பட்ட அர்த்தத்தில் அவை வழக்கிறந்த வடிவங்கள் எனக் கருதலாம். உரையாசிரியர்களே அவர்களின் காலத்தில் அவற்றின் வழக்கின்மையைக் குறிப்பட்டுள்ளனர்.

6. புதிய வினை வேர்களின் வருகை

தமிழ் மொழியின் சொற்றொகையின் வரலாற்றை அறிய எவ்வெழுத்துக்கள் சொற்களின் தொடக்கத்திலும் ஈற்றிலும் வரும் என்ற இலக்கணத்தாரின் கூற்றுகள் மிக முக்கியமானவையாகும். தொடக்க எழுத்துக்கள் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட சொற்களைக் காட்டுகையில் ஈற்றெழுத்துக்கள் பழைய எழுத்துக்களின் மாற்றத்தையோ நீக்கத்தையோ காட்டும்.

இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்த இலக்கண நூலான தொல்காப்பியம் *ச, சை* மற்றும் *செள* என்பன சொல்லின் தொடக்கத்தில் வாரா என அறுதியாகக் கூறியுள்ளார். இவ்வாசிரியர் அவர் காலத்தில் பயன்பாட்டிலோ இலக்கியத்திலோ இவ்வெழுத்துக்களைத் தொடக்கமாகக் கொண்ட சொற்களைக் காணாததால் இவ்வாறு கூறியுள்ளார். வீரசோழியம், நேமிநாதம், நன்னூல் போன்ற பிற்கால இலக்கணங்கள் இவ்வெழுத்துக்களால் தொடங்கப்படும் சொற்களின் நேர்வுகளைக் கண்டு சொற்களின் தொடக்கத்தில் *ச்* என்பது எல்லா 12 உயிர்களுடனும் சேரும் என விதி தந்துள்ளன. தொல்காப்பியத்திற்கு முந்தைய இலக்கிய ஆவணங்கள் நம்மிடமிருந்தால் நாம் எத்தொடக்க எழுத்துக்கள் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளன என நிச்சயமாகக் கண்டுகொள்ள இயலும். துரதிருஷ்டவசமாக அவை நமக்கு கிடைக்கவில்லை.

தொல்காப்பியத்தின் உரையாசிரியர்கள் ஒட்டுமொத்தமாக செப்பமற்றவையாக இருந்தாலும் சரி புதிதாக வந்தனவானாலும் சரி தொடக்க எழுத்துக்களைப் பொறுத்தவரையில் அவை கருத்தில் கொள்ளப்படவேண்டும் மற்றும் *சை* மற்றும் *செள* என்பனவற்றால் தொடங்கப்பெறும் சொற்கள் அவற்றின் சமஸ்கிருத மூலநிலை காரணமாக ஏற்றுக்கொள்ளப்படலாகாது என்ற கருத்தை முன்வைத்துள்ளனர் (தொல் 62 மற்றும் 65). சை அல்லது செள எனத் தொடங்கும் எந்தச் சொல்லும் தமிழ்மொழிக்குப் பொருத்தமான மூலவளத்திலிருந்து வந்ததாகக் கருதலாகாது. ஆனால் அவர்கள் *ச* என்பது தொடக்கத்தில் வருவதைப்பற்றி அவற்றின் தமிழ் மூலநிலை காரணமாக பிற்கால இலக்கணத்தாருடன் உடன்படுகின்றனர். *ச* தொடக்கச் சொற்களில் தமிழர்களால் அடிக்கடி பயன்படுத்தப்படும் சில வினைகளைக் காணலாம்: *சகி* 'to endure'; *சஞ்சரி* 'to roam about'; *சந்தி* 'to meet'; *சந்தேகி* 'to suspect'; சம்*பாதி* 'to procure'; *சம்மதி* 'to agee'; மற்றும் *சம்பவி* 'to happen'. இச்சமஸ்கிருத சொற்கள் அவற்றைத் தமிழ் நிகரன்களால் எளிதில் நீக்கிவிடலாம் என்றபடியால் தேவையில்லாதவை. *ச* தொடக்கப் பிற வினைகள் பழைய ஆவணங்களிலிருந்து வந்தவை என்ற காரணத்தால் தமிழ்ச் சொற்களாகக் கருதப்படவேண்டும். முதலாவது தொல்காப்பியர் காலத்திற்குப் பின்னர் புதிதாக வந்த ச தொடக்க வினைகளின் பட்டியலைத் தருவோம்.

1	சண்ணு அல்லது சண்ணி	= to smear
2	சதிர்	= to gain strength
3	சமை	= to make or cook
4	சழி	= to be crushed down
5	சடை	= to check
6	சதை	= to crush
7	சவட்டு அல்லது சமட்டு	= to grew or to destroy
8	சவங்கு	= to languish
9	சரை	= to become grey
10	சமழ்	= to be ashamed
11	சளை	= to grow tired
12	சலி	to be weary
13	சவை	to chew
14	சவி	to curse

15	சப்பு	to suck
16	சரி	to fall oneone side
17	சருங்கு	to slip off
18	சலாத்து	to shake
19	சவு	to be cheap
20	சலங்கு	to languish

பின்வரும் ஒலிக்குறிப்புச் சொற்களைத் தொல்காப்பியர் காலத்திற்குப் பின்னர் உருவானவை எனக் கருதவேண்டும்.

1. சரேலனல், 2. சறுக்கெனல், 3. சலசலவெனல், 4. சரட்டெனல், 5. சவச்சவெனல், 6. சழக்கெனல், 7. சப்பெனல்

புதிய சொற்களின் உருவாக்கத்தில் கூடுதல் கவனம் செலுத்தியிருக்கும் மொழிநூலார் வளர்ச்சியுற்ற மொழிகளைப் பொறுத்தவரையில் புதிய சொற்கள் ஏற்கனவே இருக்கின்ற சொற்களிலிருந்து உருவாகும் என்ற கிட்டத்தட்ட ஒரே கருத்தை வெளிப்படுத்துகின்றனர். டி.ஜி. டக்கர் புதிய சொற்களின் உருவாக்கம் பற்றி பின்வரும் உற்றுநோக்கலைச் செய்கின்றார்: "புதிய சொற்களை உருவாக்கும் சாத்தியம் மற்றும் சொற்றொகை பெரிதாக்குவது என்பனப் பயன்பாட்டு அடிப்படையில் எல்லையற்றது. இம்மாதிரியான புத்தாக்கங்கள் எல்லாக் காலங்களிலும் நடைபெறும் மற்றும் ஒவ்வொரு நாளும் தொடரும்; ஆனால் பல மொழிகளில் இது பழைய சொற்களிலிருந்து உருவாக்குவதாகும்." மேற்சொன்ற சொற்களின் மூலங்களைப் பரிசோதிக்கும் போது இக்கருத்து தான் வெளிப்படுகின்றது.

1. அ என்பதிலிருந்து ச

பின்வரும் எடுத்துக்காட்டுகளிலிருந்து சொற் தொடக்கத்தில் *அ* என்பது *ச* என மாறும் போக்கு இருக்கின்றது என்ற கொள்கையைப் பெறவியலும். எடுத்துக்காட்டாக *அவை* 'assembly' என்பது *சபை* அல்லது *சவை* எனவும் *அரண்* 'protection' என்பது *சரண்* எனவும் *அமர்* 'war' என்பது *சமர்* எனவும் *அமையம்* 'time' என்பது *சமயம்* எனவும் மாறும். இப்போக்கின் படி *சண்ணு, சதிர், சமை* மற்றும் *சழி* என்ற புதிய சொற்கள் *அண்ணு, அதிர், அமை* மற்றும் *அழி*

என்ற பழைய சொற்களிலிருந்து பொருண்மை மாறாமல் பிறந்திருக்கும். இவைகளுக்குள் *சமை* என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும். இது முதன்முதலாக சிலப்பதிகாரத்தில் தோன்றியது.

முடிமுதற் கலங்கள் சமைப்பேன் (சிலம்பு 16)

சமை என்பது *அமை* என்பதன் செப்பமற்ற வடிவம் என்பது புறப்பொருள் வெண்பாமாலையின் உரையாசிரியர் செய்யுள் 157-இல் அமைத்தான் என்ற சொல்லுக்குச் *சமைத்தான்* என்ற பொருளைத் தந்துள்ளார் என்ற உண்மையிலிருந்து வெளிப்படும்.

2. த என்பதிலிருந்து ச

த மற்றும் *ச* என்பன ஒன்றையொன்று இடம்பெயர்க்கும் என்பது பொதுவான நிகழ்வாகும்; எடுத்துக்காட்டுகள்: *கொதுகு* > *கொசுகு* 'musquito'; *வைத்து* > *வச்சு* 'to place'; *தைத்தான்* > *தச்சான்* 'to stich'; *மாதம்* > *மாசம்* 'month' போன்றன; இதுபோன்று *சடை, சதை, சவட்டு, சவங்கு* மற்றும் சரை என்பனவற்றை *தடை, தசை, துவட்டு, தவங்கு* மற்றும் *திரை* என்பனவற்றிலிருந்து பெறலாம். *சவட்டு* என்பதன் மூலநிலையின் வரலாறு ஆர்வமூட்டுவதாகும். இதுதான் தொல்காப்பிய காலத்திற்குப் பிறகு சங்க இலக்கியங்களில் நுழைந்த *ச* தொடக்கச்சொல் ஆகும். தொல்காப்பியத்திற்கு முரணாக தன்னுடைய செய்யுளில் இச்சொல்லை அறிமுகப்படுத்தத் துணிந்தவர் கடியலூர் உருத்திரங்கண்ணனார் ஆவர்.

'பஞ்சாயக் கோரைப் பல்லிற் சவட்டி' (பெரும்பாண். 217)

சவட்டு பிறவினையின் வடிவமாதலால் அதன் தன்வினை வடிவம் *துவள்* என்பதன் களங்க வடிவமான *சவள்* ஆகும்.

3. க என்பதிலிருந்து ச

க என்பது *ச* ஆக மாறுவதை எடுத்துக்காட்டப் பல நிகழ்வுகள் உள்ளன: எ.கா. *கேதம்> சேதம்* 'loss', *கை* > செய் 'to do' மற்றும் *கிவி* > *செவி* 'ear'. இவ்வாறு *சளை* என்பதை *களை* என்பதிலிருந்து ஆக்கலாம். நாம் பரிபாடலில் 'சமழ்ப்பு முகங் காண்மின்'

(20 பரி.) என்ற வரியில் *சமழ்ப்பு* முதலில் பயன்படுத்தப்படுவதைக் காணலாம். பெருங்கதையில் இதன் பயன்பாடு சமழ்த்தனன் போன்று ஒரு முற்று வினையாகக் காணப்படும். *சமழ்* 'to be ashamed' என்பதற்குப் தரப்பட்டுள்ள பொருளிலிருந்து இதைக் *கவிழ்* 'to bow' என்பதிலிருந்து ஆக்கவியலும். *கவிழ்* என்பதில் *வ்* என்பது *சமழ்* என்பதில் *ம்* என மாறியுள்ளதற்கு *உவட்டு* என்பது *உமட்டு* 'nausea' என்றும் *குவி* என்பது *குமி* 'to collect' என்றும் மாறியுள்ளதை மேற்கோளாகக் காட்டலாம்.

4. சு என்பதிலிருந்து ச

சவை என்பது *சுவை* 'taste' என்பதிலிருந்து வந்திருக்கலாம்; எனென்றால் *உ* மற்றும் *அ* என்பன எளிதில் இடம்பெயர்க்க இயலுவன. *துளிர* மற்றும் *தளிர* 'bud' மற்றும் *உலமரல்* மற்றும் *அலமரல்* 'confusion' என்பனவற்றுடன் ஒப்பிடவும்.

'curse' எனப் பொருள்படும் *சாபம்* அல்லது *சாவம்,* சவி 'withered crop' மற்றும் *சவம்* 'corpse' என்பன 'to curse;' என்ற வினைவேரான *சவி* அல்லது *சபி* என்பதிலிருந்து பிறந்திருக்கும் எனத் தோன்றுகின்றது.

ஒலிக்குறிப்பு வேர்களிலிருந்து சொற்கள்

மனிதப் பேச்சின் வேர்களின் மூலகாரணம் குறித்த கோட்பாடுகளில் ஒன்று ஒலிக்குறிப்புக் கோட்பாடு அல்லது 'bow bow' கோட்பாடு என்று அழைக்கப்படும். இதனால் நாம் சொற்கள் இயற்கை ஓசைகளைப் போச்செய்தலால் உருவாகியிருக்கலாம் எனப் புரிந்துகொள்ளலாம். விட்னெ இக்கோட்பாட்டின் முக்கியத்துவத்தைக் கூறுகின்றார்: "மொழியின் எல்லா நிலைகளிலும் புதிய சொற்கள் பிற எந்த முறைகளைக் காட்டிலும் இம்முறையால் கூடுதலாக அல்லது இம்முறையால் மட்டும் உருவாக்கப்படுகின்றன." *ச* தொடக்கச் சொற்களில் சில தொல்காப்பியர் காலத்திற்குப் பின்னர் மனித ஒலிகளல்லாத ஒலிகளின் போச்செய்தலால் உருவாக்கப்பட்டிருக்ப்பட வேண்டும். தமிழ் சொற்றொகை இம்முறையில் உருவான பல சொற்களைக் கொண்டிருக்கின்றது. பின்வரும் *ச* தொடக்கச் சொற்கள் இயற்கை ஒலிகளைப் போலச்செய்தலால் உருவாக்கபட்டுள்ளன.

எ.கா.

சப்பு < சப்பெனல்; சரி அல்லது சருக்கு < சரேலெனல்; சலி மற்றும் சலாத்து < சலசலவெனல்; சவு < சவச்சவெனல்; சழங்கு < சழக்கெனல்.

தொடக்க எழுத்துக்களுடன் தொடர்புடைய தொல்காப்பியரின் விதிகள் கட்டாயமில்லை மற்றும் புதிய சொற்களின் உருவாக்கத்திற்கு எதிராக இல்லை என்பதால், புதிய சொற்களைத் தங்கள் செய்யுள்களில் அறிமுகம் செய்த பிற்கால அறிஞர்களிடம் தவறு கண்டுபிடிப்பது சரியல்ல.

பின்வரும் சில வினைகளின் மூலநிலையைக் காட்டுவதற்கு ஓரளவுக்கு முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

1	கதை	= to talk much
2	கண்டி	= to reprove
3	கிடை	= to be obtained – derivable from கிட
4	கழல்	= to become lose
5	கொஞ்சு	= to prattle – derived from குஞ்சு
6	கும்பிடு	to worship
7	கிட்டு	to approach
8	திருடு	to steal
9	துப்பு	to spit
10	தகர்	to break to pieces
11	திட்டு	to abuse
12	தென்படு	to appear
13	துருவு	to seek
14	சிரி	to laugh
15	சிந்து	to spill
16	சூம்பு	to shrink – derivable from கூம்பு
17	நகர்	to move
18	போதும்	to be enough

இவற்றில் சில வினைகள் பழங்காலத்தில் பொது மக்களால் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால் தொல்காப்பியம் மற்றும் பழைய இலக்கியங்கள் என்பனவற்றில் இல்லாதவை புதிய சொற்களாகக் கருதப்படும். *கழல், துப்பு, தகர், சிந்து* மற்றும் *நகர்* போன்ற இப்பட்டியலிள்ள சில சொற்கள் பழங்கால இலக்கியங்களில் வினைகளாக அல்லாமல் பெயர்களாக வேறு பொருளில் காணப்படுகின்றன. அப்பெயர்களுக்கும் இவ்வினைகளுக்கும் பேச்சு ஒற்றுமை தான் இருக்கின்றது.

இதுவரை எவ்வாறு தமிழ் சொற்றொகை பழைய சொற்களின் இழப்பால் மட்டுமன்றி பழைய சொற்களிலிருந்து அல்லது அறியப்படாத மூலத்திலிருந்து புதிய சொற்களின் அதிகரிப்பாலும் மாறுகின்றது என்பது விளக்கப்பட்டது. எவ்வாறு சொற்கள் ஒலி மாற்றம் அடிப்படையில் மாறவியலும் என்றும் காட்டவியலும்.

1. எடுத்துக்காட்டாக, *ஒளிர்* மற்றும் *ஒளிறு, முரி* மற்றும் *முறி, கீரல்* மற்றும் *கீறல், சிதர்* மற்றும் *சிதறு* என்ற சொற்களில் *ர* மற்றும் *ற* பொருண்மை மாற்றமின்றி இருக்கின்றன.
2. பிரி மற்றும் பிறி

'இன்துணைப் பிரியும் மடமை யோரே' (அகம் 43)
' பிறிந்திவட் காதல் வேண்டி (அகம் 55)

அகநானூறில் (55) *ற்* என்பதைக் கொண்ட பிறிந்து என்பது பிரிந்து 'separation' என்ற பொருளில் காணப்படுகின்றது. நகல் எடுப்பவர்கள் முந்தைய சொல்லின் போலச்செய்தலால் தவறு நிகழ்ந்துள்ளது. இவ்வரி பின்வருமாறு வருகிறது:

பெரும்பிறி தாகி யாங்குப் பிறிந்திவன்'

பெரும்பிறிந்து என்ற முதல் அடியின் ஒப்புமை அடிப்படையில் நகல் எடுப்பவர் இறுதி அடியையும் அதற்குப் பொருந்தச் செய்துவிட்டார். இத்தவறு பல நூற்றாண்டுகள் வழி இது நமக்கு கிடைத்துள்ளது.

7. பொருள் மாற்றங்கள்

சில சொற்கள் சீர்கேடு, கட்டுப்பாடு, விரிவு மற்றும் இடமாற்றம் என்ற நிலையில் பொருள்மாற்றம் அடைந்துள்ளன. இங்கு சில சொற்களின் பொருள் மாற்றத்திற்குக் காரணம் காட்ட முயற்சிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் ஒரு திருப்தியான காரணம் கண்டுபிடிப்பது கடினமானது. டி.ஜி. டக்கர் "பொருள் மாற்றத்தின் விதிகள் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை மற்றும் அனேகமாகக் கண்டுபிடிக்க இயலாதன" எனக்கூறுகின்றார்.

1. இற 'to die'

தொல்காப்பியத்திலும் எட்டுத்தொகையிலும் பத்துப்பாட்டிலும் இவ்வினை 'to go beyond. to pass by, to tesspass' என்று பொருள்படுகின்றது.

'சிறந்தது பயிற்றல் இறந்தன் பயனே' (தொல். 1137)
'காடிறந்தனரே காதலர்' (அகம். 45)

'இறந்த காலம்' (தொல். 725) மற்றும் 'இறந்தது காதல்' என்ற வெளிப்பாடுகள் time passed 'காலம் கடந்துவிட்டது' மற்றும் to assert once again what has been said 'சொன்னதை மீண்டும் உறுதிசெய்' என்ற பொருள்களைக் காட்டுகின்றது. சங்ககால காலத்திற்கு முன்னரும் சங்ககாலத்திலும் இற என்பது 'to die' என்ற பொருளில் பயன்படுத்தப்படவில்லை. திருக்குறளில் தான் *இற* என்பது தமிழ் வரலாற்றில் முதன்முதலாக 'to die' என்ற பொருளில் பயன்படுத்தப்படுகின்றது.

'இறந்தார் இறந்தார் அனையர்' (குறள் 310)
'வையத்து இறந்தாரை எண்ணி (குறள் 22)

2. சூழ்

'சூழ்தலும் உசாத்துணை நிலைமையிற் பொலிமெ' (தொல் 1071)

'என்னோடும் நின்னோடும் சூழாது' (அகம் 128)

இந்நிகழ்வுகளில் *சூழ்* 'to consder, கருது' அல்லது 'to consult, யோசனை கேள்' எனப் பொருள்படுகின்றது. சங்ககாலத்திற்குப் பின்னர் இது தன்னுடைய பொருளை இழந்து 'to plot, திட்டமிடு' அல்லது 'to conspire, சதிசெய்' என்பதை வெளிப்படுத்தப் பயன்படுத்தப்பட்டது. இதன் வினைப் பெயரான *சூழ்ச்சி* தற்போதைய பொருளான 'சதி' அல்லது 'சதித்திட்டம்' என்பதைக் காட்டுகின்றது. இப்பொருள் சூழ் என்பது கேடு என்பதுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ள திருக்குறளின் சில குறளடிகளிலிருந்த இப்பொருள் பிறந்ததாகத் தோன்றுகின்றது.

போல்லத சூழக் கெடும் (குறள். 176)
"மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு" (குறள். 204)

3. வீசு

வீசு 'எறி, to throw' அல்லது 'கொடு, to give' என்ற தென்மையான பொருண்மையுடன் 'நாற்றத்தைப் பரப்பு, to diffuse bad smell' என்ற பொருண்மையை ஈட்டியுள்ளது. இவ்வர்த்தத்தில் செய்யுளில் இதன் பயன்பாடு அரிதாகும்; இருப்பினும் தமிழ் லெக்சிகனில் இது *வீசு* என்பதன் பொருண்மைகளுள் ஒன்றாகக் காணப்படுகின்றது. *வீசுதல்* என்பது '*நாறுதல்*' என்பதன் ஒருபொருள்பன்மொழியாக மாறியுள்ளது.

4. வழங்கு

'இயங்கு, to move' அல்லது 'வழக்கிலிரு, to be current' என்பது இதன் மூலப்பொருண்மையாகத் தெரிகின்றது.

'வளி வழங்கு மல்லல்மா ஞாலம்' (குறள் 245)

'முன்னீர் வழங்கு நாவாய்' (புறம் 13)

இது சங்க இலக்கிய காலங்களில் கூட 'தாராளமாகக்கொடு, to give liberally' என்ற பொருண்மையை ஈட்டியுள்ளது; ஆனால் அச்சமயம் இது பரவலானதல்ல.

'வழங்கத் தவாஅப் பெருவளன் எய்தி' (பெரும்பாண். 26)

தற்காலத்தில் வழங்கு இப்பொருண்மையில் தான் பெரும்பான்மையும் பயன்படுத்தப்படுகின்றது.

5. தூங்கு

இவ்வினை தொன்மையான இலக்கியங்களில் 'to hand, தொங்கு', 'to swing, ஆடு', 'to remain, இரு', 'to delay, தாமதமாக்கு' எனப் பல பொருண்மைகளில் பயன்படுத்தப்படுகின்றது. இப்போது இது 'உறங்கு' என்ற ஒரு பொருண்மையை வெளிப்படுத்த மட்டும் தான் பயன்படுகின்றது.

'சோரி தன் வாய் வரத் தூங்குவான் (கம்ப-கும்ப. 62)

தூங்கு தன் பொருண்மையை மாற்றும் போது இதன் முந்தைய இடமானது *தூங்கு* என்பதன் ஒழுங்கற்ற வடிவமான *தொங்கு* என்பதால் இடம்பெயர்க்கப்பட்டுள்ளது. ஆனால் *தூங்கு* என்பதன் பிறவினையான *தூக்கு* அதன் முந்தைய பொருண்மையைத் தக்கவைத்துள்ளது. *தொங்கு* என்பது *தூங்கு* என்பதன் வழுவடிவமாகும் என்பது அவற்றின் பிறவினையான *தூக்கு* என்பதிலிருந்து தெரிகின்றது. தூங்கு 'to sleep' என்பதன் பொருண்மை மாற்றத்திற்கான காரணம் ஊஞ்சலில் உறங்கும் பழக்கத்தற்கு அடைபடுதப்பட்டுள்னதாகத் தெரிகிறது'

6. எறி

'களிறு எறிந்து பெயர்தல்' (புறம். 312)

சங்க இலக்கியங்களில், 'to hack' என்ற பொருளில் மட்டும்தான் இதன் பயன்பாடு காணப்படுகின்றது. பின்னர் இது 'to throw' என்பதை வெளிப்படுத்தத்தான் முக்கியமாகப் பயன்படுத்தப்படுகின்றது.

7. வாங்கு, புரி, புலம்பு, சோர், தொலை, நம்பு என்ற சொற்களும் அவற்றின் பொருளை மாற்றியுள்ளன மற்றும் அவை இப்போது முறையே 'to buy', 'to understand', 'to bewail', 'to become weary', 'to destroy', 'to believe' என்ற பொருள்களை வெளிப்படுத்துகின்றன.

8. எதிர்மறை பொருண்மைகளைக் குறிப்பிடும் ஒரு சொல்

(அ) அமை 'to be existent' அல்லது 'to be non-existent'

'உறுப்பு அமைந்து ஊரஞ்ச வெல்படை (குறள் 761)

'அணி அமை தோற்றது அருந்தவம்' (மணி. 3)

(ஆ) படு –'to appear' அல்லது 'to disappear'

'படுங் கதிர் அமையம் பார்த்து' (சிலம்பு. 13)

இங்க *படு* என்பது இரு அர்த்தத்திலும் பயன்படுத்தப்படுகின்றது.

(இ) நந்து -'வடி சிடிளிநச' அல்லது 'வடி நசளா'

'நத்தம்போல் கெடும் (குறள் 23)

நந்துதோறும் மாட்ட (முல்லை 49)

(ஈ)வரை 'to mae one's own' அல்லது 'to abandon'

'வெளிப்பட வரைதல் படாமை வரைதல் (தொல். 1085)

'மால்வரை வரைந்தனர் எமரே (புரம் 151)

(உ) கழி – 'to be abundant' அல்லது 'to become less'

'காலம் மிக்க கழிபடர் கிளவி'

'மென்னோக்கி இடையாய்க் கழிந்தது' (திருக்கோவை 61)

இச்சொற்கள் அவற்றின் பிறப்பின் போது ஒரு பொருள்தான் கொண்டிருக்கவியலும். இச்சொற்களில் சில ஒரே ஒரு பொருளில் மட்டுமே பயன்படுத்தப்பட்டன எனத் தொன்மையான இலக்கியத்தின் வரலாற்றால் வெளிப்படுகின்றது. ஒரே வெளிப்பாட்டில் இரண்டு கருத்துக்களின்

இருப்புக்கான காரணம் நமது அணுகுமுறைக்கு அப்பாற்பட்டது. இது பின்வரும் தொல்காப்பியரின் பொது மொழிபால் அறியப்படும்.

'மொழிப்பொருள் காரணம் விளிப்பத் தோன்ற' (தொல். 876)

4.3 சிவதாணுவின் ஆய்வு

சிவதாணுவால் (Sivathanu, 1990) அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட "A History of Early and Middle Tamil Verbal Bases" இவ்வாய்வுத்திட்டத்திற்கு அடிப்படையாகவும் முன்னோடியாகவும் அமைகின்றது. இங்கு இவர் தரும் ஆய்வு விளக்கங்களின் முக்கிய பண்புக்கூறுகள் தரப்பட்டள்ளன.

தமிழ் வினையடிகளின் பாகுபாடு

வினையடிகளின் பாகுபாடடைப் பின்வரும் தலைப்பில் விளக்குகிறார்:

1. தெரிநிலை வினை மற்றும் குறிப்பு வினைப் பாகுபாடு
2. தன்வினை-பிறவினைப் பாகுபாடு
3. செயப்படுபொருள் குன்றாவினை மற்றும் செயப்படுபொருள் குன்றியவினை
4. வினைத்திரிபுசார் பாகுபாடு
5. சீரற்ற மற்றும் சீரான வினைப் பாகுபாடு

இவை குறித்து (அகத்தியலிங்கம், 1982:64-105) கூறிய ஆய்வு விளக்கங்கள் "தமிழ் வினைகளின் பாகுபாடு" என்ற தலைப்பின் கீழ் தரப்பட்டுள்ளன.

தமிழ் வினைகளின் வினைத்திரிபுகள்சார் வகுப்புகள்

இத்தலைப்பில் கிராலின் 7 வகுப்புகள், ஆர்டரின் 7 வகுப்புகள், தமிழ் லெக்சிகனின் 13 வகுப்புகள், லிஸ்கரின் 5 வகுப்புகள், லிஸ்கரின் 3 வகுப்புகள், மாற்றியமைத்தலில்

முன்னேற்றம், வினையடிகளின் வடிவத்தில் முன்னேற்றம் இவை குறித்து (அகத்தியலிங்கம், 1982:64-105) கூறிய ஆய்வு விளக்கங்கள் "தமிழ் வினைகளின் பாகுபாடு" என்ற தலைப்பின் கீழ் தரப்பட்டுள்ளன.

தமிழ் வினைகளின் சீரான-சீரற்ற பகுப்புகள்

வினையடிகளில் சில மாற்றுருபுகளைக் கொண்டிருக்கும் சில மாற்றுருபுகளைக் கொண்டிராதிருக்கலாம். ஹாக்கெட் கூறியுள்ளது போல் உருபன்களை மாற்றுருபகளைக் காட்டும் வடிவங்கள் மற்றும் மாற்றுருபுகளைக் காட்டா வடிவங்கள் எனப் பகுப்கலாம். வினையடிகள் அடிப்படையான சொற்பொருளைக் கொண்டிருப்பதால் அவை "கருத்துக்கள்" (themes) எனப்படும். கால பின்னொட்டுக்கள் வினைகளின் திரிபு பின்னொட்டுக்களாகும். வினையடிகளை அவற்றின் உருபொலியனியல் அப்பு அடிப்படையில் பகுப்பது "கருத்து பகுப்பு" (thematic classification) எனப்படும் மற்றும் கால பின்னொட்டுகளால் பகுப்பது "திரிபு பகுப்பு" (inflectional classification) எனப்படும். கருத்து மற்றும் திரிபு என்பனவற்றை இணைத்து வினைகளின் வேறுபட்ட வகைகளை உருவாக்கலாம். இம்மாதிரியான பகுப்பு "கருத்து மற்றும் திரிபு பகுப்பு" (thematic and inflectional classification) எனப்படும்.

அல்போன்ஸ் ஜுஇலாண்ட் மற்றும் ஜேம்ஸ் மாக்ரிஸ் (Alphonse Juilland and James Macris) என்போர் ஆங்கில வினைகளை இவ்வளவீட்டடிப்படையில் பகுத்துள்ளனர். இது நான்கு வகைப்பாடுகளைக் கொண்டது. அவைகள் பின்வருமாறு அமையும்:

1. வினைகள் வேறுபடாத மாற்றுருபுகளைக் கொண்டிருந்தால் அவை கருத்தால் சீரான வினைகளாகும்.
2. இதுபோல் வினைகள் மாற்றுருபுகளைக் கொண்டிருந்தால் அவை கருத்தால் சீரற்ற வினைகளாகும்.
3. இதே வழியில், வினையடிகள் கால மாற்றுருபுகளில் ஒன்றை மட்டும் ஏற்குமானால் (அதாவது அவை ஒரே ஒரு வினைத்திரிபு வகையைச் சாருமானால்) அவை திரிபால் சீரானவை எனப்படும்.

4. வினையடிகள் ஒன்றிற்கும் மேற்பட்ட கால மாற்றுருபன்களுடன் வருமானால் (அதாவது அவை ஒன்றிற்கும் மேற்பட்ட வினைத்திரிபு வகையைச் சாருமானால்) அவை திரிபு அடிப்படையில் சீரற்றவை எனப்படும்.

இவ்வகையிலான பாகுபாட்டை தமிழ் வினையடிகளுக்கும் பயன்படுத்தி வினையடிகளைப் பகுக்கலாம்.

1. சீரான மற்றும் சீரற்ற வகைகள்- தமிழ் வினைகளிலிருந்து எடுத்துக்காட்டுகள் (பழந்தமிழ்)

வகை 1: சீரான வினைகள்

வினை	**திரிபுற்ற வடிவம்**	**நூல்**
அணி 'wear'	அணிந்து 'having worn	புறநானூறு 151:3
அப்பு 'put on'	அப்பி 'having put on'	அகநானூறு 389:5
அளப் 'measure'	அளந்து 'having measured'	பதிற்றுப்பத்து 24:16
இழுகு 'paint'	இழுகி 'having pained	புறநானூறு 281:3
உமிழ்	உமிழ்ந்து	பதிற்றுப்பத்து 33:8
ஓடு	ஓடி	புறநானூறு 49:11
தழு	தழீய தழுவிய	பதிற்றுப்பத்து 30:2

வகை 2: கருத்தால் சீரற்றது

வினை	**திரிபுற்ற வடிவம்**	**நூல்**
அகல் ~ஆல்	அகன்று ஆன்று	அகநானூறு 271:12 அகநானூறு 158:2
சிறு ~ சீறு	சிறிய சீறி	பத்துப்பாட்டு 2:124 பதிற்றுப்பத்து 63-10
ஞரல் ~ நரல்	ஞரல நரல	பத்துப்பாட்டு 1:120 பத்துப்பாட்டு 6:185

சிரற்று ~ இரற்று	சிரற்று	அகநானூறு 191-4
விடுP ~ விடு	விடுத்து விட்டு	ஐங்குறுநூறு 466:2 ஐங்குறுநூறு 268:5
வீய் ~ வீ	வீயந்து வீந்து	குறுந்தொகை 149:4 குறுந்தொகை 165:4

வகை 3 திரிபால் சீரற்றவை

வினை	**திரிபுற்ற வடிவம்**	**நூல்**
அசைP 1-உம் 2-உம்	அசைத்த அசைஇ	அகநானூறு 301-22 அகநானூறு 188-12
அரி 2-உம் 3-உம்	அரிந்து அரீஇ	அகநானூறு 116-2 பதிற்றுப்பத்து 6-379
அறி 1-உம் 2-உம்	அறிந்து அறீஇ	அகநானூறு 201-2 அகநானூறு 392-4
உரைP 2-உம் 3-உம்	உரைத்து உரைஇ	அகநானூறு 203-2 பரிபாடல்
சினP 2-உம் 3-உம்	சினந்து சினைஇ சினவிய	நற்றிணை 300-1 புறநானூறு 2-13 நற்றிணை 100-6
துனை 2-உம் 3-உம்	துனைந்து துனைஇ	புறநானூறு7-37 நற்றிணை 296-7
பொறுP 1-உம் 3-உம்	பொறுத்து பொறீஇ	கலித்தொகை 142-55 கலித்தொகை 94-11
மறை 2-உம் 3-உம்	மறைந்து மறைஇ	குறுந்தொகை 319-2 ஐங்குறுநூறு 115-3

வகை 4: சீரற்றது

வினை	**திரிபுற்ற வடிவம்**	**நூல்**
ஈ (1) ஈய் (3) ஈ (2)	ஈத்து	கலித்தொகை 142:55
உணூ (3) உண் (1)	உணீஇய உண்டு	ஐங்குறுநூறு 268:2 ஐங்குறுநூறு 203:4
செலு (3) ஞெமிர்	செலீஇ சென்று	நற்றிணை 54:1 நற்றிணை 69:2
ஞெமிறு (3) ஞெமிர் (2)	ஞெமிரிய ஞெமிர்ந்து	பத்துப்பாட்டு 7:90 பத்துப்பாட்டு 6:243
நினை(3, 2) நினை (1)	நினைஇ நினைந்து நினைத்து	ஐங்குறுநூறு 486:1 ஐங்குறுநூறு 118:4 குறுந்தொகை 99:2

2. உருபொலியனியல் சீரின்மை மற்றும் இறுதி பாகுபாடு

தமிழ் வினைகளை இந்த நான்கு வகைப்பாடுகளில் அடக்கலாம். 1-4 வரையுள்ள பாகுபாடுகளில் அடக்கப்படும் வினைகளுக்கிடையில் சில வேறுபாடுகள் காணப்படும். இவ்வேறுபாடுகள் அவற்றின் உருபொலியனியல் நடத்தையில் உள்ளது. எடுத்துக்காட்டாகத் தழு மற்றும் ஓடு என்பன 1-ஆம் வகைப்பாட்டைச் சார்ந்தாலும் அவை உருபொலியனியல் நடத்தையில் வேறுபடும். வினையெச்ச வடிவம் ஓடு+இ எப்போது ஓடி என்பதுதான். ஆனால் தழு என்பதன் வினையெச்சவடிவம் தள்ளு+இ > தழுவி அல்லது தழீஇ என்பதாகும். ஓடு மற்றும் தழு என்ற முதல் வகையைச் சார்ந்த கருத்தால் சீரான இவ்வனைகளை உருபொலியனியல் அடிப்படையில் இரண்டு துணைவகைகளாகப் பிரிக்கலாம்:

1. ஓடு போன்ற வினைகளை உள்ளடக்கிய உருபொலியனியல் அடிப்படையில் சீரான வினையடிகள்.
2. தழு போன்ற வினையடிகளை உள்ளடக்கிய உருபொலியனியல் அடிப்படையில் சீரற்ற வினையடிகள்.

இதேபோல் இரண்டாவது வகையைச் சார்ந்த கருத்தால் சீரற்ற வினைகளை இரு துணைவகைகளாகப் பிரிக்கலாம்:

1. உருபொலியனியல் அடிப்படையில் சீரான வினையடிகள்.
2. உருபொலியனியல் அடிப்படையில் சீரற்ற வினையடிகள்.

எடுத்துக்காட்டாகக் கவ ~ கவைஇ என்ற வினைக்கு மூன்று இறந்தகால வடிவங்கள் உள்ளன: இவற்றில் கவ என்பதற்குக் கீழ்கண்டவாறு இரண்டு இறந்தகால வடிவங்கள் உள்ளன:

கவ + இ > கவஇ, கவவி
கவைஇ (வினையெச்சம்) நற்றிணை 350:10
கவவி (வினையெச்சம்) கலித்தொகை 35:11

மூன்றாவது இறந்தகால வடிவம் கவைஇ என்ற வினையடியிலிருந்த ஆக்கப்பட்டுள்து: கவைஇ+இ> கவைஇயி [(எ.கா. கவைஇயினள் (வினைமுற்று), குறுந்தொகை 359:6)]. எனவே இவை உருபொலியனியல் அடிப்படையில் சீரற்றவை. சீரற்ற தன்மைக்கு மற்றொரு எடுத்துக்காட்டு:

போ ~ போய்
போய (பெயரெச்சம்) கலித்தொகை 134:7
போய் (வினையெச்சம்) கலித்தொகை 148:23
போயின்று (வினைமுற்று) கலித்தொகை 24:17

இதுபோல் மூன்றாவது வகையைச் சார்ந்த வினைகளும் அவற்றின் உருபொலியனியல் நடத்தை அடிப்படையில் வேறுபடும். எடுத்துக்காட்டாக, அறி என்பது இ மற்றும் ந்த் என்பனவற்றை இறந்தகால ஒட்டுக்களாக ஏற்று அறிந்து மற்றும் அறீஇ என்ற வினையெச்ச வடிவங்களைப் பெறும். ஆனால் சின என்பது ந்த் (சினந்து) மற்றும் இ (சினவி அல்லது சினைஇ) என்ற இரண்டு இறந்தகால ஒட்டுகளை எடுப்பதுடன் பிந்தைய பின்னொட்டு இ என்பது இரு வேறுபட்ட வினையெச்ச வடிவங்களைத் தருகின்றது: சினவி மற்றும் சினைஇ.

சினைஇ, சினவி மற்றும் சினந்து என்ற வடிவங்கள் திரிபால் சீரின்மையைக் காட்டுவதுடன் அவற்றின் உருபொலியனியல் நடத்தையிலும் சீரின்மையைக் காட்டுகின்றன. எனவே 3-ஆது

வகுப்பைச் சாரும் வினைகளையும் உருபொலியனியலால் சீரானவை மற்றும் உருபொலியனியலால் சீரற்றவை எனப் பிரிக்கலாம்.

இதேவழியில் கருத்தாலும் திரிபாலும் சீரற்ற 4-ஆவது வகை வினைகளை இரு துணைவகைகளாகப் பிரிக்கலாம்:

1. கருத்தாலும் திரிபாலும் சீரற்றவை மற்றும் உருபொலியனியலால் சீரானவை.
2. கருத்தாலும் திரிபாலும் உருபொலியனியலாலும் சீரற்றவை.

எடுத்துக்காட்டாக, வினைகள்

1. பர (2) ~ பா (2) 'spread'
2. பாய் (2) ~ பா (3) 'spread'

வினைவடிவம்	**வினைத்திரிபு**	**நூல்**
பரந்து	வினையெச்சம்	குறுந்தொகை 355:2
பாஅய்	வினையெச்சம்	குறுந்தொகை 380:1
பாய	பெயரெச்சம்	குறுந்தொகை 343:7
பாய்ந்து	வினையெச்சம்	குறுந்தொகை 195:5
பாஅய்	வினையெச்சம்	குறுந்தொகை 180:1
பாய	பெயரெச்சம்	குறுந்தொகை 143:7

கருத்து, திரிபு மற்றும் உருபொலியனியல் அடிப்படையில் மற்றும் சீர்மை மற்றும் சீரின்மை அடிப்படையில் வினைகளின் பாகுபாடு பின்வருமாறு அமையும்:

1.அ கருத்தாலும் திரிபாலும் உருபொலியனியலாலும் சீரானவை

எ.கா. ஓடு

1.ஆ. கருத்தாலும் திரிபாலும் சீரானவை ஆனால் உருபொலியனியலால் சீரற்றவை

எ.கா. தழு

2.அ. திரிபாலும் உருபொலியனியலாலும் சீரானவை ஆனால் கருத்தால் சீரற்றவை

எ.கா.

ஞரல் நரல்

2.ஆ. கருத்தாலும் உருபொலியனியலாலும் சீரற்றவை ஆனால் திரிபால் சீரானவை

கவ மற்றும் கவைஇ

3.அ. கருத்தாலும் உருபொலியனியலாலும் சீரானவை ஆனால் திரிபால் சீரற்றவை

அசை P

3.ஆ. திரிபாலும் உருபொலியனியலாலும் சீரற்றவை ஆனால் கருத்தால் சீரானவை

சின P

4.அ. கருத்தாலும் திரிபாலும் சீரற்றவை ஆனால் உருபொலியனியலால் சீரானவை

முயலு முயல்

4.ஆ. கருத்தாலும் திரிபாலும் உருபொலியனியலாலும் சீரற்றவை

பர பா

மேற்கண்ட வகைப்பாட்டைப் பின்வருமாறு கிளைப்படமாக உருப்படுத்தம் செய்யலாம்:



சொல்சார் மாற்றம்

சொற்களஞ்சியம் (lexicon) ஒரு மொழியின் சொல்லன்களின் பட்டியலாகும். எந்த மொழியும் நீண்டகாலத்திற்கு வேறுபடாமல் இருக்கலாகாது. இது குறிப்பாகச் சொற்களஞ்சியத்திற்கு மிக உண்மையாகும். ஏனென்றால் சொற்களஞ்சியத்தில் ஏற்படும் மாற்றங்கள் பார்த்து உணரலாம். சொற்களஞ்சியத்தில் ஏற்படும் மாற்றம் சொல்சார் மாற்றம் எனப்படும்.

உருவாக்கத்தால் சொல்சார் மாற்றம் (பழைய மூலப்பொருளிலிருந்து)

இல்லாத ஒன்றிலிருந்து ஒன்று உருவாகுவதில்லை. ஆனால் மூலவிடம் தெரியாத புதிய சொற்களின் நேர்வுகள் இருக்கின்றன. புதிய வினைகளின் ஆக்கத்திற்கு அடிப்படையாகப் பின்வருவன அமையலாம்: 1. பெயர்கள் (தனிநிலைப் பெயரும் ஆக்கப்பெயரும்), 2. பெயரடைகள் (எண்ணுப் பெயரடைகள் மற்றும் குறிப்புப் பெயரடைகள்), 3. ஒலிக்குறிப்புச் சொற்கள், 4. செய்து எனும் வாய்பாட்டு வினையெச்சம் (வேர்+கால ஒட்டு வினையடியாக மாறும், 5. வடிவாக்கிகளின் சேர்க்கை அல்லது இழப்பு.

பெயர் அடிகளிலிருந்து புதிய வினைகள்

பெயர்களும் ஒட்டுகளில்லாது வினையடிகளாகப் பயன்படுத்தப்படும் நேர்வுகள் உள்ளன.

வினைகள்	**பொருள்**	**காலம்**
இடர்	துன்புறுத்து	பின்பழந்தமிழ்
கம்பலை P	ஒலி	பின்பழந்தமிழ் முன்இடைத்தமிழ் பின்இடைத்தமிழ்
கேழ் P	நிறமாகு	பின்பழந்தமிழ் முன்இடைத்தமிழ்
சீர் P	மேன்மையடை	பின்பழந்தமிழ் முன்இடைத்தமிழ் பின்இடைத்தமிழ்
குருள்	சுருள்	முன்இடைத்தமிழ்
தழல்	எரி	முன்இடைத்தமிழ்

		பின்இடைத்தமிழ்

சிலவற்றில் வினையாகப் பயன்படுத்துசையில் ஈற்று ம் கெடும்.

பெயர்	**வினை**	**காலம்**
கமம்	கம 'நிரம்பு'	பின்இடைத்தமிழ்
பதம்	பத 'உண்'	இல்லை பின்இடைத்தமிழ்

முன்று நேர்வுகளில் -இ சேர்க்கப்பட்டுள்து.

பெயர்	**வினை**	**காலம்**
காதல்	காதலி P 'அன்புகொள்'	பின்பழந்தமிழ் முன்இடைத்தமிழ் பின்இடைத்தமிழ்
சுரும்பு	சுரும்பி 'ரீங்காரம்செய்'	முன்இடைத்தமிழ்
தேன்	தேனி P 'இன்பமூட்டு'	முன்இடைத்தமிழ்
முறுவல்	முறுவலி P 'புன்முறுவல் செய்'	முன்இடைத்தமிழ் பின்இடைத்தமிழ்

இதுபோல் ஆக்கப்பட்ட பெயர்களும் எந்தப் பின்னொட்டுமின்றி வினையாகப் பயன்படுத்தப்படும்.

பெயர்	**வினை**	பின்பழந்தமிழ்
தகல்	தகல் 'விட்டுச்செல்'	பின்பழந்தமிழ் முன்இடைத்தமிழ்
நகை	நகை P 'சரி'	பின்பழந்தமிழ் முன்இடைத்தமிழ்
ஊண்	உண் 'சாப்பிடு'	முன்இடைத்தமிழ் பின்இடைத்தமிழ்
கலக்கு	கலக்கு 'குழம்பு'	முன்இடைத்தமிழ் பின்இடைத்தமிழ்
மிகை	மிகை P 'அதிகரி'	முன்இடைத்தமிழ் பின்இடைத்தமிழ்

மிறை	மிறை 'துன்புறு'	முன்இடைத்தமிழ பின்இடைத்தமிழ்
விதை	விதை 'வித்து போடு	முன்இடைத்தமிழ பின்இடைத்தமிழ்
மயர்	மயர் 'குழம்பு,	முன்இடைத்தமிழ் பின்இடைத்தமிழ்

பெயரடைகளிலிருந்து புதிய வினையடிகள்

பெயரடையடிகள் எண்களாகவோ குறிப்பு வினைகளாகவோ இருக்கலாம். அவை வடிவாக்கப் பின்னொட்டுக்களால் வினைகளாக மாறுகின்றன.

பெயரடை	**வடிவாக்கப் பின்னொட்டு**	**வினை**	**காலம்**
இன்	இ	இனி 'இனி'	பின்இடைத்தமிழ்
அண்	மு	அண்மு 'சென்றடை'	பின்இடைத்தமிழ்
ஒரு	க்கு	ஒருக்கு 'ஒன்றாக்கு'	பின்இடைத்தமிழ்
ஒரு	ங்கு	ஒருங்கு 'ஒன்றாக்கு'	பின்இடைத்தமிழ்
கொடு	கு	கொடுகு 'சுருள்'	பின்இடைத்தமிழ்
திண்	அர்	திணர் P 'கெட்டியான படை உருவாக்கு'	பின்இடைத்தமிழ்
புது	க்கு	புதுக்கு 'புதுப்பி'	பின்இடைத்தமிழ்
வெள்	உ	வெளு 'வெண்மையாக்கு'	பின்இடைத்தமிழ்

ஒலிக்குறிப்புச் சொற்களிலிருந்து புதிய வினைகள்

இவை பின்பழந்தமிழிலிருந்து காணப்படுகிறது.

வினை	**திரிபுவடிவம்**	**காலம்**
கலகல	கலகலப்ப	பின்பழந்தமிழ்

		முன்இடைத்தமிழ் பின்இடைத்தமிழ
கணகண	கணகணப்ப	இல்லை முன்இடைத்தமிழ் பின்இடைத்தமிழ்
சொட்டச்சொட்டு	சொட்டசொட்ட	இல்லை முன்இடைத்தமிழ்
மெழுமெழு	மெழுமெழுத்து	இல்லை முன்இடைத்தமிழ் பின்இடைத்தமிழ்
வழுவழு	வழுவழுத்து	இல்லை முன்இடைத்தமிழ் பின்இடைத்தமிழ்
கிளுகிளு	கிளுகிளுத்தாள்	இல்லை முன்இடைத்தமிழ் பின்இடைத்தமிழ்
தழுதழு	தழுதழுப்ப	முன்இடைத்தமிழ் பின்இடைத்தமிழ்
மொகுமொகு	மொகுமொகுத்து	இல்லை முன்இடைத்தமிழ் பின்இடைத்தமிழ்

செய்து வாய்பாட்டு வினையெச்சத்திலிருந்து புதிய வினைகள்

வினையின் இறந்தகால வடிவம் அல்லது இறந்தகாலப் பகுதி வினையடியாக மாறும். இது முன்இடைத்தமிழில் காணப்படவில்லை.

வினையெச்சம்	**வினை**	**காலம்**
ஆலு+இ	ஆலி 'ஒலி'	முன்இடைத்தமிழ்

		பின்இடைத்தமிழ
உடு+த்	உடுத்து `ஆடையணி'	முன்இடைத்தமிழ் பின்இடைத்தமிழ்
உன்னு + இ	உன்னி `சிந்தி'	முன்இடைத்தமிழ் பின்இடைத்தமிழ
ஏற்று + இ	ஏற்றி `உதை'	முன்இடைத்தமிழ் பின்இடைத்தமிழ்
துவரு + இ	துவரி `வர்ணம் கொடு'	முன்இடைத்தமிழ் பின்இடைத்தமிழ்
நொந்து + ந்து	நொந்து `துன்புறு'	முன்இடைத்தமிழ் பின்இடைத்தமிழ்
பர + ந்து	பரந்து `பரவு`	முன்இடைத்தமிழ் பின்இடைத்தமிழ்
பற்று + இ	பற்றி `பிடி'	முன்இடைத்தமிழ் பின்இடைத்தமிழ்
முற்று + இ	முற்றி `முடி'	முன்இடைத்தமிழ் பின்இடைத்தமிழ்
உக்கு +இ	உக்கி `உகு'	முன்இடைத்தமிழ் பின்இடைத்தமிழ்

ஆலி P மற்றும் *உடுத்து* தவிர பிற எல்லா வினைகளும் பின்பழந்தமிழில் நீடிக்கவில்லை. உக்கு பின்பழந்தமிழில் உருவாக்கப்பட்டது.

வடிவாக்கிகளின் சேர்க்கை அல்லது இழப்பு

பொருள் மாற்றத்துடன் சேர்க்கை

அடிப்படை வினை	**வடிவாக்கி**	**ஆக்கப்பட்ட வினை**	**காலம்**
அசங்கு	ம்பு	அசும்பு `ஒழுகு'	பின்பழந்தமிழ் முன்இடைத்தமிழ்

			பின்இடைத்தமிழ்
ஒறு	க்கு	ஒறுக்கு 'அச்சுறுத்து'	முன்இடைத்தமிழ் பின்இடைத்தமிழ்
கூடல்	இ	கூடலி 'தொங்கு'	முன்இடைத்தமிழ் பின்இடைத்தமிழ்
குழறு	து	குழற்று 'ஒலி'	முன்இடைத்தமிழ் பின்இடைத்தமிழ்
பூண்	இ	பூணி 'சத்தியம் செய்'	முன்இடைத்தமிழ் பின்இடைத்தமிழ்

பொருள் மாறாமல் சேர்க்கை

பின்வரும் நேர்வுகளில் வடிவாக்கப் பின்னொட்டான *-இ* என்பதன் சேர்க்கையால் வினையாக்கம் நடைபெறுகின்றது. ஒரு எடுத்துக்காட்டில் *ஐ* என்ற வடிவாக்கப் பின்னொட்டு பயன்படுத்தப்படுகின்றது.

அடிப்படை வினை	**வடிவாக்கி**	**ஆக்கப்பட்ட வினை**	**காலம்**
ஆர்	இ	ஆரி 'ஒலி'	பின்பழந்தமிழ்
ஆல்	இ	ஆலி 'அதிகரி'	பின்பழந்தமிழ் முன்இடைத்தமிழ்
ஆலு	இ	ஆலி 'ஒலி'	முன்இடைத்தமிழ்
கிட்டு	ஐ	கிடை 'பெறு'	முன்இடைத்தமிழ் பின்இடைத் தமிழ்

பல எடுத்துக்காட்டுகளின் *ப்பு* அல்லது (மற்றும் *வ்*) அல்லது *பு* அல்லது *மு* என்ற வடிவாக்கப் பின்னொட்டுக்களின் சேர்க்கையால் வினைகள் ஆக்கப்பெறுகின்றன.

அடிப்படை வினை	**காலம்**	**வடிவாக்கி**	**ஆக்கப்பட்ட வினை**	**காலம்**
தெவ்(உ)	முன்பழந்தமிழ்	க்கு	*தெவக்கு 'எடு, பெறு'	முன்இடைத்தமிழ்

பர	முன்பழந்தமிழ்	க்கு	பரக்கு ‘அலை, பரவு‘	முன்இடைத்தமிழ்
காய்	முன்பழந்தமிழ்	த்து	காய்த்து ‘கோபமடை’	பின்பழந்தமிழ்
செறு	முன்பழந்தமிழ்	த்து	செறுத்து ‘கோபமடை’	பின்பழந்தமிழ்
உடு	முன்பழந்தமிழ்	த்து	உடுத்து ‘ஆடையணி’	முன்இடைத்தமிழ் பின்இடைத்தமிழ்
கட	முன்பழந்தமிழ்	த்து	கடத்து ‘கடத்து’	முன்இடைத்தமிழ்
துர	முன்பழந்தமிழ்	த்து	துரத்து ‘விரட்டு, நீக்கு’	முன்இடைத்தமிழ்
புல	முன்பழந்தமிழ்	த்து	புலத்து ‘வெறு, விட்டுவிடு’	முன்இடைத்தமிழ்
கிள	முன்பழந்தமிழ்	த்து	கிளத்து ‘சொல்’	பின்இடைத்தமிழ்
காய்	முன்பழந்தமிழ்	ச்சு	காய்ச்சு ‘சூடாக்கு’	முன்இடைத்தமிழ்
சுரி	முன்பழந்தமிழ்	ச்சு	சுரிச்சு ‘சுருள், சுருங்கு’	முன்இடைத்தமிழ்
தோய்	முன்பழந்தமிழ்	ச்சு	தோய்ச்சு ‘முக்கு’	முன்இடைத்தமிழ்
வீழ்	முன்பழந்தமிழ்	ச்சு	வீழ்ச்சு ‘விழு’	முன்இடைத்தமிழ்
கிளர்	முன்பழந்தமிழ்	ப்பு	*கிளர்ப்பு ‘உயர், எறி’	பின்இடைத்தமிழ்
திரி	முன்பழந்தமிழ்	ப்பு	*திருப்பு ‘திருப்பு‘	பின்இடைத்தமிழ்
எள் (எள்ளு)	முன்பழந்தமிழ்	கு	எள்கு ‘வெறு’	முன்இடைத்தமிழ் பின்இடைத்தமிழ்
சிதை	முன்பழந்தமிழ்	கு	சிதைகு ‘ஒடி (சிதறு)’	முன்இடைத்தமிழ்
புல்	முன்பழந்தமிழ்	கு	புல்கு ‘இணை, தழுவு’	முன்இடைத்தமிழ் பின்இடைத்தமிழ்
இடு	முன்பழந்தமிழ்	கு	இடுகு ‘செய்‘	பின்இடைத்தமிழ்
செது	முன்பழந்தமிழ்	கு	செதுகு ‘சோர்வடை’	பின்இடைத்தமிழ்
நேர்	முன்பழந்தமிழ்	கு	நேர்கு ‘சம்மதி’	பின்இடைத்தமிழ்
சிரறு	முன்பழந்தமிழ்	து	சிரற்று ‘கோபப்படு’	பின்பழந்தமிழ்
உடல்	முன்பழந்தமிழ்	து	உடறு ‘கோபமடை’	முன்இடைத்தமிழ்
புகு	முன்பழந்தமிழ்	து	புகுது ‘நுழை’	பின்இடைத்தமிழ்
இழு	முன்பழந்தமிழ்	சு	*இழிசு ‘பூசு’	முன்இடைத்தமிழ் பின்இடைத்தமிழ்
எடு	முன்பழந்தமிழ்	வு	எடுவு ‘பிடி’	முன்இடைத்தமிழ்
பர	முன்பழந்தமிழ்	வு	*பரவு ‘பரவு, கல’	முன்இடைத்தமிழ்

				பின்இடைத்தமிழ்
கறு	முன்பழந்தமிழ்	ம்பு	கறும்பு 'கோபமடை'	முன்இடைத்தமிழ்
எழு	முன்பழந்தமிழ்	ம்பு	எழும்பு 'உதி'	பின்இடைத்தமிழ்
கிளர்	முன்பழந்தமிழ்	ம்பு	கிளம்பு 'புறப்படு'	பின்இடைத்தமிழ்
அண்	முன்பழந்தமிழ்	மு	அண்மு 'வா, போய்சேர், அணுகு'	முன்இடைத்தமிழ் பின்இடைத்தமிழ்
செறி	முன்பழந்தமிழ்	மு	செறிமு 'நிரம்பு'	முன்இடைத்தமிழ்
திரி	முன்பழந்தமிழ்	மு	திரிமு 'திரும்பு'	பின்இடைத்தமிழ்
பரு	முன்பழந்தமிழ்	மு	பருமு 'பெரிதாகு'	முன்இடைத்தமிழ்

வடிகாக்கியின் இழப்பு

பின்வரும் நேர்வுகளில் வடிவாக்கிகளின் இழப்புக் காணப்படுகின்றது.

வினையடிகள் + வடிவாக்கிகள்	**காலம்**	**வினையடிகள் -வடிவாக்கிகள்**	**காலம்**
சிறுகு	முன்பழந்தமிழ்	சிறு 'குறை'	முன்இடைத்தமிழ்
முழுகு	பின்பழந்தமிழ்	முழு 'குளி, முழ்கு'	பின்இடைத்தமிழ்
மெல்கு	முன்பழந்தமிழ்	மெல் 'சவை'	பின்பழந்தமிழ்
முழங்கு	முன்பழந்தமிழ்	முழ 'முழங்கு'	முன்இடைத்தமிழ்
வயங்கு	முன்பழந்தமிழ்	வய 'ஒளிவீசு'	பின்இடைத்தமிழ்
இயம்பு	முன்பழந்தமிழ்	இய 'சொல்'	பின்இடைத்தமிழ்

வடிவாக்கிகளின் மாற்றம்

குறைந்தது 6 எடுதுக்காட்டுகளில் வடிவாக்கிகளின் மாற்றம் காணப்படுகின்றது.

மாற்றம்	**அடிப்படை வினை**	**காலம்**	**மாற்றப்பட்ட வினை**	
ஐ> ஆவு	அரை	முன்பழந்தமிழ்	அராவு 'அடி'	முன்இடைத்தமிழ்

ஐ> அங்கு	இசை	முன்பழந்தமிழ்	இசைங்கு `பொருந்து'	முன்இடைத்தமிழ்
அங்கு> ஐ	திரங்கு	முன்பழந்தமிழ்	திரை `உலர், சுருங்கு'	முன்பழந்தமிழ் முன்இடைத்தமிழ் பின்இடைத்தமிழ்
அங்கு > அர்	மயங்கு	முன்பழந்தமிழ்	மயர் `கலங்கு, குழம்பு'	முன்இடைத்தமிழ் பின்இடைத்தமிழ்
அம்பு > அர்	புலம்பு	முன்பழந்தமிழ்	புலர் `துன்புறு'	பின்இடைத்தமிழ்
அறு > அம்பு	அலறு	முன்பழந்தமிழ்	அலம்பு `ஒலி'	முன்இடைத்தமிழ் பின்இடைத்தமிழ்

செயப்படுபொருள் குன்றிய வினைகளிலிருந்து புதிய செயப்படுபொருள்குன்றா/காரண வினைகள்

த்து வடிவங்கள்

பின்வரும் நேர்வுகளில் செயப்படுபொருள்குன்றா / காரண வினைகளை உருவாக்க த்து செயப்படுபொருள் குன்றிய விகைளில் சேர்க்கப்படுகின்றது.

பின்பழந்தமிழில் உருவாக்கப்பட்ட வடிவங்கள்

வினை	**பொருள்**	**காலம்**
அனற்று	எரியச்செய்	பின்பழந்தமிழ்
ஆர்த்து	உண்ணச்செய்	பின்பழந்தமிழ்
கொளுத்து	எரியச்செய்	பின்பழந்தமிழ்
சுமத்து	சுமக்கச்செய்	பின்பழந்தமிழ்
தெரித்து	தெரியச்செய்	பின்பழந்தமிழ்
நவிற்று	சொல்லச்செய், பாடச்செய்	பின்பழந்தமிழ்
புகுத்து	புகச்செய்	பின்பழந்தமிழ்

இவ்வடிவங்களில் அனற்று, ஆர்த்து, கொளுத்து மற்றும் புகுத்து என்பன முன்இடைத்தமிழில் வழக்கிழந்துவிட்டன.

முன்இடைத்தமிழில் உருவாக்கப்பட்ட வடிவங்கள்

வினை	**பொருள்**	**காலம்**
அலர்த்து	பூக்கச்செய்	முன்இடைத்தமிழ்
இழித்து	தாழச்செய்	முன்இடைத்தமிழ்
இறத்து	தாழ்த்து	முன்இடைத்தமிழ்
உகுத்து	விழச்செய்	முன்இடைத்தமிழ்
கடத்து	கடக்கச்செய்	முன்இடைத்தமிழ்
துரத்து	போகச்செய்	முன்இடைத்தமிழ்
பாய்த்து	பரவச்செய்	முன்இடைத்தமிழ்
பெறுத்து	பெறச்செய்	முன்இடைத்தமிழ்
மலர்த்து	மலசச்செய்	முன்இடைத்தமிழ்
வளர்த்து	தூங்கச்செய்	முன்இடைத்தமிழ்
விழுத்து	விழச்செய்	முன்இடைத்தமிழ்
காற்று	போகச்செய்	முன்இடைத்தமிழ்
பாற்று	அழியச்செய், நீங்கச்செய்	முன்இடைத்தமிழ்
புகற்று	ஆசைப்படச்செய்	முன்இடைத்தமிழ்
வெகுட்டு	கோபப்படசெய்	முன்இடைத்தமிழ்

இச்செயப்படுபொருள் குன்றா/காரண வடிவங்களில் இறத்து, உகுத்து, பெறுத்து, புகற்று மற்றும் வெகுட்டு என்பன பின்இடைத்தமிழில் வழக்கிழந்துவிட்டன.

பின்இடைத்தமிழில் உருவாக்கப்பட்ட வடிவங்கள்

வினை	**பொருள்**	**காலம்**
அமர்த்து	அமரச்செய்	முன்இடைத்தமிழ்
அமிழ்த்து	அமுங்கச்செய்	முன்இடைத்தமிழ்
வீழ்த்து	விழச்செய்	முன்இடைத்தமிழ்
வெருட்டு	பயப்படச்செய்	முன்இடைத்தமிழ்

ச்சு சேர்க்கப்பட்ட வடிவங்கள்

பின்வரும் நேர்வுகளில் இடைக்காலத் தமிழில் *ச்சு* என்ற பின்னொட்டு, செயப்படுபொருள் குன்றாத விகைளிலிருந்து செயப்படுபொருள்குன்றிய/காரண வடிவங்களை உருவாக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

வினை	**பொருள்**	**காலம்**
இழிச்சு	தாழச்செய்	முன்இடைத்தமிழ் பின்இடைத்தமிழ்
ஒழிச்சு	நீக்கு	முன்இடைத்தமிழ் பின்இடைத்தமிழ்
பாய்ச்சு	துளைக்கச்செய்	முன்இடைத்தமிழ் பின்இடைத்தமிழ்
நிமிர்ச்சு	நிமிரச்செய்	பின்னிடைத்தமிழ்

க்கு சேர்க்கப்பட்ட வடிவங்கள்

பின்வரும் நேர்வுகளில் முன்இடைக்காலத் தமிழில் *க்கு* என்ற பின்னொட்டு, செயப்படுபொருள் குன்றாத விகைளிலிருந்து செயப்படுபொருள்குன்றிய/காரண வடிவங்களை உருவாக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

வினை	**பொருள்**	**காலம்**
இறக்கு	கொல்	முன்னிடைக்காலத் தமிழ்
படக்கு	இறக்கச்செய்	முன்னிடைக்காலத் தமிழ்
பரக்கு	பரவச்செய்	முன்னிடைக்காலத் தமிழ்

இற, பட, பர என்ற வினைகளின் க்கு ஒட்டப்பட்ட வினைகள் முன்னிடைக்காலத்தமிழில் மட்டும் காணப்படுகிறது. ஆனால் பின்னிடைக்காலத்தமிழில் காணப்படவில்லை. அவைகள் பின்னிடைக்காலத்தமிழில் வழக்கிறந்துவிட்டதாகக் கருதப்படவேண்டும்.

இறக்கு மற்றும் *உழக்கு* 'துன்புறச்செய்' பின்னிடைத்தமிழில் மட்டும் காணப்படுகின்றது.

வினை	**பொருள்**	**காலம்**
இறக்கு	'கீழிறங்கச்செய்'	பின்னிடைத்தமிழ்
உழக்கு	'துன்புறச்செய்'	பின்னிடைத்தமிழ்

இது பின்னிடைத்தமிழில் புதிய உருவாக்கமாகும்.

ஐ சேர்க்கப்பட்ட வடிவங்கள்

ஒரேயொரு வினையான *புகு* என்பதுடன் *ஐ* ஒரு பின்னொட்டாகப் புதிய காரணவினையை உருவாக்குகின்றது. இது முன்னிடைத்தமிழில் மட்டும் காணப்படுகின்றது.

வினை	**பொருள்**	**காலம்**
புகை	'நுழையச்செய்'	முன்னிடைத்தமிழ்

இது பின்னிடைத்தமிழில் காணப்படாததன் காரணமாக இது நூலாசிரியரின் தனிப்பட்ட உருவாக்கமாக இருக்கலாம்.

மூக்கடைப்பொலி-அடைப்பொலி>அடைப்பொலி-அடைப்பொலி வடிவங்கள்

பின்வரும் நேர்வுகளில் மூக்கடைப்பொலி-அடைப்பொலி > அடைப்பொலி-அடைப்பொலி மாற்றம் செயப்படுபொருள் குன்றா/காரண வடிவங்களை உருவாக்குகின்றது.

பின்பழந்தமிழ் காணப்படும் வடிவங்கள்

வினை	**பொருள்**	**காலம்**
ஒருக்கு	ஒன்றாக்கு	பின்பழந்தமிழ்
நடுக்கு	நடுங்கச்செய்	பின்பழந்தமிழ்
வணக்கு	வணங்கச்செய்	பின்பழந்தமிழ்

வணக்கு என்பது தவிர பிற வினைகள் பின்னிடைத்தமிழ் வரை பயன்பாட்டிலுள்ளன; பின்பழந்தமிழிலிருந்து காணப்படவில்லை. இருப்பினும் *வணக்கு* 'இயங்கச்செய்' என்ற பொருளில் பின்னிடைத்தமிழில் காணப்படுகின்றது.

முன்னிடைத்தமிழில் காணப்படும் வடிவங்கள்

வீக்கு 'வீங்கச்செய்' போன்ற வடிவங்கள் முன்னிடைத்தமிழில் மட்டும் காணப்படுகின்றது. இது பின்னிடைத்தமிழிலிருந்த காணப்படவில்லை.

வினை	**பொருள்**	**காலம்**
வீக்கு	வீங்கச்செய்	முன்னிடைத்தமிழில்

தீட்டு 'தொடச்செய் துளப்பு 'கடை' மற்றும் அமுக்கு 'அமுங்கச்செய்' ' போன்ற வடிவங்கள் ண்ட் > ட்ட், ம்ப் > ப்ப், ங்க் > க்க் என்ற மாற்றங்களால் (மூக்கின ஒலியிழப்பால்) முன்னிடைத்தமிழில் உருவாக்கப்பட்டவை.

வினை	**பொருள்**	**காலம்**
தீட்டு	தொடச்செய்	முன்னிடைத்தமிழ்
துளப்பு	கடை	முன்னிடைத்தமிழ்
அமுக்கு	அமுங்கச்செய்	முன்னிடைத்தமிழ்
தேக்கு	நிரம்பச்செய்	முன்னிடைத்தமிழ்

ஆனால் ஒரு வினை மட்டும் பின்னிடைத்தமிழில் ங்க் > க்க் என்ற மாற்றத்தால் உருவாக்கப்பட்டது ஆகும்.

வினை	**பொருள்**	**காலம்**
வழக்கு	வழங்கச்செய்	பின்னிடைத்தமிழ்

இதனால் பின்னிடைத் தமிழில் புதிய செயப்படுபொருள் குன்றா வினைகளின் உருவாக்கம் காணப்படுகின்றது.

இரட்டித்தல்

பின்வரும் நேர்வுகளில் செயப்படுபொருள் குன்றிய வினைகளின் ஈற்றில் வரும் அடைப்பொலியின் இரட்டிப்பால் செயப்படுபொருள் குன்றா வினைகள் உருவாக்கப்பட்டன.

ஈற்று அடைப்பொலியின் இரட்டிப்பால் உருவாக்கப்பட்ட இரு வினைகள் பின்பழந்தமிழில் காணப்படுகின்றன. அவையாவன:

வினை	**பொருள்**	**காலம்**
இறுக்கு	அழுத்து, இறுகச்செய்	பின்பழந்தமிழ்
விளையாட்டு	விளையாடச்செய்	பின்பழந்தமிழ்

இவற்றில் *விளையாட்டு* என்பது பின்பழந்தமிழில் வழக்கிழந்துவிட்டது.

பெருக்கு மற்றும் *பருக்கு* என்ற வினைகள் பின்பழந்தமிழிலும் முன்இடைத்தமிழிலும் காணப்படுவதுடன் பின்இடைத்தமிழிலிலும் தொடர்ந்து காணப்படுகின்றது.

வினை	**பொருள்**	**காலம்**
பருக்கு	குடிக்கச்செய்	பின்பழந்தமிழ்
பெருக்கு	அதிகரிக்கச்செய்	முன்னிடைத்தமிழ்

X-வடிவம்

பின்பழந்தமிழ் காணப்படும் வடிவங்கள்

வினை	**பொருள்**	**காலம்**
நிமிர் **X**	நிமிரச்செய்	பின்பழந்தமிழ்
படு **X**	தெரிவி	பின்பழந்தமிழ்
மடி **X**	கொல்	பின்பழந்தமிழ்
மேய் **X**	மேயச்செய்	பின்பழந்தமிழ்

படு தவிர பிற வினைகள் பின்னிடைத்தமிழ் வரை தொடர்ந்து வழக்கிலிருந்தது.

முன்இடைத்தமிழில் காணப்படும் வடிவங்கள்

வினை	**பொருள்**	**காலம்**
இழி **X**	தாழச்செய்	முன்னிடைத்தமிழ்
நொசி **X**	துன்புறச்செய்	முன்னிடைத்தமிழ்
புரி **X**	விரும்பச்செய்	முன்னிடைத்தமிழ்
வீள் **X**	கொல்	முன்னிடைத்தமிழ்

இழி மற்றும் வீள் என்ற வினைகள் தவிர பிற வினைகள் பின்னிடைத் தமிழில் வழக்கிறந்து விட்டன.

பின்இடைத்தமிழில் காணப்படும் வடிவங்கள்

வினை	**பொருள்**	**காலம்**
கரி **X**	கரியச்செய்	பின்னிடைத்தமிழ்
கனி **X**	கனியச்செய்	பின்னிடைத்தமிழ்
கரை **X**	கரையச்செய்	பின்னிடைத்தமிழ்
வலி **X**	வளையச்செய்	பின்னிடைத்தமிழ்
விளி	இறக்கச்செய்	பின்னிடைத்தமிழ்

எனவே இவை பின்னிடைத் தமிழில் காணப்படும் புதிய வடிவங்கள் ஆகும்.

ப்பு பின்னொட்டப்பட்ட வடிவங்கள்

இப்பின்னொட்டுகளின் சேர்ப்பு முன்று புதிய வினைகளில் காணப்படுகின்றது. அவை *அலப்பு* 'வருந்தச்செய்', *உறப்பு* 'பயப்படச்செய்' மற்றும் *எழப்பு* 'எழச்செய்'. இவற்றில் பின்பழந்தமிழில் முதன்முதலாகக் காணப்படுகின்ற *எழப்பு* என்பதைச் செயப்படுபொருள் குன்றா வினையின்/காரணவினையின் புதிய உருவாக்கம் என்று கூறவியலாது. முன்னர் கூறியபடி இது வெளிப்படையான சொல் சேர்க்கையாகும். பிற இரு வடிவங்கள் புதிய செயப்படுபொருள் குன்றா அல்லது காணவினைகளின் நேர்வுகளாகும் ஆகும். *அலப்பு* 'கிளச்சியுறச்செய்' என்பது பின்பழந்தமிழில் மட்டும் காணப்படுகின்றது. இது முன்இடைத்தமிழிலோ பின்னிடைத்தமிழிலோ தொடர்ந்து காணப்படவில்லை. ஆனால் மற்றொரு வடிவான *உறப்பு* முதன்முதலாக முன்னிடைத்தமிழில் தான் வருகின்றது. இது முன்னிடைத்தமிழிலும் பின்னிடைத் தமிழிலும் தொடர்ந்து காணப்படுகின்றது.

செயப்படுபொருள் குன்றிய வினைகளின் புதிய வடிவங்கள்

இந்நேர்வில் குறைந்த அளவு தரவுதான் கிடைத்துள்ளது. இது 3 வினைகளைக் கொண்டது. இவ்வினைகள் முன்றும் பின்னிடைத் தமிழில் காணப்படுகின்றன.

செயப்படுபொருள் குன்றா வடிவம்	**செயப்படுபொருள் குன்றிய வடிவம்**	**காலம்**
கொளுத்து 'எரியச்செய்'	கொளுந்து	பின்னிடைத் தமிழ்
பரப்பு	பரம்பு	பின்னிடைத் தமிழ்
துளை P	துளை	பின்னிடைத் தமிழ்

இங்கு முதல் மற்றும் இரண்டாம் வினைவடிவங்களின் வினைத்திரிபு வகுப்புகள் மூலவடிவங்களின் வகுப்பைச் சாரும். ஆனால் இறுதி எடுத்துக்காட்டில் மட்டும் வினைத்திரிபு வகுப்பு 1-இலிருந்து 2-ஆக மாறியுள்ளது. ஏனென்றால் P (-x-) கொண்ட செயப்படுபொருள் குன்றா வடிவத்திற்கு எப்பொழுதும் அதற்கு இணையான செயப்படுபொருள் குன்றிய வடிவம் 2-ஆம் வகுப்பில் இருக்கும். எடுத்துக்காட்டாக அசை P 'அசையச்செய்' என்ற செயப்படுபொருள் குன்றா வடிவம் 1-ஆம் வகுப்பைச் சாரும்; அதன் செயப்படுபொருள் குன்றிய வடிவம் அசை 'நகர்' 2-ஆம் வகுப்பைச் சாரும். இறுதி எடுத்துக்காட்டில் பொருண்மை மாற்றமும் உள்ளது. எழும்பு என்ற மற்றொரு வினை முதன்முதலாகப் பின்இடைத்தமிழில் வந்துள்ளது. இது ஒப்புமையாக்கத்தால் [(நிரப்பு (பதிற்றுப்பத்து 40:11) > நிரம்பு (அகநானூறு 262:3)] எழும்பிலிருந்து உருவாக்கப்பட்டுள்ளது.

மூலவிடம் தெரியாதவை

பின்பழந்தமிழில் மட்டும் காணப்படுகின்ற வடிவங்கள்

வினைகள்	**பொருள்**	**காலம்**
அவ்வி P	பொறாமைப்படு	பின்பழந்தமிழ்
உருங்கு	உண்ணு	பின்பழந்தமிழ்
கயங்கு	மனதில் குழம்பு	பின்பழந்தமிழ்
மறங்கு	திகைப்படை	பின்பழந்தமிழ்

முன்இடைத்தமிழில் காணப்படுகின்ற வடிவங்கள்

வினைகள்	**பொருள்**	**காலம்**
அண்ணிP	இனி	முன்இடைத்தமிழ்
இகர்	கல்	முன்இடைத்தமிழ்
இவரிP	எதிர்	முன்இடைத்தமிழ்
உமைP	சொறி	முன்இடைத்தமிழ்
கமா	நீக்கு	முன்இடைத்தமிழ்
கலாய்P	வாதிடு	முன்இடைத்தமிழ்

குர்மி	பயப்படுத்து	முன்இடைத்தமிழ்
குழகு	மயக்கு	முன்இடைத்தமிழ்
குறP	வெளியிடு	முன்இடைத்தமிழ்
கூழ்P	சந்தேகி	முன்இடைத்தமிழ்
சிற்று	கலங்கு	முன்இடைத்தமிழ்
செவிட்டு	ஒருபக்கம் சாய்	முன்இடைத்தமிழ்
துகை P	எரிச்சலூட்டு	முன்இடைத்தமிழ்
துடும்பு	சேர், கடல் நீர்போல் ஒழுகு	முன்இடைத்தமிழ்
துவர்	சோர்வடை	முன்இடைத்தமிழ்
தெகிழ்	சிதறு	முன்இடைத்தமிழ்
தெட்டு	மனம்நிறை	முன்இடைத்தமிழ்
தெள்ளு	இயக்கமற்றிரு	முன்இடைத்தமிழ்
தென்று	கலக்கமடை	முன்இடைத்தமிழ்
நகழ்	மிகுந்த வேதனைப்படு	முன்இடைத்தமிழ்
நமைP	அணி	முன்இடைத்தமிழ்
நரி	துன்புறுத்து, தங்கு	முன்இடைத்தமிழ்
நளிர்	முழ்கு	முன்இடைத்தமிழ்
நிமி	முறுக்கு	முன்இடைத்தமிழ்
நுதி	துணியால் பொதி	முன்இடைத்தமிழ்
நெண்டு	உயர்	முன்இடைத்தமிழ்
நொங்கு	கெடு	முன்இடைத்தமிழ்
நொந்து	கெடு	முன்இடைத்தமிழ்
பரிமாறு	அலை	முன்இடைத்தமிழ்
மசி P	ஆடு, மென்மையாக்கு	முன்இடைத்தமிழ்
மோறா	சோம்பல்படு, பயப்படு, வசீகரி	முன்இடைத்தமிழ்
விவ P	சுருட்டு, மாற்று	முன்இடைத்தமிழ்

பின்இடைத்தமிழில் மட்டும் காணப்படும் வடிவங்கள்

வினைகள்	**பொருள்**	**காலம்**
சழங்கு	அணிகலன்கள் போல் தொங்குதல்	பின்பழந்தமிழ்
நகழ்	இழை	பின்பழந்தமிழ்
பரிமாறு	இசைக்கருவி ஊது	பின்பழந்தமிழ்
மள்கு	பற்றாக்துறையாக	பின்பழந்தமிழ்

தமிழ் லெக்சிகன் சில வினைகளின் மூலங்களைப் பற்றி கூறினாலும் அவை நம்பக்கூடியனவாக இல்லாததால் அவைக் கருத்தில் கொள்ளப்படவில்லை. எனவே இவ்வினைகள் பட்டியலிடப்பட்டுள்ளன.

பொருள் மாற்றம்

பொருள் மாற்றம் இரண்டு தலைப்புகளில் பேசப்படுகின்றது:

1. சேர்க்கை (பொருண்மைப் பரப்பின் விரிவால்)
2. இழப்பு (புதிய பொருளின் சேர்க்கை மற்றும் முன்னர் காணப்பட்ட பொருளின் இழப்பு இவற்றுடன் மூலநிலைப் பொருளின் இழப்பு)

வினை	**பொருள்**	**காலம்**	**மாற்றுப்பொருள்**	**காலம்**
அதிர்	அதிர்	முன்பழந்தமிழ்	பயப்படு	பின்பழந்தமிழ்
அழல்	பிரகாசி	முன்பழந்தமிழ்	கோபமடை	முன்இடைத்தமிழ்
ஆர்	நிரம்பு	முன்பழந்தமிழ்	பிரகாசி	முன்இடைத்தமிழ்
இடி	தாக்கு	முன்பழந்தமிழ்	நொறுக்கு	முன்இடைத்தமிழ்
இறைP	(தண்ணீர்) மொள்	முன்பழந்தமிழ்	நீரைவாரியடி	முன்இடைத்தமிழ்
ஈர்P	இழு	முன்பழந்தமிழ்	கவர்	முன்இடைத்தமிழ்
உறைP	அதிகரி	முன்பழந்தமிழ்	கடினமாகு	பின்னிடைத்தமிழ்
எடு	(கையால்) எடு	முன்பழந்தமிழ்	கொண்டாடு	பின்பழந்தமிழ்
எரி	(தீ)எரி	முன்பழந்தமிழ்	கோபம்கொள், பொறாமைப்படு,	பின்இடைத்தமிழ் பின்இடைத்தமிழ்

			வேதனி	பின்இடைத்தமிழ்
ஏல்P	ஏற்றுக்கொள்	முன்பழந்தமிழ்	எதிர்	முன்இடைத்தமிழ்
ஒசி	ஒடி	முன்பழந்தமிழ்	களைப்படை துன்புறு	பின்இடைத்தமிழ் பின்இடைத்தமிழ்
ஒருP	தண்டனையளி	முன்பழந்தமிழ்	பரிகசி	பின்இடைத்தமிழ்
ஒது	பேசு	முன்பழந்தமிழ்	ஜெபி	முன்இடைத்தமிழ்
கதிர்	தோன்று	பின்பழந்தமிழ்	பிரகாசி	பின்இடைத்தமிழ்
கிளர்	உயர்	முன்பழந்தமிழ்	கோபமூட்டு	முன்இடைத்தமிழ்
கிளைP	கிளைவிடு	முன்பழந்தமிழ்	அதிகரி	முன்இடைத்தமிழ்
குடை	துளை	முன்பழந்தமிழ்	திகைக்கவை	முன்இடைத்தமிழ்
குறை	(அளவில்) குறை	முன்பழந்தமிழ்	துன்புறு	பின்இடைத்தமிழ்
கொதிP	(நீர் போன்றன) கொதி	முன்பழந்தமிழ்	கோபமடை	பின்இடைத்தமிழ்
கோP	(நூல்) கோர்	முன்பழந்தமிழ்	தழுவு	முன்இடைத்தமிழ்
சுருள்	(தாள் போன்றன) சுருள்	முன்பழந்தமிழ்	துன்புறு	பின்இடைத்தமிழ்
தழுP	கெட்டியாகு	பின்பழந்தமிழ்	தவறு	பின்இடைத்தமிழ்
தீண்டு	தொடு	முன்பழந்தமிழ்	கடி	முன்இடைத்தமிழ்
துயில்	தூங்கு	முன்பழந்தமிழ்	இற	முன்இடைத்தமிழ்
துனிP	கோபப்படு	பின்பழந்தமிழ்	அதிகரி	முன்இடைத்தமிழ்
தொடு	(கையால்) தொடு	முன்பழந்தமிழ்	தொடங்கு	முன்இடைத்தமிழ்
நெளி	வளை, சுருள்	முன்பழந்தமிழ்	துன்புறு	பின்இடைத்தமிழ்
பதைP	குலுக்கு	முன்பழந்தமிழ்	கவலைப்படு	பின்இடைத்தமிழ்
பழுP	(காய்) பழு	முன்பழந்தமிழ்	சிவ	பின்இடைத்தமிழ்
மடுP	நிரம்பு	முன்பழந்தமிழ்	குடி	முன்இடைத்தமிழ்
வாய்P	சம்பவி	முன்பழந்தமிழ்	பொருந்து	முன்இடைத்தமிழ்
விடு	போகவிடு	முன்பழந்தமிழ்	ஊற்று	பின்இடைத்தமிழ்

இழப்பு ((பொருள் X > 0 + (Y))

1.பொருள் X > பொருள் 0

வினை	**பொருள்**	**காலம்**	**மாற்றுப்பொருள்**	**காலம்**
அவிழ்	உருகு	முன்பழந்தமிழ்	0	பின்பழந்தமிழ் முன்இடைத்தமிழ் பின்இடைத்தமிழ்
இறP	போ	முன்பழந்தமிழ்	0	பின்பழந்தமிழ் முன்இடைத்தமிழ் பின்இடைத்தமிழ்

2.பொருள் பொருள் X > பொருள் 0Y

வினை	**பொருள்**	**காலம்**	**மாற்றுப்பொருள்**	**காலம்**
அழல்	ஜொலி	முன்பழந்தமிழ் பின்பழந்தமிழ் முன்இடைத்தமிழ்	கோபப்படு	முன்இடைத்தமிழ்
அலர்	பரவு, அதிகரி	முன்பழந்தமிழ்	பிரகாசி	பின்இடைத்தமிழ்
இயல்	ஓடு, நகர்	முன்பழந்தமிழ் பின்பழந்தமிழ்	சாத்தியப்படு	பின்இடைத்தமிழ்
உவ	உயர்	முன்பழந்தமிழ்	மகிழ்	பின்இடைத்தமிழ்
ஊழ்	பூ	முன்பழந்தமிழ்	அழுகு, பழு	பின்இடைத்தமிழ்
பதை	குலுங்கு	முன்பழந்தமிழ் பின்பழந்தமிழ்	கோபப்படு	பின்இடைத்தமிழ்
மதர்P	இறுமாப்புகொள்	பின்பழந்தமிழ்	மகிழ்ச்சியடை செழி	பின்இடைத்தமிழ் பின்இடைத்தமிழ்

மேற்கண்ட மதிரி எடுத்துக்காட்டுகளிலிருந்து பின்வரும் உற்றுநோக்கல்கள் செய்யப்பட்டுள்ளன:

1) பொருள்களில் பொருள் நீட்சி சார்ந்த சேர்க்கைகள் வினையடிகளின் பெரிதும் வெளிப்படுகின்றது.

2) பொருள் சேர்க்கையுடன் ஒப்பிடுகையில் பொருள் இழப்பு அவ்வளவு வெளிப்படவில்லை.

கடன் சொற்கள் வினையடிகள்

தமிழ் அதன் வடமொழிகளின் (சமஸ்கிருதம், பாலி மற்றும் பிராகிருதம்) தொடர்பு காரணமாக ஏராளமான சொற்களை அம்மொழியிலிருந்து கடன் வாங்கியுள்ளது. சமஸ்கிரதம் அதன் முக்கியக் கடன்வாங்கும் மூலவளமாக அமைந்தது. பிற திராவிட மொழிகளிலிருந்தும் தமிழ் கடன் வாங்கியுள்ளது. பின்பழந்தமிழ் காலத்திலிருந்தே இக்கடன் வாங்கல் நிகழ்ந்துள்ளது.

சமஸ்கிருத மூலத்தைப் பொறுத்தவரையில் 20 வினையடிகள் முன்பழந்தமிழைச் சார்ந்தது, 29 வினையடிகள் பின்பழந்தமிழைச் சார்ந்தது. 97 முன்இடைத்தமிழைச் சார்ந்தது. நூறு வினையடிகள் பின்இடைத்தமிழைச் சார்ந்தது. மொத்தம் நூற்றி ஐம்பது வினையடிகள் சமஸ்கிருத மொழியிலிருந்த கடன்வாங்கப்பட்டுள்ளன.

சொற்களின் மறைவு

சேதுப்பிள்ளை (1936-37:12), வையாபுரிப்பிள்ளை (1947, இ.பதிப்பு 1977:17), தேவநேசன் (1947, ம.பதிப்பு 1971:83-87), இராஜமாணிக்கம் (1970: 706-712) மற்றும் இலக்குவனார் (1970:14) போன்றோர் சில சொற்களின் இழப்பைக் கூறுகின்றனர். இதுபோன்று மாணிக்கம் (1972) குறிப்பாக வினைகளின் இழப்பைச் சுட்டிக்காட்டியுளார். இலக்குவனார் (1970:141) வினைகளின் பல வடிவங்களை இழப்பாகக் காட்டியுள்ளார்.

எ.கா.

தூயஉய் 'இணைத்து'

தைந்த 'கருதப்பட்ட'

செத்து 'எண்ணி'

உறுவிய 'கொண்ட'

உகப்ப 'உயர'

மாணிக்கம் (1972:51-63) 8 வினையடிகளின் இழப்பைக் கண்டுள்ளார்: செP 'ஒத்திரு/அனுமானி', சிவணு 'இணை', ஆன் 'இறுதியுறு', நூல் P 'கொன்று குவி', என் 'சொல்', சொலிP 'நீக்கு', எய் 'புரி', பழிச்சு 'புகழ்'. அவர் கண்டீர், கேட்டீர், சென்றது, போயிற்று, கேட்டை, நின்றை, காத்தை மற்றும் கண்டை (தொல் 908,909) போன்ற முன்னிலை முற்றுவடிவங்களையும் வழக்கிழந்தவைகளாகக் கருதுகின்றார். ஆனால் செ P என்ற வினையைத் தவிர பிற வினைகள் இடைத்தமிழில் காணப்படுகின்றன. எனவே அவை இடைத்தமிழில் மறையவில்லை.

நூல்களில் காணப்படும் வினையடிகளின் இழப்பு நான்கு தலைப்புகளில் தரப்படுகின்றது: பின்பழந்தமிழில் இழப்பு, முன்இடைத்தமிழில் இழப்பு, பின்இடைத்தமிழில் இழப்பு, வெளிப்படையான இழப்பு.

பின்பழந்தமிழில் இழப்பு

பின்பழந்தமிழ், முன்இடைத்தமிழ் மற்றும் பின்இடைத்தமிழ் இவற்றில் வராமை அடிப்படையில், பின்வருவன பின்பழந்தமிழில் இழப்பாகக் கருதப்படுகின்றன.

வினையடி	**பொருள்**	**இழப்புகாலம்**
அடு	போரிடு	பின்பழந்தமிழ்
அமர்P	பயப்படு	பின்பழந்தமிழ்
அரிP	பிராகாசி	பின்பழந்தமிழ்
இகுP	ஒலி	பின்பழந்தமிழ்
இவறு	அலைந்துதிரி	பின்பழந்தமிழ்
உக	உயர்	பின்பழந்தமிழ்
உவரு	வெறு	பின்பழந்தமிழ்
உவர்P	வெறு	பின்பழந்தமிழ்
உளம்பு	அசை, உண்வுறு'	பின்பழந்தமிழ்
உற்கு	எரிந்து கீழே விழு	பின்பழந்தமிழ்
ஊழ்P	பூ	பின்பழந்தமிழ்
எளிP	கீழ்தரமாகப் பேசு	பின்பழந்தமிழ்

ஒலிP	வேகமாக எறி, செழிப்பாக இரு	பின்பழந்தமிழ்
ஓப்பு	விரட்டு	பின்பழந்தமிழ்
களி	உலர்	பின்பழந்தமிழ்
சிதர்	பிரி	பின்பழந்தமிழ்
சில்கு	எண்ணிக்கை குறை	பின்பழந்தமிழ்
சுரி	சுருள்	பின்பழந்தமிழ்
சூர்P	கோப்படு	பின்பழந்தமிழ்
செற்று 1	துளை	பின்பழந்தமிழ்
செற்று 2	உலர்	பின்பழந்தமிழ்
சேP	வசி	பின்பழந்தமிழ்
சொலிP	உமி நீக்கு	பின்பழந்தமிழ்
ஞெமி	மறை	பின்பழந்தமிழ்
ஞெள்கு	குறை	பின்பழந்தமிழ்
தகைP	சுற்றி அணி	பின்பழந்தமிழ்
தடை	வளை	பின்பழந்தமிழ்
தண்டு	சேகரி	பின்பழந்தமிழ்
தளிP	பெய்	பின்பழந்தமிழ்
துணர்	நெருக்கமாக இரு	பின்பழந்தமிழ்
துணி	தெளிவாகு	பின்பழந்தமிழ்
துணைP	கட்டு	பின்பழந்தமிழ்
துழP	அசை	பின்பழந்தமிழ்
துளர்	உழு	பின்பழந்தமிழ்
தூற்று	ஒலி	பின்பழந்தமிழ்
தெளிர்P 1	வளமாகு	பின்பழந்தமிழ்
தெளிர்P	ஒலி	பின்பழந்தமிழ்
நவைP	துன்புறுத்து	பின்பழந்தமிழ்
நளி	அடர்	பின்பழந்தமிழ்
நிணP	கட்டு	பின்பழந்தமிழ்

நுவறு	அராவு	பின்பழந்தமிழ்
நூறு	அடி	பின்பழந்தமிழ்
நொசி	வளை	பின்பழந்தமிழ்
பசி	நிறம் இழ	பின்பழந்தமிழ்
பசை	விரும்பு	பின்பழந்தமிழ்
பணைP	தோல்	பின்பழந்தமிழ்
பயிர்	ஒலி	பின்பழந்தமிழ்
பறி	முளை	பின்பழந்தமிழ்
பனிற்று	தெளி	பின்பழந்தமிழ்
பிசிர்	தெளி	பின்பழந்தமிழ்
பிளிற்று	சிந்து	பின்பழந்தமிழ்
பெயரு	பெயரிடு	பின்பழந்தமிழ்
பொறிP	வளர்	பின்பழந்தமிழ்
மிளிர்P	வேரோடு பிடுங்கு	பின்பழந்தமிழ்
முகை	தோன்று	பின்பழந்தமிழ்
முணக்கு	புதை	பின்பழந்தமிழ்
முரச்சு	வெட்டு	பின்பழந்தமிழ்
முரஞ்சு	முற்று	பின்பழந்தமிழ்
மொசி	உண்ணு	பின்பழந்தமிழ்
வணர்	வளை	பின்பழந்தமிழ்
வல்லு	வலுவடை	பின்பழந்தமிழ்
வலிP	உலர்	பின்பழந்தமிழ்
விதP	குறிப்பிடு	பின்பழந்தமிழ்
விறP1	பயப்படு	பின்பழந்தமிழ்
விறP2	ஒன்றுகூடு	பின்பழந்தமிழ்

முன்இடைத்தமிழில் இழப்பு

வினையடி	**பொருள்**	**இழப்புகாலம்**

அகைP	உயர்	முன் இடைத்தமிழ்
அமல்	நிரம்பியிரு	முன் இடைத்தமிழ்
அல்லா	துன்புறு	முன் இடைத்தமிழ்
அவ்விP	பொறாமைப்படு	முன் இடைத்தமிழ்
அனுமிP	உறுதிசெய்	முன் இடைத்தமிழ்
இகP	போ	முன் இடைத்தமிழ்
இகு	விழு	முன் இடைத்தமிழ்
இகுP 1	இழு	முன் இடைத்தமிழ்
இகுP	அடி	முன் இடைத்தமிழ்
இமிழ்P	ஒலி	முன் இடைத்தமிழ்
இயவு	நட	முன் இடைத்தமிழ்
இறுP	கட	முன் இடைத்தமிழ்
இறுங்கு	உண்ணு	முன் இடைத்தமிழ்
உளம்பு	கலங்கு 'stir up'	முன் இடைத்தமிழ்
எடுப்பு	ஒலி	முன் இடைத்தமிழ்
எருக்கு	மறை	முன் இடைத்தமிழ்
எல்லு	கறு	முன் இடைத்தமிழ்
ஏக்கறு	ஆசைப்படு	முன் இடைத்தமிழ்
ஏமாP	ஆசைப்படு	முன் இடைத்தமிழ்
ஓய்	உள்ளேயும் வெளியேயும் போகச் செய்	முன் இடைத்தமிழ்
ஒலிP	கழுவு	முன் இடைத்தமிழ்
ஓர்P	கூர்ந்து கவனி	முன் இடைத்தமிழ்
கடுP	சந்தேகி	முன் இடைத்தமிழ்
கயங்கு	மனங்கலங்கு	முன் இடைத்தமிழ்
கவை	கொண்டிரு	முன் இடைத்தமிழ்
கவைP	கிளை விடு	முன் இடைத்தமிழ்
கனவு	கனவுகாண்	முன் இடைத்தமிழ்
குதுகுதுP	மிக ஆசைப்படு	முன் இடைத்தமிழ்

குறழ்	உளறு	முன் இடைத்தமிழ்
சிமிழ்P	பொறியில் சிக்கவை	முன் இடைத்தமிழ்
சிரறு	கோப்படு	முன் இடைத்தமிழ்
சிலைP	ஒலி	முன் இடைத்தமிழ்
சிறக்கணி	கண்களைக் குறுக்கிப் பார்	முன் இடைத்தமிழ்
சோகாP	துன்புறு	முன் இடைத்தமிழ்
ததை	பெரிதாகு	முன் இடைத்தமிழ்
தலை	மழைபெய்	முன் இடைத்தமிழ்
தவல்	நீங்கு	முன் இடைத்தமிழ்
தழல்	எரி	முன் இடைத்தமிழ்
தறை	தைரியமுறு	முன் இடைத்தமிழ்
நவைP	கொல்	முன் இடைத்தமிழ்
நுதுP	அணை (இல்லாமல் செய்)	முன் இடைத்தமிழ்
பரி	வெட்டு	முன் இடைத்தமிழ்
பீழிP	துன்புறுத்து	முன் இடைத்தமிழ்
பொசி	ஒழுகு	முன் இடைத்தமிழ்
மலை	அணி	முன் இடைத்தமிழ்
மறங்கு	திகை	முன் இடைத்தமிழ்
தடை	பெரிதாகு	முன் இடைத்தமிழ்
வட்டிP	சத்தியம் செய்	முன் இடைத்தமிழ்
வர்த்திP	வசி	முன் இடைத்தமிழ்
விரை	சேர்	முன் இடைத்தமிழ்
வெறுP	அதிகமாக இரு	முன் இடைத்தமிழ்

பின் இடைக்காலத் தமிழில் இழப்பு

பின்வரும் வினையடிகள் பின் இடைக்காலத் தமிழில் வழக்கிழந்துவிட்டதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

வினையடி	**பொருள்**	**இழப்புகாலம்**
அங்கலாய்P	துன்புறுத்தப்படு	பின்இடைக்காலத்தமிழ்
அங்காP	கட்டு (முடிச்சுப்போடு)	பின்இடைக்காலத்தமிழ்
அண்ணிP	இனி	பின்இடைக்காலத்தமிழ்
அணவு	சென்றடை	பின்இடைக்காலத்தமிழ்
அதக்கு	கட்டுப்படுத்து	பின்இடைக்காலத்தமிழ்
அதவு	கொல்	பின்இடைக்காலத்தமிழ்
அதுக்கு	அடி	பின்இடைக்காலத்தமிழ்
அரவிP	கூச்சலிடு	பின்இடைக்காலத்தமிழ்
அரவு	துன்புறுத்து	பின்இடைக்காலத்தமிழ்
அருத்திP	இர	பின்இடைக்காலத்தமிழ்
அருவு	துன்புறுத்து	பின்இடைக்காலத்தமிழ்
அழும்பு	நட்பாகஇரு	பின்இடைக்காலத்தமிழ்
அளி	ஊது	பின்இடைக்காலத்தமிழ்
அறாவு	அடி	பின்இடைக்காலத்தமிழ்
ஆகரிP	கல	பின்இடைக்காலத்தமிழ்
ஆவிP	வாய் திற	பின்இடைக்காலத்தமிழ்
இங்கு	தாமசி	பின்இடைக்காலத்தமிழ்
இணர்	பூ	பின்இடைக்காலத்தமிழ்
இலக்கிP	இழு	பின்இடைக்காலத்தமிழ்
இலங்கிP	துள்ளு	பின்இடைக்காலத்தமிழ்
இலச்சிP	முத்திரையிடு	பின்இடைக்காலத்தமிழ்
இழி	பிடுங்கு	பின்இடைக்காலத்தமிழ்
உடறு	கோபப்படு	பின்இடைக்காலத்தமிழ்
உமைP	சொறி	பின்இடைக்காலத்தமிழ்
உறைP	கண்டனம் செய்	பின்இடைக்காலத்தமிழ்
ஊணு	ஊட்டு	பின்இடைக்காலத்தமிழ்
ஊர்P	சூப்பு	பின்இடைக்காலத்தமிழ்
எச்சு	வணங்கு	பின்இடைக்காலத்தமிழ்

எழுவு	பரவு	பின்இடைக்காலத்தமிழ்
ஓசணிP	போக முயல்	பின்இடைக்காலத்தமிழ்
கமர்	நீக்கு	பின்இடைக்காலத்தமிழ்
கழணு	கோபப்படு	பின்இடைக்காலத்தமிழ்
காழ்P	கோபப்படு	பின்இடைக்காலத்தமிழ்
குஞ்சிP	வளை	பின்இடைக்காலத்தமிழ்
குழகு	வீண்வம்புபேசு	பின்இடைக்காலத்தமிழ்
குழைP	குரை	பின்இடைக்காலத்தமிழ்
குறP	வெளியேற்று	பின்இடைக்காலத்தமிழ்
கூடளிP	மேலிருந்து தொங்கு	பின்இடைக்காலத்தமிழ்
கேழ்P 1	நிறம் பெறு	பின்இடைக்காலத்தமிழ்
கேழ்P 2	அதிகரி, பெருகு	பின்இடைக்காலத்தமிழ்
சங்கற்பிP	உறுதிசெய்	பின்இடைக்காலத்தமிழ்
சண்ணிP	மெழுகு	பின்இடைக்காலத்தமிழ்
சதிர்P	வலிமையுறு	பின்இடைக்காலத்தமிழ்
சவிP	பிராத்தனை செய்	பின்இடைக்காலத்தமிழ்
சுகிர்	கிழி	பின்இடைக்காலத்தமிழ்
தழுP	தவறு	பின்இடைக்காலத்தமிழ்
தென்று	சிதறு	பின்இடைக்காலத்தமிழ்
தேனிP	மகிழ்சியாக இரு	பின்இடைக்காலத்தமிழ்
துடும்பு	நிரம்பு	பின்இடைக்காலத்தமிழ்
துணிP	வெறு	பின்இடைக்காலத்தமிழ்
தொங்கு	தொடங்கு	பின்இடைக்காலத்தமிழ்
தொழிP	சிதறு	பின்இடைக்காலத்தமிழ்
நமைP	அணி	பின்இடைக்காலத்தமிழ்
நயங்கு	நொறுங்கு	பின்இடைக்காலத்தமிழ்
நிசிP	தீர்மானி	பின்இடைக்காலத்தமிழ்
நிமி	முறுக்கு	பின்இடைக்காலத்தமிழ்
நெண்டு	உயர்	பின்இடைக்காலத்தமிழ்

நெற்று	நிரம்பு	பின்இடைக்காலத்தமிழ்
பகட்டு	வசீகரி	பின்இடைக்காலத்தமிழ்
பங்கு	பங்கிடு	பின்இடைக்காலத்தமிழ்
பருங்கு	பறி, கொல்	பின்இடைக்காலத்தமிழ்
பவP	தோன்று	பின்இடைக்காலத்தமிழ்
பீழ்	வேரோடு பிடுங்கு	பின்இடைக்காலத்தமிழ்
புல்லு	பிரி	பின்இடைக்காலத்தமிழ்
பைP	பிரி	பின்இடைக்காலத்தமிழ்
போழ்	வெட்டு	பின்இடைக்காலத்தமிழ்
மசிP	ஆடு	பின்இடைக்காலத்தமிழ்
மாட்டிP	மெழுகு	பின்இடைக்காலத்தமிழ்
மாடுP	இணை	பின்இடைக்காலத்தமிழ்
மன்று	தண்டி	பின்இடைக்காலத்தமிழ்
மிழற்று	ஒலி	பின்இடைக்காலத்தமிழ்
முக்கு	வருந்து	பின்இடைக்காலத்தமிழ்
முசி	கிழிக்கப்படு	பின்இடைக்காலத்தமிழ்
முழவு	முழங்கு	பின்இடைக்காலத்தமிழ்
முழுசு1	நுழை	பின்இடைக்காலத்தமிழ்
முழுசு 2	முத்தமிடு	பின்இடைக்காலத்தமிழ்
முழுசு 3	கொல்	பின்இடைக்காலத்தமிழ்
முள்கு	தழுவு	பின்இடைக்காலத்தமிழ்
முன்னு	போ, முன்னேறு	பின்இடைக்காலத்தமிழ்
மோறாP	திகை	பின்இடைக்காலத்தமிழ்
வாவ்வு	நிரம்பியிரு	பின்இடைக்காலத்தமிழ்
வனை	சமர்ப்பி	பின்இடைக்காலத்தமிழ்
விதும்பு	நகர்	பின்இடைக்காலத்தமிழ்
வீழ்ச்சு	விழு	பின்இடைக்காலத்தமிழ்
விளி	கோப்படு	பின்இடைக்காலத்தமிழ்
வைகு 1	தங்கு	பின்இடைக்காலத்தமிழ்

வைகு 2	வைத்திரு	பின்இடைக்காலத்தமிழ்

இழப்புத் தோற்றம்

பின்வரும் வினைகள் முன்இடைத்தமிழில் காணப்படுகின்றன. அவை பின்இடைத்தமிழில் காணப்படவில்லை, ஆனால் தற்காலத் தமிழில் காணப்படுகின்றன. எனவே அவை பின்இடைத்தமிழில் பேச்சுவழக்காக இருந்திருக்கவேண்டும்; உண்மையில் அவை பின்இடைத்தமிழில் வழக்கிழந்துவிட்டன எனக் கூறவியலாது. அவற்றைப் பின்இடைத் தமிழில் இழப்புத் தோற்றம் கருதலாம்.

ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட ஆவணங்களிலிருந்து பின்இடைக்காலத் தமிழில் வழக்கிழந்துவிட்டவை எனத் தெரிகின்ற சொற்கள் பின்வரும் பட்டியலில் தரப்பட்டுள்ளன.

வினையடி	**பொருள்**	**இழப்புகாலம்**
அண்டு	சென்றடை, அணுகு	பின் இடைத்தமிழ்
அரட்டு	அச்சுறுத்து	பின் இடைத்தமிழ்
அரள்	குழப்பு	பின் இடைத்தமிழ்
அருவருP	வெறு, அருவருப்படை	பின் இடைத்தமிழ்
அலுP	வருந்து, கடைப்படை	பின் இடைத்தமிழ்
இருமு	இருமு	பின் இடைத்தமிழ்
உவர்P	உப்புக்கரி	பின் இடைத்தமிழ்
கிளறு	கிண்டு, தோண்டு	பின் இடைத்தமிழ்
கோவிP	கோபப்படு	பின் இடைத்தமிழ்
சங்கறிபிP	உறுதிசெய்	பின் இடைத்தமிழ்
சம்மதிP	மதி	பின் இடைத்தமிழ்
சிணுங்கு	முனங்கு	பின் இடைத்தமிழ்
சீவிP	வாழ்	பின் இடைத்தமிழ்
செத்து	வெட்டு	பின் இடைத்தமிழ்
தியானிP	தியானம் செய்	பின் இடைத்தமிழ்
திருடு	களவாடு	பின் இடைத்தமிழ்

தெள்ளு	புடை	பின் இடைத்தமிழ்
தொத்து	ஒட்டிக்கொள்	பின் இடைத்தமிழ்
நசி	அழி	பின் இடைத்தமிழ்
நுணுக்கு	பொடியாக்கு	பின் இடைத்தமிழ்
நுரைP	நுரை	பின் இடைத்தமிழ்
நெருடு	தேய்	பின் இடைத்தமிழ்
பிரார்த்திP	பிரார்த்தனை செய்	பின் இடைத்தமிழ்
பொட்டு	வெடி	பின் இடைத்தமிழ்
மினுங்கு	மின்னு	பின் இடைத்தமிழ்
முக்கு 1	வருந்து	பின் இடைத்தமிழ்
முக்கு 2	பெரும் முயற்சிசெய்	பின் இடைத்தமிழ்
முசி	கிழிபடு	பின் இடைத்தமிழ்
வசிP	வாழ்	பின் இடைத்தமிழ்
வருணிP	விளக்கு	பின் இடைத்தமிழ்
வாதிP	வாதம்செய்	பின் இடைத்தமிழ்
விரோதிP	வெறு	பின் இடைத்தமிழ்

இயற்சொற்கள்

சொல் சேர்க்கை இரண்டு பகுதிகளில் ஆயப்படுகின்றது: (1) உண்மையான சொல் மாற்றம் (2) சொல்மாற்றத் தோற்றம். சொல்மாற்றத் தோற்றம் என்பது பின்வரும் காலகட்டங்களில் காணப்படும் இயற் சொற்களாகும். அவை தொன்மை சொற்கள் (archaic words) எனப்படும்.

ஒரு மொழியின் இரு காலகட்டங்களை ஆயும் போது பின்வரும் கால கட்டத்தில் ஏராளமான புதிய சொற்களை நாம் நேரிடலாம். அவற்றை அக்கால கட்டத்தில் மொழியில் ஏற்பட்ட சொல் சேர்க்ககைகளாகக் கருதவேண்டும். ஆனால் அச்சொற்களை அதனுடன் தொடர்புடைய இனமொழிச் சொற்களுடன் ஒப்பிடுகையில் அவை அவற்றுடன்

தொடர்புடையனவாகத் தெரியவரும். எனவே அச்சொற்கள் யாவும் முலமொழிக்கு மீட்டுருவாக்கம் செய்யப்படும். இந்நேர்வுகளில் எல்லாச்சொற்களும் முற்காலத்திலேயே பேச்சு வழக்கிலிருந்தகாகவும் பிற்காலத்தில் இலக்கிய மொழியில் இவை தோன்றியதாகவும் கருதப்பட வேண்டும். எனவே அவை புதிய சொற்களாக எடுத்துக்கொள்ளப்படவில்லை. இதை நிலைபெறு மொழியில் (standard languge) ஏற்பட்ட மாற்றமாகக் கருதவியலும். சேதுப்பிள்ளை (Sethu Pillai, 1944-46, reprint 1974: 2) பேச்சு வழக்குச் சொற்கள் அவற்றின் முக்கியத்துவம் காரணமாகவோ அல்லது அவற்றைப் பயன்படுத்திய புலவர்களின் அதிகாரம் காரணமாகவோ நிலைமொழியின் சொற்றொகையில் இடம்பெற்றன. இவ்வகையிலான சொற்கள் சொல்மாற்றத் தோற்றமாகக் (apparent lexical change) கூறப்படுகின்றது. அதாவது ஒருமொழியின் இருகாலகட்ட நிலைகளை ஒப்பிடுகையில் இது சொல் மாற்றமாகக் கருதப்படும். ஆனால் அவை உண்மையில் அம்மொழியின் உண்மையான சேர்க்கை அல்ல. ஏனென்றால் அவை பேச்சு வழக்கு அடிப்படையில் முற்காலத்திலேயே இருந்திருக்கவேண்டும். இது வரலாற்று மொழயியலிலும் ஒப்பீட்டு மொழியியலிலும் அடிப்படையான அனுமானமாகும். இனமொழிச்சொற்களின் பட்டியல் உருவாக்கப்படுகையில் இதைக் காணலாம். ஏடுத்துக்காட்டாக மாட்டு 'கொல்' என்ற சொல்லின் இணையான செயப்படுபொருள் குன்றிய வினை வடிவமான *மாள்* 'இற' என்பது பிற்காலத்தில் தான் காணப்படுகின்றது; அதாவது முன்னிடைத்தமிழிலும் பின்னிடைத் தமிழிலும் காணப்படுகின்றது. ஆனால் பிற இனமொழிகளை ஒப்பிடுகையில் மாள் 'இற' என்பது தென் திராவிட மொழிகளிலும் மத்திய திராவிட மொழிகளிலும் காணப்படுகின்றது. அதாவது தமிழ் மாள், கன்னடம் மாள், துளு மாணாவுணி, தெலுங்கு மாலு, குவி *மற்க்கலி* (mrakhali) (DEDR 4831); எனவே இது மூல திராவிடத்திலும் பழந்தமிழிலும் இருந்ததாகக் கருதவியலும். செயப்படுபொருள் குன்றா வினையான மாட்டு தமிழ் தவிர பிற மொழிகளில் காணப்படவில்லை என்ற மாட்டுவின் வரலாறு மிகவும் ஆர்வமூட்டுவதாகும். எனவே *த்து* என்ற ஒட்டின் சேர்க்கை பழந்தமிழுக்கு முற்பட்ட காலத்தில் ஏற்பட்ட புதிய உருவாக்கமாகக் கருதப்படவேண்டும். செயப்படுபொருள் குன்றா வினையான மாட்டு முன்பழந்தமிழில் இருப்பதும் மற்றும் *மாள்* என்ற செயப்படுபொருள் குன்றிய வடிவம் பிற திராவிடமொழிகளில் இருப்பதும் *மாள்* என்பது பழந்தமிழ் காலத்திலேயே ஒரு பேச்சு வழக்காக இருந்திருக்கவேண்டும் என்று நம்பச்செய்கின்றது. எனவே மாள் என்பது முன் பழந்தமிழிலேயே பேச்சு வழக்காக இருந்திருக்கவேண்டும்.

பழந்தமிழையும் இடைத்தமிழையும் ஒப்பிடுகையிலும் அதேபோல் பிற இனமொழிகளுடன் ஒப்பிடுகையில் சொல் மாற்றத் தோற்றம் என்ற சொல் மாற்றம் என்பது உணரப்பட்டுள்ளது.

இந்த வகையில் படும் வினைகள் முதல் நேர்வு அடிப்படையில் கீழே பட்டியலிடப்பட்டள்ளன. (கீழே சிவதாணுவிலிருந்து இரண்டு எடுத்துக்காட்டுகள் மாதிரிக்காகத் தரப்பட்டுள்ளன. சிவதாணு 184 எடுத்துக்காட்டுகள் தந்துள்ளார்.)

சொல் சேர்க்கைத் தோற்றத்தின் பட்டியல்

சொல்	பொருள்	இனமொழிச் சொற்கள்	DEDR குறிப்பு	முதல் நேர்வு	தொடர்சி	
அந்து	ஒட்டிக்கொள், எராளமாக இரு	த.அண்டு 'அணுகு', து. அண்டுமி, 'ஒட்டு', தெ.அண்டிஞ்சு, 'இணை, சேர்', கு. அந்தினை 'சேர்', க. அண்டு 'அருகே போ'	86 மற்றும் 120	பின்பழந்தமிழ்	முன்இடைத்தமிழ்	-
அலசு அலைச்சு	துன்புறு	து. அலசுனி, அலஜுனி 'மயங்கு, கலங்கு, துன்புறு'	236			

(த = தமிழ், து= துளு, தெ = தெலுங்கு, கு = குவி,

42 விகைள் முதல் முறையாக பின்பழந்தமிழில் வருகின்றன; பிற திராவிட மொழிகளில் அவற்றின் இனமொழிச் சொற்கள் காணப்படுவதால் அவைகள் பேச்சுவழக்கில் இருந்தன என்று கருதப்படுகின்றன. இவற்றில் 5 வினகைள் இடைக்காலத் தமிழில் வழக்கிழந்துள்ளன. அவைகள் பின்வருவன:

வினை	**பொருள்**	**வருகின்ற காலம்**	**வழக்கிழந்த காலம்**
காப்பாற்று	'prtotect'	பின்பழந்தமிழ்	இடைக்காலத் தமிழ்
குறழ்	கீழாக வளை	பின்பழந்தமிழ்	இடைக்காலத் தமிழ்
தறை	மொட்டையாகு	பின்பழந்தமிழ்	இடைக்காலத் தமிழ்

நுதுP	அணை	பின்பழந்தமிழ்	இடைக்காலத் தமிழ்
பீழிP	துன்புறுத்து	பின்பழந்தமிழ்	இடைக்காலத் தமிழ்

அண்டு 'ஒட்டு' என்ற வினை முன்இடைத்தமிழ் வருகின்றது ஆனால் பின்இடைத்தமிழில் வரவில்லை. எனவே இவ்வனை பின்இடைத்தமிழில் வழக்கிழந்துவிட்டது.

5 வினைகள் முன்இடைத்தமிழில் வரவில்லை ஆனால் பின்இடைத்தமிழில் வருகின்றது. அவைகள் பின்வருவன:

வினை	**பொருள்**	**வரும் காலம்**	**வழக்கிழந்த காலம்**
இடை	பின்வாங்கு	முன்இடைத்தமிழ்	பின்இடைத்தமிழ்
எக்கு	உயர்	முன்இடைத்தமிழ்	பின்இடைத்தமிழ்
குதுகுதுP	விரும்பு	முன்இடைத்தமிழ்	பின்இடைத்தமிழ்
குறுமு	ஒலி	முன்இடைத்தமிழ்	பின்இடைத்தமிழ்
நெய்	(துணி) நெய்	முன்இடைத்தமிழ்	பின்இடைத்தமிழ்

இவ்வெல்லா வினைகளும் முன்இடைத்தமிழில் பேச்சுவழக்கில் இருந்ததாக எடுத்துக்கொள்ளப் படுகின்றது. மற்றும் இது இழப்புத் தோற்றமாகக் கருதப்படவேண்டும்.

106 வினைகள் முதன்முதலில் முன்இடைத்தமிழில் வருகின்றன. ஆனால் அவற்றின் இனமொழிச்சொல் பிற திராவிட மொழிகளில் காணப்படுகின்றன. எனவே அவை இங்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் சில வினைகள் தற்காலத் தமிழிலும் வருவதில்லை. எனவே அவை பின்இடைத் தமிழில் வழக்கிழந்துவிட்டதாக நிச்சயமாகக் கருதமுடியும். அவை கீழே தரப்பட்டுள்ளன.

வினை	**பொருள்**	**வரும் காலம்**	**வழக்கிழந்த காலம்**
அதவு	கொல்	முன்இடைக்காலத் தமிழ்	பின்இடைக்காலத் தமிழ்
அருவு	துன்புறுத்து	முன்இடைக்காலத் தமிழ்	பின்இடைக்காலத் தமிழ்
அளி	மிகப் பழு	முன்இடைக்காலத் தமிழ்	பின்இடைக்காலத் தமிழ்
ஆவிP	பெருமூச்சு விடு	முன்இடைக்காலத் தமிழ்	பின்இடைக்காலத் தமிழ்

இளி	பறி	முன்இடைக்காலத் தமிழ்	பின்இடைக்காலத் தமிழ்
கலா	கோபங்கொள்	முன்இடைக்காலத் தமிழ்	பின்இடைக்காலத் தமிழ்
கள்ளு	திருடு	முன்இடைக்காலத் தமிழ்	பின்இடைக்காலத் தமிழ்
குஞ்சிP	வளை,	முன்இடைக்காலத் தமிழ்	பின்இடைக்காலத் தமிழ்
கேணு	தோண்டு	முன்இடைக்காலத் தமிழ்	பின்இடைக்காலத் தமிழ்
கேது	அழை	முன்இடைக்காலத் தமிழ்	பின்இடைக்காலத் தமிழ்
சிம்புளிP ~ சும்பிளிP	கண்மூடு	முன்இடைக்காலத் தமிழ்	பின்இடைக்காலத் தமிழ்
சீந்து	கோபமடை	முன்இடைக்காலத் தமிழ்	பின்இடைக்காலத் தமிழ்
தவர்	துளை	முன்இடைக்காலத் தமிழ்	பின்இடைக்காலத் தமிழ்
தளிP	பூசு	முன்இடைக்காலத் தமிழ்	பின்இடைக்காலத் தமிழ்
துலங்கு	துன்புறு	முன்இடைக்காலத் தமிழ்	பின்இடைக்காலத் தமிழ்
துறும்பு ~துறுமு	குழுமு	முன்இடைக்காலத் தமிழ்	பின்இடைக்காலத் தமிழ்
தொழிP	சிதறு	முன்இடைக்காலத் தமிழ்	பின்இடைக்காலத் தமிழ்
நமுகு	கட்டாயத்தால் கட்டுப்படு	முன்இடைக்காலத் தமிழ்	பின்இடைக்காலத் தமிழ்
நமைP	கலங்கு	முன்இடைக்காலத் தமிழ்	பின்இடைக்காலத் தமிழ்
நயங்கு	நொறுங்கு	முன்இடைக்காலத் தமிழ்	பின்இடைக்காலத் தமிழ்
நவிர்	கிழிபடு	முன்இடைக்காலத் தமிழ்	பின்இடைக்காலத் தமிழ்
நெண்டு	நொண்டு	முன்இடைக்காலத் தமிழ்	பின்இடைக்காலத் தமிழ்
பகட்டு	கவர்	முன்இடைக்காலத் தமிழ்	பின்இடைக்காலத் தமிழ்
பருங்கு	கொல், பிள	முன்இடைக்காலத் தமிழ்	பின்இடைக்காலத் தமிழ்
பளுகு		முன்இடைக்காலத் தமிழ்	பின்இடைக்காலத் தமிழ்
பாந்து	மறை	முன்இடைக்காலத் தமிழ்	பின்இடைக்காலத் தமிழ்
பீழ்	பிடுங்கு	முன்இடைக்காலத் தமிழ்	பின்இடைக்காலத் தமிழ்
முழுச்சு	நுழை	முன்இடைக்காலத் தமிழ்	பின்இடைக்காலத் தமிழ்
மெத்து	பூசு	முன்இடைக்காலத் தமிழ்	பின்இடைக்காலத் தமிழ்
விலாவிP	அழு	முன்இடைக்காலத் தமிழ்	பின்இடைக்காலத் தமிழ்

பிற வினைகள் இழப்புத் தோற்றமாக விளக்கப்படவேண்டும்.

36 புதிய வினைகள் பின்இடைக்காலத் தமிழில் காணப்படுகின்றன.

வடிவ மாற்றம்

வடிவ மாற்றம் என்பது சொல்லின் ஒலியனியல் வடிவம் மாறுவதைக் குறிக்கும். வினையடிகளில் ஏற்படும் மாற்றங்கள் மூன்று தலைப்புகளின் கீழ் இங்கு தரப்பட்டள்ளன.

1. ஒலியனியல் மாற்றத்தால் விளையும் வடிவ மாற்றம்
2. செய்யுளின் தேவைக்காக விளையும் மாற்றம்
3. மாற்றத் தோற்றம்

ஒலியனியல் மாற்றத்தால் விளையும் வடிவ மாற்றம்

இங்குக் குறிப்பிடப்படும் மாற்றம் முறையானவை அல்ல. எனவே அவை குறைவான சொற்களில் மட்டுமே வருகின்றது. எனவே இதை ஒலி மாற்றம் (sound change) என்று குறிப்பிடுவது என்பது தெரியவில்லை. இருப்பினும் இவற்றில் சில புதிய வடிவத்தில் தற்காலத் தமிழில் காணப்படுகின்றன. எனவே அவை வரலாற்று அடிப்படையில் முக்கியத்துவம் வாய்ந்தவை.

கீழே பழைய வடிவம் அதன் முதல் வருகை காலத்துடன் முதலில் தரப்பட்டுள்ளது; புதிய வடிவம் பொருளுடனும் வருகை காலத்துடனும் அடுத்துத் தரப்பட்டுள்ளது

மாற்றம்	**பழையசொலும் அதன் பொருளும்**	**வருகை காலம்**	**புதிய சொல்லும் அதன் பொருளும்**	**வருகை காலம்**
அ> இ	அண்டு	முன்பழந்தமிழ்	இண்டு 'அணுகு'	முன்இடைத்தமிழ்
	மண்டு	பின்பழந்தமிழ்	மிண்டு	முன்இடைத்தமிழ்

			'நெருக்கமாகு'	பின்இடைத்தமிழ்
இ > அ	பயிற்று	முன்பழந்தமிழ்	பயற்று 'செய்'	பின்இடைத்தமிழ்
எ > அ	வெள்கு	முன்பழந்தமிழ்	*வெட்கு >வட்கு .நாணமடை'	முன்இடைத்தமிழ்
அ > ஒ	நந்து	முன்பழந்தமிழ்	நொந்து 'அழி'	முன்இடைத்தமிழ்
அ > உ	துலங்கு	பின்பழந்தமிழ்	துலுங்கு 'குலுங்கு'	முன்இடைத்தமிழ்
உ > ஒ	குமுறு	பின்பழந்தமிழ்	குமிறு 'ஒலி'	பின்இடைத்தமிழ்
உ > ஒ	சூல்	முன்பழந்தமிழ்	சோல் 'தோண்டு'	முன்இடைத்தமிழ்
ஐ > அ மெய்	கை(த்த)	பின்பழந்தமிழ்	*கை(ச்ச) 'கச'	முன்இடைத்தமிழ் பின்இடைத்தமிழ்
"	நை(ந்த)	முன்பழந்தமிழ்	*நை(ஞ்ச) 'துன்புறு'	முன்இடைத்தமிழ் பின்இடைத்தமிழ்
"	தை(த்து)	முன்பழந்தமிழ்	*தை(ச்சு)> த(ச்சு) 'துளைத்துச் செல்'	பின்இடைத்தமிழ்
"	விரை(ந்து)	முன்பழந்தமிழ்	*விரை(ஞ்சு) > விர(ஞ்சு) 'விரை'	பின்இடைத்தமிழ்
மேற்கண்டு எடுத்துக்காட்டில் பல் அடைப்பொலியின் இடையண்ணமாக்கமும் ஐ > அ மாற்றமும் நடந்திருக்கவேண்டும்				
V1CV2 > V:1	சுரி	முன்பழந்தமிழ்	சுர் 'சுழல், சுருள்'	முன்இடைத்தமிழ்
"	புகு	முன்பழந்தமிழ்	பூ 'நுழை'	முன்இடைத்தமிழ்
"	விசிறு	முன்இடைத்தமிழ்	வீறு 'எறி'	பின்இடைத்தமிழ்
V1CV2 > V:3	இயை	முன்இடைத்தமிழ்	ஏய்	முன்இடைத்தமிழ்

			‘பொருந்து, சம்மதி’	
“	*பியறழ் (பிறழ்)	முன்பழந்தமிழ்	பேழ் ‘பிள’	முன்இடைத்தமிழ்
“		முன்பழந்தமிழ்		முன்இடைத்தமிழ்
“	வியர் ீ	முன்பழந்தமிழ்	வேர் ீ	முன்இடைத்தமிழ் பின்இடைத்தமிழ்
வினையடியில் உயிர்களுக்கு இடையில் வரும் ய் மறைந்து இ மற்றும் அ என்பதன் இணைப்பால் ஏ விளைந்துள்ளது. இம்மாதிரியான மாற்றம் தமிழிலும் பிற திராவிட மொழிகளிலும் ஒப்பீட்டியலார்களால் குறிப்பிடப்பட்டுள்து (விளக்கத்திற்குப் பார்க்க, P.S. Subrahmanyam, 1983)				
அ > ஆ / CVC-(C)Cu	கிடத்து	பின்பழந்தமிழ்	கிடாத்து ‘வை’	முன்இடைத்தமிழ்
‘‘	நடத்து	பின்பழந்தமிழ்	நடாத்து ‘நிகழ்த்து, ஆள்’	முன்இடைத்தமிழ்
‘‘	குலவு	முன்பழந்தமிழ்	குலாவு ‘வளை’	முன்இடைத்தமிழ்
‘‘	நிலவு	முன்பழந்தமிழ்	நிலாவு ‘இரு, பிரகாசி’	முன்இடைத்தமிழ்
‘‘	புலவு	முன்பழந்தமிழ்	புலாவு ‘புலால் நாற்றமடி’	முன்இடைத்தமிழ்
C> Y	பிசை	முன்பழந்தமிழ்	பியை ‘பிசை’	பின்இடைத்தமிழ்
இது முன்தமிழில் ஒழுங்கான மாற்றமாகும் (விளகக்கத்திற்குப் பார்க்க, P.S. Subrahmanyam, 1983: 131-332)				
க்> வ்	திகழ்	முன்பழந்தமிழ்	திவள் ‘ஒளிவீசு’	முன்இடைத்தமிழ்
இ-யைத் தொடர்ந்து வரும் த்த்> ச்ச், ந்த் > ஞ்ச்	வித்து	முன்பழந்தமிழ்	விச்சு ‘விதை’	முன்இடைத்தமிழ்

இது இடையண்ணமாக்கமாகும்				
"	கை(த்த)	பின்பழந்தமிழ்	*சை(ச்ச) 'கச'	முன்இடைத்தமிழ் பின்இடைத்தமிழ்
"	நை(ந்த)	முன்பழந்தமிழ்	*நை(ஞ்ச) 'துன்புறு'	முன்இடைத்தமிழ் பின்இடைத்தமிழ்
"	தை(த்த)	முன்பழந்தமிழ்	*தை(ச்ச) 'துளைத்துச் செல்'	பின்இடைத்தமிழ்
"	விரை(ந்து)	முன்பழந்தமிழ்	*விரை(ஞ்சு) 'விரை'	பின்இடைத்தமிழ்
அடைப்பொலி அல்லது மூக்கொலியைத் தொடர்ந்து ஐ > 0	*கை(ச்ச)		க(ச்ச) 'கச'	முன்இடைத்தமிழ் பின்இடைத்தமிழ்
"	*தை(ச்ச)		த(ச்ச) 'துளைத்துச் செல்'	பின்இடைத்தமிழ்
"	*நை(ச்ச)		'துன்புறு	முன்இடைத்தமிழ் பின்இடைத்தமிழ்
"	*விரை(ஞ்சு)		'விரை'	பின்இடைத்தமிழ்
ந்>ம்	நொள்	முன்பழந்தமிழ்	மொள் 'துக்சிச்செல், எடு, (நீர்) மொள்'	முன்இடைத்தமிழ் பின்இடைத்தமிழ்
ற் > ர்	பிறழ்	முன்பழந்தமிழ்	*பிரழ் 'பிள'	முன்இடைத்தமிழ்
ற்ற் > த்த்	எற்று	முன்பழந்தமிழ்	எத்து 'தூக்கு'	
"	ஒற்று	முன்பழந்தமிழ்	ஒத்து 'அழுத்து'	முன்இடைத்தமிழ்
"	தொற்று	முன்பழந்தமிழ்	தொத்து 'ஒட்டு,	முன்இடைத்தமிழ் பின்இடைத்தமிழ்

ருச்ச் > *ர்ச்ச் > றச்	அருச்சிP	பின்பழந்தமிழ்	அர்ச்சிP > அற்சிP 'வணங்கு'	முன்இடைத்தமிழ்
ஐ முன் ந்> ஞ். இது இடையண்ணமாக்கமாகும்	நாறு	முன்பழந்தமிழ்	(மாலை) ஞாற்று 'தோன்று'	பின்பழந்தமிழ்
"	நவில்	முன்பழந்தமிழ்	(மை) ஞவில் 'சொல்	முன்இடைத்தமிழ்
"	நெறி	முன்பழந்தமிழ்	(கை) ஞெறி 'அழுத்து'	முன்இடைத்தமிழ்
முக்கொலி சேர்க்கை	பகு	முன்பழந்தமிழ்	பங்கு 'பங்கிடு, பங்குவை	முன்இடைத்தமிழ்
முக்கினமாக்கம்	பம்பு	முன்பழந்தமிழ்	பம்மு 'நெக்கமாயிரு, கூடு'	முன்இடைத்தமிழ் பின்இடைத்தமிழ
ழ > ள்	திகழ்	முன்பழந்தமிழ்	*திவழ் > திவள் 'ஒளிவீசு'	முன்இடைத்தமிழ்
தொடக்க க்-இன் இழப்பு	கன்று	பின்பழந்தமிழ்	அன்று 'கோபமடை'	முன்இடைத்தமிழ்
இடை ரு-வின் இழப்பு	உருக்கு	முன்பழந்தமிழ்	உக்கு 'உருகு'	முன்இடைத்தமிழ்
	நுருங்கு	முன்பழந்தமிழ்	நுங்கு 'அழி'	பின்இடைத்தமிழ்
இந்த மாற்றமும் பெயர்களில் காணப்படுகின்றது. (விளக்கத்திற்கு பார்க்க Shanmugam, 1976:600)				
இடமாற்றம்	விசிறு	முன்இடைத்தமிழ்	சிவிறு 'பரப்பு'	பின்இடைத்தமிழ்

செய்யுளின் தேவைக்காக வடிவமாற்றம்

நமது நூற்கள் யாவும் செய்யுள்கள் ஆதலால் சொற்களில் வடிவமாற்றம் காணப்படுவது இயற்கை. அவை உண்மையிலேயே வடிவமாற்றங்கள் அல்ல. ஏனென்றால் இந்த மாற்றம் செய்யுளின் தேவைக்காகச் செய்யப்படுவது (அதாவது முன்னரும் பின்னும் வரும் வரிகளில் வரும் சொறகளுக்கு ஏற்றவாறு மாறுவதற்கு வேண்டி செய்யப்பட்டது). அவைகள் அதிகம் காணப்படவில்லை மற்றும் அவை பெரும்பாலும் தொடர்ந்து வரவில்லை. அவைகள் பரவலாக வரவில்லை மற்றும் பெரும்பாலும் தொடர்ந்து வரவில்லை.

ஒலி மாற்றம்	**மாறாத சொல்**	**வரும் காலம்**	**மாறிய சொல்**	**வருமிடம்**	**வரும் காலம்**
அ > ஐ	அலசு	பின்பழந்தமிழ்	அலைச்சு 'துன்புறு, களைப்புறு'	அலைசாமே (தேவாரம் 6-34-2-3	முன்இடைத்தமிழ்
	நிர	முன்பழந்தமிழ்	நிரை 'முறையாக இரு, குழுமு'	நிரைந்து (தேவாரம் 6-27-8-2)	முன்இடைத்தமிழ்
ஒ > உ	தொகு	முன்பழந்தமிழ்	துகு 'மறை'	துக்க தேவாரம் 6-23-3-3	முன்இடைத்தமிழ்
குற்றுயிரி > நெட்டுயிர்	விடு	முன்பழந்தமிழ்	வீடு 'விலகிச்செல்'	வீட்டிடம் (சீவகசிந்தாமணி 2110-1)	முன்இடைத்தமிழ்
	விடு	முன்பழந்தமிழ்	வீடு 'தப்பிச்செல்'	வீட்டிடம் (வில்லிபாரதம் 4-4-48-4)	பின்இடைத்தமிழ்
நெட்டுயிர் > குற்றுயிர்	வீங்கு	முன்பழந்தமிழ்	விங்கு 'அதிகரி'	விங்கி (தேவாரம் 3-68-3-3)	முன்இடைத்தமிழ்
அடைப்பொலி-உ_> மூக்கொலி-உ	கறு	முன்பழந்தமிழ்	கன்று 'கோபங்கொள்'	கன்று (தேவாரம் 3-108-10-4)	முன்இடைத்தமிழ்
	தெறு	முன்பழந்தமிழ்	தென்று	தென்ற	முன்இடைத்தமிழ்

			'தொல்லை கொடு'	(தேவாரம் 3-108-10-3)	
அடைப்பொலி > மூக்கொலி-அடைப்பொலி	விலகு	முன்பழந்தமிழ்	விலங்கு 'நகர்'	விலங்கு (நாலாயிரத் திவ்விய பிரபந்தம் 1719-1)	முன்இடைத்தமிழ்
	தேடு	முன்பழந்தமிழ்	தேண்டு 'தேடு'	தேண்டினார் (கம்பராமாயணம் 5-15-33-4)	பின்இடைத்தமிழ்
மூக்கொலி-அடைப்பொலி> அடைப்பொலி	இலங்கு	முன்பழந்தமிழ்	இலகு	இலகு	பின்இடைத் தமிழ்
அடைப்பொலி > அடைப்பொலி-அடைப்பொலி	பாடு	முன்பழந்தமிழ்	பாட்டு 'பாடு'	பாட்டுவித்தால் (தேவாரம் 6-95-3-3) பாட்டி (தேவாரம் 7-18-5-3)	முன்இடைத்தமிழ் முன்இடைத்தமிழ்
"	எறி	முன்பழந்தமிழ்	எற்று 'எறி'	எற்றிய (வில்லி பாரதம் 4-4-126-1)	
"	மூடு	முன்இடைத்தமிழ்	முத்து	முத்தியே (கம்பராமாணம் 2-8-46-4)	

13. உருபொலியனியல் மாற்றம்

ஓர் உருபன் ஓரிடத்தில் ஓர் ஒலியன் வடிவாலும் மற்றொரு இடத்தில் மற்றொரு ஒலியன் வடிவாலும் உருப்படுத்தம் செய்யப்பட்டால் அந்த உருபன் உருபொலியனியல் பிறழ்ச்சியைக் காட்டுகிறது என்று கூறப்படும். பிறழ்ச்சிகளை வர்ணனை செய்யும் மிகவும் வசதியான வழி அதை அகப்புணர்ச்சி (internal sandhi) மற்றும் பிறப்புணர்ச்சி (external sandhi) என்று பிரித்து ஆய்வதாகும்.

ஹாக்கெட் (Hocket, 1958:381) உருபொலியனியல் அமைப்பில் ஏற்படும் மாற்றத்தைப் பின்வருமாறு உருப்படுத்தம் செய்கிறார்.

1. உருபொலியனியல் அல்லது பெரிய வடிவங்களின் ஒலியன் உருப்படுத்தல்களில் ஏற்படும் மாற்றம். இது முன்னரே விளக்கப்பட்டுள்ளது.
2. பிறழ்ச்சிகளின் நடத்தைகளின் மாற்றம்: பிறழ்ச்சி மாற்றம்

1 வர்ணனை நோக்கிலிருந்து பிறழ்ச்சிகள்

இங்கு உருபொலியனியல் மாற்றங்கள் மூன்றாவது வினைத்திரிபாக்க வகுப்பில் அடங்கும் வினைகளுக்குப் பொருத்தமானதாகும் (இவ்வினைகள் இ அல்லது இன் என்பதை இறந்தகாலப் பின்னொட்டாக ஏற்கும்). மொத்தம் 7 குழும உருபொலியனியல் விதிகளை முழு தரவுக்கும் பயன்படுத்த இயலும். அவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. முன்னோக்கிய நீட்சி விதி
2. முன்னோக்கிய கூடுதல் நீட்சி விதி
3. பின்னோக்கிய நீட்சி விதி
4. ஈருயிராக்க விதிகள் (2 விதிகள்)
5. உடன்படுத்து விதி
6. மெய்யாக்க விதி மற்றும்
7. அண்ணமாக்க விதி

முன்னோக்கிய நீட்சி எிதி, முன்னோக்கிய கூடுதல் நீட்சி விதி, ஈருயிராக்க விதி, மெய்யாக்க விதி என்பனவற்றை வினையடிகளின் இறுதியுயிர் -அ என்பதாக இருந்தால் தான்

பயன்படுத்த இயலும் அவைகள் எல்லாம் விருப்பு விதிகளாகும். பின்னோக்கிய நீட்சி விதியை வினையடிகளின் இறுதி உயிர் -உ ஆக இருந்தால்தான் பயன்படுத்த இயலும். உடன்படுத்து விதியை எல்லா நேர்களிலும் பயன்படுத்த இயலும்.

(1) முன்னோக்கிய நீட்சி விதி

குற்றுயிர்$_1$ -> நெட்டுயிர்$_1$ / -குற்றுயிர்$_2$ மற்றும் குற்றுயிர்$_1$ = அ என்றால்

எ.கா.

அள-இ -> *அளா-இ

பர-இ -> *பரா-இ

விர-இ -> *விரா-இ

வின-இ -> *வினா-இ

(2) முன்னோக்கிய கூடுதல் நீட்சி விதி

∅ -> குற்றுயிர்$_1$/நெட்டுயிர்$_1$ – குற்றுயிர்$_2$ குற்றுயிர்$_1$ = அ என்றால்

எ.கா.

தா-இ -> *தாஅ-இ

*பரா-இ (விதி 1) -> *பராஅ-இ

*விரா-இ (விதி 1) -> *விராஅ-இ

*வினா-இ (விதி 1) -> *வினாஅ-இ

(3) மெய்யாக்க விதி

இ -> ய் / நெட்டுயிர் - ஹ

எ.கா.

*தாஅ-இ (விதி 2) -> தாஅ-ய்

*பராஅ-இ (விதி 2) -> பராஅ-ய்

*விராஅ-இ (விதி 2) -> விராஅ-ய்

*வினாஅ-இ (விதி 2) -> வினாஅ-ய்

*வினா-இ (விதி 1) -> வினா-ய்

(4) மற்றும் (5) ஈருயிராக்க விதிகள்

(4) ∅ -> குற்றுயிர்$_2$ / குற்றுயிர்$_1$ - குற்றுயிர்$_2$; குற்றுயிர்$_1$ = அ என்றால்

எ.கா.

தட-இ > *தட-இஇ

(5) குற்றுயிர்$_1$ – குற்றுயிர்$_2$ குற்றுயிர்$_2$ -> குற்றுயிர்$_1$ குற்றுயிர்$_2$ - குற்றுயிர்$_2$

எ.கா.

*தட-இஇ (விதி 4) -> தடை-இ

(6) பின்னோக்கிய நீட்சி விதி

குற்றுயிர்$_1$ –> குற்றுயிர்$_2$ / - குற்றுயிர்$_2$; குற்றுயிர்$_1$ = உ அல்லது இ என்றால்

எ.கா

தழு-இ -> தழீ-இ

படி-இ -> படீ-இ

(7) உடன்படுத்தி விதி

∅ -> குற்றுயிர்/ குற்றுயிர்$_1$ – குற்றுயிர்$_2$

எ.கா

அள-இ -> அளவ்-இ

தட-இ -> தடவ்-இ

தழு-இ -> தழுவ்-இ

பர-இ -> பரவ்-இ

-இ–இல் இறுதியுறும் வினைகள் இ என்ற இறந்தகால பின்னொட்டுடன் சேர்ந்து வரும்போது ய் என்ற உடன்படுத்தி வருவதில்லை ஆனால் பின்னோக்கிய நீட்சிவிதிதான் வரும் (எ.கா. அறி-இ -> அறீஇ). இருப்பினும் உடன்படுத்தி ய் பின்வருமாறு அண்ணாவாக்க விதிக்கு உட்படுவதைக் காணலாம்.

(8) அண்ணவாக்க விதி (விருப்பு)

குற்றுயிர் -> ய்/நெட்டுயிர் - இறுதியுயிர்

எ.கா.

அளா-வ் இ (விதி$_1$ மற்றும் விதி$_7$) -> அளா-யி

'-' என்று இங்கு அடையாளப்படுத்தப்பட்ட உருபனியில் எல்லை இல்லாமற் போனால், உண்மையான வடிவு பெறப்படும். முன்னர் கூறிய எல்லா விதிகளையும் ஒன்று சேர்த்து ஒரே விதியாகப் பின்வருமாறு தரலாம்.

குற்றுயிர் -> நெட்டுயிர் (குற்றுயிர்) { ∅ / வ் / ய் / இ } / -இ

குற்றுயிர்

ய்-க்குப் பின்னர் இ–ஐ இழப்பது, ய்–க்கு பிறகு வரும் இழப்பாகக் கருதப்படவேண்டும்.

எ.கா.

வின+இ -> வினாஅய்

வினாய்

வியாவி

வினவி

வினஇஇ

இவ்வெல்லா விதிகளையும் முன் பழந்தமிழிலும் பயன்படுத்த இயலும் மற்றும் சில விதிகள் பிற்காலத்தில் பயன்படுத்தப்படும். இருப்பினும் உடன்படுத்தி விதியை எல்லாக்காலங்களிலும் பயன்படுத்தவியலும்.

13 பிறழ்ச்சி மாற்றம்

வரலாற்று முன்னேற்றத்தில் சில குறிப்பிட்ட விதிகள் சில வினைகளுக்குப் படிப்படியாக நீட்சியடைந்துள்ளது. இதுபோல் படிப்படியாகச் சில விதிகள் இழப்படைந்துள்ளது. இருப்பினும் சில நேர்வுகளில் ஒரு விதி சில வினைகளுக்கு நீட்சியடைந்துள்ளது மற்றும் அதே விதி சில வினைகளுக்கு இழப்படைந்துள்ளது. மேலும் உடன்படுத்தி விதி பிற்காலங்களில் கூடுதல் கட்டாயமாக மாறியது. ஒவ்வொரு விதியின் நீட்சியும் இழப்பும் கீழே விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளது.

முன்னோக்கிய நீட்சிவிதி

முன்னோக்கிய நீட்சிவிதி படிப்படியாகக் கூடுதல் எண்ணிக்கையான சொற்களில் பயன்படுத்தப்படுதாகக் காணப்படுகிறது.

விர என்ற வினையில் இவ்விதியின் பயன்பாடு முன் பழந்தமிழிலும் பின் இடைத்தமிழிலும் காணப்படுகிறது. எனவே இது எல்லாக் காலங்களிலும் கிளைமொழிநிலையில் இருந்திருப்பதாகக் கருதலாம்.

எ.கா.

விர-இ (விதி$_1$ மற்றும் விதி$_3$) -> விராய் (பதிற்றுப்பத்து 42-10) - முன்பழந்தமிழ்

விர-இ (விதி$_1$ மற்றும் விதி$_2$) > (கம்பராமாயணம் -1-21-47-2) - பின்னிடைத்தமிழ்

அள என்பதைப் பொறுத்தவரையில் இவ்விதியின் பயன்பாட்டால் விளைந்த வடிவங்கள் முன்பழந்தமிழிலும் முன்னிடைத் தமிழிலும் பின்னிடைத் தமிழிலும் காணப்படுகின்றது மற்றும் *வின* என்ற வினை மீது இவ்விதியின் பயன்பாட்டால் விளைந்த வினைகள் பின்பழந்தமிழிலும் முன்னிடைத்தமிழிலும் காணப்படுகின்றது. அதாவது இவ்விதி *அள* மற்றும் *வின* என்ற இரு வினைகளுக்குப் பின்பழந்தமிழில் நீட்சி அடைந்துள்ளது மற்றும் முன்னிடைத்தமிழ் வரை தொடர்ந்துள்ளது.

அள-இ (விதி$_1$ மற்றும் விதி$_7$) -> அளாவி(ய) (திருக்குறள் - 64-2) - பின்பழந்தமிழ்
அளாவி (பெருங்கதை 3382-2) - பின்னிடைத்தமிழ்
(விதி $_1$ மற்றும் விதி $_7$ மற்றும் விதி $_8$) -> அளாய்(இன) (சீவகசிந்தாமணி 2356–3)
- முன்னிடைத்தமிழ்
(விதி $_1$ மற்றும் விதி$_7$) -> வினாவி (கம்பராமாயணம் 2-9-4-2) - முன்னிடைத்தமிழ்

கட, தட, நில, பர போன்ற வினைகளில் இவை முன்னிடைத்தமிழிலிருந்து காணப்படுகின்றன.

கட – இ (விதி $_1$ மற்றும் விதி $_7$) -> கடாவி
(நாலாயிர திவ்யபிரபந்தம் 2404–3) - முன்னிடைத்தமிழ்
(கம்பராமாயணம் 6-14–156-1) - பின்னிடைத்தமிழ்
தட–இ (விதி$_1$ மற்றும் விதி$_7$ மற்றும் விதி$_8$) > தடாயின
(சீவகசிந்தாமணி 284–2) முன்னிடைத்தமிழ்
நில – இ (விதி$_1$ மற்றும் விதி$_7$) -> நிலாய்
(நாலாயிரத் திவ்யபிரபந்தம் 752–2) - முன்னிடைத்தமிழ்
(விதி$_1$ மற்றும் விதி$_7$) -> நிலாவி (தேவாரம் 4-76-6-3) முன்னிடைத்தமிழ்
நிலாவி (பெருங்கதை 444–3) - பின்னிடைத்தமிழ்
பர–இ (விதி$_1$ மற்றும் விதி$_7$) பராவி (நாலாயிரத் திவ்யபிரபந்தம் 599–2)- முன்னிடைதமிழ்
பராவி (கம்பராமயணம் 1-20–18–2) பின்னிடைத்தமிழ்

அதாவது இவ்விதி முன்னிடைத் தமிழில் நான்கு வினைகளுக்கு மட்டும் நீட்டப்பட்டுள்ளது மற்றும் பின்னிடைத்தமிழில் மூன்று வினைக்கு மட்டும் தொடர்கின்றது.

இவையெல்லாம் எவ்வாறு முன்னோக்கிய நீட்சிவிதி வரலாற்று அடிப்படையில் கூடுதல் வினைகளுக்கு நீட்டப்படுகிறது என்று காட்டுகிறது.

முன்னோக்கிய நீட்சிக்கு உட்படுத்தப்பட்ட *கல* மற்றும் *கட* என்ற வினைகள் முன்னிடைத்தமிழில் மட்டும் காணப்படுகிறது.

கல–இ (விதி$_1$ மற்றும் விதி$_8$) -> கலாய் (நாலாயிரத் திவ்யபிரபந்தம் 37263) – முன்னிடைத்தமிழ்

தட–இ (விதி$_1$ மற்றும் விதி$_7$) -> தடாவி(ய) (நாலாயிர திவ்யபிரபந்தம் 3585–1) - முன்னிடைத்தமிழ்

கல பின்னிடைத்தமிழில் இரண்டாவது வினைத்திரிபுக்கப் பகுப்பில் காணப்படுவதால், பின்னிடைத்தமிழில் இவ்வினைக்கு இவ்விதி இழப்பாக எடுத்துக்கொள்ளப்படவேண்டும். ஆனால் *தட* என்பதன் நேர்வில் இப்பொருள் கொண்ட வினை இழக்கப்படடுள்ளது எனவே இவ்வினைக்கு இவ்விதி இழக்கப்பட்டுள்ளது.

இது முன்னிடைத்தமிழில் இரண்டு புதிய வினைகளுக்கு இவ்விதியின் நீட்சியைக் காட்டுவதுடன் பின்னிடைத்தமிழில் இவ்விதியின் செயல்பாட்டின் இழப்பையும் காட்டுகிறது. இவ்விழப்பு தற்காலத் தமிழின் போக்கைப் பிரதிபலிக்கிறது.

முன்னோக்கிய கூடுதல் நீட்சி விதி

முன்னோக்கிய கூடுதல் நீட்சிவிதி முன்னோக்கிய கூடுதல் நீட்சிவிதிகளுக்குப் பின்னர்தான் குற்றுயிரில் இறுதியுறும் வினைகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது. ஆனால் நெட்டுயிரில் இறுதியுறும் வினைகளுக்கு இவ்விதி நேரடியாகவே பயன்படுத்தப்படுகிறது.

கட 'கேள்', குல 'வளை', தா 'பரவு' என்ற வினைகளின் நேர்வில் இவ்விதி பின்பழந்தமிழிலிருந்து இழப்பு ஆகும்.

கட-இ (விதி$_1$ மற்றும் விதி$_2$ விதி$_3$) > கடாஅய் (அகநானூறு 256-18) முன் பழந்தமிழ்

குல-இ (விதி$_1$ மற்றும் விதி$_2$ விதி$_3$) > குலாஅய் (அகநானூறு 265-11) முன் பழந்தமிழ்

தா-இ (விதி$_1$ மற்றும் விதி$_2$ விதி$_3$) > தாஅய் (அகநானூறு 384-4) முன் பழந்தமிழ்
விர-இ (விதி$_1$ மற்றும் விதி$_2$ விதி$_3$) > விராஅய் (அகநானூறு 99-8) முன் பழந்தமிழ்

இந்த வடிவங்கள் பின் பழந்தமிழில் இழக்கப்பட்டுள்ளன.

கூ, தா (`குதி'), *பர வின* என்ற வினைகளின் நேர்வுகளில், இவ்விதிகள் செயல்படும் வடிவங்கள், முன்பழந்தமிழிலும் பின்பழந்தமிழிலும் காணப்படுகின்றன. எனவே இவை முன்னிடைத்தமிழிலிருந்து இழக்கப்பட்டுள்ளன.

கூ-இ (விதி$_2$ விதி$_3$) -> கூஉய் (பத்துப்பாட்டு 2-101) - முன்பழந்தமிழ்
(கலித்தொகை 63-6) - பின்பழந்தமிழ்
தா-இ (விதி$_2$ விதி$_3$) -> தாஅய் (அகநானூறு. 384-4) - முன்பழந்தமிழ்
(கலித்தொகை 106-37) பின்பழந்தமிழ்
பர-இ (விதி$_1$ விதி$_2$ விதி$_3$) -> பராஅய் (தொல்காப்பியம் 442-2) - முன்பழந்தமிழ்
(கலித்தொகை 101-4) - பின்பழந்தமிழ்
வின-இ (விதி$_1$ மற்றும் விதி$_2$ விதி$_3$) -> வினாஅய் (அகநானூறு 81-12) - முன்பழந்தமிழ்
(மணிமேகலை 14-46) - பின்பழந்தமிழ்

மேற்சொன்ன வினைகளில் காணப்படும் விதி முன்பழந்தமிழிலும் பின்பழந்தமிழிலும் தொடர்ந்து என்றும் முன்னிடைத்தமிழிலிருந்து இழக்கப்பட்டது என்றும் இதிலிருந்து தெரிகிறது. *போ* என்ற வினையில் கூடுதல் நீட்சி வடிவு பின்பழந்தமிழிலும் பின்பழந்தமிழிலும் பின்னிடைத்தமிழிலும் காணப்படுகிறது இது பின்னிடைத் தமிழிலிருந்து இழக்கப்பட்டுள்ளது.

போ-இ (விதி$_2$ விதி$_3$) > போ�அய் (கலித்தொகை134-7) பின்பழந்தமிழ்
(நாலாயிரத் திவ்யபிரபந்தம்) முன்னிடைத்தமிழ்

போஅய் வடிவும் பின் பழந்தமிழிலும் முன்னிடைத்தமிழிலும் காணப்படுகிறது. இதிலிருந்து இவ்விதி பின்பழந்தமிழில் *போ* என்ற வினையடிக்கு நீட்டப்பட்டது என்றும் முன்னிடைத்தமிழ் வரை தொடர்ந்தது என்றும் பின்னிடைத்தமிழில் இழப்புற்றது என்றும் பொருள்கோள் செய்யலாம் இவ்வெடுத்துக்காட்டும் முன்கூறிய எடுத்துக்காட்டுகளும் பின்பழந்தமிழில் இருந்து படிப்படியாக இழக்கப்படும் நேர்வைக்காணலாம்.

பின்னோக்கிய நீட்சிவிதி

இவ்விதி ஒரு *கழு, குழு, கெழு, தழு,* வெறு, என்ற வினைகளுக்கு எல்லாக்காலத்திலும் செயல்படுவதைக் காணலாம்.

ஒரு-இ (விதி$_6$) - > ஓரீஇ (அகநானூறு 290-15) - முன்பழந்தமிழ்
(மணிமேகலை 4-103) - பின்பழந்தமிழ்
(நாலாயிரத் திவ்யபிரபந்தம் 1190-4) - முன்னிடைத்தமிழ்
(வில்லிபாரதம் 4-4-110-1) - பின்னிடைத்தமிழ்

கழு-இ (விதி $_6$) > கழீஇ (குறுந்தொகை 13-1) - முன்பழந்தமிழ்
(மணிமேகலை 28-6) - பின்பழந்தமிழ்
(சீவகசிந்தாமணி 2827-2) - முன்னிடைத்தமிழ்
(கம்பராமயணம் 6-4-153-2) - பின்னிடைத்தமிழ்

குழு-இ (விதி $_6$) > குழீஇ (குறுந்தொகை 303-2) - முன்பழந்தமிழ்
(மணிமேகலை 1-8) - பின்பழந்தமிழ்)
(சீவகசிந்தாமணி 390-3) - முன்னிடைத்தமிழ்
(கம்பராமயணம் 6-21-100-2) - பின்னிடைத்தமிழ்

கெழு-இ (விதி $_6$) > கெழீஇ (பதிற்றுப்பத்து 14-11) - முன்பழந்தமிழ்
(பரிபாடல் 7-38) - பின்பழந்தமிழ்
(சீவகசிந்தாமணி 754-2) - முன்னிடைத்தமிழ்
(கம்பராமயணம் 6-15-164-2) - பின்னிடைத்தமிழ்

தழு-இ (விதி $_6$) > தழீஇ (பதிற்றுப்பத்து 75-8) - முன்பழந்தமிழ்
(சிலப்பதிகாரம் 19-36) - பின்பழந்தமிழ்
(சீவகசிந்தாமணி 2672-3) - முன்னிடைத்தமிழ்
(வில்லிபாரதம் 1-7-36-3) - பின்னிடைத்தமிழ்

வெரு– இ (விதி$_6$) > வெரீஇ (அகநானூறு 108-12) - முன்பழந்தமிழ்
(மணிமேகலை 6-127) - பின்பழந்தமிழ்
(சீவகசிந்தாமணி 2672-3) - முன்னிடைத்தமிழ்
(வில்லிபாரதம் 2-2-120-3) - பின்னிடைத்தமிழ்

மரு 'சுவீகரி' என்ற வினையின் நேர்வில் பின்னோக்கிய நீட்சிவிதி கொண்ட வடிவங்கள் முன் பழந்தமிழில் மட்டும் காணப்படுகிறது பின்பழந்தமிழில் இருந்து வழக்கு இழந்து விட்டது.

மரு-இ (விதி$_6$) -> மரீஇ (தொல்காப்பியம், சொல்லதிகாரம் 437-1)-முன்பழந்தமிழ்

துரு என்று வினையின் நேர்வில் பின்னோக்கிய நீட்சி விதி கொண்ட வடிவம் பின்பழந்தமிழில் காணப்படுகிறது முன்பழந்தமிழில் இருந்து வழக்கு இழந்துவிட்டது.

துரு-இ (விதி$_6$) -> துரீஇ (திருக்குறள் 929-6)

மரு 'வந்துசேர்' என்ற வினை முன் பழந்தமிழிலும் முன்னிடைத்தமிழிலும் காணப்படுகிறது எனவே இது பின்பழந்தமிழில் கிளைமொழி நிலையால் இருந்திருப்பதாகவும் பின்இடைத்தமிழில் வழக்கிழந்ததாகவும் கருதப்படுகிறது.

மரு – இ (விதி $_6$) -> மரீஇ (அகநானூறு 223-16) முன்பழந்தமிழ்
(நாலாயிரத்திவ்வியப்பிரபந்தம் 2266-3) முன்னிடைத்தமிழ்

இவைகளெல்லாம் பின்னோக்கிய நீட்சி முன்பழந்தமிழில் கூடுதலாகக் காணப்படுகிறது என்றும் அது பின்பழந்தமிழில் சில வினைகளில் வழக்கிலிருந்து விட்டது என்றும் முன்னிடைத்தமிழில் மேலும் சில வினைகளில் வழக்கிழந்து விட்டது என்றும் பின்னிடைத்தமிழில் மேலும் சில வினைகளில் வழக்கு இழந்து விட்டது என்றும் காட்டுகிறது. இருப்பினும் இவ்விதி முற்றிலும் வழக்கிழக்கவில்லை; *தழு* போன்ற –உ இறுதி வினைகளிலும் *படி* போன்ற -இ இறுதி வினைகளிலும் பயன்படுத்தப்படுவதைக் காணலாம்.

ஈரொலியாக்க விதி

ஈரொலியாக்கவிதி முன்பழந்தமிழ் *கல, பர, விர, வின* என்ற வினைகளில் காணப்படுகிறது. பின்பழந்தமிழிலிருந்து இந்நான்கு வினைகளிலும் வழக்கிலிருந்து விட்டது.

கல-இ (விதி$_4$) > கலைஇ (அகநானூறு 266-5)
பர-இ (விதி$_4$) > பரைஇ (அகநானூறு 98-13)
விர-இ (விதி$_4$) > விரைஇ (அகநானூறு 94-5)
வின-இ (விதி$_4$) > வினைஇ (அகநானூறு 300-15)

கட, கவ, தட என்ற வினைகளின் நேர்வுகளில் இவ்விதி முன்பழந்தமிழிலும் பின்பழந்தமிழிலும் பயன்படுத்துவது தெரிகிறது மற்றும் முன்இடைத்தமிழிலிருந்து வழக்கிழந்து விட்டது.

கட – இ (விதி$_4$) > கடைசஇ (பதிற்றுப்பத்து 31-32) - முன்பழந்தமிழ்
(மணிமேகலை 26-83) - பின்பழந்தமிழ்
கவ – இ (விதி$_4$) > கடைசிஇ (அகநானூறு 16-14) - முன்பழந்தமிழ்
(பரிபாடல் 2-29) - பின்பழந்தமிழ்
தட – இ (விதி$_4$) > தடைஇ (பதிற்றுப்பத்து 54-3) - முன்பழந்தமிழ்
(மணிமேகலை 5-9) - பின் பழந்தமிழ்

அள என்ற வினையின் நேர்வில் இவ்விதி முன்னிடைத்தமிழ் வரைக் காணப்படுவதால் இது பின்னிடைத்தமிழிலிருந்து வழக்கிழந்திருக்கும்.

அள-இ > அளைஇ (புறநானூறு 381-3) - முன்பழந்தமிழ்
(திருக்குறள் 91-1) - பின்பழந்தமிழ்
(சீவகசிந்தாமணி 1044 – 3) - முன்னிடைத்தமிழ்

ஈரொயிரொலியாக்க விதி படிப்படியாக வழக்கிழந்து விட்டது என்று பொதுமைப்படுத்தலாம்.

மெய்யாக்க விதி

மெய்யாக்க விதி *தர* 'குதி, *விர* 'கல', *வின* 'கேள்' என்ற வினைகளில் எல்லாக் காலங்களிலும் காணப்படுகிறது.

தா-இ (விதி$_2$ மற்றும் விதி$_3$) > தாஅய் (அகநானூறு 384-416-14) - முன்பழந்தமிழ்
(விதி$_3$) > தாய் (பரிபாடல் 10-100) - பின்பழந்தமிழ்
(நாலாயிரத்திவ்வியப்பிரபந்தம்3283-3) - முன்னிடைத்தமிழ்
(பெரியபுராணம் 1114-4) - பின்னிடைத்தமிழ்

விர-இ (விதி$_1$ மற்றும் விதி$_3$) விராய்(அ) (பதிற்றுப்பத்து 42-10) - முன்பழந்தமிழ்
(கம்பராமயணம் 5-8-12-3) - பின்னிடைத்தமிழ்

வின-இ (விதி$_1$ விதி$_2$ மற்றும் விதி$_3$) -> வினாஅய் (அகநானூறு 82-12) - முன்பழந்தமிழ்
(மணிமேகலை 14-46) - பின்பழந்தமிழ்
(விதி$_1$ மற்றும் விதி$_3$) -> வினாய் (திருக்குறள் 594-1) - பின்பழந்தமிழ்
(கம்பராமயணம் 5-13-69-4) - பின்னிடைத்தமிழ்

சில காலங்களில் இது வராமை சிறப்பாகக் கருதப்படவில்லை.

தர 'பரவு' என்ற வினை நேர்வில் இவ்விதி முன்பழந்தமிழிலும் பின்பழந்தமிழிலும் காணப்படுகிறது. எனவே இவ்விதி முன்னிடைத்தமிழிலிருந்து வழக்கிழந்துவிட்டது.

தா-இ (விதி$_2$ மற்றும் விதி$_3$) > தாஅய் (அகநானூறு 134-5) - முன்பழந்தமிழ்
(விதி$_3$) > தாய் (புறநானூறு 202-19) - முன்பழந்தமிழ்
(கலித்தொகை 111-4) - பின்பழந்தமிழ்

கட, கல, பர என்ற வினைகளின் நேர்வில் மெய்யாக்க விதிகள் கொண்ட வடிவங்கள் முன்னிடைத்தமிழில் மட்டும் காணப்படுகிறது எனவே இவ்விதி பின்னிடைத்தமிழில் மட்டும் வழக்கிழந்துவிட்டது.

கட-இ (விதி$_1$ மற்றும் விதி$_3$) -> கடாய் (நாலாயிரத்திவ்வியப்பிரபந்தம் 2975-1) – முன்னிடைத்தமிழ்

கல-இ (விதி$_1$ மற்றும் விதி$_3$) -> கலாய் (நாலாயிரத்திவ்வியப்பிரபந்தம் 2976-3) - முன்னிடைத்தமிழ்

பர-இ (விதி$_1$ மற்றும் விதி$_2$ மற்றும் விதி$_3$) -> பராஅய்(அ) (தொல்காப்பியம். பொருள். 442-2) - முன்பழந்தமிழ்

(விதி$_1$ மற்றும் விதி$_2$ மற்றும் விதி$_3$) > பராஅய் (கலித்தொகை 101-4) - பின்பழந்தமிழ்

(விதி$_1$ மற்றும் விதி$_3$) > பராய் (நாலாயிரத்திவ்வியப்பிரபந்தம் 2475-1) - முன்னிடைத்தமிழ்

இவ்வெடுத்துக்காட்டுகள் முன்னோக்கிய நீட்சி விதியின் இழப்பு காரணமாக குறிப்பாக அ-வில் இறுதியுறும் வினைகளில் இவ்விதியின் இழப்பின் போக்கைக் காட்டுகிறது.

அண்ணவாக்க விதி

அண்ணவாக்கவிதி முன்னிடைத்தமிழில் *அள, தட* என்ற இருவினைகளில் மட்டும் காணப்படுகிறது. எனவே இதை முன்னிடைத்தமிழில் நடந்த மாற்றமாகவும் பின்னிடைத்தமிழில் இழப்பாகவும் பொருள்கோள் செய்யலாம்.

அள-இ (விதி$'_1$ மற்றும் விதி$_7$)அளாவிய (விதி$_8$) அளாயின (சீவகசிந்தாமணி 2356-3) - - முன்னிடைத்தமிழ்

தட-இ (விதி$'_1$ மற்றும் விதி$_7$)> தடாவி (விதி$_8$) > தடாய்(இந) (சீவகசிந்தாமணி 284-2) - முன்னிடைத்தமிழ்

உடன்படுத்திவிதி

உடன்படுத்தி முன்பழந்தமிழிலிருந்து பின்னிடைத்தமிழ் வரை காணப்படுகிறது ஆனால் சில சொற்களில் இது முந்தைய காலத்தில் காணப்படவில்லை. இருப்பினும் எல்லா சொற்களிலும் இவ்விதி கிளைமொழி நிலையில் இருந்திருக்க வேண்டும். ஆனால் படிப்படியாக இவ்விதி கூடுதல் எண்ணிக்கையிலான வினைகளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக *மரு* 'சுவீகரி" என்பதன் நேர்வில் முன்னோக்கிய நீட்சிவிதி முன்பழந்தமிழில் மட்டும் (தொல்காப்பியம் சொல். 437-1) மட்டும் காணப்படுகிறது. ஆனால் உடன்படுத்தி விதி எல்லாக் காலங்களிலும் காணப்படுகிறது.

மரு-இ (விதி$_7$) > மருவி (அகநானூறு301-26) முன்பழந்தமிழ்

(பரிபாடல். 20-25) பின்பழந்தமிழ்

(நாலாயிரத்திவ்வியப்பிரபந்தம்71-1) முன்னிடைத்தமிழ்

(பெரியபுராணம் 1970-2) முன்னிடைத்தமிழ்

இதுபோல் *கேழு* என்ற வினையில் பின்னோக்கிய நீட்சிவிதி முன்பழந்தமிழிலும் (பதிற்றுப்பத்து 14-11) பின்பழந்தமிழிலும் (திருக்குறள் 816-1) முன்னிடைத்தமிழிலும் (சீவகசிந்தாமணி 254-2) பின்னிடைத்தமிழிலும் (கம்பராமயணம் 6-15-164-2) காணப்படுகிறது. ஆனால் உடன்படுத்தி விதி முன்னிடைத்தமிழில் மட்டும் காணப்படுகிறது.

கெழு-இ (விதி$_7$) -> கெழுவி (தேவாரம் 3-75-5-4)

முன்னர் கண்டபடி ஈருயிராக்க விதி முன்பழந்தமிழில் மட்டும் கூடுதலாகக் காணப்படுகிறது. சில நேர்வுகளில் பின்பழந்தமிழில் காணப்படுகிறது. மற்றும் இவ்வடிவங்கள் உடன்படுத்தி விதியுடன் முன்பழந்தமிழிலிருந்தே காணப்படுகிறது. விருப்பாக உள்ள மற்றும் கிளைமொழி நிலையில் பயன்படுத்தப்பட ஈருயிராக்க விதி படிப்படியாக வழக்கிழந்து விட்டது என்பதை இது காட்டுகிறது.

கடைஇ (பதிற்றுப்பத்து 31-32)	கடவி (புறநானூறு 239-13), (கம்பராமாயணம் 6-2-116-3) கடாவி (நாலாயிரத்திவ்வியப்பிரபந்தம் 2404-3), (கம்பராமாயணம் 6-14-156-1)
கலைஇ (அகநானூறு 266-5)	கலவி (பரிபாடல் 8-119) கலாவி (புறநானூறு 105-3) (சீவகசிந்தாமணி 508-1)
கவைஇ (அகநானூறு 16-14)	கவவி (அகநானூறு 419-2) (கலித்தொகை 83-7)
தடைஇ (மணிமேகலை 5-9)	தடாவி (நாலாயிரத்திவ்வியப்பிரபந்தம் 3585-1)
பரைஇ (அகநானூறு 98-13)	பரவி (அகநானூறு 289-15), (சிலப்பதிகாரம் 24-23-2), (நாலாயிரத்திவ்வியப்பிரபந்தம் 964-3), (பெரியபுராணம் 1829-2) பராவி (கம்பராமயணம் 1-20-18-2)
விரைஇ (அகநானூறு94-5)	விரவி (புறநானூறு 398-27), (மணிமேகலை 16-67),

	(தேவாரம் 470-7-3), (பெரியபுராணம் 1829-2) விராவி (கம்பராமயணம் 1-21-47-2)
விரைஇ (அகநானூறு 300-11)	வினவி (அகநானூறு 388-22), (நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம் 2700-3), (பெரியபுராணம் 2385-1) வினாவி (கம்பராமயணம் 2-9-4-2)

பிறழ்ச்சி மாற்றம் மற்றும் துணைவினைகள்

பிறழ்ச்சி மாற்றம் துணைவினை சேர்க்கப்படும்போது முதன்மை வினையின் ஒலியனியல் வடிவத்தில் ஏற்படும் மாற்றத்தையும் உள்ளடக்கும். எடுத்துக்காட்டாக *ஒண்ணு* என்ற துணைவினை 'செய' வாய்பாட்டு வினையெச்சத்துடன் பெரும்பாலும் வருகிறது ஆனால் இடைத்தமிழில் முதன்மை வினை எச்சப் பின்னொட்டு -அ இல்லாது வரும் நேர்வுகள் உள்ளன. அதாவது அறியவொண்ணா (தேவாரம் 6-60-7-2) என்பது அறியொண்ணா (தேவாரம் 7-76-7-4), அறிவொண்ணா (தேவாரம் 7-86-1-2) மற்றும் அறிவொணா (தேவாரம்2-95-9-4) என வருகின்றது. பொறுக்கொண்ணா (நாலாயிரத் திவ்யபிரபந்தம் 1614-1), எடுக்கொண்ணா(துதே) (கம்பராமாயணம் 6-15-256-4) போன்ற கூடுதல் எடுத்துக்காட்டுகளும் உள்ளன. நாம் இதை வினையடி + துணைவினை என்று எடுப்பதற்குத் தூண்டப்படுவோம். இது உருபனியல் ஆய்வில் சிக்கலை உருவாக்கும். ஒரு புதிய உருபனியல் அமைப்பைக் கொள்வதற்குப் பதிலாக, அதாவது துணைவினையின் உருவாக்கத்திற்கு வினையடியை முதன்மை வினையாகக் கொள்வதற்குப் பதிலாக முதன்மை வினையெச்ச வடிவை அடியாக நிறுவலாம். மற்றும் *-அ* என்பதன் இழப்பை உருபொலியனியல் அடிப்படையில் விளக்க உயிர்$_1$ -> ∅ /- உயிர்$_2$ என்ற விதியை நிறுவி விளக்கலாம். இவ்விதியை உயிரின் இழப்பு விதி என்று அழைக்கலாம். உடன்படுத்தி விதியும் பயன்படுத்தப்படுவதால் இவ்விதி விருப்பாகச் சேர்க்கப்படுகிறது. நம்முடைய தரவில் உயிரின் இழப்பு விதி துணை வினை *ஒண்ணு* ஆக இருக்கும் பொழுது மட்டும் தான் பயன்படுத்தப்படும். *ஒட்டு* என்ற துணை வினை இருக்கும் போது பயன்படுத்தப்படமாட்டாது.

உடன்படுத்தி விதி	**உயிரின் இழப்பு விதி**	**உயிரின் இழப்பு விதி மற்றும் உடன்படுத்தி விதி**

அறியவொண்ணா (தேவராம் 6-60-7-2) முன்னிடைத்தமிழ்	சொல்லொணாது (நாலாயிரத்திவ்யபிரபந்தம் 3903-4) முன்னிடைத்தமிழ்	அறியொண்ணா (தேவராம் 7-76-74) முன்னிடைத்தமிழ்
எய்தவொண்ணா (தேவராம் 2-122-11-1) முன்னிடைத்தமிழ்	நீக்கொண்ணாது (நாலாயிரதிவ்வியப்பிரபந்தம் 3689-3) முன்னிடைத்தமிழ்	அறிவொண்ணா (தேவராம் 7-86-2) முன்னிடைத்தமிழ்
காணவொண்ணா (தேவராம் 6-42-8-3) முன்னிடைத்தமிழ்	பொறுக்கொண்ணா (நாலாயிரதிவ்வியப்பிரபந்தம்1614-3) முன்னிடைத்தமிழ்	அறிவொணா (தேவராம் 2-95-9-4) முன்னிடைத்தமிழ்
செல்லவொண்ணா (நாலாயிரத்திவ்யப்பிரபந்தம் 1014-4) முன்னிடைத்தமிழ்	அடர்க்கொணாது (வில்லிபாரதம் 2-2-49-3) பின்னிடைத்தமிழ்	மொழியொணா (வில்லியபாரதம் 2-2-12-3) பின்னிடைத்தமிழ்
தடுக்கவொண்ணாத (தேவராம் 7-17-10-3) முன்னிடைத்தமிழ்	எடுக்கொணா (ததே) கம்பராமாயணம் 6-15-256-4) பின்னிடைத்தமிழ்	-
அடைக்கவொண்ணுமோ கம்பராமாயணம் 3-10-26-4) பின்னிடைத்தமிழ்	எழுதொணா (வில்லிபாரதம் 2-1-108-1) பின்னிடைத்தமிழ்	-
எழுதவொண்ணா கம்பராமாயணம் 4-13-52-3) பின்னிடைத்தமிழ்		
துடைக்கவொண்ணுமோ கம்பராமாயணம் 3-10-26-4) பின்னிடைத்தமிழ்		
புகலவொண்ணா(ததே) கம்பராமாயணம் 6-14-77-4) பின்னிடைத்தமிழ்		
நினையவொட்டார் (தேவாராம் 4-52-3-2) முன்னிடைத்தமிழ்		
பேசவொட்டா (தேவாரம் 4-		

75-7-2) முன்னிடைத்தமிழ்		
விளையவொட்டார் (தேவாரம் 4-77-5-2) முன்னிடைத்தமிழ்		
வீழவொட்டார் (தேவாரம் 4-70-7-4) முன்னிடைத்தமிழ்		
முடக்கவொட்டா (வில்லிபாரதம் 4-4-92-1)	வரவில்லை	வரவில்லை

14 இலக்கணமாற்றம்

ஹாக்கெட் கூறியபடி (1958-414) இலக்கணமாற்றம் என்பது இலக்கண மையத்தில் ஏற்படும் மாற்றம் ஆகும். இவ்வாய்வு வினையடிகளுக்கு மட்டும் எல்லைப்படுத்தப்பட்டுள்ளதால் இங்கு விளக்கப்படும் இலக்கண மாற்றம் காலப் பின்னொட்டுகளுக்குள் அடக்கப்பட்டுள்ளது. இருப்பினும் இத்தலைப்பில் மற்றொரு வகை மாற்றத்தை உள்ளடக்கவியலும். இது வினையடியின் செயல்பாட்டில் ஏற்படும் மாற்றம் அதாவது சொல் நிலையிலிருந்து இலக்கண நிலைக்குச் செல்லும் மாற்றம் எடுத்துக் கொள்ளப்படுகிறது. இது இலக்கணவயமாக்கம் என்று அழைக்கப்படுகிறது. இது மூன்று முக்கிய வகைகளை உள்ளடக்கும். அவை கீழே தரப்பட்டுள்ளன.

(1) வினையாக்கிகளாக வினையடிகள்

எடுத்துக்காட்டாக *காதல் உறு, காதல் கொள், காதல் செய், காதல் புரி* என்பன காதல்+இ என்பதற்கு நிகராகும். இங்கு *உரு, கொள், செய், புரி* என்ற வினையடிகள் வினையாக்கிகளாகச் செயல்படுகின்றன. வினையடிகளை வினையாக்கிகளாக மாற்றும் இவ்வகையிலான மாற்றம் இங்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

(2) துணைவினைகளாக வினையடிகள்

மாட்டு (பதிற்றுப்பத்து 22-23) என்ற வினையடி தனிநிலை வினையாகப் பயன்படுத்தப்படுகிறது. ஆனால் இது பின்வரும் நேர்வுகளில் துணைவினையாகப் பயன்படுத்தப்படுகிறது.

அறிய மாட்டேன் (தேவாரம் 4-57-8-2)
கூற மாட்டேன் (தேவாரம் 4-57-7-2)
செய்ய மாட்டேன் (நாலாயிரத்திவ்யப்பிரபந்தம் 897-2)
சொல்ல மாட்டேன் (தேவாரம் 6-13-6-3)
தெரிய மாட்டேன் (தேவாரம் 6-35-5-2)
பாட மாட்டேன் (தேவாரம் 4-23-1-1)
பேச மாட்டேன் (தேவாரம் 4-57-4-1)
வாழ மாட்டேன் (தேவாரம் 4-52-1-4)

மேற்கூறப்பட்ட எல்லா நேர்வுகளிலும் *மாட்டு* என்பது எதிர்மறை வினை நோக்கை குறிக்கும் துணைவினையாகச் செயல்படுகிறது. இவ்வகையான முதன்மை வினை துணை வினையாகச் செயல்படுவது ஒரு மாற்றமாகக் கருதப்பட்டு இலக்கணவயமாக்கத்தின் மாற்றமாக உட்படுத்தப்பட்டுள்ளது.

(3) வினையடிகள் உவமை இடைச்சொல்லாக

கொள் என்ற வினையடி 'பொருந்து' என்ற அர்த்தம் பெறுகிறது (புறநானூறு 92-1) ஆனால் *துடிகொள் நுண்ணிடை* 'உடுக்கைபோல மெலிந்த இடை' (நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம் 960-1) என்ற சூழலில் *கொள்* என்ற வினையடி ஒரு உவமை இடைச்சொல்லாகச் செயல்படுகிறது. வினையடிகள் மட்டுமின்றி வினைகளின் வேறுபட்ட வடிவங்களான எச்சவடிவமும் பெயரெச்ச வடிவமும் உவமை இடைச்சொல்லாகச் செயற்படுகிறது.

விரி மணி வியப்ப மேனி	(சீவகசிந்தாமணி 625-4)
வேல் உள நோக்கினாள்	(கம்பராமயணம் 1-17-60-2)
கல்லொடும் தொடர்ந்த நெஞ்சம்	(கம்பராமயணம் 5-4-39-2)
துடி கொண்ட இடை	(தேவாரம் 6-75-6-3)
அயில் தரும் கண்	(கம்பராமயணம் 4-10-36-2)

மின் காட்டும் கொடி மருங்குல் (தேவாரம் 6-76-3-1)

வினையடிகளின் பொருண்மை மற்றும் செயல்பாடு இவற்றின் இழப்பு இங்கு முக்கியத்துவம் வாய்ந்ததாகும். வினையடி உவமை இடைச்சொல்லாக மாறும் இவ்வகையான மாற்றம் இவ்வகைப்பாட்டின் கீழ் விளக்கப்பட்டுள்ளது. இம்மூன்று நேர்வுகளிலும் வினையடிகள் பொருளிழந்து அவை கிட்டத்தட்ட ஒரு இலக்கணப் பின்னொட்டாக மாறியுள்ளதால் இதில் பொருண்மை மாற்றமும் உள்ளடங்கும்.

வினைத்திரிபாக்க வகுப்பின் மாற்றம்

தமிழ் ஒரு ஒட்டுநிலை மொழியாக இருப்பதன் காரணமாக இதன் சொற்கள் பல்வேறுபட்ட இலக்கண வகைபாட்டிற்குத் திரிபுரிகின்றன. வினைகள் காலம், எதிர்மறை போன்ற இலக்கண வகைபாடுகளுக்குத் திரிபுரிகின்றன. பழந்தமிழில் இரண்டு காலம் மட்டுமே உள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அவை இறந்தகாலமும் இறப்பில்லா காலமும் ஆகும். இவை மூன்று காலங்களாக அதாவது இறந்த காலம், எதிர்காலம், நிகழ்காலம் என்று பின்னர் வளர்ச்சியடைந்துள்ளது. இறப்பில்லா காலம்தான் எதிர்காலமாகவும் நிகழ்காலமாகவும் வளர்ந்துள்ளது. இருப்பினும் இவ்வாய்வு வினைத்திரிபாக்க வகுப்பின், குறிப்பாக இறந்தகால பின்னொட்டின் காரணமாக ஏற்படும் மாற்றத்திற்குள் எல்லைப்படுத்தப்பட்டுள்ளது.

இறந்தகாலத்தைப் பொறுத்தவரையில் இலக்கண மாற்றத்தை மூன்று முக்கிய பகுப்புகளாக மேலும் பகுக்கலாம். முன்னர் வர்ணையின்போது குறிபிட்டது போல மூன்று வினைத்திரிபாக்க வகுப்புகள் உள்ளன; இவை -த்-, -ந்த்-, -ன் என்ற இறந்தகால ஒட்டுக்களின் அடிப்படையில் முறையே வகுப்பு-1, வகுப்பு-2, வகுப்பு-3 என்று குறிப்பிடப்படுகிறது. இறந்தகால மாற்று மாற்றுருபுகளில் உள்ள மாற்றம் இங்கு மூன்று வகைகளாக விளக்கப்படுகிறது.

(1) திரிபு அடிப்படையில் சீரானது சீரற்ற வகுப்பாக மாறுதல்; அதாவது ஒரு வினைத்திரிபாக்க வகுப்பு ஒன்றிற்கு மேற்பட்ட வினைத்திரிபாக்க வகுப்புகளாக மாறுதல். அதாவது முதலாவது மற்றும் இரண்டாவது வினைத்திரிபாக்க வகுப்பில் வரும் வினைகள் கூடுதலாக மூன்றாவது வினைத்திரிபாக்கத்தை ஏற்கும். மூன்றாவது வினைத்திரிபாக்கத்தின்

சேர்ப்பு ஒரு வரலாற்று மொழியியல் மாற்றமாகும் இது பின்பழந்தமிழிலும் முன்னிடைத்தமிழிலும் பின்னிடைத்தமிழிலும் காணப்படுகிறது.

அழீ 'கூப்பிடு' 1 -> அழைத்த்(உ) மற்றும் அழைஇ 1, 3
அழைத்த்(உ) அழைத்த்(உ) மற்றும் அழைஇ
முன்பழந்தமிழ் பின்பழந்தமிழ்
முன்னிடைத்தமிழ்
பின்னிடைத்தமிழ்

பின்வரும் வினைக்கு இரண்டாவது திரிபாக்கத்தின் சேர்ப்பு பின்பழந்தமிழிலிருந்து ஏற்பட்ட மாற்றமாகும்.

மிகு 'அதிகரி' 1 -> மிக்கு மற்றும் மிகுந்து 1, 2
மிக்கு மிக்கு, மிகுந்து
முன்பழந்தமிழ் பின்பழந்தமிழ்
முன்னிடைத்தமிழ்
பின்னிடைத்தமிழ்

பின்வரும் மூன்று வினைகளில் மூன்றாவது திரிபாக்கத்தின் சேர்ப்பு *அகல்* என்பதைப் பொறுத்தவரையில் முன்னிடைத்தமிழிலும் *நட* மற்றும் *நீள்* என்ற வினைகளைப் பொறுத்தவரையில் பின்னிடைத்தமிழிலும் நிகழ்ந்துள்ள வரலாற்று மாற்றமாகும்.

அகல் 'விரி' 2 > அகன்ற்(உ) மற்றும் அகலிய 2, 3
அகன்று
முன்பழந்தமிழ் முன்னிடைத்தமிழ்
பின்பழந்தமிழ்

நடீ 'நட' 2 -> நடந்த்(உ) மற்றும் நடவி(னர்) 2, 3
நடந்த்(உ)
முன்பழந்தமிழ் பின்னிடைத்தமிழ்
பின்பழந்தமிழ்

முன்னிடைத்தமிழ்

நீள் 2 -> நீண்ட்(உ) மற்றும் நீளிய 2, 3
நீண்ட்(உ) நீண்ட்(உ) மற்றும் நீளிய
முன்பழந்தமிழ் பின்னிடைத்தமிழ்
பின்பழந்தமிழ்
முன்னிடைத்தமிழ்

உகள் என்ற வினையைப் பொறுத்தவரையில் அது முன்றாவது வினைத்திரிபாக்கத்தில் முன்பழந்தமிழிலும் பின்பழந்தமிழிலும் முன்னிடைத்தமிழிலும் வருகின்றது கூடுதலாக இரண்டாம் வினைத்திரிபாக்கத்தில் பின்னிடைத்தமிழில் வருகிறது. இவ்விரண்டாவது வினைத்திரிபாக்கத்தின் சேர்ப்பு பின்னிடைத்தமிழில் ஏற்பட்டுள்ள வரலாற்று மாற்றமாகும்.

உகள் 'குதி' 3 -> உகளி மற்றும் உகண்டு 3, 2
உகளி உகளி மற்றும் உகண்டு
முன்பழந்தமிழ் பின்னிடைத்தமிழ்
பின்பழந்தமிழ்
முன்னிடைத்தமிழ்

(2) திரிபு அடிப்படையில் சீரற்றதிலிருந்து சீரான வகுப்பு அதாவது ஒன்றுக்கு மேற்பட்ட வினைத்திரிபாக்க வகுப்புகளைச் சார்ந்த அடிகள் ஒரு வினைத்திரிபாக்க வகுப்பைச் சார்ந்த அடிகளாக மாறும். இந்நேர்வுகளில் எல்லாம் முன்றாவது வினைத்திரிபாக்க வகுப்பு இழப்புறும். முன்பழந்தமிழில் முதலாவது மற்றும் இரண்டாவது வினைத்திரிபாக்க வகுப்புகளைச் சார்ந்த பின்வரும் வினைகள் பின்பழந்தமிழில் முதலாவது வினைத்திரிபாக்க வகுப்பை மட்டும் சாரும். பின்பழந்தமிழிலிருந்து முன்றாவது வினைத்திரிபாக்கத்தின் இழப்பு ஒரு வரலாற்று மாற்றமாகும்.

கறீ "வைந" 1, 3 > கறீ "வைந" 1
கறித்த்(உ) மற்றும் கறீஇ கறித்த்(உ)
முன்பழந்தமிழ் பின்பழந்தமிழ்
முன்னிடைத்தமிழ்
பின்னிடைத்தமிழ்

குடீ (னசனைஇம) 1, 2 முன்று > குடீ 1

குடித்த்(அ) மற்றும் குடியினன் குடித்த்(உ)

முன்பழந்தமிழ் பின்பழந்தமிழ்

முன்னிடைத்தமிழ்

பின்னிடைத்தமிழ்

தெறீ 'ளியசம' 1, 3 > தெறி 'ளியசம' 1

தெறித்து மற்றும் தெறியி(னள்) தெறித்து

முன்பழந்தமிழ் பின்பழந்தமிழ்

முன்னிடைத்தமிழ்

பின்னிடைத்தமிழ்

பெறு 1, 3 > பெறு 1

பெற்று மற்றும் பெறீஇ பெற்று

முன்பழந்தமிழ் பின்பழந்தமிழ்

முன்னிடைத்தமிழ்

பின்னிடைத்தமிழ்

முடீ 'வனை' 1, 3 > முடீ 'வனை' ஒன்று

முடித்த்(உ) மற்றும் முடியி(னாள்) முடித்த்(உ)

முன்பழந்தமிழ் பின்பழந்தமிழ்

முன்னிடைத்தமிழ்

பின்னிடைத்தமிழ்

பொறு என்ற வினை பின்பழந்தமிழிலிருந்து இம்மாதிரி நடத்தை செய்கின்றது.

பொறு 1, 3 -> பொறீ 1

பொறுத்த்(உ) மற்றும் பொறீஇ பொறுத்த்(உ)

பின்பழந்தமிழ் முன்னிடைத்தமிழ்

பின்னிடைத்தமிழ்

முன்பழந்தமிழில் ஒன்றாவது மற்றும் இரண்டாவது வினைத்திரிபாக்கம் உள்ள பின்வரும் வினைகள் பின்பழந்தமிழிலிருந்து இரண்டாவது திரிபாக்கத்தை மட்டும் கொண்டிருக்கின்றன. முன்றாவது வினைதிரிபாக்கத்தின் இழப்பு பின்பழந்தமிழிலிருந்து ஏற்பட்ட வரலாற்று அடிப்படையிலான மாற்றம் ஆகும்.

புரீ 'பாதுகா' 2, 3 > புரீ 'பாதுகா' 2

புரந்து மற்றும் புரைஇ	புரந்து
முன்பழந்தமிழ்	முன்பழந்தமிழ்
	முன்னிடைத்தமிழ்
	பின்னிடைத்தமிழ்

புனை 'அணி' 1, 3 > புனை 'அணி' 2

புனைந்து மற்றும் புனைஇ	புனைந்து
முன்பழந்தமிழ்	பின்பழந்தமிழ்
	முன்னிடைத்தமிழ்
	பின்னிடைத்தமிழ்

பின்வரும் நேர்வுகளிலும் சீரற்ற வினைகள் சீருள்ளவினைகளாக மாறுகின்றன் ஆனால் உண்மையில் இவைகள் கருத்து அடிப்படையில் சீரற்ற அடிகளானவை கருத்து அடிப்படையில் சீருள்ள அடிகளாக மாறுவதாகும். அடிகளில் சீரின்மை இறந்தகால மாற்றுருபான -இன் என்பதன் வருகைமுறையைக் கூற நம்மால் உருவாக்கப்பட்டதாகும் என்று இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டும் அதாவது -இன் என்ற இறந்தகால ஒட்டை ஏற்கும் எல்லா வினைகளும் -உ என்பதை இறுதியாகக்கொண்டு வருவன ஆகும். அப்படி இல்லையென்றால் அவைகள் வினைத்திரிபாக்கத்தில் சீரான வகுப்பிற்கு வினைத்திரிபாக்கத்தில் சீரற்ற வகுப்பாகும்.

இயலு ⁻ᵘ இயல் 'போ' 3, 2 -> 2

இயலி மற்றும் இயன்ற்(உ) இயன்ற்(உ)

இருளு ⁻ᵘ இருள் 'இருட்டு' 3, 2 -> 2

இருளி மற்றும் இருண்ட்(உ) இருண்ட்(உ)

உடலு ⁻ᵒ உடல் 'கோபப்படு' 3,2 -> 2
உடலி மற்றும் இருண்ட்(உ) உடன்ற்(உ)

உளரு ⁻ᵒ உளர் 3, 2 -> 2
உளரி மற்றும் உளர்ந்து உளர்ந்து

எதிரு ⁻ᵒ எதிர் 'ஏற்றுக்கொள்' 3, 2 -> 2
எதிரி மற்றும் எதிர்ந்து எதிர்ந்து

எதிரு ⁻ᵒ எதிர் 'எதிர்' 3, 2 -> 2
எதிரி மற்றும் எதிர்ந்து எதிர்ந்து

கஞலு ⁻ᵒ கஞல் 'நெருங்கு' 3, 2 -> 2
கஞலி(ய்) மற்றும் கஞன்று கஞன்று

தொடரு ⁻ᵒ தொடர் 'தொடர்பு' 3, 2 -> 2
தொடரி மற்றும் தொடர்ந்து தொடர்ந்து

பயிரு ⁻ᵒ பயிர் 'அழை' 3, 2 -> 2
பயிரி மற்றும் பயிர்ந்து பயிர்ந்த்(உ)

பயிலு ⁻ᵒ பயில் 'அறிமுகப்படு' 3, 2 -> 2
பயிலியது மற்றும் பயின்(று) பயின்று

புணரு ⁻ᵒ புணர் 3, 2 -> 2
புணரி மற்றும் புணர்ந்து புணர்ந்து

முயலு ⁻ᵒ முயல் 3, 2 -> 2
முயலி மற்றும் முயன்று முயன்று

உணு ⁻ᵍ உண் 3, 2 -> 2

உணீஇ மற்றும் உண்டு உண்டு

முன்பழந்தமிழில் இரண்டாவது மற்றும் முன்றாவது திரிபாக்கமுள்ள பின்வரும் வினைகள் முன்றாவது திரிபாக்கம் மட்டும் உள்ள வினைகளாக வருகின்றன் இம்மாற்றம் பின்பழந்தமிழிலிருந்து காணப்படுகிறது.

நசை 'விரும்பு' 2, 3 -> நசை 'விரும்பு' 3

நசைந்து மற்றும் நசைஇ நசைஇ

முன்பழந்தமிழ் பின்பழந்தமிழ்

முன்னிடைத்தமிழ்

பின்னிடைத்தமிழ்

முன்பழந்தமிழில் இரண்டாவது மற்றும் முன்றாவது திரிபாக்கங்களில் வருகிற ஆறு வினைகள் பின்னர் இரண்டாவது திரிபாக்கத்தில் மட்டும் வருகின்றன. இம்மாற்றம் பின்பழந்தமிழிலிருந்து காணப்படுகிறது.

அரி 'நறுக்கு' 2, 3 -> அரி 'நறுக்கு' 2

அரிந்த்(உ),அரீஇ அரிந்த்(2)

முன்பழந்தமிழ் பின்பழந்தமிழ்

முன்னிடைத்தமிழ்

பின்னிடைத்தமிழ்

அறி 2, 3 -> அறி 2

அறிந்த்(உ), அறீஇ அறிந்து

முன்பழந்தமிழ் பின்பழந்தமிழ்

முன்னிடைத்தமிழ்

பின்னிடைத்தமிழ்

இனை 'வருந்து' 2, 3 -> இனை 'வருந்து' 2

இனைந்து, இனைஇ இனைந்து

முன்பழந்தமிழ் முன்பழந்தமிழ்

முன்னிடைத்தமிழ்

பின்னிடைத்தமிழ்

இரு 'உட்கார்' 2, 3 -> இரு 'உட்கார்' 2

இருந்து, இரீஇ இருந்து

முன்பழந்தமிழ் முன்பழந்தமிழ்

முன்னிடைத்தமிழ்

முன்னிடைத்தமிழ்

உடை 'தோல்வி' 2, 3 -> உடை தோல்வி நிறுத்தம் 2

உடைந்து, உடைஇ உடைந்து

முன்பழந்தமிழ் பின்பழந்தமிழ்

முன்னிடைத்தமிழ்

பின்னிடைத்தமிழ்

பரி 'நறுக்கு' 'ஓடு' 2, 3 -> பரி 'நறுக்கு' 'ஓடு' 2

பரிந்த்(உ), பரிஇ பரிந்த்(உ)

முன்பழந்தமிழ் பின்பழந்தமிழ்

முன்னிடைத்தமிழ்

பின்னிடைத்தமிழ்

புகு 'நுழை' என்ற வினை முன் பழந்தமிழில் மூன்று திரிபாக்கங்களைக் கொண்டிருந்தது பின்பழந்தமிழிலிருந்து இது மூன்றாவது திரிபாக்கத்தை இழந்து முதல் இரண்டு திரிபாக்கங்களைத் தக்கவைத்துள்ளது.

புகு 1, 2, 3 -> புகு 1, 2

புக்கு, புகுந்து, புகீஇ புக்கு, புகுந்து

முன்பழந்தமிழ் பின்பழந்தமிழ்

முன்னிடைத்தமிழ்

பின்னிடைத்தமிழ்

குறீ வெட்டு என்ற வினை முன்பழந்தமிழில் முன்று திரிபாக்கங்களைக் கொண்டிருந்து முன்றாவது திரிபாக்கத்தைப் பின்பழந்தமிழிலிருந்து இழந்துள்ளது முதல் இரண்டு திரிபாக்கங்களையும் தக்க வைத்துள்ளது.

குறை வெட்டு 1, 2, 3 -> குறை 'வெட்டு' 1, 2
குறைத்த்(உ), குறைந்த்(உ), குறை(ய) குறைத்த்(உ) மற்றும் குறைந்த்(உ)
முன்பழந்தமிழ் பின்பழந்தமிழ்
முன்னிடைத்தமிழ்
பின்னிடைத்தமிழ்

பின்வரும் வினைகள் முன்பழந்தமிழில் ஒழுங்கான வினைத் திரிபாக்கங்களைக் கொண்டிருந்தன் பின்பழந்தமிழில் இவை ஒழுங்கறவையாக மாறியுள்ளன் அவை மீண்டும் முன்னிடைத்தமிழிலும் பின்னிடைத்தமிழிலும் ஒழுங்கானவையாக மாறியுள்ளன் பின்பழந்தமிழில் ஒழுங்கான திரிபாக்கத்திலிருந்து ஒழுங்கற்ற திரிபாக்கமாக மாறியதை முன்பழந்தமிழில் ஏற்பட்ட தனிப்பட்ட பொதுமையாக்கமாக விளக்க இயலும். இது பிற்காலத்தில் நீடிக்கவில்லை.

இடு 'வை' 1 -> இடு 'வை' 1, 3
இட்டு இட்டு, இடீஇ
முன்பழந்தமிழ் பின்பழந்தமிழ்
முன்னிடைத்தமிழ்
பின்னிடைத்தமிழ்

செறீ ரவ டிஇ' 1 -> செறீ 1, 3
செறிந்து செறிந்து, செறிஇ
முன்பழந்தமிழ் பின்பழந்தமிழ்
முன்னிடைத்தமிழ்
பின்னிடைத்தமிழ்

திளீ 'இன்புறு' 1 -> திளை ் 'இன்புறு' 1, 2

திளைத்(2) திளைத்(2) மற்றும் திளைஇ
முன்பழந்தமிழ் பின்பழந்தமிழ்
முன்னிடைத்தமிழ்
பின்னிடைத்தமிழ்

அறை 'ஒலி' 2 -> அறை 'ஒலி 2, 3
அறைந்த்(உ) அறைந்த்(உ), அறைஇ
முன்பழந்தமிழ் பின்பழந்தமிழ்
முன்னிடைத்தமிழ்
பின்னிடைத்தமிழ்

திரி 2 -> திரி 2, 3
திரிந்த்(உ) திரிந்த்(உ), திரீஇ
முன்பழந்தமிழ் பின்பழந்தமிழ்
முன்னிடைத்தமிழ்
பின்னிடைத்தமிழ்

புரி 'விரும்பு' 2 -> புரி 'விரும்பு' 2, 3

புரிந்த்(2) புரிந்த்(2) மற்றும் புரீஇ
முன்பழந்தமிழ் பின்பழந்தமிழ்
முன்னிடைத்தமிழ்
பின்னிடைத்தமிழ்

ஒழுங்கானவை பின்பழந்தமிழில் ஒழுங்கற்றவையாகவும் ஒழுங்கற்றவை முன்னிடைத்தமிழில் ஒழுங்கானவையாகவும் மாறியுள்தாக ஒருவர் இதற்கு விளக்கம் தரத் தூண்டப்படலாம். உண்மையில் இது சரியான வரலாற்றுச் செயற்பாங்கை விளக்காது. எனவே மேலே கூறிய விளக்கம் சரியானதாகக் கருதப்படலாகாது. மாற்றம் சில கிளைமொழிகளுக்குள் எல்லைப்படுத்தப்பட்டுள்ளது எனவே பிற்காலத்தில் நிலைநிற்கவில்லை என இது பொருள்படும். பொதுவாகப் புதிய கண்டுபிடிப்புகள் நிலைநிற்காது.

சுடர் 'பிரகாசி' என்ற வினை பின்பழந்தமிழில் மட்டும் மையக்கருத்து அடிப்படையிலும் திரிபு அடிப்படையிலும் ஒழுங்கற்றதாக மாறியுள்ளது. முன்பழந்தமிழிலும் முன்னிடைத்தமிழிலும் பின்னிடைத்தமிழிலும் இது மையக்கருத்து அடிப்படையிலும் திரிபு அடிப்படையிலும் ஒழுங்கானதாகும் எனப் பொருள்படும்.

சுடரு ◌ு சுடர் 'பிரகாசி' 3, 2 -> சுடர் 2
சுடரிய, சுடர்ந்து சுடர்
பின்பழந்தமிழ் முன்பழந்தமிழ்
முன்னிடைத்தமிழ்
பின்னிடைத்தமிழ்

இங்கு மையக்கருத்து அடிப்படையில் ஒழுங்கானவை என்று கருதப்படுவது இவ்வாய்வேட்டில் பின்பற்றப்படும் வர்ணனைக் கொள்கை அடிப்படையிலாகும். எப்படியென்றாலும் திரிபுசார் ஒழுங்கின்மை பின்பழந்தமிழுக்கு எல்லைப்படுத்தப்பட்டுள்ளது; பிறகாலங்களுக்கு அல்ல.

வினைத்திரிபாக்கப் இடப்பெயர்ச்சி

வினைவகுப்பில் மாற்றத்திற்குள்ளாகும் சில வினைகள் உள்ளன. நமது தரவில் உள்ள எல்லா நேர்வுகளிலும் மூன்றாவது வினைத்திரிபாக்கம் முதலாவது அல்லது இரண்டாவது வினைத் திரிபாக்கத்தால் இடம்பெயர்க்கப்பட்டுள்ளது; இதைத் தமிழ்மொழியின் முக்கியமாக மாற்றங்களில் ஒன்றாகக் கருதலாம். மூன்றாவது வினைத் திரிபாக்கம் இரண்டாவது திரிபாக்கமாக மாறும் சில நேர்வுகளும் உள்ளன.

வினைகளின் சில இறந்தகால வடிவங்கள் பின்பழந்தமிழில் மெய்ப்படுத்தம் பெறாதிருக்கும்; ஆனால் வரலாற்று அடிப்படையில் மாற்றமுற்ற வடிவங்கள் முன்னிடைத்தமிழிலும் பின்னிடைத்தமிழிலும் மட்டும் காணப்படும். எனவே பிந்தைய குறிப்புரை முதல் மெய்ப்படுத்தம் அடிப்படையில் தரப்பட்டுள்ளது; அதாவது முன்னிடைத்தமிழிலோ பின்னிடைத்தமிழிலோ தரப்பட்டுள்ளது. மெய்ப்படுத்தம் பெறாமை உரைகளில் உள்ள எதேட்சையான இடைவெளியாகக் கொள்ளப்பட்டுள்ளது. மூன்றாவது வினைத்திரிபாக்கத்திலிருந்து இரண்டாவது திரிபாக்கத்திற்கு உள்ள மாற்றம் பின்வரும் நான்கு வினைகளில் காணப்படுகின்றது.

1) அசை 'சோர்வடை' 3 (முன்பழந்தமிழ்) -> அசை 'சோர்வடை' 2 (முன்னிடைத்தமிழ், பின்னிடைத்தமிழ்)
2) அளை 'கல' 3 (முன்பழந்தமிழ், பின்பழந்தமிழ், முன்னிடைத்தமிழ்) -> அளை 'கல' 2 (பின்னிடைத்தமிழ்)
3) கலை 3 (முன்பழந்தமிழ்) -> கலை 2 (முன்னிடைத்தமிழ், பின்னிடைத்தமிழ்)
4) கனலு 'கோபம்கொள்' (முன்பழந்தமிழ்) 3 -> (பின்பழந்தமிழ், முன்னிடைத்தமிழ், பின்னிடைத்தமிழ்)

முன்றாவது வினைத்திரிபாக்கத்திலிருந்து ஒன்றாவது வினைத்திரிபாக்கத்திற்கான மாற்றம் *உவகு* 'வெறு' என்ற வினையில் மட்டும் பின்னிடைத்தமிழிலிருந்து காணப்படுகின்றது.

உவரு 'வெறு' 3 (முன்பழந்தமிழ்) -> உவரீ 'வெறு' 1 (பின்னிடைத்தமிழ்)

போலி மாற்றம்

என்ற வினை இரண்டாவது மற்றும் முன்றாவது வினைத்திரிபாக்கமாக முன்பழந்தமிழில் மெய்பபடுத்தம் பெற்றுள்ளது; பின்பழந்தமிழிலும் முன்இடைத்தமிழிலும் இரண்டாவது வினைத்திரிபாக்கமாக மட்டும் மெய்ப்படுத்தம் பெற்றுள்ளது; மீண்டும் பின்னிடைத்தமிழில் இரண்டாவது மற்றும் முன்றாவது வினைத்திரிபாக்கமாக வடிவங்களாக வருகின்றது. எனவே மோரீ என்பதன் இண்டாவது திரிபாக்கத்தின் இழப்பை போலி மாற்றம் எனலாம்.

மோரீ 'மணம்வீசு' 2, 3 -> மோரீ 2 'மணம் வீசு' -> மோரீ 2, 3
(முன்பழந்தமிழ்) பின்பழந்தமிழ், முன்னிடைத்தமிழ் (பின்னிடைத்தமிழ்)

முன்றாம் வினைத்திரிபாக்கத்தின் நேர்வு பின்பழந்தமிழிலும் முன்னிடைத்தமிழிலும் கிளைமொழி நிலையில் இருந்ததென்றும் இது பின்னிடைத்தமிழில் தான் பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றும் நாம் கருதவேண்டும்.

வினையடி -> வனையாக்கி

குமாரசாமி ராஜா (முரஅயசயளயறயஅை சுயதய 1977), கோதண்டராமன் (முடிவாயஇனயசயஅயஇ, 1977), அகஸ்கியலிங்கம் (ஙபநளவாயைடஇைபடிஅ, 1982) மற்றும் கார்த்திகேயன் (முயசவாமைநலயஇ, 1983) என்போர் தமிழிலும் வினைகள் பெயர்களிலிருந்து ஆக்கப்படும் நேர்வுகள் உள்ளன என்பதைக் கண்டுள்ளனர். பொதுவாகப் பெயர்களிலிருந்து வினைகளைப் பெறும் செயல்பாடு *காதலீ, பொருது* 'போரிடு' என்ற வினைகளைப் போன்று முறையே –இ, –உ போன்ற சில ஒட்டுக்களால் நிறைவேற்றப்படுகின்றது. இது *செய், கொள், உறு, புரி, உண், படு, ஆடு, ஆட்டு, ஆற்று* போன்ற வினையயடிகளைப் பெயருடன் சேர்த்து வினைகளை ஆக்கும் வழியுடன் ஒப்பிடுகையில் குறைந்த விளைவாக்கமுள்ளதாகும். இவ்வினைகள் அவற்றின் அடிகளிலிருந்தும் குறைந்த பொருண்மையுடன் வினையாக்கிகளாகச் செயல்படுகின்றன.

இது சில ஒட்டுக்களும் சில வினையடிகளும் வினையாக்கி என்ற ஒரே செயற்பாட்டைச் செய்கின்றன என்ற பொதுவான போக்கைக் காட்டுகின்றது. சில நேர்வுகளில் *உறு, செய், புரி* போன்ற வினையாக்கிகள் வினைப்பெயர்களுக்குப் பின்னரும் காணப்படுகின்றன.

எ.கா.

போகல் உறு (அகநானூறு 388-13)

போதல் செய் (மணிமேகலை 2-39)

ஆடல் (பரிபாடல் 10-9)

வினையாக்கிகளாகப் பயன்படுத்தப்படும் வினைகளில் இரண்டு வகைகளை அடையாளம் காணலாம். ஒரு வகை வினையாக்கிகள் வினையடிகள் தமது மூலப் பொருண்மையை இழப்பதால் அவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன. மற்றொருவகை வினையாக்கிகளாகப் பயன்படுத்தப்படுவதுடன் சொல் நிலையில் சிறிது பொருண்மை வேற்றுமையையும் காட்டுகின்றன. எடுத்துக்காட்டாக செய், உண் என்பன சொல் என்ற பெயருடன் இணைந்து முறையே சொல்செய் 'கூறு' (நாலாயிரத்திவ்வியப்பிரபந்தம் 751-3), சொல்லுண் (நாலாயிரத்திவ்வியப்பிரபந்தம் 751-3) என்ற கூட்டுகளை உருபாக்கும். சொற்செய் என்ற கூட்டுவினையின் இரண்டாவது உறுப்பு முதல வகையையும் சொல்லுண் என்பதன் இரண்டாவது உறுப்பு இரண்டாவது வகையையும் சாரும். இங்கு முதல் வகை தூய வினையாக்கி என்றும் இரண்டாவது வகை அதன் பொருண்மை குறைவால் தூய்மையற்ற வினையாக்கி என்றும் அழைக்கப்படும். (தூய, தூயமையற்ற என்ற கலைச் சொற்கள் ஹாக்கெட்டின் (1958:214) தூய மற்றும் தூய்மையற்ற குறிகள் மாதிரியின்

அடிப்படையில் அமையும்.) தூய்மையற்ற வினையாக்கிகள் செயப்பாட்டுவினையாக்கம், செயப்படுபொருள்குன்றா வினையாக்கம், செயப்படுபொருள்குன்றிய வினையாக்கம் போன்ற இலக்கணப் பொருண்மைகளைக் காட்டும். எடுத்துக்காட்டாக *செய்யுறு* (புறநானூறு 243-2), *பிடியுண்* (கம்பராமாயணம் 6-9-46-1) என்பனவற்றிலுள்ள *உறு, உண்* என்பன வினையாக்கிகளாகவும் செயப்பாட்டுவினையாக்கிகளாகவும் இருக்கும்.

இந்த ஆய்வு விரிவானதல்ல. வினையாக்கிகளாகப் பயன்படுத்தப்படும் வினைகள் இங்கு முன்பழந்தமிழிலும் பின்பழந்தமிழிலும் முன்னிடைத்தமிழிலும் பின்னிடைத்தமிழிலும் கண்டுபிடிக்கப்பட்டு தரப்பட்டுள்ளன.

14.2.1. தூய வினையாக்கிகள்

14.2.1.1 செய்

வ. எண்	**கூட்டுவினை**	**வரும் நூல்**	**காலம்**
1	காதல்செய்	நற்றிணை 268-6	முன்பழந்தமிழ்
2	தண்மைசெய்	ஐங்குறுநூறு 327-5	முன்பழந்தமிழ்
3	காதல்செய்	கலித்தொகை 129-11	முன்பழந்தமிழ்
4	அணிசெய்	சீவகசிந்தாமணி 1128-3	முன்னிடைத்தமிழ்
5	அஞ்சலிசெய்	சீவகசிந்தாமணி 2479-4	முன்னிடைத்தமிழ்
6	இசைசெய்	தேவாரம் 3-75-6-3	முன்னிடைத்தமிழ்
7	உதைசெய்	தேவாரம் 3-75-6-1	முன்னிடைத்தமிழ்
8	உரிசெய்	தேவாரம் 6-53-10-1	முன்னிடைத்தமிழ்
9	உரைசெய்	தேவாரம் 3-115-9-3	முன்னிடைத்தமிழ்
10	காதல்செய்	தேவாரம் 6-83-9-3	முன்னிடைத்தமிழ்
11	கொலைசெய்	தேவாரம் 3-69-5-2	முன்னிடைத்தமிழ்
12	சொற்செய்	நாலாயிரத்திவ்வியப்பரபந்தம் 751-3	முன்னிடைத்தமிழ்
13	துதி செய்	தேவாரம் 3-75-1-2	முன்னிடைத்தமிழ்
14	நிந்தனைசெய்	தேவாரம் 3-108-1-1	முன்னிடைத்தமிழ்

15	பிளவுசெய்	தேவாரம் 5-95-9-2	முன்னிடைத்தமிழ்
16	புகைசெய்	சீவகசிந்தாமணி 1816-4	முன்னிடைத்தமிழ்
17	பூசனைசெய்	நாலாயிரத்திவ்வியப்பரபந்தம் 3088-4	முன்னிடைத்தமிழ்
18	பூசைசெய்	தேவாரம் 7-30-6-1	முன்னிடைத்தமிழ்
19	மின்செய்	நாலாயிரத்திவ்வியப்பரபந்தம் 1576-3	முன்னிடைத்தமிழ்
20	முறுவல்செய்	தேவாரம் 4-4-4-1	முன்னிடைத்தமிழ்
21	வழிபாடுசெய்	தேவாரம் 3-72-3-2	முன்னிடைத்தமிழ்
22	அருச்சனைசெய்	கம்பராமாயணம் 1-6-5-3	பின்னிடைத்தமிழ்
23	உரைசெய்	கம்பராமாயணம் 4-13-68-4	பின்னிடைத்தமிழ்
24	தோற்றம்செய்	கம்பராமாயணம் 6-9-24-4	பின்னிடைத்தமிழ்
25	முறுவல்செய்	கம்பராமாயணம் 5-7-58-4	பின்னிடைத்தமிழ்
26	வணக்கம்செய்	கம்பராமாயணம் 1-10-124-1	பின்னிடைத்தமிழ்
27	விளக்கம்செய்	வில்லிபாரதம் 5-5-11-1	பின்னிடைத்தமிழ்

14.2.1.2 கொள்

வ. எண்	**கூட்டுவினை**	**வரும் நூல்**	**காலம்**
1	ஆடுகொள்	நற்றிணை 329-7	முன்பழந்தமிழ்
2	இறைகொள்	புறநானூறு 17-35	முன்பழந்தமிழ்
3	கவலைகொள்	கலித்தொகை 134-13	பின்பழந்தமிழ்
4	காதல்கொள்	கலித்தொகை 69-3	பின்பழந்தமிழ்
5	துயில்கொள்	மணிமேகலை 7-15	பின்பழந்தமிழ்

14.2.1.3 உறு

வ. எண்	**கூட்டுவினை**	**வரும் நூல்**	**காலம்**
1	இன்புறு	குறுந்தொகை 61-3	முன்பழந்தமிழ்

2	எள்ளுறு	புறநானூறு 160-16	முன்பழந்தமிழ்
3	கல்லுறு	அகநானூறு 79-3	முன்பழந்தமிழ்
4	துன்புறு	குறுந்தொகை 316-6	முன்பழந்தமிழ்
5	புலம்புறு	குறுந்தொகை 394-15	முன்பழந்தமிழ்

14.2.1.4 புரி

வ. எண்	**கூட்டுவினை**	**வரும் நூல்**	**காலம்**
1	அருள்புரி	ஐங்குறுநூறு 362-4	முன்பழந்தமிழ்
2	கொலைபுரி	குறுந்தொகை 292-5	முன்பழந்தமிழ்
3	போர்புரி	அகநானூறு 277-16	முன்பழந்தமிழ்
4	ஆடல்புரி	பரிபாடல் 10-9	பின்பழந்தமிழ்
5	கொலைபுரி	மணிமேகலை 26-28	பின்பழந்தமிழ்

14.2.1.5 படு

வ. எண்	**கூட்டுவினை**	**வரும் நூல்**	**காலம்**
	நிறைபடு	நற்றிணை 172-10	முன்பழந்தமிழ்
	பயில்படு	நற்றிணை 132-6	முன்பழந்தமிழ்

14.2.1.6 ஆடு

வ. எண்	**கூட்டுவினை**	**வரும் நூல்**	**காலம்**
	உரையாடு	நற்றிணை 134-10	முன்பழந்தமிழ்
	புனலாடு	ஐங்குறநூறு 76-2	முன்பழந்தமிழ்

14.2.1.7 ஆறு

வ. எண்	கூட்டுவினை	வரும் நூல்	காலம்
	காப்பாற்று	திருக்குறள் 388-1	பின்பழந்தமிழ்

14.2.2 தூய்மையற்ற வினையாக்கிகள்

14.2.2.1 உண்

வ. எண்	கூட்டுவினை	வரும் நூல்	காலம்
	புரியுண்	அகநானூறு 361-9	முன்பழந்தமிழ்
	இடியுண்	சிலப்பதிகாரம் 9-22	பின்பழந்தமிழ்

14.2.2.2 உறு

வ. எண்	கூட்டுவினை	வரும் நூல்	காலம்
	அறிவுறு	குறுந்தொகை 350-5	முன்பழந்தமிழ்
	செய்யுறு	புறநானூறு 243-2	முன்பழந்தமிழ்

14.2.2.3 செய்

வ. எண்	கூட்டுவினை	வரும் நூல்	காலம்
	நடுக்கம் செய்	நற்றிணை 318-4	முன்பழந்தமிழ்
	நகைசெய்	கலித்தொகை 98-18	பின்பழந்தமிழ்

14.2.2.4 படுத்து

வ. எண்	கூட்டுவினை	வரும் நூல்	காலம்
	கொலைப்படு(த்து)	அகநானூறு 292-4	முன்பழந்தமிழ்
	கொலைப்படு	சிலப்பதிகாரம் 16-163	பின்பழந்தமிழ்

14.2.2.5 ஆட்டு

வ. எண்	கூட்டுவினை	வரும் நூல்	காலம்
	குளிப்பாட்டு	வில்லிபாரதம் 1-5-88-3	பின்னிடைத்தமிழ்

14.2.3 சில உற்றுநோக்கல்கள்

வர்ணனையாகப் பின்வரும் உற்றுநோக்கல்கள் செய்யப்படுகின்றன.

(1) ஒரு பெயர் ஒன்றுக்கும் மேற்பட்ட வினையாக்கிகளை ஏற்கும்.

(2) வேறுபட்ட வினையாக்கிகளுக்கிடையில் ஒருபொருள்பன்மொழிகள் உள்ளன. எடுத்துக்காட்டாக ஆறு, உறு, செய், புரி என்பன ஒருபொருள்பன்மொழிகளாகும்.

(3) ஒரே வினையாக்கி வேறுபட்ட பெயர்களுடனும் வினைப்பெயர்களுடனும் தூய்மையான மற்றும் தூய்மையற்ற வினையாக்கிகளாகச் செயல்படுகின்றன.

14.2.4 வரலாற்று முன்னேற்றம்

ஆற்று, ஆட்டு என்ற இரண்டு வினையாக்கிகள் மட்டும் உள்ளன. இருப்பினும் அவை ஒரே வடிவமாகத்தான் வருகின்றன. எதுக்காட்டாகக் *காப்பாற்று* (திருக்குறள் 388-1),

குளிப்பாட்டு (வில்லிபாரதம் 1-5-88-3) என்பன முறையே பின்பழந்தமிழிலும் பின்பழந்தமிழிலும் வருகின்றன.

வினையாக்கிகளின் பட்டியலிலிருந்து அவற்றின் நிகழ்வெண் பின்பழந்தமிழிலிருந்து பின்னிடைத்தமிழ் வரைப் படிப்படடியாகக் கூடுகின்றன என்பது தெளிவாகின்றது. தனி வினைகளூடன் வினையாக்கிகளையும் கொண்ட வினைகளும் இருப்பது பகுநிலைப் போக்கின் பகுதி எனலாம்.

எ.கா. சிந்தி (பரிபாடல் 20-68) – சிந்தனை செய் (தேவாரம் 5-88-9-4)

அள்ளல், இணைத்தல், தீர்த்தல், நடமாடுதல், நுழைதல், பேசுதல், வருந்துதல், வாடுதல், நினைத்தல் என்ற வினைப்பெயர்களூடன் செய் வருவது இடைக்காலத் தமிழில் இப்பகுநிலைப் போக்கைக் காட்டுகின்றது. தற்காலத்தமிழில் இப்பகுநிலைப் போக்கு அசஸ்தியலிங்கத்தாலும் (ஙபநளவாயடஇபடிஅ, 1982), கார்த்திகேயனாலும் (முயசவாமைநலயஇ, 1983) சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வினையடிகள் -> துணைவினைகள்

துணைவினைகள் முதன்மை வினையின் வினையாற்றுவகையையோ வினைநோக்கையோ காட்டும். அவை தமது சொல்சார் சிறப்பை இழந்து காலம், வினைநோக்கு, வினையாற்றுவகை என்பனவற்றை வெளிப்படுத்தும் துணைவினைகளாக மாறும். துணைவினைகளூக்கிடையில் எதையும் இடைச்சொருக இயலாத காரணத்தால் அவைத் தொடரியல் அடிப்படையில் கண்டுண்டவையாகும். துணைவினைகள் ஆழ்மட்டத்தில் முதன்மை வினைகளாக இருப்பதன் காரணமாகவும் ஆனால் அவை சில இலக்கண பொருண்மையைக் காட்டப் பயன்படுத்தப்படுவதன் காரணமாகவும் அவற்றைப் பகுதி இலக்கணவாக்கமுற்றவைகளாகக் கருதவியலும்.

துணைவினைகள் தமிழில் வினையாற்றுவகை, வினைநோக்கு, வினைப்பாடு என்பனவற்றைக் காட்டுவதற்குப் பயன்படுத்தப்படுகின்றன.

சுருக்கவுரை

தமிழ் வினையடிகள் பற்றிய முந்தைய ஆய்வுகள் விரிவாகத் திரட்டப்பட்டு அப்படியே, தேவையென்றால் மொழிபெயர்ப்பு செய்து, இங்கு தரப்பட்டுள்ளது. எல்.வி. இராமசாமி, வ.சுப. மாணிக்கம், மு.வரதராசன், சி. சிவதாணு ஆகியோர் வினையடிகளைப் பற்றிக் கூறிய செய்திகள் திரட்டப்பட்டு, பெரும்பான்மையும் அவர்கள் கருத்தை அவர்கள் வாய்வழியாகவே (எந்த வித மாற்றமுமின்றி) தர முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

இயல் 5

5. தமிழ் வினையடிகளில் பாகுபாடு

தமிழறிஞர்கள் மொழியியல் கோட்பாடு அடிப்படையில் தமிழ் வினையடிகளைப் பாகுபாடு செய்துள்ளனர். இது வினைகளின் திரிபுகளை எளிதில் புரிந்து கொள்வதற்கும் கற்பதற்கும் வேண்டி செய்யப்பட்டுள்ளது. வினைப் பாகுபாடு குறித்து அகஸ்தியலிங்கம் தமது 'மொழியியல் :சொல்லியல்: வினையியல் விரிவாகப் பேசுகின்றார் (அகத்தியலிங்கம், 1982:64-105). இவர் தெரிநிலை-குறிப்புவினை, தன்வினை-பிறவினை, செயப்படுபொருள் குன்றியவினை-குன்றாவினை, செய்வினை-செயப்பாட்டுவினை. குறைவினை, துணைவினை மற்றும் ஒட்டுவினை என்ற பாகுபாடுகளைச் செய்து அவற்றை விளக்குகின்றார். இது தவிர வினைப்பாகுபாடு என்ற பகுதியில் மெல்வினை-வல்வினை-இடையினை என்ற துணைத் தலைப்பின் கீழ் பெஸ்கி, கிரால், போப், ஆர்டன், தமிழ்பேரகராதி, லிஸ்கர், குமாரசாமி ராஜா, கோதண்டராமன், அகத்தியலிங்கம், பாலசுப்பிரமணியம் ஆகியோரின் வினைப்பாகுபாடுகள் குறித்து விரிவாக விளக்கி அவற்றின் நிறைகுறைகளைப் பற்றி பேசுகின்றார் (அகத்தியலிங்கம், 1982:78-105). இப்பாகுபாடுகள் தமிழ்வினையடிகள் குறித்த வரலாற்று மொழியியல் ஆய்வுக்கு இன்றியமையாதது என்பது மட்டுமன்றி இவ்வேறுபட்ட பாகுபாடுகள் வினையடிகள் குறித்த நமது சிந்தனையை வரலாற்றுமொழியியல் அடிப்படையில பல பரிமாணத்தில் சிந்தித்து ஆயத் துணைபுரியும். எனவே இப்பாகுபாடுகள் குறித்து இங்கு சுருக்கமாகத் தரப்பட்டள்ளது.

5.1 பெஸ்கியின் பாகுபாடு

பொஸ்கி தமது A Grammar of the Common Dialect of the Tamil Language என்ற நூலில் (Bechi, Repr.1971:70) இறந்தகாலம் பற்றி கூறுகையில் இது மிகக்கடினமான இலக்கணக்கூறு என்றும் எனவே விதிகள் அதிகமாகக் கூறப்படவேண்டியதாய் உள்ளது என்றும் குறிப்பிடுவார். இதன் காரணமாய் இவர் வினைகளை அவை ஏற்கும் இறந்தகால இடைநிலைகளின் அடிப்படையில் பகுத்துள்ளார். இவர் நிகழ்கால இடைநிலையை அடிப்படையாகக் கொண்டு அவற்றிலிருந்து இறந்தகால இடைநிலைகளளோடு கூடிய பால் காட்டும் விகுதிகளை உருவாக்குகின்றார். கிறு, கின்று, -த்த்- எனக்கூறாது காலம் காட்டும் இடைநிலைகளோடு விகுதிகளையும் இணைத்து –க்கிறேன், -கின்றேன், -த்தேன் எனக் குறிப்பிடுகிறார்.

இவர் நிகழ்கால இடைநிலைகளைப் பற்றி குறிப்பிடுகையில் மெல்வினை, வல்வினை என்பனவற்றுடன் தொடர்புபடுத்தாது இவை உருவாக்குவதற்கு எளிமையானவை எனக் கூறிச்செல்கின்றார். இறந்தகாலம் பற்றி குறிப்படுகையில் இவர் வினைச்சொற்களை அவற்றின் ஈறுகள் அடிப்படையில் வேறுபடுத்தி அவற்றின் வருகையை நிகழ்கால வினைமுற்றுகளின் (கிறேன், க்கிறேன்) அடிப்படையில் விளக்குகிறார். பின்வரும் பட்டியல் இதை இவர் சிந்தனையை வெளிப்படுத்தும்:

1. ய், ர், இ, உ, ஐ ஆகிய எழுத்துகளில் முடிந்து –க்கிறது எடுக்கும் வினைகள் -த்தேன் ஏற்றுவரும்.

எ.கா.	
மேய்கிறது	மேய்த்தேன்
வளர்கிறது	வளர்த்தேன்
விரிகிறது	விரித்தேன்
படைக்கிறது	படைத்தேன்
உடுக்கிறது	உடுத்தேன்

2. அகரத்தில் முடியும் சில வினைகள் -ந்தேன் ஏற்றுவரும்.

எ.கா.	
மறக்கிறது	மறந்தேன்
பிறக்கிறது	பிறந்தேன்

நக்கு, கக்கு போன்ற வினைகள் (இவை ந, க போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டது எனத் தவறாகக் கருதி) இந்த விதிக்கு விலக்கானது அவை –க்கிறேன் ஏற்றுவரும்.

3. -க்கிறது எடுக்கும் ஆ, நீ, தூ என்பன க்கினேன் ஏற்கும்.

எ.கா.	
-க்கிறது	க்கினேன்

ஆக்கிறது	ஆக்கினேன்
நீக்கிறது	நீக்கினேன்
தூக்கிறது	தூக்கினேன்

(ஆ, நீ, தூ என்பனவற்றை வினைச்சொல்லின் பகுதியாகக் கருதுவதும் அவை –க்கிறது ஏற்றுவருவதும் பொருத்தமாக இல்லை.)

4. –கிறது என முடியும் விகைகள் பின்வருமாறு பல்பேறு பகுப்புகளாக வரும்.

ங்கு என்பதில் முடிவன இன் எடுக்கும்
ண் என்பதில் முடிவன டேன் எடுக்கும்
ன் கொண்டு முடிவன றேன் எடுக்கும்
உ கொண்டு முடிவன இனேன் எடுக்கும்

எ.கா. வணங்கினேன், உண்டேன், தின்றேன், பேசினேன், நச்சினேன், எழுதினேன், திருத்தினேன், நம்பினேன், பண்ணினேன், உலாவினேன், தும்மினேன், பின்னினேன். ஈனு இதற்கு விதிவிலக்காகும்.

இவ்வாறு இவர் பலவித பகுப்புகளைத் தந்து ஆங்காங்கே பல்வேறு விதிவிலக்குகளையும் தருவார். –ந்தேன் எடுக்கும் வினைகள் பலவற்றையும் இவ்வாறு விளக்கிச்செல்வார். எனினும் இவர் எல்லாவற்றையும் ஒரு சேர வைத்து அவற்றிடையே காணப்படும் பொதுத்தன்மையை விளக்கவில்லை (அகத்தியலிங்கம், 1982: 81).

இவர் வினைப் பகுப்பு ஒரு பகுப்பாக அமையாமல் ஒரு தொகுப்பாக உள்ளது. எனினும் முதன் முதல் இத்தகைய ஒரு பாகுபாட்டைப் பற்றி சிந்தித்தவர் இவர்தான் எனக்கூறவேண்டும். இவர் பகுப்புதான் பின்னர் வந்த இலக்கண அறிஞர்களை வினைகள் கால இடைநிலைகளின் அடிப்படையில் பாகுபடுத்தவேண்டும் என்றும் அவ்வாறு பாகுபடுத்தப்படுகையில் அவற்றின் ஈறுகள் கருத்தில் கொள்ளப்படவேண்டும் என்றும் சிந்திக்க உதவியது என்று கூறலாம். மெல்லிவினை வல்வினை பாகுபாட்டிற்கு வழிவகுத்தவர் இவர்தான் என்று கூறவியலும் (அகத்தியலிங்கம், 1982:81).

5.2 கிராலின் பாகுபாடு

கிரால் தம்முடைய நூலில் (1855) வினைகளை அவை ஏற்கும் கால இடைநிலைகள் அடிப்படையில் மூன்று வகைகளாகப் பிரித்தார். பெஸ்கியின் பகுப்பு –கிறு, –க்கிறு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது. நிகழ்காலத்தைப் பொறுத்தமட்டில் இவை இரண்டும் காணப்பட்டாலும் எதிர் காலத்தில் -ப்ப்-, -ப்-, -வ்- மூன்று இடைநிலைகள் வருவது உணரத்தக்கது. இந்நிலையில்தான் கிரால் இவற்றை அடிப்படையாக வைத்து மூன்றாகப் பிரித்தார்.

வினை வகுப்பு	**இறந்தகாலம்**	**நிகழ்காலம்**	**எதிர்காலம்**
I	செய்தான் விழுந்தான்	செய்கிறான் விழுகிறான்	செய்வான் விழுவான்
II	கண்டான் என்றான்	காண்கிறான் என்கிறான்	காண்பான் என்பான்
III	கொடுத்தான் நடந்தான்	கொடுக்கிறான் நடக்கிறான்	கொடுப்பான் நடப்பான்

மேலே காட்டப்பட்ட வினைகள் எதிர்காலத்தில் வரும்போது முறையே –வ்-, -ப்-, -ப்ப்- என்ற ஒட்டுக்களை எடுத்து வரும். முதல் பிரிவு மெல்வினைகள் (weak verbs) என்றும், இரண்டாவது பிரிவு இடைவினைகள் (middle verbs) என்றும், மூன்றாவது பிரிவு மெல்வினை (weak verbs) அழைக்கப்படும். வல்வினைவிகள் -க்கிற்- என்பதை நிகழ்கால ஒட்டாகவும் பிறவினைகள் -கிற்- என்பதை நிகழ்கால ஒட்டாகவும் ஏற்பது இங்கு நினைவு கூறத்தக்கது. இதுபோன்று வல்வினை செயவென் எச்சத்தில் -க்க்- பெற்று நிற்றலும் கவனிக்கத்தக்கது. செயவென் எச்சத்தை அடிப்படையாகக் கொண்டு வரும் இலக்கணக் கூறுகள் அனைத்தும் இந்நிலையிலேயே உள்ளன. எ.கா. கொடுக்கலாம், கொடுக்கப்படலாம், கொடுக்க வேண்டும், கொடுக்க முடியும். வல்வினைகளில் உயிர் கொண்டு வரும் இலக்கணக் கூறுகளும் (ஏவல் வினைகள் தவிர) –க்க்- பெற்று வருகின்றன. எ.கா.கொடுக்காது, கொடுக்கும், கொடுக்கின், கொடுக்காமல்.

இந்நிலையில் தான் கிரால் இத்தகைய வகைப் பாட்டினைச் செய்தார். மேனாட்டு மொழிகள் பலவற்றில் வல்வினை, மெல்வினை பாகுபாட்டைக் காணலாம். ஜெர்மன் போன்ற மொழிகளில் இப்பகுப்பு உள்ளது. இவற்றை அறிந்திருந்த காரணத்தால்தான் கிரால் தமிழ் மொழியிலும் இத்தகைய ஒரு பகுப்பைக் கண்டதோடு அவற்றிற்கு வல்வினை, மெல்வினை, இடைவினை என்று பெயரிட்டார் என எண்ணலாம். இம்மூன்று வகை வினைகளையும் அவை எடுக்கும் இறந்த கால மாற்றுபுகளை அடிப்படையாகக் கொண்டு மீண்டும் ஏழு வகைகளாகப் அவர் பிரித்தார்.

வினைப் பகுப்பு			**இறந்தகாலவடிவம்**	**நிகழ்கால வடிவம்**	**எதிர்கால வடிவம்**	**இறந்தகால ஒட்டுகள்**
I மெல்வினை	I	a	செய்வேன்	செய்கிறேன்	செய்தேன்	-த்-
		b	ஆளுவேன்	ஆளுகிறேன்	ஆண்டேன்	-ன்ட்-
		c	கொல்லுவேன்	கொல்லுகிறேன்	கொன்றேன்	-ன்ற்-
	II		அறிவேன்	அறிகிறேன்	அறிந்தேன்	-ந்த்-
	III		வாங்குவேன்	வாங்குகிறேன்	வாங்கினேன்	-இன்-
	IV		விடுவேன்	விடுகிறேன்	விட்டேன்	-ட்-
II இடைவினை	V	a	உண்பேன்	உண்கிறேன்	உண்டேன்	-ட்-
		b	என்பேன்	என்கிறேன்	என்றேன்	-ற்-
		c	கேட்பேன்	கேட்கிறேன்	கேட்டேன்	-ட்-
		d	கற்பேன்	கற்கிறேன்	கற்றேன்	-ற்-
III வல்வினை	VI		படிப்பேன்	படிக்கிறேன்	படித்தேன்	-த்த்-
	VII		நடப்பேன்	நடக்கிறேன்	நடந்தேன்	-ந்த்-

5.3 போப்பின் பாகுபாடு

போப் தன்னுடைய நூலில் (Pope (1904) Reprinted. in 1979:46) வினைபற்றிக் கூறும்போது அவற்றை மூன்று பிரிவுகளாகப் பிரித்துள்ளார். கிரால் கொண்ட வல்வினை, மெல்வினை, இடைவினை என்ற பெயர்களையே இவரும் பயன்படுத்தினாலும் கிரால் செய்த பிரிவுகளுக்கும் இவற்றிற்கும் வேறுபாடுகள் பல உண்டு. வினைகள் வல்வினை, அல்லது இடைவினை, அல்லது மெல்வினை என்றும் அவை எந்த உயிரெழுத்தைக் கொண்டு முடிகின்றன

என்றும் அவை செயப்படுபொருள் குன்றிய வினையா அல்லது குன்றா வினையா என்றும் கூறி அவற்றின் அடிப்படையில் அவற்றின் கால இடைநிலைகளை வகுப்பார் இவர். இந்நிலையில் இது சிக்கல்கள் பல நிறைந்துள்ளது. மேலும் இவர் செயவென் எச்சத்தையும் தந்து அதில் காணப்படும் இணைப்புருபையும் (க்க்) தருவார்.

மெல்வினை

-கிறு- எடுப்பவை இறந்த காலத்தில் -ந்த்- எடுப்பதுடன் எதிர்காலத்தில் -வ்- எடுக்கும். இவை பெரும்பாலும் செயப்படுபொருள் குன்றிய வினைகள்.

அடை	அடைகிறேன்	அடைந்தேன்	அடைவேன்	அடைய

இதில் அறி, ஈ, அடை, அறை, விழு, கழி, போன்ற பல வினைகள் அடங்கும்.

இடைவினை

-கிறு- எடுப்பவை இறந்தகாலத்தில் -இன்- எடுப்பதுடன் எதிர்காலத்தில் -வ்- எடுக்கும். இதன் செயப்படுபொருள் குன்றிய வினைகளும் குன்றா வினைகளும் உள்ளன. இவை பொதுவாக உ கொண்டு முடியும்.

அடங்கு	அடங்குகிறேன்	அடங்கினேன்	அடங்குவேன்	அடங்க

வல்வினை

-க்கிறு- எடுப்பவை இறந்தகாலத்தில் -த்த- எடுப்பதுடன் எதிர்காலத்தில் -ப்ப்- எடுக்கும். இவை பெரும்பாலும் செயப்படுபொருள் குன்றா வினைகள்.

கடி	கடிக்கிறேன்	கடிப்தேன்	கடிப்பேன்	கடிக்க

மேலே காட்டிய மூன்று வகைகளைக் கொடுத்துப் பின்னர்ப் பல வேறு சிறப்பு விதிகளையும் விதிவிலக்குகளையும்தருவார் (அகஸ்தியலிங்கம், பக். 87-88)- வினையியல்-

5.4 ஆர்டனின் பாகுபாடு

ஆர்டன் என்பவரும் தன்னுடைய A progres give Grammar of Tamil என்ற நூலில் (1891, as quoted in the fith Edn. 1969: 144) வினைகளைப் பகுத்துள்ளார். வினைச் சொற்கள் கொண்டு முடியும் எழுத்துக்களை அடிப்படையாக வைத்து அவற்றை ஏழு வகைகளாகப் பிரித்துள்ளார்.

1. அ எழுத்தில் முடிவன
2. இ, ஐ, ய் எழுத்தில் முடிவன
3. உ எழுத்தில் முடிவன
4. ண், ன் எழுத்தில் முடிவன
5. ர், ழ் எழுத்தில் முடிவன
6. ல், ள் எழுத்தில் முடிவன
7. நெட்டெழுத்தில் முடிவன

5.5 தமிழ்ப் பேரகராதியின் பாகுபாடு

சென்னைப் பல்கலைக்கழகத்தினரால் வெளியிடப்பட்ட தமிழ்ப் பேரகராதியும் (Tamil Lexicon, 1924-36) கிராலின் பகுப்பையே கையாண்டுள்ளது. கிராலின் பகுப்பு பன்னிரு பகுதிகளைக் (உட்பிரிவுகள் உட்பட) கொண்டது. ஆனால் பேரகராதி தா, சா, காண் முதலிய முதனிலை திரிந்து வரும் வினைகளை எல்லாம் தனியாகக் கொண்டு பதிமூன்று பிரிவுகளைக் கொண்டுள்ளது. இப்பகுப்பினைக் கீழே காணலாம்.

	வினைப்பகுதி (Root)	**நிகழ்கால முற்று (present tense)**	**இறந்தகால முற்று (past tense)**	**எதிர்கால முற்று (future tense)**	**நிகழ்கால வினையெச்சம் (Infinitive)**
1	செய்	செய்கிறேன்	செய்தேன்	செய்வேன்	செய்ய

2	ஆள் ஆளு	ஆள்கிறேன் ஆளுகிறேன்	ஆண்டேன்	ஆள்வேன் ஆளுவேன்	ஆள
3	கொல் கொல்லு	கொல்கிறேன் கொல்லுகிறேன்	கொன்றேன்	கொள்வேன்	கொல்ல
4	அறி	அறிகிறேன்	அறிந்தேன்	அறிவேன்	அறிய
5	ஆக்கு	ஆக்குகிறேன்	ஆக்கினேன்	ஆக்குவேன்	ஆக்க
6	நடு	நடகிறேன்	நட்டேன்	நடுவேன்	நட
7	உண் உண்ணு	உண்கிறேன் உண்ணுகிறேன்	உண்டேன்	உண்பேன் உண்ணுவேன்	உண்ண
8	தின் தின்னு	தின்கிறேன் தின்னுகிறேன்	தின்றேன்	தின்பேன் தின்னுவேன்	தின்ன
9	கேள்	கேட்கிறேன்	கேட்டேன்	கேட்பேன்	கேட்க
10	கல்	கற்கிறேன்	கற்றேன்	கற்பேன்	கற்க
11	தீர்	தீர்க்கறேன்	தீர்த்தேன்	தீர்ப்பேன்	தீர்க்க
12	நட	நடக்கிறேன்	நடந்தேன்	நடப்பேன்	நடக்க
13	தா, சா, காண் முதலியன முதனிலை திரிந்தும் பிறவாறும் வேறுபடும் வினைகள் ஆகும்.				

5.7 லிஸ்கரின் பாகுபாடு

1951-இல் லிஸ்கர் (Lisker, 1951) தமிழ் வினைகளை மூன்று பிரிவுகளாகப் பிரித்தார்: த்- எடுப்பன ஒரு பிரிவாகவும், -ன்- எடுப்பன மற்றொரு பிரிவாகவும், -ந்த்- எடுப்பன இன்னொரு பிரிவாகவும் பிரிக்கப்பட்டன. -த்த்- எடுப்பவனவற்றை (வல்வினையை) இவர் தகரப் பிரிவுடன் இணைத்தார். இது வரையிலும் -த்த்- எடுக்கும் வினைச் சொற்களை வல்வினை எனப்பிரித்துத் தனியொரு பிரிவாகக் கண்டதை இவர் தகர ஒற்றையெடுக்கும் வினைகளுடன் இணைந்தது இங்குக் குறிப்பிடத் தக்கதாகும். இதற்காக இவர் கையாண்ட முறையும் புதியதொரு முறையாகும். வல்வினைகள் அனைத்தும் ஏதோ ஒரு உருபொலியனைக் (morphophoneme) கொண்டு முடிகின்றன என்றும் அதன் காரணமாகத்தான் அவை –ப்ப்-, -த்த்-, -க்க்- ஆகியவற்றை எடுத்து வருகின்றன என்றும் கூறினார். எனவே இவ்வினைகளும் பிற வினைகளைப் போலவே –த்-, -ந்த்- ஆகியவற்றை இறந்த காலத்திலும் பகர ஒற்றை எதிர் காலத்திலும்

கொண்டுள்ளன என்றும் வினையில் உள்ள உருபொலியனின் தாக்கத்தினால் தான் இவை இரட்டிக்கின்றன என்றும் இவ்வொலியனை "x" ஆகக் கொள்ளலாம் என்றும் கூறினார்.

× + த் > த்த்

× + ப் > ப்ப்

என வரும் விதியால் இதனை விளக்கலாம் என்று விவரித்தார். இவர் கருத்துப்படி படி, கொடு, நட போன்ற வினைகள் படி×, நட×, கொடு×, கிட× என × ஒலியனில் முடிபவை என்றும் இவற்றுடன் -த்- போன்ற இடைநிலைகள் இணையும் போது –த்த்- ஆகின்றன எனவும் விளக்கலாம். இந்நிலையில் வல்வினை, மெல்வினை, பகுப்பும் தேவையற்றதாக உள்ளது.

பாகுபாடு			**கால ஒட்டுகள்**	**இ றந்தகாலத் தரிபுற்ற வடிவங்கள்**
பிரிவு I	I	a	த் வ் கிறு	செய்தேன்
		b	த் வ் கிறு	மாண்டேன்
		c	த் வ் கிறு	சென்றேன்
	II		த்(>ட்) வ் கிறு	விட்டேன்
	III		த்(>ட்) ப் கிறு	உண்டேன்
	IV		த்(>ற்) ப் கிறு	தின்றேன்
	V		த்(>ட்) ப் கிறு	கேட்டேன்
	VI		த் (>ற்) ப் கிறு	தோற்பேன்
	VII		த் (>த்த்) ப்ப் க்கிறு	பார்த்தேன்
பிரிவு II	VIII		ந்த் வ் கிறு	விழுந்தேன்
	IX		ந்த் ப்ப் க்கிறு	நடக்கிறேன்
பிரிவு III	X		இன் வ் கிறு	ஓடினேன்

இவர் இவற்றைப் பின்வருமாறு காட்டுகிறார்:

I கிற் த் வ்

II கிற் ந்த் வ்

III கிற் இன் வ்

முதல் பிரிவும் இரண்டாவது பிரிவும் வல்வினைகள் அடங்கியனவாகும்

5.8 குமாரசாமிராஜாவின் பாகுபாடு

குமாரசாமிராஜா "தமிழ் தெரியாதவர்களுக்கு" (1960) என்ற கட்டுரையில் தமிழ்வினைகளை ஆறு பிரிவாகப் பிரித்துள்ளார். இவற்றை அவை ஏற்று வரும் கால இடைநிலைகளை அடிப்படையாக வைத்தே பிரித்துள்ளார்.

ப.எண்	திரிபு	உதாரணம்	ஈறெழுத்து
1.	த்-கிற்-வ்	உழு, வை, கொய், உண், தின்	உ, ஐ, ய், ண், ன்
2.	ந்த்-கிற்-வ்	அறி, ஈ, விழு, அறை, பாய், படர், பிறழ், ஆள், கொல்	இ, ஈ, உ, ஐ, ய், ர், ழ், ள், ல்
3.	இன்-கிற்-வ்	அஞ்சு	உ
4.	-கிற்-வ்	நகு	உ
5.	த்த்-க்கிற்-ப்ப்	தளதள, கா, அடி, நீ, உடு, பூ, அமை, கோ, எய், வேர், சிமிழ், கேள், கல்	அ, ஆ, இ, ஈ, உ, ஐ, ஒ, ய், ர், ழ், ள், ல்
6.	ந்த்-க்கிற்-ப்ப்	அள, அண்ணா, இரு, மோ	அ, ஆ, உ, ஒ

5.9 கோதண்டராமனின் பாகுபாடு

கோதண்டராமனும் (1972: 45-55) தமிழ் வினைகளை அவை கொண்டு முடியும் ஈறுகளை அடிப்படையாக வைத்துப் பிரித்துள்ளார். இந்நிலையில் ஒரு சில வினைகள் விதிவிலக்காக உள்ளன. பல்வேறு வினைப்பாகுப்பாடுகளை வரிசையாக தந்து இறுதியில் வினைகள் அனைத்தையும் அவற்றின் ஈறுகளை அடிப்படையாக வைத்துப் பிரித்துள்ளார்.

வினை	ஈறு	காலத்திரிபுகள்
செய்	-ய்	த் கிற் வ்
வை	-ய்	
ஆள்	-ள்	ந்த் கிற் வ்
கொல்	-ல்	
அறி	-இ	

ஈ	-ஈ	
எழு	-உ	
அளை	-ய்	
தேய்	-ய்	
சேர்	-ர்	
வாழ்	-ழ்	
அஞ்சு	-உ	இன் கிற் வ்
நகு	-க்	த் உகிற் வ்
நடு	-ட்	
பெறு	-ற்	
உண்	-ண்	த் கிற் ப்
தின்	-ன்	
கேள்	-ள்	+-Kத் கிற் ப்
கல்	-ல்	
கன	-அ	
கா	-ஆ	
குறி	-இ	
சீ	-ஈ	
கொடு	-உ	
பூ	-ஊ	
அழை		
சோ	-ஓ	
மொய்	-ய்	
பார்	-ர்	
அவிழ்	-ழ்	
நட	-அ	ந்த் க்கிற் ப்

இவர் கருத்துப்படி வினைகளின் இறுதி எழுத்துகளுக்கேற்ப அவை பல இடைநிலைகளை ஏற்கின்றன. க், ட், ற், ண், ன் ஆகியவற்றில் இறுதியுறும் வினைகளும் -மு உருபொலியெலின் இறுதியும் வினைகளும் ஊ)ஏய் என்ற அமைப்பைக் கொண்டு யகரத்தில் இறுதியுறுவனவும் -த்- என்பதை இறந்தகால இடைநிலையாக ஏற்கும். உகரத்தில் முடிபவை ((C)VCஉ (எழு) ஒழிந்தவை) -இன்- எடுக்கும்; உகரத்தில் முடிகின்ற அழு, உழு, இரு, தொழு ஆகிய வினைகள் இவற்றில் அடங்கா. இவற்றை விதிவிலக்காகக் கொள்ளவேண்டும். இவை அழுதான், உழுதான், பொருதான், இருந்தான் என இவை வரும். இவை தவிர பிற வினைகள் அனைத்தும் -ந்த்- ஏற்று வரும். நிகழ்காலம் –உகிற்-, -கிற்- என்ற மாற்றுருபுகளைக் கொண்டவை. -க், -ட், -ற், ஆகியவற்றை ஈறாகக் கொண்டவை (புகுகிறான், நடுகிறான், பெறுகிறான்) –உகிற்- ஏற்கும். புகு, நடு, பெறு போன்றவற்றை இவர் முறையே க், ட், ற் ஈறாகக் கொண்டனவாக எடுத்துக்கொள்கிறார். பிற வினைகள் அனைத்தும் -கிற்- ஏற்கும். எதிர்காலம் -உவ்-, -வ்-, -ப்-

என்ற மூன்று மாற்றுருபுகளைக் கொண்டது. க், ட், ற் (புக், நட், பெற்) ஈற்று வினைகள் -உவ்- எடுத்தும், -மு, ண், ன், அ (நட) ஆகிவற்றை ஈறாகக் கொண்ட வினைகள் –ப்- ஏற்றும் பிற வினைகள் –வ்- ஏற்றும் வரும். எனவே ஒரு சில விதிவிலக்குகளைத் தவிர (ஆகு, சா, தா, வா, அழு, இரு, உழு, தொழு, வோ, நை, நோ, போ, சொல், நில்) மீதி வினைகள் அனைத்தும் இவர் பகுப்பில் ஒரே பிரிவில் அடங்கி நிற்கின்றன. இந்நிலையில் இவர் பகுப்பு சிறந்திருக்கின்து.

ஆள், கொல் போன்ற வினைகள் -ந்த்- எடுத்து வரும் எனக் கூறுவதும் உகர இறுதி வினைகள் -இன்- எடுத்து வரும் என்பதும் கேள், கல் போன்றவற்றை -மு இறுதியாகக் கொள்ளுவதும் கவனத்திற்கொள்ளவேண்டியன. நட போன்றவற்றை –மு என்பதை இறுதியில் ஏற்று வரவில்லை. இதனால் இவ்வினைகளில் வரும் -க்க்-, -ப்ப்- ஒற்றுக்களுக்கெனத் தனி விதிகள் வேண்டியிருக்கும். பல பகுப்புகளில் இப்பகுப்பே இறுதி எழுத்துக்களை அடிப்படையாகக் கொண்ட பகுப்பு (phonologically conditioned) எனக் கருதலாம் (அகத்தியலிங்கம், 1982:98).

5.10 அகத்தியலிங்கத்தின் பாகுபாடு

பொதுவாக காலம் காட்டும் இடைநிலைகள் வினைச்சொற்களுடன் வருவதோடு செயப்படுப்பொருள் காட்டும் ஒட்டுகளுடனும் வருகின்றன.

நட+ந்த்+ஆன் > நடந்தான்
நட+த்த்+இன்+ஆன் > நடத்தினான்

இந்நிலையில் கால இடைநிலைகள் செயப்படுப்பொருள் குன்றியவினை, குன்றாவினை என்ற பகுப்பையும் பொருத்துள்ள நிலைமையில் அப்பகுப்பை உள்ளடக்கவேண்டும் என்ற நிலையில் அகத்தியலிங்கம் (1971) வினைகள் அனைத்தையும் அவை ஏற்கும் கடந்த கால ஒட்டுக்களை அடிப்படையாக வைத்து முதலில் மூன்று பிரிவுகளாகப் பிரித்துப் பின்னர் எவை எவை இயற்கைச் செயப்படுபொருள் குன்றாவினை என்றெல்லாம் பகுத்துள்ளார். இப்பகுப்புப்படி செயப்படுபொருள் குன்றா-குன்றிய வினைகள் பற்றிய நல்லதொரு தெளிவான எண்ணமும் ஏற்படும். வினைகள் அனைத்தும் -த்- (இவற்றுள்×யை இறுதியாகக் கொண்டவையும் அடங்கும்) எடுப்பவை, -இன்- எடுப்பவை, -ந்த்- எடுப்பவை என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்படும். மீண்டும் இப்பிரிவுகள்

இயற்கைச் செயப்படுபொருள் வினைகள் என்றும் செயப்படுபொருள் குன்றிய வினைகள் என்றும் இரண்டும் பிரிவுகளாகப் பிரிக்கப்படும்.





செயப்படுபொருள் குன்றிய வினைகளில் சில ஒட்டுகளால் செயப்படுப்பொருள் குன்றாவினைகளாக மாறுவன: சில மாறாதவை. இந்நிலையில் இவற்றை மீண்டும் இரண்டிரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

முதற் பிரிவில் (-த்-) பெய்,அழ போன்ற வினைகள் செயப்படுபொருள் குன்றாவினைகளாக மாறாதவை. ஆனால் கெடு, படு ஆகியவை

கெடு+×+த்+ஆன் > கெடுத்தான்

படு+த்த்+இன்+ஆன் > படுத்தினான்

எனக் குன்றா வினைகளாக மாறும். ×-த்த- ஆகியவைச் செயப்படுப்பொருள் காட்டும் ஒட்டுகள். இரண்டாவது பிரிவில் இறங்கு, முழ்கு செயப்படுப்பொருள் குன்றா வினைகளாக மாறா. ஆனால் கலங்கு போன்றவை மாறுவன (>கலக்க). முன்றாவது பிரிவில் கீழ்ப்படி, இற போன்றவை செயப்படுப்பொருள் குன்றா வினைகளாக மாறா. ஆனால் அழி, நட போன்றவை,

அழி+×+த்+ஆன்>அழித்தான்

நட+×+த்+இன்+ஆன்>நடத்தினான்

என மாறும் தன்மையன. ஆக்கச் செயப்படுப்பொருளில் வரும் வினைகள் கீழே உள்ள நிலையைக் காட்டும்.

பிரிவு		**செயப்படுபொருள் ஒட்டு**	**அதன் பின்னர் வரும் இறந்தகால இடைநிலை ஒட்டு**
I	-த்-	-×- -த்த்-	-த்- -இன்-
II	-இன்-	-த்-	-இன்-
III	-ந்த்-	-×- -த்த்-	-த்- -இன்-

எனவே ஆக்கச் செயப்படுபொருள் வினைகள் -த்-, -இன்- ஆகிய இரண்டு ஒட்டுக்களையே எடுத்து வருகின்றதைக் காண்கிறோம். இவ்வினைகள் -ந்த்- எடுப்பதில்லை. மேலும் இவை பிரிவு மாறுவதையும் காணலாம். முதல் பிரிவில் உள்ள கெடு என்ற வினை செயப்படுபொருள் வினையாக மாறின விடத்தும் -த்- ஒட்டையே எடுக்க படு என்ற வினை படுத்து என மாறும் போது –இன்- பிரிவுக்கு மாறிவிடுவதை உணரலாம்.

இரண்டாவது பிரிவில் கலங்கு போன்றவை கலக்கு என மாறின போதிலும் அவை பிரிவு மாறாது –இன்- ஒட்டையே எடுத்து நிற்கக் காண்கிறோம்.

ஆனால் முன்றாவது பிரிவில் காணப்படும் அழிந்தது போன்ற வினைகள் அழித்தது என்று மாறும் போது முதல் பிரிவுக்கு மாறிவிடுகின்றன. அதைப் போன்றே நடந்தான்

போன்றவை நடத்தினான் என மாறும் போது இரண்டாவது பிரிவுக்கு (இன் எடுக்கும் வினைப் பிரிவு) மாறிவிடுகின்றன.

வினைகளைச் செயப்படுபொருள் குன்றிய வினை, குன்றா வினை எனப் பிரிப்பது தொடரியல் அடிப்படையிலாகும். இவற்றைத் தன்வினை, பிறவினை எனப் பிரிப்பதே பொருத்தம் எனத் தோன்றுகிறது. செயப்படுபொருள் காட்டும் எனக் கூறுவதும் தவறே பிறவினை காட்டுகின்ற அனைத்தும் செயப்படுபொருளாக வரும் நிலையில் அவற்றைத் தன்வினை, பிறவினை எனக் கூறுவதே பொருத்தம்.

5.11 பாலசுப்பிரமணியம் பாகுபாடு

பாலசுப்பிரமணியம் (1981) செய்த வகைப்பாடு குறிப்பிடத் தக்கதாகும். இவர் வினைகளை நான்கு பிரிவுகளாகப் புரிப்பார்:

1. வினைப்பகுதியில் காணப்படும் வல்லொலி இரட்டிப்பதால் இறந்தகாலம் காட்டும் வினைகள்.
2. தகர ஒற்றை எடுத்து இறந்த காலம் காட்டுவன.
3. -ந்த்- எடுத்து இறந்த காலம் காட்டுவன.
4. -இன்- எடுத்து இறந்த காலம் காட்டுவன.

தகர ஒற்றை எடுத்து வரும் வினைகள் மீண்டும் P என்ற உருபொலியனைக் கொண்டு முடியும் வினைகள் (வல்வினைகள்) என்றும் அல்லாத வினைகள் என்றும் பிரிக்கப்படுகின்றன. இது போன்றே -ந்த்- எடுத்து வரும் வினைகளும் P ஒலியனைக் கொண்டவை என்றும் (வல்வினைகள்) அல்லாத வினைகள் என்று பிரிக்கப்படும்.

இந்நிலையில் வல்வினைகள் அனைத்தும் P ஒலியனைக் கொண்டு முடிவனவாகக் கருதப்படுகின்றன. இடைவினைகளிலும் கேள், கல் போன்ற வினைகளும் வல்வினைகளாகவே கருதப்படுகின்றன. *வல்வினைகளை லிஸ்கர் × என்ற உருபொலியனை வைத்து விளக்குவது பொருந்தாது என்பது இவர் வாதம்.

× வரும் எல்லாவிடத்தும் வல்லொலியன் வரும் நிலையில் ஒரு வல்லொலியனை (plosive) வைத்து விளக்குவதே பொருத்தம் என்பது இவர் எண்ணம். இது கருதியே கோதண்டராமனும் 'K' உருபொலியனை வைத்து விளக்கி இருப்பது இங்குக் கருதத்தக்கது.

முதல் பிரிவில் அடு, விடு, தொடு, அறு, உறு, பெறு, நகு, தொகு போன்ற வினைகள் அடங்கும். இவற்றில் வரும் வல்லின மெய்கள் இரட்டிப்பதால் இறந்த காலத்தைக் காட்டும் எனக் கூறுவது மரபிலக்கணத்தை ஒட்டியதாகும்.

அடு>அட்டு
அறு>அற்று
தொகு>தொக்கு

என வரும் நிலையில் இறந்த காலம் காட்டும். நிகழ்காலத்தையும், எதிர்காலத்தையும் காட்டுவனவாக முறையே கிற், வ் என்பவை உள்ளன.

இரண்டாவது பிரிவில் P கொண்டு முடிகின்ற வினைகள் வருகின்ற ஒலியன்களுக்கேற்ப பல மாறுதல்களை அடையும். எடுத்துக்காட்டாக அடிP போன்றவை இறந்தகாலத்தில் அடிP +த் > அடித்+த் எனவும், நிகழ்காலத்தில் அடிP +கிற்>அடிக்+கிற் எனவும், செயவென் எச்சத்தில், அடிP+க+அ>அடிக்க என வருதல் காணலாம். மேலும் இப்பிரிவின் கண் கேள் P, கல் P போன்ற வினைகளும் அடங்கும். இவையும் வரும் வல்லின மெய்களுக்கேற்பப் பல மாற்றங்களைக் கண்டு இறுதியாக கேட்ட (கேட்டான்), கேட்ப் (கேட்பான்), கேட்க் (கேட்க), கற்ற (கற்றான்), கற்ப் (கற்பான்), கற்க் (கற்கிறான்) போன்றவற்றை உருவாக்கி நிற்கும். இரண்டாவது பிரிவில் காணப்படும் வல்வினை அல்லாத வினைகளும் தகர ஒற்றையே இநற்தகால உருபாகக் கொண்டும் வரும். அழ, உண், தின், செய் போன்றவை இப்பிரிவில் அடங்கும். இவற்றுள் ண், ன் கொண்டு முடிபவை பகர ஒற்றை எடுத்து எதிர்காலம் காட்டும் என்பார்.

முன்றாவது பிரிவு வினைகள் -ந்த்- எடுத்து இறந்த காலம் காட்டும். இதன்கண் -P கொண்டு முடியும் வினைகளும் கொல்,ஆள் போன்ற வினைகளும் பிற வினைகளும் அடங்கும்.

P- கொண்டு முடிபவை வல்வினைகளாகும். இவை எதிர்காலத்தில் பகர ஒற்றை எடுத்து வரும். P +ப்>ப்+ப் போன்ற விதிகளைப் பயன்படுத்தி விளக்க முடியும்.

நான்காவது பிரிவு வினைகள் அனைத்தும் உகரத்தில் முடிவன. இவை –இன்- எடுத்து இறந்தகாலத்தையும், -கிற், -வ் ஆகியவற்றை எடுத்து முறையே நிகழ், எதிர்காலங்களையும் காட்டும். கோதண்டராமனும் இவற்றை உகர ஈறாகவே கொண்டுள்ளார்.

I	விடுவேன்	விடுகிறேன்	விட்டேன்	P>PP
	அறுவேன்	அறுகிறேன்	அற்றேன்	
	புகுவேன்	புகுகிறேன்	புக்கேன்	
II	அடிப்பேன்	அடிக்கிறேன்	அடித்தேன்	-த்-
	கேட்பேன்	கேட்கிறேன்	கேட்டேன்	
	கற்பேன்	கற்கிறேன்	கற்றேன்	
	அழுவேன்	அழுகிறேன்	அழுதேன்	
	செய்வேன்	செய்கிறேன்	செய்தேன்	
	உண்பேன்	உண்கிறேன்	உண்டேன்	
	தின்பேன்	தின்கிறேன்	தின்றேன்	
III	நடப்பேன்		நடந்தேன்	-ந்த்-
	கொள்வேன்	கொள்கிறேன்	கொன்றேன்	
	ஆள்வேன்	ஆள்கிறேன்	ஆண்டேன்	
	அறிவேன்	அறிகிறேன்	அறிந்தேன்	
	தருவேன்	தருகிறேன்	தந்தேன்	
IV	வாங்குவேன்	வாங்குகிறேன்	வாங்கினேன்	-இன்-

இப்பகுப்பில் பல வேறு சிக்கல்கள் விளக்கப்படுகின்றன. இதற்கு முன்னரே பலர் உருபொலியனாக வல்லொலியனைக் கொண்டிருந்தபோதிலும் இதற்குரிய காரணம் காட்டி விளக்கிய பெருமை பாலசுப்பிரமணியத்தையே சாரும். இதுபோன்றே அடு, விடு போன்ற வினைகளைச் சேர்க்கை முறையில் விளக்காது விதி முறையில் (Item and Procces) விளக்கவது பொருத்தும் என்பதும் சுட்டிக்காட்டப்படுகிறது. இதற்குக் காரணம் மொழியியல் உலகில் கண்ட மாற்றமாகும். பொதுவாக விளக்கங்கள் சேர்க்கை முறை அல்லது விதிமுறையில் இருக்க

வேண்டும் எனவும் இரண்டு முறைகளையும் கலந்து செய்யக்கூடாது எனவும் முன்னர் எண்ணப்பட்டது. ஆனால் இப்போது இவ்வாறு கலந்து இருப்பதனால் குறையொன்றும் இல்லை என்ற கருத்து நிலவுகிறது. இதனால்தான் முன்னர் வகைசெய்த பலர் சேர்க்கை முறை. ஒன்றையே கைக்கொண்டு விளக்கினர். மேலும் -இன்- எடுப்பவை அனைத்தும் உகரத்தில் முடிவன என்பதும் விளக்கப்படுகிறது. இந்நிலையில் இது நல்ல ஒரு வகைப்பாடாகவே உள்ளது.

5.12. சுருக்கவுரை

இதுகாறும் கூறியவற்றால் தமிழ்வினைகள் பல்வேறு அடிப்படையில் பிரிக்கப்படுகின்றன என்பதும் அவற்றில் காலம் காட்டுவதை அதிலும் குறிப்பாக இறந்தகாலம் காட்டுவதை அடிப்படையாக வைத்துப் பிரிக்கப் பலர் முனைந்துள்ளனர் என்பதும் மரபிலக்கணிகள் இதைப் பற்றி அதிகமாக ஆராயவில்லை என்பதும் நன்கும் விளங்கும். பெஸ்கி, கிரால், போப், ஆர்டன், தமிழ்பேரகராதி, லிஸ்கர், குமாரசாமி ராஜா, கோதண்டராமன், அகத்தியலிங்கம், பாலசுப்பிரமணியம் ஆகியோரின் வினைப்பாகுபாடுகள் குறித்து இங்குச் சுருக்கமாகத் தரப்பட்டள்ளது.

இயல் 6

வினையடிகளின் அசையமைப்பு

இங்கு வினையடிகளை அதன் அசையமைப்புச்சாத்தியம் அடிப்படையில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. வினைகளை அசைகள் அடிப்படையில் இரு பகுதிகளாகப் பகுக்கப்பட்டு, முதல் பகுதியில் வரும் அசைகளின் அல்லது எழுத்தக்களின் சாத்தியங்களின் அடிப்படையில் வினையடிகள் இங்கு ஆயப்பட்டுள்ளன. தமிழில் 12 உயிர்களும் ஏழு மெய்களும் (க், ச், த், ந், ப், ம், வ்) வினைச்சொற்களின் முதலில் வரும் (ஞ், ய், வினைச்சொற்களின் முதலசையில் வாரா.). இவற்றின் அடிப்படையில் 12 உயிர்களும் 84 உயிர்மெய்களும் வினையின் முதலில் வரவல்லன. இருப்பினும் வு, வூ, வொ, வோ என்பன மொழி முதலில் வாரா. இவற்றைக் கழித்து கீழே பட்டியலிடப்பட்டள்ள 92 (12+84=96-4= 92) எழுத்துக்கள் அல்லது அசைகள் வினையின் முதலெழுத்துகளாக அல்லது முதலசைகளாக வர வல்லன:

அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ
க கா கி கீ கு கூ கெ கை கொ கோ கௌ
ச சா சி சீ சு சூ செ சே சை சோ சௌ
த தா தி தீ து தூ தெ தே தை தொ தோ தௌ
ந நா நீ நூ நெ நே நை நொ நோ நௌ
ப பா பி பீ பு பூ பெ பே பை பொ போ பௌ
ம மா மி மீ மு மூ மெ மே மை மொ மோ மௌ
வ வா வி வீ வெ வே வை வௌ

ஒரு குறிப்பிட்ட ஈற்றின் முன் வரவியலும் முன்னசைகளின் அடிப்படையில் 92 வினையடிகள் சாத்தியமாகும். இங்கு வினையடிகளின் இறுதியசையை அல்லது எழுத்தை நிர்ணயித்துக்கொண்டு, அதனுடன் சொல் முதலில் வரவியலும் அசைகளின் அடிப்படையில் சாத்தியமான வினையடிகளும் உண்மையாக வரும் வினையடிகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இது வினையடிகளின் மீட்டுருவாக்கத்திற்கும் வழக்கிழந்த வினைகளை அறிந்துகொள்வதற்கும் உதவும்.

6.1 (C)VC அசையமைப்புள்ள வினையடிகள்

சாத்தியமான முன்னசை + ண்

"ண்" என்ற மெய்யெழுத்தானது இரண்டாவது மற்றும் இறுதியெழுத்தாக வந்து உ, எ. கா, பூ, பே என்ற (C)V அசையமைப்புள்ள முதலெழுத்துகளுடன் இணைந்து பின்வரும் 5 வினையடிகளை உருவாக்கியுள்ளது: உண், எண், காண், பூண், பேண். ஏனைய எழுத்துக்களுடன் 'ண்' சேர்ந்து உருவாக்கவியலும் பின்வரும் வினையடிகள் பயன்பாட்டில் இல்லை

சாத்தியமான முன்னசை + ஈற்றுசை ய்

'ய்' என்ற மெய்யெழுத்தானது இரண்டாவது மற்றும் இறுதியெழுத்தாக வந்து ஆ, உ, எ, ஏ, ஓ, கா, கொ, சா, செ, தீ, து, தே, தொ, நெ, பா, பி, பெ, பொ, மா, மே, வா, வே (C)V அசையமைப்புள்ள முதலெழுத்துக்களுடன் இணைந்து பின்வரும் வினைகளை உருவாக்கும்: ஆய், உய், எய், ஏய், ஓய், காய், கொய், சாய், செய், தீய், துய், தேய், தொய், நெய், பாய், பிய், பெய், பொய், மாய், மேய், வாய், வேய். ஏனைய எழுத்துக்களுடன் 'ய்' சேர்ந்து உருவாக்கவியலும் பின்வரும் வினையடிகள் பயன்பாட்டில் இல்லை:

அய், இய், ஈய், ஊய், ஐய், ஒய், ஔய்,
கய், கிய், கீய், குய், கூய், கெய், கேய், கைய், கொய், கோய், கௌய்,
சய், சிய், சீய், சுய், சூய், செய், சேய், சைய், சோய், சௌய்,
தய், தாய், திய், துய், தெய், தைய், தோய், தௌய்,
நய், நாய், நிய், நீய், நுய், நூய், நேய், நைய், நொய், நோய், நௌய்,
பய், பிய், பீய், புய், பூய், பேய், பைய், போய், பௌய்,
மய், மிய், மீய், முய், மூய், மெய், மைய், மொய், மோய், மௌய்,
வய், வியˌ வீய், வெய், வேய், வைய், வௌய்

சாத்தியமான முன்னசை + ஈற்றுசை ர்

'ர்' என்ற மெய்யெழுத்தானது இரண்டாவது மற்றும் இறுதியெழுத்தாக வந்து ஆ, ஈ, ஊ, கூ, கோ, சா, சே, தீ, து, நீ, நே, பா, பே, வா, வே (C)V அசையமைப்புள்ள முதலெழுத்துக்களுடன் இணைந்து பின்வரும் 15 வினைகளை உருவாக்கும். ஆர், ஈர், ஊர், கூர், கோர், சார், சேர், தீர், தூர், நீர், நேர், பார், பேர், வார், வேர். ஏனைய எழுத்துக்களுடன் 'ர்' சேர்ந்து உருவாக்கவியலும் பின்வரும் வினையடிகள் பயன்பாட்டில் இல்லை:

அர், இர், உர், எர், ஏர், ஐர், ஒர், ஓர், ஔர்,
கர், கார், கிர், கீர், குர், கெர், கேர், கைர், கொர், கௌர்,
சர், சிர், சீர், சுர், சூர், செர், சைர், சொர், சோர், சௌர்,
தர், தார், திர், துர், தெர், தைர், தொர், தோர், தௌர்,
நர், நார், நிர், நுர், நூர், நெர், நைர், நொர், நோர், நௌர்,
பர், பிர், பீர், புர், பூர், பெர், பைர், பொர், போர், பௌர்,
மர், மார், மிர், மீர், முர், மூர், மெர், மேர், மைர், மொர், மோர், மௌர்,
வர், விர், வீர், வெர், வைர், வௌர்

சாத்தியமான முதல் எழுத்து +ல்

'ல்' என்ற மெய்யெழுத்தானது இரண்டாவது மற்றும் இறுதியெழுத்தாக வந்து அ, இ, ஏ, க, கா, கொ, செ, சொ, நி, மெ, வெ, போ, நோ (C)V அசையமைப்புள்ள முதலெழுத்துக்களுடன் இணைந்து பின்வரும் 15 வினைகளை உருவாக்கும்: அல், இல், ஏல், கல், கொல், செல், சொல், நில், வில், நூல், மெல், வெல், தோல், போல், நோல். ஏனைய எழுத்துக்களுடன் 'ல்' சேர்ந்து உருவாக்கவியலும். பின்வரும் வினையடிகள் பயன்பாட்டில் இல்லை அல்லது உருவாக்கப்படவில்லை:

ஆல், ஈல், உல், ஊல், எல், ஐல், ஒல், ஓல், ஔல்,
கால், கில், கீல், குல், கூல், கெல், கைல், கோல், கௌல்,
சல், சால், சில், சீல், சுல், சூல், சேல், சைல், சோல், சௌல்,
தல், தால், தில், தீல், துல், தூல், தெல், தேல், தைல், தொல், தௌல்,
நல், நால், நீல், நெல், நேல், நைல், நொல், நௌல்,

பல், பால், பில், பீல், புல், பூல், பெல், பேல், பைல், பொல், பௌல்,
மல், மால், மில், மீல், முல், மூல், மேல், மொல், மோல், மௌல்,
வல், வால், வீல், வேல், வைல், வௌல்.

சாத்தியமான முன்னசை + ஈற்றசை ழ்

'ழ்' என்ற மெய்யெழுத்தானது இறுதியெழுத்தாக வந்து ஆ, சூ, தா, வா, வீ (C)V அசையமைப்புள்ள முதலெழுத்துக்களுடன் இணைந்து பின்வரும் 5 வினைகளை உருவாக்கும். ஆழ், ஊழ், சூழ், தாழ், வாழ், வீழ். ஏனைய சாத்தியமான முதல் எழுத்துக்களுடன் 'ழ்' சேர்ந்து உருவாக்கவியலும் பின்வரும் வினையடிகள் பயன்பாட்டில் இல்லை அல்லது உருவாக்கப்படவில்லை.

அழ், இழ், ஈழ், உழ், எழ், ஏழ், ஐழ், ஒழ், ஓழ், ஔழ்,
கழ், காழ், கிழ், கீழ், குழ், கூழ், கெழ், கைழ், கொழ், கோழ், கௌழ்,
சழ், சாழ், சிழ், சழ், சுழ், செழ், சேழ், சைழ், சொழ், சோழ், சௌழ்,
தழ், திழ், தீழ், துழ், தூழ், தெழ், தேழ், தைழ், தொழ், தோழ், தௌழ்,
நழ், நாழ், நிழ், நீழ், நுழ், நூழ், நெழ், நேழ், நைழ், நொழ், நோழ், நௌழ்,
பழ், பாழ், பிழ், பீழ், புழ், பூழ், பெழ், பேழ், பைழ், பொழ், போழ், பௌழ்,
மழ், மாழ், மிழ், மீழ், முழ், முழ், மெழ், மேழ், மைழ், மொழ், மோழ், மௌழ்,
வழ், வாழ், விழ், வெழ், வேழ், வைழ், வௌழ்,

சாத்தியமான முன்னசை + ஈற்றசை ள்

'ள்' என்ற மெய்யெழுத்தானது இரண்டாவது மற்றும் இறுதியெழுத்தாக வந்து ஆ, உ, எ, கோ, நீ, மா, மீ, மு மொ என்ற (C)V அசையமைப்புள்ள முதலெழுத்துக்களுடன் இணைந்து பின்வரும் 9 வினைகளை உருவாக்கும். ஆள், உள், எள், கோள், நீள், மாள், மீள், முள், மொள் ஏனைய எழுத்துக்களுடன் 'ள்' சேர்ந்து உருவாக்கவியலும் பின்வரும் வினையடிகள் பயன்பாட்டில் இல்லை.

அள், இள், ஈள், ஊள், ஏள், ஐள், ஒள், ஓள், ஔள்,
கள், காள், கிள், கீள், குள், கூள், கெள், கைள், கொள், கௌள்,
சள், சாள், சிள், சீள், சுள், சூள், செள், சேள், சைள், சோள், சௌள்,

தள், தாள், திள், தீள், துள், தூள், தெள், தேள், தைள், தொள், தோள், தெளள்,
நள், நாள், நூள், நெள், நேள், நைள், நொள், நோள், நெளள்,
பள், பாள், பிள், பீள், புள், பூள், பெள், பேள், பைள், பொள், போள், பெளள்
மள், மிள், முள், மெள், மேள், மைள், மோள், மெளள்,
வள், வாள், விள், வீள், வெள், வேள், வைள், வெளள்,

6.2 (C)VCV அசையமைப்புள்ள வினையடிகள்

சாத்தியமான முன்னசை + ஈற்றசை கு

'கு' என்ற ஈற்றசையானது சாத்தியமான 92 அசைகளுள் ஆ, உ, ஏ, சா, த, தொ, ந, ப, பு, போ, மி, வ, வே, வை என்ற முன்னசைகளுடன் சேர்ந்து பின்வரும் 14 வினையடிகளை உருவாக்கியுள்ளன: ஆகு, உகு, ஏகு, சாகு, தகு, தொகு, நகு, பகு, புகு, போகு, மிகு, வகு, வேகு, வைகு. ஏனைய முன்னசைகளுடன் சேர்ந்து உருவாக்கவியலும் பின்வரும் சாத்தியமான வினையடிகள் வழக்கிலில்லை அல்லது உருவாக்கப்படவில்லை:

அகு, இகு, ஈகு, ஊகு, எகு, ஐகு, ஒகு, ஓகு, ஔகு,
ககு, காகு, கிகு, கீகு, குகு, கூகு, கெகு, கைகு, கொகு, கோகு, கௌகு,
சகு, சிகு, சீகு, சுகு, சூகு, செகு, சேகு, சைகு, சோகு, சௌகு,
தாகு, திகு, தீகு, துகு, தூகு, தெகு, தேகு, தைகு, தோகு, தௌகு,
நாகு, நீகு, நூகு, நெகு, நேகு, நைகு, நொகு, நோகு, நௌகு,
பாகு, பிகு, பீகு, பூகு, பெகு, பேகு, பைகு, பொகு, பௌகு,
மகு, மாகு, மீகு, முகு, மூகு, மெகு, மேகு, மைகு, மொகு, மோகு, மௌகு,
வாகு, விகு, வீகு, வேகு, வௌகு.

சாத்தியமான முன்னசை + ஈற்றசை சி

'சி' என்ற ஈற்றசை க, ந, ப, பு, ம, வ, வி என்ற அசைகளுடன் சேர்ந்து பின்வரும் வினையடிகளை உருவாக்கியுள்ளன: கசி, நசி, பசி, புசி, மசி, வசி, விசி. ஏனைய அசைகளுடன் சேர்ந்து உருவாக்கவியலும் பின்வரும் சாத்தியமான வினையடிகள் வழக்கிலில்லை அல்லது உருவாக்கப்படவில்லை:

அசி, ஆசி, இசி, ஈசி, உசி, ஊசி, எசி, ஏசி, ஐசி, ஒசி, ஓசி, ஔசி,
காசி, கிசி, கீசி, குசி, கூசி, கெசி, கேசி, கைசி, கொசி, கோசி, கௌசி,
சசி, சாசி, சிசி, சீசி, சுசி, சூசி, செசி, சேசி, சைசி, சொசி, சோசி, சௌசி,
தசி, தாசி, திசி, தீசி, துசி, தூசி, தெசி, தேசி, தைசி, தொசி, தோசி, தௌசி,
நாசி, நிசி, நீசி, நுசி, நூசி, நெசி, நேசி, நைசி, நொசி, நோசி, நௌசி, பாசி, பீசி, பூசி, பெசி, பேசி, பைசி, பொசி, போசி, பௌசி,
மாசி, மிசி, மீசி, முசி, மூசி, மெசி, மேசி, மைசி, மொசி, மோசி, மௌசி, வாசி,
வீசி, வெசி, வேசி, வைசி, வௌசி

சாத்தியமான முன்னசை + ஈற்றசை சு

'சு' என்ற ஈற்றசை ஏ, கூ, பூ, பே, வீ என்ற அசைகளுடன் சேர்ந்து பின்வருமம் வினையடிகளை உருவாக்கியுள்ளன: ஏசு, கூசு, பூசு, பேசு, வீசு. ஏனைய அசைகளுடன் சேர்ந்து உருவாக்கவியலும் பின்வரும் சாத்தியமான வினையடிகள் வழக்கிலில்லை அல்லது உருவாக்கப்படவில்லை

அசு, ஆசு, இசு, ஈசு, உசு, ஊசு, எசு, ஐசு, ஒசு, ஓசு, ஔசு,
கசு, காசு, கிசு, கீசு, குசு, கெசு, கேசு, கைழ், கொசு, கோசு, கௌசு,
சசு, சாசு, சிசு, சீசு, சுசு, சூசு, செசு, சேசு, சைசு, சொசு, சோசு, சௌசு,
தசு, தாசு, திசு, தீசு, துசு, தூசு, தெசு, தேசு, தைசு, தொசு, தோசு, தௌசு,
நசு, நாசு, நிசு, நீசு, நுசு, நூசு, நெசு, நேசு, நைசு, நொசு, நோசு, நௌசு,
பசு, பாசு, பிசு, பீசு, புசு, பெசு, பைசு, பொசு, போசு, பௌசு,
மசு, மாசு, மிசு, மீசு, முசு, மூசு, மெசு, மேசு, மைசு, மொசு, மோசு, மௌசு,
வசு, வாசு, விசு, வெசு, வேசு, வைசு, வௌசு,

சாத்தியமான முன்னசை + ஈற்றுசை சை

'சை' ஈற்றசையாக அ, இ, பி, என்ற முன்னசைகளுடன் இணைந்து பின்வரும் வினையடிகளை உருவாக்கியுள்ளன: அசை, இசை, பிசை. ஏனைய அசைகளுடன் சேர்ந்து

உருவாக்கவியலும். பின்வரும் சாத்தியமான வினையடிகள் வழக்கிலில்லை அல்லது உருவாக்கப்படவில்லை:

ஆசை, ஈசை, உசை, ஊசை, எசை, ஏசை, ஐசை, ஒசை, ஓசை, ஔசை,
கசை, காசை, கிசை, கீசை, குசை, கூசை, கெசை, கேசை, கைசை, கொசை,
கோசை, கௌசை,
சசை, சாசை, சிசை, சீசை, சுசை, சூசை, செசை, சேசை, சைசை, சொசை,
சோசை, சௌசை,
தசை, தாசை, திசை, தீசை, துசை, தூசை, தெசை, தேசை, தைசை, தொசை,
தோசை, தௌசை,
நசை, நாசை, நிசை, நீசை, நுசை, நூசை, நெசை, நேசை, நைசை, நொசை,
நோசை, நௌசை,
பசை, பாசை, பீசை, புசை, பூசை, பெசை, பேசை, பைசை, பொசை, போசை,
பௌசை,
மசை, மாசை, மிசை, மீசை, முசை, மூசை, மெசை, மேசை, மைசை,
மொசை, மோசை, மௌசை,
வசை, வாசை, விசை, வீசை, வெசை, வேசை, வைசை, வௌசை,

சாத்தியமான முன்னசை + ஈற்றுசை ட

'ட' ஈற்றசையாக க, கி, ந, என்ற முன்னசைகளுடன் இணைந்து பின்வரும் வினையடிகளை உருவாக்கியுள்ளன: கட, கிட, நட. ஏனைய அசைகளுடன் சேர்ந்து உருவாக்கவியலும் பின்வரும் சாத்தியமான வினையடிகள் வழக்கிலில்லை அல்லது உருவாக்கப்படவில்லை:

அட, ஆட, இட, ஈட, உட, ஊட, எட, ஏட, ஐட, ஒட, ஓட, ஔட,
காட, கீட, குட, கூட, கெட, கேட, கைட, கொட, கோட, கௌட,
சட, சாட, சிட, சீட, சுட, சூட, செட, சேட, சைட, சொட, சோட, சௌட,
தட, தாட, திட, தீட, துட, தூட, தெட, தேட, தைட, தொட, தோட, தௌட,
நாட, நிட, நீட, நுட, நூட, நெட, நேட நைட, நொட, நோட, நௌட,
பட, பாட, பிட, பீட, புட, பூட, பெட, பேட, பைட, பொட, போட, பௌட,

மட, மாட, மிட, மீட, முட, மூட, மெட, மேட, மைட, மொட, மோட, மௌட,
வட, வாட, விட, வீட, வெட, வேட, வைட, வௌட,

சாத்தியமான முன்னசை + டி

'டி' என்ற ஈற்றசை அ, இ, ஒ, க, கு, த, து, ந, நீ, நொ, ப, பி, பொ, ம, மு, வ, வி, வெ என்ற அசைகளுடன் சேர்ந்து பின்வரும் 18 வினையடிகளை உருவாக்கியுள்ளன: அடி, இடி, ஒடி, கடி, குடி, தடி, துடி, நடி, நீடி, நொடி, படி, பிடி, பொடி, மடி, முடி, வடி, விடி, வெடி. ஏனைய அசைகளுடன் சேர்ந்து உருவாக்கவியலும் பின்வரும் சாத்தியமான வினையடிகள் வழக்கிலில்லை அல்லது உருவாக்கப்படவில்லை:

ஆடி, ஈடி, உடி, ஊடி, எடி, ஏடி, ஐடி, ஓடி, ஔடி,
காடி, கிடி, கீடி, கூடி, கெடி, கேடி, கைடி, கொடி, கோடி, கௌடி,
சடி, சாடி, சிடி, சீடி, சுடி, சூடி, செடி, சேடி, சைடி, சொடி, சோடி, சௌடி,
திடி, தீடி, துடி, தூடி, தெடி, தேடி, தைடி, தொடி, தோடி, தௌடி,
நாடி, நிடி, நுடி, நூடி, நெடி, நேடி, நைடி, நோடி, நௌடி, பாடி, பீடி, புடி, பூடி, பெடி, பேடி, பைடி, போடி, பௌடி,
மாடி, மிடி, மீடி, முடி, மெடி, மேடி, மைடி, மொடி, மோடி, மௌடி, வாடி, வீடி, வேடி, வைடி, வௌடி.

சாத்தியமான முன்னசை + ஈற்றுசை டு

'டு' ஈற்றசையாக அ, ஆ, இ, உ, ஊ, எ, ஒ, க, கூ, கெ, கொ, சா, சு, சூ, த, தே, தொ, ந, நா, ப, பா, போ, மு, வா, வி என்ற முன்னசைகளுடன் இணைந்து பின்வரும் 23 வினையடிகளை உருவாக்கியுள்ளன: அடு, ஆடு, இடு, உடு, ஊடு, எடு, ஒடு, கடு, கூடு, கெடு, கொடு, சாடு, சுடு, சூடு, தடு, தேடு, தொடு, நடு, நாடு, படு, பாடு, போடு, மூடு. சாத்தியமான பின்வரும் வினையடிகள் வழக்கிலில்லை அல்லது உருவாக்கப்படவில்லை:

ஈடு, ஏடு, ஐடு, ஓடு, ஔடு,
காடு, கிடு, கீடு, குடு, கேடு, கைடு, கோடு, கௌடு,
சடு, சிடு, சீடு, செடு, சேடு, சைடு, சொடு, சோடு, சௌடு,

தாடு, திடு, தீடு, துடு, தூடு, தெடு, தைடு, தோடு, தௌடு,
நிடு, நீடு, நுடு, நூடு, நெடு, நேடு, நைடு, நொடு, நோடு, நௌடு,
பிடு, பீடு, புடு, பூடு, பெடு, பேடு, பைடு, பொடு, பௌடு,
மடு, மாடு, மிடு, மீடு, முடு, மெடு, மேடு, மைடு, மொடு, மோடு, மௌடு,
வடு, விடு, வீடு, வெடு, வேடு, வைடு, வௌடு.

சாத்தியமான முன்னசை + ஈற்றசை டை

'டை' என்ற ஈற்றசையானது சாத்தியமான 92 அசைகளுள் அ, உ, க, கி, கு, ச, து, ப, மு என்ற முன்னசைகளுடன் சேர்ந்து பின்வரும் 9 வினையடிகளை உருவாக்கியுள்ளன: அடை, உடை, கடை, கிடை, குடை, சடை, துடை, படை, முடை. ஏனைய முன்னசைகளுடன் சேர்ந்து உருவாக்கவியலும் பின்வரும் சாத்தியமான வினையடிகள் வழக்கிலில்லை அல்லது உருவாக்கப்படவில்லை:

ஆடை, இடை, ஈடை, ஊடை, எடை, ஏடை, ஐடை, ஒடை, ஓடை, ஔடை.
காடை, கீடை, கூடை, கெடை, கைடை, கொடை, கோடை, கௌடை,
சாடை, சிடை, சீடை, சுடை, சூடை, செடை, சேடை, சைடை, சோடை, சௌடை,
தடை, தாடை, திடை, தீடை, தூடை, தெடை, தேடை, தைடை, தொடை, தோடை, தௌடை,
நடை, நாடை, நீடை, நூடை, நெடை, நேடை, நைடை, நொடை, நோடை, நௌடை,
பாடை, பிடை, பீடை, புடை, பூடை, பெடை, பேடை, பைடை, பொடை, போடை, பௌடை.
மடை, மாடை, மிடை, மீடை, மூடை, மெடை, மேடை, மைடை, மொடை, மோடை, மௌடை,
வடை, வாடை, விடை, வீடை, வேடை, வைடை, வௌடை.

சாத்தியமான முன்னசை + ணி

ணி என்ற ஈற்றசையானது சாத்தியமான 92 அசைகளுள் அ, த, தி, து, ப, பா, பி என்ற முன்னசைகளுடன் அணி, தணி, திணி, துணி, பணி, பாணி, பிணி என்ற 7

வினையடிகளை உருவாக்கியுள்ளது. ஏனைய முன்னசைகளுடன் சேர்ந்து உருவாக்கவியலும் பின்வரும் சாத்தியமான வினையடிகள் வழக்கிலில்லை அல்லது உருவாக்கப்படவில்லை:

சாத்தியமான முன்னசை + ணு

ணு என்ற ஈற்றசை பே, நா என்ற முன்னசைகளுடன் இணைந்து பேணு, நாணு என்ற வினையடிகளை உருவாக்கியுள்ளது. ஏனைய அசைகளுடன் சேர்ந்து உருவாக்கவியலும் பிற சாத்தியமான வினையடிகள் வழக்கிலில்லை அல்லது உருவாக்கப்படவில்லை.

சாத்தியமான முன்னசை + ணை

ணை என்ற ஈற்றசை அ, இ, பி என்ற முன்னசைகளுடன் சேர்ந்து அணை, இணை, இணை என்ற 3 வினையடிகளை உருவாக்கும். ஏனைய அசைகளுடன் சேர்ந்து உருவாக்கவியலும் பிற சாத்தியமான வினையடிகள் வழக்கிலில்லை அல்லது உருவாக்கப்படவில்லை.

சாத்தியமான முன்னசை + ஈற்றசை மை

'மை' என்ற ஈற்றசை அ, இ, ச என்ற முன்னசைகளுடன் சேர்ந்து பின்வரும் வினையடிகளை உருவாக்கியுள்ளன: அமை, இமை, சமை. ஏனைய அசைகளுடன் சேர்ந்து உருவாக்கவியலும் பின்வரும் சாத்தியமான வினையடிகள் வழக்கிலில்லை அல்லது உருவாக்கப்படவில்லை:

ஆமை, ஈமை, உமை, ஊமை, எமை, ஏமை, ஐமை, ஒமை, ஓமை, ஔமை,
கமை, காமை, கிமை, கீமை, குமை, கூமை, கெமை, கேமை, கைமை, கொமை, கோமை, கௌமை, சாமை, சிமை, சீமை, சுமை, சூமை, செமை, சேமை, சைமை, சொமை, சோமை, சௌமை,
தமை, தாமை, திமை, தீமை, துமை, தூமை, தெமை, தேமை, தைமை, தொமை, தோமை, தௌமை,
நமை, நாமை, நிமை, நீமை, நுமை, நூமை, நெமை, நேமை, நைமை, நொமை, நோமை, நௌமை,

பமை, பாமை, பிமை, பீமை, புமை, பூமை, பெமை, பேமை, பைமை, பொமை, போமை, பௌமை,

மமை, மாமை, மிமை, மீமை, முமை, முமை, மெமை, மேமை, மைமை, மொமை,

மோமை, மௌமை,

வமை, வாமை, விமை, வீமை, வெமை, வேமை, வைமை, வௌமை,

சாத்தியமான முன்னசை + ஈற்றசை ரி

'ரி' என்ற ஈற்றசை அ, உ, எ, க, கொ, ச, சி, செ, சொ, த, தி, தெ, நெ, ப, பி, பொ, ம, வ, வி என்ற அசைகளுடன் சேர்ந்து பின்வரும் வினையடிகளை உருவாக்கியுள்ளன: அரி, உரி, எரி, கரி, கொரி, சரி, சிரி, செரி, சொரி, தரி, திரி, தெரி, நெரி, பரி, பிரி, பொரி, மரி, வரி, விரி, ஏனைய அசைகளுடன் சேர்ந்து உருவாக்கவியலும் பின்வரும் சாத்தியமான வினையடிகள் வழக்கிலில்லை அல்லது உருவாக்கப்படவில்லை:

ஆரி, இரி, ஈரி, ஊரி, ஏரி, ஐரி, ஒரி, ஓரி, ஔரி,
காரி, கிரி, கீரி, குரி, கூரி, கெரி, கேரி, கைரி, கொரி, கோரி, கௌரி,
சாரி, சீரி, சுரி, சூரி, சேரி, சைரி, சோரி, சௌரி,
தாரி, தீரி, துரி, தூரி, தேரி, தைரி, தொரி, தோரி, தௌரி,
நரி, நாரி, நிரி, நீரி, நுரி, நூரி, நேரி, நைரி, நொரி, நோரி, நௌரி,
பாரி, பீரி, பூரி, பெரி, பேரி, பைரி, போரி, பௌரி,
மாரி, மிரி, மீரி, முரி, மூரி, மெரி, மேரி, மைரி, மொரி, மோரி, மௌரி,
வாரி, வீரி, வெரி, வேரி, வைரி, வௌரி,

சாத்தியமான முன்னசை + ஈற்றசை ரு

ரு என்ற ஈற்றசையானது இ, உ, ஊ, ஒ, க, வ, வா என்ற முன்னசைகளுடன் சேர்ந்து பின்வரும் வினையடிகளை உருவாக்கியுள்ளன: இரு, உரு, ஊரு, ஒரு, கரு, வரு, வாரு. ஏனைய அசைகளுடன் சேர்ந்து உருவாக்கவியலும் பின்வரும் சாத்தியமான வினையடிகள் வழக்கிலில்லை அல்லது உருவாக்கப்படவில்லை:

அரு, ஆரு, ஈரு, எரு, ஏரு, ஐரு, ஒரு, ஔரு, காரு, கிரு, கீரு, குரு, கூரு, கெரு, கேரு, கைரு, கொரு, கோரு, கௌரு,

சரு, சாரு, சிரு, சீரு, சுரு, சூரு, செரு, சேரு, சைரு, சொரு, சோரு, சௌரு,

தரு, தாரு, திரு, தீரு, துரு, தூரு, தெரு, தேரு, தைரு, தொரு, தோரு, தௌரு,

நரு, நாரு, நிரு, நீரு, நுரு, நூரு, நெரு, நேரு, நைரு, நொரு, நோரு, நௌரு,

பரு, பாரு, பிரு, பீரு, புரு, பூரு, பெரு, பேரு, பைரு, பொரு, போரு, பௌரு,

மரு, மாரு, மிரு, மீரு, முரு, மூரு, மெரு, மேரு, மைரு, மொரு, மோரு, மௌரு,

விரு, வீரு, வெரு, வேரு, வைரு, வௌரு,

சாத்தியமான முன்னசை + ரை

ரை என்ற ஈற்றசை அ, இ, உ, க, தி, ந, நு, வ, வி என்ற முதலசைகளோடு சேர்ந்து பின்வரும் 10 வினையடிகளை உருவாக்கும்: அரை, இரை, உரை, கரை, திரை, நரை, நரை, நுரை, வரை, விரை. ஏனைய அசைகளுடன் சேர்ந்து உருவாக்கவியலும் பிற சாத்தியமான வினையடிகள் வழக்கிலில்லை அல்லது உருவாக்கப்படவில்லை.

சாத்தியமான முன்னசை + ஈற்றுசை லி

லி ஈற்றசையாக ச, நெ, பொ, ம, மெ என்ற முன்னசைகளுடன் இணைந்து பின்வரும் 5 வினையடிகளை உருவாக்கியுள்ளன: சலி, நெலி, பொலி, மலி, மெலி. ஏனைய முன்னசைகளுடன் சேர்ந்து உருவாக்கவியலும் பின்வரும் சாத்தியமான வினையடிகள் வழக்கிலில்லை அல்லது உருவாக்கப்படவில்லை:

அலி, ஆலி, இலி, ஈலி, உலி, ஊலி, எலி, ஏலி ஐலி, ஒலி, ஓலி, ஔலி,

கலி, காலி, கிலி, கீலி, குலி, கூலி, கெலி, கைலி, கொலி, கோலி, கௌலி,

சாலி, சிலி, சீலி, சுலி, சூலி, செலி, சேலி, சைலி, சோலி, சௌலி,

தலி, தாலி, திலி, தீலி, துலி, தூலி, தெலி, தேலி, தைலி, தொலி, தோலி, தௌலி,

நலி, நாலி, நிலி, நீலி, நுலி, நூலி, நேலி, நைலி, நொலி, நோலி, நௌலி,

பலி, பாலி, பிலி, பீலி, புலி, பூலி, பெலி, பேலி, பைலி, போலி, பௌலி.

மலி, மாலி, மிலி, மீலி, முலி, மூலி, மேலி, மைலி, மொலி, மோலி, மௌலி,

வலி, வாலி, விலி, வீலி, வெலி, வேலி, வைலி, வௌலி.

சாத்தியமான தொடக்க அசை+ ஈற்றசை லை

'லை' என்பது ஈறாகச் சேர்ந்து வரவியலும் சாத்தியமான 91 முன்னசைகளில் அ, உ, க, கு, தொ, நி என்ற அசைகளுடன் மட்டும் சேர்ந்து பின்வரும் 6 வினையடிகளை உருவாக்கியுள்ளது: அலை, உலை. கலை, குலை, தொலை, நிலை. ஏனைய முன்னசைடன் 'லை' ஈறாகச் சேரவியலும் பின்வரும் சாத்தியமான வினையடிகள் பயன்பாட்டில் இல்லை அல்லது உருவாக்கப்படவில்லை:

ஆலை, இலை, ஈலை, ஊலை, எலை, ஏலை, ஐலை, ஒலை, ஓலை, ஔலை.
காலை, கிலை, கீலை, கூலை, கெலை, கைலை, கொலை, கோலை, கௌலை.
சலை, சாலை, சிலை, சீலை, சுலை, சூலை, சேலை, சைலை, சொலை சோலை, சௌலை.
தலை, தாலை, திலை, தீலை, துலை, தூலை, தெலை, தேலை, தைலை, தோலை, தௌலை,
நலை, நாலை, நீலை, நுலை, நூலை, நெலை, நேலை, நைலை, நொலை, நோலை, நௌலை,
பலை, பாலை, பிலை, பீலை, புலை, பூலை, பெலை, பேலை, பைலை, பொலை, போலை, பௌலை,
மலை, மாலை, மிலை, மீலை, முலை, மூலை, மேலை, மைலை, மொலை, மோலை, மௌலை,
வலை, வாலை, விலை, வீலை, வேலை, வைலை, வௌலை.

சாத்தியமான முதலசை + ஈற்றசை வ

பின்வரும் வினையடிகள் உருவாக்கப்பட்டுள்ளன: உவ, சிவ

சாத்தியமான முதலசை + ஈற்றசை வி

'வி' என்ற உயிர்மெய்யெழுத்தானது சாத்தியமான சொல் தொடக்க அசைகளில் அ, கு, த, தெ, ந, று என்பனவற்றுடன் சேர்ந்து பின்வரும் 9 வினையடிகளை உருவாக்குகின்றன: அவி,

கவி, குவி, சேவி, தவி, தெவி, நோவி. சேவி, சோபி என்ற சமஸ்கிருத மூலநிலை அடிகள் தற்போது பயன்பாட்டில் உள்ளன. ஏனைய எழுத்துக்களுடன் 'வி' சேர்ந்து உருவாக்கவியலும் பின்வரும் சாத்தியமான வினையடிகள் பயன்பாட்டில் இல்லை.

ஆவி, இவி, ஈவி, உவி, ஊவி, எவி, ஏவி, ஐவி, ஒவி, ஓவி, ஔவி.
காவி, கிவி, கீவி, குவி, கூவி, கெவி, கைவி, கொவி, கோவி, கௌவி,
சவி, சாவி, சிவி, சீவி, சுவி, சூவி, செவி, சைவி, சொவி, சோவி, சௌவி.
தாவி, திவி, தீவி, துவி, தூவி, தெவி, தேவி, தைவி, தொவி, தோவி, தௌவி.
நாவி, நீவி, நுவி, நூவி, நெவி, நேவி, நைவி, நொவி, நோவி, நௌவி.
பவி, பாவி, பிவி, பீவி, புவி, பூவி, பெவி, பேவி, பைவி, பொவி, போவி, பௌவி.
மவி, மாவி, மிவி, மீவி, முவி, மூவி, மேவி, மொவி, மோவி, மௌவி,
வவி, வாவி, விவி, வீவி, வேவி, வைவி, வௌவி.

சாத்தியமான முன்னசை + ஈற்றசை வு

'வு' ஈற்றசையாக ஏ, கா, கூ, கே, ச, சி, சீ, தா, தூ, நீ, பா, மே என்ற முன்னசைகளுடன் இணைந்து 12 பின்வரும் வினையடிகளை உருவாக்கியுள்ளன: ஏவு, காவு, கூவு, கேவு, சவு, சிவு, சீவு, தாவு, தூவு, நீவு, பாவு, மேவு. ஏனைய முன்னசைகளுடன் சேர்ந்து உருவாக்கவியலும் பின்வரும் சாத்தியமான வினையடிகள் வழக்கில்லை அல்லது உருவாக்கப்படவில்லை:

அவு, ஆவு, இவு, ஈவு, உவு, ஊவு, எவு, ஐவு, ஒவு, ஓவு, ஔவு,
கவு, கிவு, கீவு, குவு, கெவு, கைவு, கொவு, கௌவு,
சாவு, சுவு, சூவு, செவு, சேவு, சைவு, சொவு, சோவு, சௌவு, தவு, திவு, தீவு, துவு, தெவு,
தேவு, தைவு, தொவு, தோவு, தௌவு,
நவு, நாவு, நிவு, நுவு, நூவு, நெவு, நேவு, நைவு, நொவு, நோவு, நௌவு,
பவு, பிவு, பீவு, புவு, பூவு, பெவு, பேவு, பைவு, பொவு, போவு, பௌவு,
மவு, மாவு, மிவு, மீவு, முவு, மூவு, மெவு, மைவு, மொவு, மோவு, மௌவு,
வவு, வாவு, விவு, வீவு, வெவு, வேவு, வைவு, வொவு, வோவு, வௌவு.

சாத்தியமான முன்னசை + ழி

ஈற்றசை ழி என்பது அ, இ, ஒ, க, கி, கொ, சு, செ, தெ, நூ, ப, பி, ம, மொ, வ, வி என்ற முன்னசைகளுடன் இணைந்து அழி, இழி, ஒழி, கழி, கிழி, கொழி, சுழி, செழி, தெழி, நூழி, பழி, பிழி, பொழி, மழி, மொழி, வழி, விழி என்ற 17 வினையடிகளை உருவாக்கும். ஏனைய சாத்தியமான முன்னசைகளுடன் இணைந்து உருவாக்கவியலும் வினையடிகள் வழக்கில் இல்லை அல்லது உருவாக்கப்படவில்லை எனலாம்.

சாத்தியமான முன்னசை + ஈற்றசை ழு

ழு என்ற ஈற்றசை அ, உ, எ, கொ, தொ, ப, வி என்ற அசைகளுடன் சேர்ந்து பின்வரும் வினையடிகளை உருவாக்கியுள்ளன: அழு, உழு, எழு, கொழு, தொழு, பழு, விழு. ஏனைய அசைகளுடன் சேர்ந்து உருவாக்கவியலும் பின்வரும் சாத்தியமான வினையடிகள் வழக்கிலில்லை அல்லது உருவாக்கப்படவில்லை

ஆழு, இழு, ஈழு, ஊழு, ஏழு, ஐசு, ஒழு, ஓழு, ஔழு,
கழு, காழு, கிழு, கீழு, குழு, கூழு, கெழு, கேழு, கைழு, கோழு, கௌழு,
சழு, சாழு, சிழு, சீழு, சுழு, சூழு, செழு, சேழு, சைழு, சொழு, சோழு, சௌழு,
தழு, தாழு, திழு, தீழு, துழு, தூழு, தெழு, தேழு, தைழு, தோழு, தௌழு,
நழு, நாழு, நிழு, நீழு, நுழு, நூழு, நெழு, நேழு, நைழு, நொழு, நோழு, நௌழு,
பாழு, பிழு, பீழு, புழு, பூழு, பெழு, பேழு, பைழு, பொழு, போழு, பௌழு,
மழு, மாழு, மிழு, மீழு, முழு, மூழு, மெழு, மேழு, மைழு, மொழு, மோழு, மௌழு,
வழு, வாழு, வெழு, வேழு, வைழு, வௌழு,

சாத்தியமான முன்னசை + ஈற்றசை ழை

'ழை' என்ற ஈற்றசை அ, இ, உ, கு, த, நு, பி என்ற முன்னசைகளுடன் சேர்ந்து பின்வரும் வினையடிகளை உருவாக்கியுள்ளன: அழை, இழை, உழை, குழை, தழை, நுழை. ஏனைய முன்னசைகளுடன் சேர்ந்து உருவாக்கவியலும் பின்வரும் சாத்தியமான வினையடிகள் வழக்கிலில்லை அல்லது உருவாக்கப்படவில்லை:

ஆழை, ஈழை, ஊழை, எழை, ஏழை, ஐழை, ஒழை, ஓழை, ஔழை,
கழை, காழை, கிழை, கீழை, கூழை, கெழை, கேழை, கைழை, கொழை, கோழை, கௌழை,
சழை, சாழை, சிழை, சீழை, சுழை, சூழை, செழை, சேழை, சைழை, சொழை, சோழை சௌழை,
தாழை, திழை, தீழை, துழை, தூழை, தெழை, தேழை, தைழை, தொழை, தோழை, தௌழை,
நழை, நாழை, நிழை, நீழை, நூழை, நெழை, நேழை, நைழை, நொழை, நோழை நௌழை,
பழை, பாழை, பீழை, புழை, பூழை, பெழை, பேழை, பைழை, பொழை, போழை பௌழை,
மழை, மாழை, மிழை, மீழை, முழை, மூழை, மெழை, மேழை, மைழை, மொழை, மோழை, மௌழை, வழை, வாழை, விழை, வீழை, வெழை, வேழை, வைழை, வௌழை.

சாத்தியமான முன்னசை + ஈற்றசை ள

பின்வரும் வினையடிகள் உருவாக்கப்பட்டுள்ளன: அள, கள, பிள பிற சாத்தியமான வினையடிகள் வழக்கிலில்லை அல்லது உருவாக்கப்படவில்லை.

சாத்தியமான முன்னசை + ஈற்றசை ளி

'ளி' என்ற ஈற்றசை அ, இ, ஒ, க, கு, த, து, தெ, பு, பொ, மு, நெ என்ற அசைகளுடன் சேர்ந்து பின்வரும் 11 வினையடிகளை உருவாக்கியுள்ளன: அளி, இளி, ஒளி, களி, குளி, தளி, துளி, தெளி, புளி, பொளி, முளி, நெளி. ஏனைய முன்னசைகளுடன் சேர்ந்து உருவாக்கவியலும் பின்வரும் சாத்தியமான வினையடிகள் வழக்கிலில்லை அல்லது உருவாக்கப்படவில்லை.

ஆளி, ஈளி, உளி, ஊளி, எளி, ஏளி, ஐளி, ஓளி, ஔளி,
காளி, கிளி, கீளி, கூளி, கெளி, கேளி, கைளி, கொளி, கோளி, கௌளி,
சளி, சாளி, சிளி, சீளி, சுளி, சூளி, செளி, சேளி, சைளி, சொளி, சோளி, சௌளி,
தாளி, திளி, தீளி, தூளி, தேளி, தைளி, தொளி, தோளி, தௌளி,

நளி, நாளி, நிளி, நீளி, நுளி, நூளி, நேளி, நைளி, நொளி, நோளி, நெளளி,
பளி, பாளி, பிளி, பீளி, பூளி, பெளி, பேளி, பைளி, போளி, பௌளி,
மளி, மாளி, மிளி, மீளி, முளி, மெளி, மேளி, மைளி, மொளி, மோளி,மௌளி,
வளி, வாளி, விளி, வீளி, வெளி, வேளி, வைளி, வௌளி,

சாத்தியமான முன்னசை + ஈற்றசை ஞு

ஞு என்ற ஈற்றசை என்ற அசைகளுடன் சேர்ந்து பின்வரும் 2 வினையடிகளை உருவாக்கியுள்ளன: உஞு, வெஞு. ஏனைய முன்னசைகளுடன் சேர்ந்து உருவாக்கவியலும் பின்வரும் சாத்தியமான வினையடிகள் வழக்கிலில்லை அல்லது உருவாக்கப்படவில்லை:

சாத்தியமான முன்னசை + ஈற்றசை ளை

ஈற்றசை ளை என்பது அ, இ, உ, க, கி, ச, தி, து, மு, வ, வி போன்ற முன்னசைகளுடன் சேர்ந்து பின்வரும் வினையடிகளை உருவாக்கும்: அளை, இளை, உளை, களை, கிளை, துளை, முளை, வளை, விளை, சளை, திளை. ஏனைய அசைகளுடன் சேர்ந்து உருவாக்கவியலும் பிற சாத்தியமான வினையடிகள் வழக்கிலில்லை அல்லது உருவாக்கப்படவில்லை.

சாத்தியமான முன்னசை + ஈற்றசை றி

'றி' என்ற ஈற்றசை அ, உ, எ, கு, கொ, செ, சொ, த, தெ, நெ, ப, பொ, ம, மு, வெ என்ற அசைகளுடன் சேர்ந்து பின்வரும் வினையடிகளை உருவாக்கியுள்ளன: அறி, உறி, எறி, குறி, கொறி, செறி, சொறி, தறி, தெறி, நெறி, பறி, பொறி, மறி, முறி, வெறி. ஏனைய அசைகளுடன் சேர்ந்து உருவாக்கவியலும் பின்வரும் சாத்தியமான வினையடிகள் வழக்கிலில்லை அல்லது உருவாக்கப்படவில்லை:

ஆறி, இறி, உறி, எறி, ஐறி, ஒறி, ஓறி, ஔறி,
கறி, காறி, கிறி, கீறி, கெறி, கேறி, கைறி, கௌறி,
சறி, சிறி, சீறி, சுறி, சூறி, சைறி, சோறி, சௌறி,
தாறி, திறி, துறி, தைறி, தொறி, தோறி, தௌறி,
நறி, நாறி, நிறி, நுறி, நூறி, நைறி, நொறி, நோறி, நௌறி,

பிறி, பீறி, புறி, பூறி, பெறி, பைறி, போறி, பௌறி,
மாறி, மிறி, மீறி, முறி, மெறி, மேறி, மைறி, மொறி, மோறி, மௌறி,
வறி, விறி, வீறி, வைறி, வௌறி,

சாத்தியமான முதல் எழுத்து + ஈற்றசை றை

றை என்னும் அசை (எழுத்து) சொல்லின் இறுதி அல்லது இரண்டாம் இடத்தில் வரும்போது அ, இ, உ, கு, நி, ம, மு, வி போன்ற அசைகளுடன் (எழுத்துக்களுடன்) சேர்ந்து 8 வினையடிகளை உருவாக்கியுள்ளன. அவையாவன: அறை, இறை, உறை, குறை, நிறை, மறை, முறை, விறை. சொல் முதலில் வரும் சாத்தியமான பிற அசைகள் (எழுத்துக்கள்) வினையடிகளை உருவாக்கவில்லை. அதாவது 91 சாத்தியமான வினையடிகளில் 8 வினையடிகள்தான் உருவாக்கப்பட்டுப் பயன்பாட்டில் உள்ளன. அதாவது பின்வரும் சாத்தியமான வினையடிகள் தமிழில் பயன்படுத்தப்படவில்லை:

ஆறை, ஈறை, ஊறை, எறை, ஏறை, ஐறை, ஒறை, ஓறை, ஔறை,
கறை, காறை, கிறை, கீறை, கூறை, கெறை, கேறை, கைறை, கொறை, கோறை, கௌறை,
சறை, சாறை, சிறை, சீறை, சுறை, சூறை, செறை, சேறை, சைறை, சொறை, சோறை, சௌறை,
தறை, தாறை, திறை, தீறை, துறை, தூறை, தெறை, தேறை, தைறை, தொறை, தோறை, தௌறை,
நறை, நாறை, நீறை, நுறை, நூறை, நெறை, நேறை, நைறை, நொறை, நோறை, நௌறை,
பறை, பாறை, பிறை, பீறை, புறை, பூறை, பெறை, பேறை, பைறை, பொறை, போறை, பௌறை,
மாறை, மிறை, மீறை, முறை, மெறை, மேறை, மைறை, மொறை, மோறை, மௌறை,
வறை, வாறை, வீறை, வெறை, வேறை, வைறை, வௌறை,

சாத்தியமான முன்னசை + ஈற்றுசை ழி

ழி ஈற்றசையாக அ, ஒ, க, கி, கு, கொ, சு, செ, ப, பி, பொ, ம, மு, மொ, வ, வி என்ற முன்னசைகளுடன் இணைந்து பின்வரும் வினையடிகளை உருவாக்கியுள்ளன: அழி, ஒழி, கழி, கிழி, குழி, கொழி, சுழி, செழி, பழி, பிழி, பொழி, மழி, முழி, வழி, விழி . ஏனைய அசைகளுடன் சேர்ந்து உருவாக்கவியலும் பின்வரும் சாத்தியமான வினையடிகள் வழக்கிலில்லை அல்லது உருவாக்கப்படவில்லை:

ஆழி, இழி, ஈழி, உழி, ஊழி, எழி, ஏழி, ஐழி, ஒழி, ஔழி,
காழி, கீழி, கூழி, கெழி, கேழி, கைழி, கோழி, கௌழி,
பய்-இல் (பயில்), துய்-இல் (துயில்)

7.3.1.2.8 -இழ் வடிவாக்கி

-இழ் வடிவாக்கி க், ம், வ் என இறுதியுறும் 5 வினைவேர்களுடன் இணைந்து ஈரசை வினையடிகளை உருவாக்கும்.

அவ்-இழ் (அவிழ்), உம்-இழ், நெக்-இழ் (நெகிழ்), மக்-இழ் (மகிழ்), சிம்-இழ் (சிமிழ்).

7.3.1.2.9 -உள் வடிவாக்கி

க், ர் என இறுதியுறும் 7 வினைவேர்கள் -உள் வடிவாக்கியை ஏற்று வினையடிகளை உருவாக்கும்.

அர்-உள் (அருள்), இர்-உள் (இருள்), உர்-உள் (உருள்), சுர்-உள் (சுருள்), மர்-உள் (மருள்), வெக்-உள் (வெகுள்), வெர்-உள் (வெருள்).

7.3.1.3 நெட்டுயிர்-மெய் (V̆C) வடிவாக்கி

இதில் -ஆய் என்ற வடிவாக்கி மட்டுமே உள்ளது.

7.3.1.3.1 -ஆய் வடிவாக்கி

-ஆய் வடிவாக்கி ய், ர் என இறுதியுறும் 3 வினைவேர்களுடன் சேர்ந்து ஈரசை வினையடிகளை உருவாக்கும்.

ஆர்-ஆய் (ஆராய்), உர்-ஆய் (உராய்), சிர்-ஆய் (சிராய்).

7.3.1.4 மெய்-குற்றுயிர் (CV) வடிவாக்கிகள்

7.3.1.4.1 -கு வடிவாக்கி

-கு வடிவாக்கி க், ங், ல், ழ் என இறுதியும் 26 வினைவேர்களுடன் சேர்ந்து வினையடிகளை உருவாக்கும். -கு வடிவாக்கி ல் என இறுதியுறும் வினை வேர்களுடன் இரு நேர்வுகளிலும் ழ் என இறுதியுறும் வினை வேருடன் ஒரு நேர்விலும் மட்டும் சேர்ந்து வினையடியாக்கம் செய்கின்றது.

ஓங்-கு (ஓங்கு), சிக்-கு (சிக்கு), சொக்-கு (சொக்கு), தங்-கு (தங்கு), தாக்-கு (தாக்கு), தாங்-கு (தாங்கு), திக்-கு (திக்கு), தூக்-கு (தூக்கு), தேக்-கு (தேக்கு), தேங்-கு (தேங்கு), தொங்-கு (தொங்கு), நக்-கு (நக்கு), நல்-கு (நல்கு), நீக்-கு (நீக்கு), நீங்-கு (நீங்கு), நோக்-கு (நோக்கு), பொங்-கு (பொங்கு), போக்-கு (போக்கு), மக்-கு (மக்கு), மங்-கு (மங்கு), மல்-கு (மல்கு), முக்-கு (முக்கு), முங்-கு (முங்கு), முழ்-கு (முழ்கு), வாங்-கு (வாங்கு), விக்-கு (விக்கு), வீங்-கு (வீங்கு)

7.3.1.4.2 -சி வடிவாக்கி

-சி என்ற வடிவாக்கி ச் என இறுதியுறும் ஒரு வினை வேருடனும் ஞ் என இறுதியுறும் ஒரு வினைவேருடனும் சேர்ந்து வினையடிகளை உருவாக்கும்.

இச்-சி (இச்சி), வஞ்-சி (வஞ்சி)

7.3.1.4.3 -சு வடிவாக்கி

-சு வடிவாக்கி ச், ஞ் என இறுதியுறும் 8 வினைகளுடன் இணைந்து வினையடிகளை உருவாக்கும்.

எஞ்-சு (எஞ்சு), ஓச-சு (ஓச்சு), கெஞ்-சு (கெஞ்சு), சொஞ்-சு (கொஞ்சு), துஞ்-சு (துஞ்சு), பீச்-சு (பீச்சு), மிஞ்-சு (மிஞ்சு), மெச்-சு (மெச்சு), விஞ்-சு (விஞ்சு).

7.3.1.4.4

-டி வடிவாக்கி ட் என இறுதியுறும் 2 வினை வேர்களுடனும் ண் என முடியும் 2 வினைவேர்களுடனும் இணைந்து வினையடிகளை உருவாக்கும்.

கெட்-டி (கெட்டி), நீட்-டி நீட்டி)
தண்-டி (தண்டி), தெண்-டி (தெண்டி)

7.3.1.4.5 -டு வடிவாக்கி

-டு வடிவாக்கி ட், ண் என இறுதியுறும் 33 வினையடிகளுடன் இணைந்து வினையடிகளை உருவாக்கும்.

ஆட்-டு (ஆட்டு)), ஈட்-டு (ஈட்டு), ஓட்-டு (ஓட்டு), ஒண்-டு (ஒண்டு), ஓட்-டு (ஓட்டு), காட்-டு (காட்டு), கிட்-டு (கிட்டு), கூட்-டு (கூட்டு), கொட்-டு (கொட்டு), சீண்-டு (சீண்டு), சுட்-டு (சுட்டு), சுண்-டு (சுண்டு), சூட்-டு (சூட்டு), சொட்-டு (சொட்டு), தட்-டு (தட்டு), தாண்-டு (தாண்டு), திட்-டு (திட்டு), தீட்-டு (தீட்டு), தூண்-டு (தூண்டு)), தோண்-டு (தோண்டு), நாட்-டு (நாட்டு), நீட்-டு (நீட்டு), நொண்-டு (நொண்டு), பூட்-டு (பூட்டு), மண்-டு (மண்டு), மாட்-டு (மாட்டு), மீட்-டு (மீட்டு), முட்-டு (முட்டு), முண்-டு (முண்டு), மூட்-டு (மூட்டு), வாட்-டு (வாட்டு), வெட்-டு (வெட்டு), வேண்-டு (வேண்டு).

7.3.1.4.6 -ணு வடிவாக்கி

-ணு வடிவாக்கி ண் என இறுதியுறும் 4 வினைவேர்களுடன் சேர்ந்து வினையடிகளை ஆக்கும்.

எண்-ணு (எண்ணு), ஒண்-ணு (ஒண்ணு), பண்-ணு (பண்ணு), மண்-ணு

7.3.1.4.7 -தி வடிவாக்கி

-தி வடிவாக்கி த் என முடிவுறும் ஒரு வினைவேர்களுடன் சேர்ந்து வினையடிகளை ஆக்கும்.

தித்-தி (தித்தி)

7.3.1.4.8 -து வடிவாக்கி

-து வடிவாக்கி த், ந், ய் என இறுதியுறும் 21 வினை வேர்களுடன் சேர்ந்து வினையடியாக்கம் செய்யும்.

உந்-து (உந்து), எய்-து (எய்து), ஏந்-து (ஏந்து), ஒத்-து (ஒத்து), கத்-து (கத்து), காந்-து (காந்து), குந்-து (குந்து), கொத்-து (கொத்து), கொந்-து (கொந்து), சாத்-து (சாத்து), சிந்-து (சிந்து), சீந்-து (சீந்து), சேந்-து (சேந்து), தத்-து (தத்து), தொத்-து (தொத்து), நீந்-து (நீந்து), பத்-து (பத்து), பாத்-து (பாத்து), பிந்-து (பிந்து), பேத்-து (பேத்து), மொத்-து (மொத்து).

7.3.1.4.9 -பி வடிவாக்கி

-பி வடிவாக்கி ப் என முடிவுறும் 2 வினைவேர்களுடன் சேர்ந்து வினையடிகளை ஆக்கும். –பி வடிவாக்கி உருவாக்க இயலும் காண்-பி போன்றன திராவிட மொழிகளின் சொற்பிறப்பியல் அகராதியில் காணப்படவில்லை.

ஒப்-பி (ஒப்பி), தப்-பி (தப்பி)

7.3.1.4.10 -பு வடிவாக்கி

பு வடிவாக்கி ப், ம் என இறுதியுறும் வினை 18 வேர்களுடன் சேர்ந்து வினைவடிவுகளை ஆக்கம் செய்யும்.

அப்-பு (அப்பு), உப்-பு (உப்பு), ஒப்-பு (ஒப்பு), கப்பு (கப்பு), கூப்-பு (கூப்பு), சப்பு (சப்பு), சூப்பு (சூப்பு), தப்-பு (தப்பு), துப்-பு (துப்பு), ஓம்-பு (ஓம்பு), கூம்-பு (கூம்பு), சிம்-பு (சிம்பு), சூம்-பு (சூம்பு), சோம்-பு (சோம்பு), தேம்-பு (தேம்பு), நம்-பு (நம்பு), நெம்-பு (நெம்பு), வெம்-பு (வெம்பு).

7.3.1.4.11 -மு வடிவாக்கி

-மு என்ற வடிவாக்கி ம்-இல் இறுதியுறும் 4 வினையடிகளுடனும் ண் என இறுதியுறும் ஒரு வடினையடியுடனும் இணைந்து வினையடிகளை ஆக்கம் செய்யும்.

அம்-மு (அம்மு), அண்-மு (அண்மு), கும்-மு (கும்மு), பம்-மு (பம்மு), விம்-மு (விம்மு).

7.3.1.4.12 -லு வடிவாக்கி

-லு வடிவாக்கி ல்-இல் இறுதியுறும் 2 வினை வேர்களுடன் சேர்ந்து வினையடிகளை ஆக்கும்.

கெல்-லு (கெல்லு), தல்-லு

6.3.1.4.13 -வு வடிவாக்கி

-வு என்ற வடிவாக்கி வ்-இல் இறுதியுறும் 3 வினை வேர்களுடன் இணைந்து வினையடிகளை ஆக்கம் செய்யும்.

எவ்-வு (எவ்வு), ஒவ்-வு (ஒவ்வு), கவ்-வு (கவ்வு).

7.3.1.4.14 -ளு வடிவாக்கி

-ளு என்ற வடிவாக்கி ள்-இல் இறுதியுறும் 2 வினைவேர்களுடன் இணைந்து வினையடிகளை ஆக்கம் செய்யும்.

அள்-ளு (அள்ளு), துள்-ளு (துள்ளு)

7.3.1.4.15 -று வடிவாக்கி

-று வடிவாக்கி ற் என இறுதியுறும் 16 வினை வேர்களுடனும் ன் என இறுதியுறும் 4 வினை வேர்களுடனும் இணைந்து ஈரசை வினையடிகளை ஆக்கும்.

ஆற்-று (ஆற்று), ஊற்-று (ஊற்று), எற்-று (எற்று), ஏற்-று (ஏற்று), ஒற்-று (ஒற்று), சுற்-று (சுற்று), தீற்-று (தீற்று), தூற்-று (தூற்று), தெற்-று (தெற்று), தேற்-று (தேற்று), தோற்-று (தோற்று), நீற்-று (நீற்று), பற்-று (பற்று), போற்-று (போற்று), மாற்-று (மாற்று), முற்-று (முற்று).

ஊன்-று (ஊன்று), ஒன்-று (ஒன்று), கன்-று (கன்று), தோன்-று (தோன்று).

7.3.1.4.16 -னு வடிவாக்கி

-னு என்ற வடிவாக்கி 3 ன்-ஈற்று வினைவேர்களுடன் சேர்ந்து வினையடியாக்கம் செய்யும்.

பின்-னு (பின்னு), மன்-னு (மன்னு), முன்-னு (முன்னு)

6.3.1.5 மெய்-நெட்டுயிர் வடிவாக்கிகள்

7.3.1.5.1 -கா வடிவாக்கி ஏற்பவை

ங் என இறுதியுறும் ஒரு வினைவேர் மட்டுமே –கா என்ற வடிவாக்கியை ஏற்று வினையடியாக்கம் செய்கிறது.

அங்-கா (அங்கா),

7.3.1.5.2 -ணா வடிவாக்கி ஏற்பவை

-ண்-இல் இறுதியுறும் ஒரு வினைவேர்மட்டுமே –ணா என்ற வடிவாக்கியை ஏற்று வினையடியாக்கம் செய்கின்றது.

அண்-ணா (அண்ணா)

7.3.1.5.3 -லா வடிவாக்கி ஏற்பவை

-ல் என இறுதியுறும் ஒரு வினைவேர்மட்டுமே –லா என்ற வடிவாக்கியை ஏற்று வினையடியாக்கம் செய்கின்றது.

மல்-லா (மல்லா)

7.3.1.6 மெய்-மெய்-குற்றுயிர் (CCV) வடிவாக்கிகள்

7.3.1.6.1 -த்து வடிவாக்கி

-த்து என்ற வடிவாக்கி ர்-இல் இறுதியுறும் 1 வினைவேருடனும் ழ்-இல் இறுதியுறும் 2 வினைவேர்களுடனும் இணைந்து ஈரசை வினையடிகளை உருவாக்கும்.

சார்-த்து (சார்த்து), வாழ்-த்து (வாழ்த்து), வீழ்-த்து (வீழ்த்து)

7.3.1.6.2 -ச்சு வடிவாக்கி

-ச்சு என்ற வடிவாக்கி ய்-இல் இறுதியுறும் 2 வினைவேர்களுடன் இணைந்து வினையடியாக்கம் செய்யும்.

காய்-ச்சு (காய்ச்சு), பாய்-ச்சு (பாய்ச்சு)

7.3.1.6.3 -ப்பி வடிவாக்கி

-ப்பி என்ற வடிவாக்கி ய்-இல் இறுதியுறும் மெய்- என்ற வினைவேருடன் இணைந்து வினையடியாக்கம் செயயும். இது பொய்- போன்ற பிற வினையடிகளுடன் சேர்ந்து பொய்-ப்பி என வினையடியாக்கம் செய்யும் சாத்தியம் இருந்த போதிலும் அது திராவிட மொழிகளின் சொற்பிறப்பு அகராதியில் குறிப்பிடப்படவில்லை.

மெய்-ப்பி (மெய்ப்பி)

7.3.2. மூவசை வினையடிகளில் வரும் ஈரசை வடிவாக்கிகள்

மூவசை வினைவேர்களில் ஈரசை வடிவாக்கிகளைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்:

1. குற்றுயிர்-மெய்-குற்றுயிர் (VCV)
2. நெட்டுயிர்-மெய்-குற்றுயிர் (ṼCV) வடிவாக்கிகள்
3. குற்றுயிர்-மெய்-மெய்-குற்றுயிர் (VCCV) வடிவாக்கிகள்

7.3.2.1 குற்றுயிர்-மெய்-குற்றுயிர் (VCV) வடிவாக்கிகள்

7.3.2.1.1 -அகு வடிவாக்கி

-அகு வடிவாக்கி ச், ல், ள், ன் என இறுதியுறும் 4 வினை வேர்களுடன் சேர்ந்து வினையடிகளை உருவாக்கும்.

இள்-அகு (இளகு), பிச்-அகு (பிசகு), முன்-அகு (முனகு), வில்-அகு (விலகு)

7.3.2.1.2 -அசு வடிவாக்கி

-அசு வடிவாக்கி ர், ல் என இறுதியுறும் 2 வினை வேர்களுடன் சேர்ந்து வினையடிகளை உருவாக்கும்.

அல்-அசு (அலசு), உர்-அசு (உரசு).

7.3.2.1.3 -அடு வடிவாக்கி

-அடு வடிவாக்கி ர் என இறுதியுறும் ஒரு வினைவேருடன் இணைந்து வினையடியை உருவாக்கும்.

நெர்-அடு (நெர-டு)

7.3.2.1.4 -அலி வடிவாக்கி

-அலி வடிவாக்கி ட் என இறுதியுறும் ஒரு வினைவேருடன் இணைந்து வினையடியை உருவாக்கும்.

புட்-அல் (புடலி).

7.3.2.1.5 -அவி வடிவாக்கி

–அவி வடிவாக்கி ட் என இறுதியுறும் 1 வினை வேருடன் இணைந்து வினையடியை ஆக்கம் செய்யும்.

புட்-அவி (புடவி).

7.3.2.1.6 -அவு வடிவாக்கி

–அவு வடிவாக்கி க், ட், த், ர், ல் என இறுதியுறும் வினை வேர்களுடன் இணைந்து 7 வினையடிகளை ஆக்கம் செய்யும்.

அக்-அவு (அக-வு), அண்-அவு (அணவு), உத்-அவு (உதவு), உல்-அவு (உலவு), தட்-அவு (தடவு), நட்-அவு (நடவு), நிர்-அவு (நிரவு), நில்-அவு (நிலவு)

7.3.2.1.7 -அறு வடிவாக்கி

–அறு வடிவாக்கி ட், த், ல், ள் என இறுதியுறும் வினை வேர்களுடன் இணைந்து 6 வினையடிகளை ஆக்கம் செய்யும்.

அல்-அறு (அலறு), உத்-அறு (உதறு), கிள்-அறு (கிளறு), குள்-அறு (குளறு), தவ்-அறு (தவறு), பத்-அறு (பதறு)

7.3.2.1.8 -இடு வடிவாக்கி

-இடு என்ற துணைவினை வடிவாக்கி ர், ம் என இறுதியுறும் 2 பெயர்ச்சொற்களுடன் சேர்ந்து வினையடிகளை ஆக்கம் செய்யும். போர்-இடு, கூற்-இடு என்பன திராவிட மொழிகளின் சொற்பிறப்பியல் அகராதியில் தரப்படவில்லை. ஞெமி (ஞெம்-இ) என்பது வினையாக உள்ளதால், ஞெமிடு என்பததை ஞெமி என்பதிலிருந்து பெறப்பட்ட இரண்டாம் நிலை வினையடியாகக் கொள்ளவேண்டும்.
வீர்-இடு (வீரிடு), ஞெம்-இடு (ஞெமிடு)

7.3.2.1.9 -இவி வடிவாக்கி

வடிவாக்கி –இவி ர், ற் என இறுதியுறும் 2 வினைவேர்களுடன் சேர்ந்து வினையடிகளை ஆக்கம் செய்யும்.

அர்-இவி (அரிவி), அற்-இவி (அறிவி)

7.3.2.1.10 -இளி வடிவாக்கி

வடிவாக்கி –இளி ம் என இறுதியுறும் ஒரு வினைவேருடன் சேர்ந்து வினையடியாக்கம் செய்யும்.

சிம்-இளி (சிமிளி)

7.3.2.1.11 -இறு வடிவாக்கி

வடிவாக்கி –இறு ச் என இறுதியுறும் ஒரு வினைவேருடன் சேர்ந்து வினையடியாக்கம் செய்யும்.

விச்-இறு (விசி-று)

7.3.2.1.12 -உகு வடிவாக்கி

-உகு என்ற வடிவாக்கி ர், ள், ற் என இறுதியுறும் 13 வேர்களுடன் இணைந்து வினையடிகளை உருவாக்குகின்றன.

அர்-உகு (அருகு), உர்-உகு (உருகு), கர்-உகு (கருகு), குற்-உகு (குறுகு), சற்-உகு (சறுகு), செர்-உகு (செருகு), தற்-உகு (தறுகு), திர்-உகு (திருகு), பர்-உகு (பருகு), புள்-உகு (புளுகு), பெர்-உகு (பெருகு), மற்-உகு (மறுகு), முற்-உகு (முறுகு).

7.3.2.1.13 -உடு வடிவாக்கி

-உடு வடிவாக்கி ர் என இறுதியுறும் 2 வினைவேர்களுடன் இணைந்து வினையடியாக்கம் செய்யும்.

திர்-உடு (திருடு), நெர்-உடு (நெருடு)

7.3.2.1.14 -உது வடிவாக்கி

-உது வடிவாக்கி ர் என இறுதியுறும் 2 வினைவேர்களுடன் இணைந்து வினையடியாக்கம் செய்யும்.

பொர்-உது (பொருது), கர்-உது (கருது)

7.3.2.1.15 -உமு வடிவாக்கி

-உமு வடிவாக்கி ர், ற் என இறுதியுறும் 2 வினைவேர்களுடன் சேர்ந்து வினையடிகளை ஆக்கம் செய்யும்

உற்-உமு (உறுமு), செர்-உமு (செருமு)

7.3.2.1.16 -உவி வடிவாக்கி

-உவி வடிவாக்கி ர் என இறுதியுறும் 2 வினையடிகளுடன் இணைந்து வினையடிகளை ஆக்கம் செய்யும்.

தர்-உவி (தருவி), வர்-உவி (வருவி)

7.3.2.1.17 -உவு வடிவாக்கி

-உவு வடிவாக்கி ர், ழ், ற் என இறுதியுறும் 5 வினையடிகளுடன் இணைந்து வினையடிகளை ஆக்கம் செய்யும்.

கற்-உவு (கறுவு), தழ்-உவு (தழுவு), நழ்-உவு (நழுவு), நிற்-உவு (நிறுவு), மர்-உவு (மருவு)

6.3.2.1.18 -உளு வடிவாக்கி

-உளு வடிவாக்கி த் என இறுதியுறும் 1 வினையடியுடன் இணைந்து வினையடியை ஆக்கம் செய்யும்.

பொத்-உளு (பொதுளு)

7.3.2.1.19 -ஐவி வடிவாக்கி

வடிவாக்கி –ஐ-வி ள்-இல் இறுதியுறும் ஒரு வினையடியுடன் சேர்ந்து வினையடியை ஆக்கம் செய்கின்றது. –ஐ-வி பிற பல வேர்களுடன் சேர்ந்து வினையடியாக்கம் செய்யவல்லது என்றாலும் இது ஒன்று மட்டுமே திராவிட மொழிகளின் சொற்பிறப்பியல் அகராதியில் இடம்பெற்றுள்ளது.

விள்-ஐ-வி (விளைவி),

7.3.2.2 நெட்டுயிர்-மெய்-குற்றுயிர் (V̆CV) வடிவாக்கிகள்

7.3.2.2.1 -ஆடு வடிவாக்கி

-ஆடு என்ற வினையாக்கி ல், ர் என இறுதியுறும் வினையடிகளுடன் சேர்ந்து வினையடியாக்கம் செய்யும். -ஆடு ஒரு வினையாக்கியாகப் பிற வினை வேர்களுடன் சேர்ந்து வினையாக்கம் செய்யவியலும் என்றாலும் திராவிட மொழிகளின் சொற்பிறப்பியல் அகராதியில் கீழ்வருவன மட்டுமே இடம்பெற்றுள்ளன.

அல்-ல்–ஆடு (அல்லாடு), போர்-ஆடு,

7.3.2.2.2 -ஆசு

இவ்வினையடிகள் திராவிட மொழிகளின் சொற் பிறப்பியல் அகராதியில் தரப்படவில்லை.

கட்-ஆசு (கடாசு) , விள்-ஆசு (விளாசு).

7.3.2.2.3 -ஆவு வடிவாக்கி ஏற்பவை

-ஆவு என்ற வடிவாக்கி ச், ட், ர், ள் என இறுதியுறும் 6 வினை வேர்கள் ஏற்று வினையடிகளை ஆக்குகின்றன. இது அடிப்படையில் ஒரு வினையடியாகும். ஆவு ஒரு வினையாக வருவதால் இதை வினையாக்க வினையாகக் (அல்லது வினையாக்கியாக) கருதவியலும்.

அர்-ஆவு (அராவு), அவ்-ஆவு (அவாவு) அள்-ஆவு (அளாவு), உச்-ஆவு (உசாவு), கட்-ஆவு (கடாவு), வள்-ஆவு (வளாவு)

7.3.2.2.4 -ஆறு

-ஆறு என்ற வினையாக்கி ம் என இறுதியுறும் 2 வினைவேர்களுடன் இணைந்து வினையடியாக்கம் செய்யும்.

ஏம்-ஆறு (ஏமறு), தடும்-ஆறு

7.3.2.3 குற்றுயிர்-மெய்-மெய்-குற்றுயிர் (VCCV) வடிவாக்கிகள்

7.3.2.3.1 -*அக்கு* வடிவாக்கி

-*அக்கு* என்ற வடிவாக்கி ச், ட், த், ய், ல், ள், ற் என இறுதியுறும் 15 வினை வேர்களுடன் சேர்ந்து வினையடிகளை ஆக்குகின்றன.

அச்-அக்கு (அசக்கு), அட்-அக்கு (அடக்கு), அத்-அக்கு (அதக்கு), இய்-அக்கு (இயக்கு), இற்-அக்கு (இறக்கு), கச்-அக்கு (கசக்கு) கல்-அக்கு (கலக்கு), துவ்-அக்கு (துவக்கு), மச்-அக்கு (மசக்கு), மட்-அக்கு (மடக்கு), மய்-அக்கு (மயக்கு), முட்-அக்கு (முடக்கு), வத்-அக்கு (வதக்கு), விள்-அக்கு (விளக்கு), வில்-அக்கு (விலக்கு).

7.3.2.3.2 -*அங்கு* வடிவாக்கி

-அங்கு என்ற வடிவாக்கி ச், ட், ண், த், ய், ர், ல், ள், ற், ன் என இறுதியுறும் 26 வினை வேர்களுடன் சேர்ந்து வினையடியாக்கம் செய்யும்.

அச்-அங்கு (அசங்கு), அட்-அங்கு (அடங்கு), அண்-அங்கு (அணங்கு), இண்-அங்கு (இணங்கு), இர்-அங்கு (இரங்கு), இல்-அங்கு (இலங்கு), இற்-அங்கு (இறங்கு), உற்-அங்கு (உறங்கு), ஏச்-அங்கு (ஏசங்கு), கச்-அங்கு (சசங்கு), கல்-அங்கு (கலங்கு), சுண்-அங்கு (சுணங்கு), துல்-அங்கு (துலங்கு), துவ்-அங்கு (துவங்கு), தொட்-அங்கு (தொடங்கு), பிண்-அங்கு (பிணங்கு), மச்-அங்கு (மசங்கு), மட்-அங்கு (மடங்கு), மய்-அங்கு (மயங்கு), முட்-அங்கு (முடங்கு), முண்-அங்கு (முணங்கு), முய்-அங்கு (முயங்கு), முன்-அங்கு (முனங்கு), வண்-அங்கு (வணங்கு), வத்-அங்கு (வதங்கு), விள்-அங்கு (விளங்கு)

7.3.2.3.4 -அஞ்சு வடிவாக்கி

-அஞ்சு வடிவாக்கி ர்-இல் இறுதியுறும் 2 வினை வேருடன் சேர்ந்து வினையடியை உருவாக்கும்.

முர்-அஞ்சு (முரஞ்சு$_1$), முர்-அஞ்சு (முரஞ்சு$_2$)

7.3.2.3.5 -*அட்டு* வடிவாக்கி

-*அட்டு* என்ற வடிவாக்கி க், த், ர், ல், வ் என இறுதியுறும் 9 வினை வேர்களுடன் இணைந்து வினையடியாக்கம் செய்கின்றது.

அக்-அட்டு (அகட்டு), அத்-அட்டு (அதட்டு), அல்-அட்டு (அலட்டு), இர்-அட்டு (இரட்டு), கும்-அட்டு (குமட்டு), சவ்-அட்டு (சவட்டு), திர்-அட்டு (திரட்டு), துவ்-அட்டு (துவட்டு), புர்-அட்டு (புரட்டு), மிர்-அட்டு (மிரட்டு).

7.3.2.3.6 -*அட்டி* (அட்ட்-இ) வடிவாக்கி

-அட்டி வடிவாக்கி ர் என இறதியுறும் ஒரு வினை வேருடன் இணைந்து வினையடியாக்கம் செய்யும். இதை அட்ட்-இ என்ற கூட்டு வடிவாக்கியாகக் கருதலாம். -அட்ட்-ஆல் ஆக்கப்பட்ட வினையடியிலிருந்து மேலும் -இ வடிவாக்கியின் பிரயோகத்தால் மற்றொரு வினையடி பெறப்பட்டது எனக் கருதலாம்.

இர்-அட்ட்-இ (இரட்டி)

7.3.2.3.7 -*அண்டு* (அண்-டு) வடிவாக்கி

-அண்டு வடிவாக்கி ர் என இறதியுறும் 2 வினை வேர்களுடன் இணைந்து வினையடியாக்கம் செய்யும்.

சுர்-அண்டு (சுரண்டு), முர்-அண்டு (முரண்டு)

7.3.2.3.8 -*அ-த்து* வடிவாக்கி

-அத்து வடிவாக்கி ட், ம், ர் என இறதியுறும் 7 வினை வேர்களுடன் இணைந்து வினையடியாக்கம் செய்கிறது. இதை அத்-து எனக் கூட்டு வடிவாக்கியாகக் கருதவேண்டும். -அ-ஆல் ஆக்கப்பட்ட வினையடிகளின் மீது மேலும் -த்து வடிவாக்கியின் பிரயோகத்தால் இரண்டாம்நிலை வினையடிகள் பெறப்பட்டன எனக் கருதவேண்டும்.

கட்-அ-த்து (கடத்து), கிட்-அ-த்து (கிடத்து), சும்-அ-த்து (சுமத்து), துர்-அ-த்து (துரத்து), நட்-அ-த்து (நடத்து), நிர்-அத்து (நிர்-அத்து), பர்-அ-த்து (பரத்து)

7.3.2.3.9 -*அ-ப்பு* வடிவாக்கி

-அ-ப்பு வடிவாக்கி ச், த், ர், ழ் என இறதியுறும் 5 வினை வேருடன் இணைந்து வினையடியாக்கம் செய்யும். இதை அ-ப்பு எனக் கூட்டு வடிவாக்கியாகக் கருதவேண்டும். அ-ஆல் ஆக்கப்பட்ட வினையடிகளின் மீது மேலும் -ப்பு வடிவாக்கியின் பிரயோகத்தால் இரண்டாம்நிலை வினையடிகள் பெறப்பட்டன எனக் கருதவேண்டும்.

குத்-அ-ப்பு (குதப்பு), குழ்-அ-ப்பு (குழப்பு), நிர்-அ-ப்பு (நிரப்பு), பச்-அ-ப்பு (பசப்பு), பர்-அ-ப்பு (பரப்பு)

7.3.2.3.10 -*அ-ம்பு* வடிவாக்கி

-*அ-ம்பு* வடிவாக்கி ர், ல், ள் என இறதியுறும் 5 வினை வேருடன் இணைந்து வினையடியாக்கம் செய்யும். இதை அ-ம்பு எனக் கூட்டு வடிவாக்கியாகக் கருதவேண்டும். அ-ஆல் ஆக்கப்பட்ட வினையடிகளின் மீது மேலும் -ம்பு வடிவாக்கியின் பிரயோகத்தால் இரண்டாம்நிலை வினையடிகள் பெறப்பட்டன எனக் கருதவேண்டும்.

அல்-அ-ம்பு (அலம்பு), உல்-அ-ம்பு (உலம்பு), கிள்-அ-ம்பு (கிளம்பு), நிர்-அ-ம்பு (நிரம்பு), புல்-அ-ம்பு (புலம்பு), விள்-அ-ம்பு (விளம்பு)

7.3.2.3.11 -அற்சி வடிவாக்கி

-*அற்சி* வடிவாக்கி ற் என இறதியுறும் ஒரு வினை வேருடன் இணைந்து வினையடியாக்கம் செய்யும். இதை அற்-சி (அல்-சி) எனக் கூட்டு வடிவாக்கியாகக் கருதவேண்டும். அற்-ஆல் ஆக்கப்பட்ட வினையடியின் மீது மேலும் -சி வடிவாக்கியின் பிரயோகத்தால் இரண்டாம்நிலை வினையடி பெறப்பட்டது எனக் கருதவேண்டும்.

முய்-அற்-சி (முயற்சி)

7.3.2.3.12 -அற்று வடிவாக்கி

-அற்று வடிவாக்கி க், ய், ர், ழ் என இறதியுறும் 5 வினை வேருடன் இணைந்து வினையடியாக்கம் செய்யும். –*அற்று* வடிவாக்கி ற் என இறதியுறும் ஒரு வினை வேர்களுடன் இணைந்து வினையடியாக்கம் செய்யும். இதை அற்-று (அல்-று) எனக் கூட்டு வடிவாக்கியாகக் கருதவேண்டும். அற்-ஆல் ஆக்கப்பட்ட வினையடியின் மீது மேலும் -று வடிவாக்கியின் பிரயோகத்தால் இரண்டாம்நிலை வினையடிகள் பெறப்பட்டன எனக் கருதவேண்டும்.

அக்-அற்-று (அகற்று), அர்-அற்-று (அரற்று), இய்-அற்-று (இயற்று), கழ்-அற்-று (கழற்று), சுழ்-அற்-று (சுழற்று)

7.3.2.3.13 -இஞ்சு

-இஞ்சு வடிவாக்கி ற் என இறதியுறும் ஒரு வினை வேருடன் இணைந்து வினையடியாக்கம் செய்யும். இதை –இ-ஞ்சு (இஞ்சு) எனக் கூட்டு வடிவாக்கியாகக் கருதவேண்டும். இ-ஆல் ஆக்கப்பட்ட வினையடியின் மீது மேலும் -ஞ்சு வடிவாக்கியின் பிரயோகத்தால் இரண்டாம்நிலை வினையடி பெறப்பட்டது எனக் கருதவேண்டும்.

உற்-இ-ஞ்சு (உறிஞ்சு)

7.3.2.3.14 -இட்டு வடிவாக்கி ஏற்பவை

–இட்டு என்ற வடிவாக்கி ம் என இறுதியுறும் ஒரு வினை வேருடன் சேர்ந்து வினையடியாக்கம் செய்கின்றன. இதை –இ-ட்டு (இட்டு) எனக் கூட்டு வடிவாக்கியாகக் கருதவேண்டும். இ-ஆல் ஆக்கப்பட்ட வினையடிகளின் மீது மேலும் -ட்டு வடிவாக்கியின் பிரயோகத்தால் இரண்டாம்நிலை வினையடிகள் பெறப்பட்டன எனக் கருதவேண்டும்.

சிம்-இட்டு (சிமிட்டு), நிம்-இட்டு

7.3.2.3.15 -இண்டு

–இண்டு என்ற வடிவாக்கி -ம் என இறுதியுறும் ஒரு வினை வேருடன் மட்டுமே சேர்ந்து வினையடியாக்கம் செய்யும். இதை –இ-ண்டு (இண்டு) எனக் கூட்டு வடிவாக்கியாகக் கருதவேண்டும். இ-ஆல் ஆக்கப்பட்ட வினையடியின் மீது மேலும் -ண்டு வடிவாக்கியின் பிரயோகத்தால் இரண்டாம்நிலை வினையடி பெறப்பட்டது எனக் கருதவேண்டும்.

நிம்-இ-ண்டு (நிமிண்டு)

7.3.2.3.16 -*இப்பி* வடிவாக்கி

-இப்பி என்ற வடிவாக்கி த் என இறுதியுறும் 1 வினை வேருடன் மட்டுமே சேர்ந்து வினையடியாக்கம் செய்கின்றது.

புத்-இப்பி (புதுப்பி)

7.3.2.3.17 -*இற்று* வடிவாக்கி

–இற்று என்ற வடிவாக்கி -ல் என இறுதியுறும் ஒரு வினை வேருடன் மட்டும் சேர்ந்து வினையடியாக்கம் செய்யும். –இதை இற்-று (இல்-று) எனக் கூட்டு வடிவாக்கியாகக் கருதவேண்டும். –இற்/-இல் என்ற வடிவாக்கியால் ஆக்கப்பட்ட வினையடியின் மீது மேலும் -று வடிவாக்கியின் பிரயோகத்தால் இரண்டாம்நிலை வினையடி பெறப்பட்டது எனக் கருதவேண்டும்.

பய்-இற்-று (பயிற்று)

7.3.2.3.18 –*உக்கு வடிவாக்கி*

-உக்கு என்ற வடிவாக்கி ச், ட், த், ம், ர், ல், ற், ன் என இறுதியும் 35 வேர்களுடன் இணைந்து வினையடிகளை ஆக்குகின்றன.

அட்-உக்கு (அடுக்கு), அத்-உக்கு (அதுக்கு), அம்-உக்கு (அமுக்கு), அல்-உக்கு (அலுக்கு), இட்-உக்கு (இடுக்கு), இற்-உக்கு (இறுக்கு), உர்-உக்கு (உருக்கு), உல்-உக்கு (உலுக்கு), உற்-உக்கு (உறுக்கு), ஒட்-உக்கு (ஒடுக்கு), ஒத்-உக்கு (ஒதுக்கு), கர்-உக்கு (கருக்கு), கிற்-உக்கு (கிறுக்கு), குல்-உக்கு (குலுக்கு), குற்-உக்கு (குறுக்கு), சற்-உக்கு (சறுக்கு), சுர்-உக்கு (சுருக்கு), சுள்-உக்கு (சுளுக்கு), செத்-உக்கு (செதுக்கு), ஞெம்-உக்கு (ஞெமுக்கு), தட்-உக்கு (தடுக்கு), தள்-உக்கு (தளுக்கு), நச்-உக்கு (நசுக்கு), நட்-உக்கு (நடுக்கு), நற்-உக்கு (நறுக்கு), நுண்-உக்கு (நுணுக்கு), நொற்-உக்கு (நொறுக்கு), பத்-உக்கு (பதுக்கு), பித்-உக்கு (பிதுக்கு), புத்-உக்கு (புதுக்கு), பெர்-உக்கு (பெருக்கு), பொற்-உக்கு (பொறுக்கு), மின்-உக்கு (மினுக்கு), முட்-உக்கு (முடுக்கு), முற்-உக்கு (முறுக்கு).

7.3.2.3.19 -*உங்கு* வடிவாக்கி

-உங்கு வடிவாக்கி ச், ட், ண், த், ம், ர், ல், ற், ன் என இறுதியும் 18 வினைவேர்களுடன் சேர்ந்து வினையடிகளை உருவாக்கும்.

அத்-உங்கு (அதங்கு), அம்-உங்கு (அமுங்கு), அன்-உங்கு (அனுங்கு), ஒட்-உங்கு (ஒடுங்கு), ஒத்-உங்கு (ஒதுங்கு), குல்-உங்கு (குலுங்கு), சிண்-உங்கு (சிணுங்கு), ஞெம்-உங்கு (ஞெமுங்கு), நச்-உங்கு (நசுங்கு), நட்-உங்கு (நடுங்கு), நர்-உங்கு (நருங்கு), நெர்-உங்கு (நெருங்கு), நொற்-உங்கு (நொறுங்கு), பத்-உங்கு (பதுங்கு), பிட்-உங்கு (பிடுங்கு), பித்-உங்கு (பிதுங்கு), பொச்-உங்கு (பொசுங்கு), மின்-உங்கு (மினுங்கு).

7.3.2.3.20 *-உட்டு வடிவாக்கி*

-உட்டு என்ற வடிவாக்கி ர், ம் என இறுதியுறும் 7 வினை வேர்களுடன் சேர்ந்து வினையடியாக்கம் செய்கின்றது.

அர்-உட்டு (அருட்டு) இர்-உட்டு (இருட்டு), உர்-உட்டு (உருட்டு), சுர்-உட்டு (சுருட்டு), நம்-உட்டு (நமுட்டு), மர்-உட்டு (மருட்டு) வெர்-உட்டு (வெருட்டு).

7.3.2.3.21 -உத்தி வடிவாக்கி

-உத்தி என்ற வடிவாக்கி க் என இறுதியுறும் 1 வினை வேர் மட்டுமே சேர்ந்து வினையடியாக்கம் செய்கின்றது.

பக்-உத்தி (பகுத்தி)

7.3.2.3.22 *-உத்து* வடிவாக்கி

-உத்து என்ற வடிவாக்கி ட், ர், ல், ற் என இறுதியுறும் 11 வினை வேர்கள் மட்டுமே சேர்ந்து வினையடியாக்கம் செய்கின்றது.

உட்-உத்து (உடுத்தது), உற்-உத்து (உறுத்து), செல்-உத்து (செலுத்து), திர்-உத்து (திருத்து), நிற்-உத்து (நிறுத்து), பட்-உத்து (படுத்து), பொர்-உத்து (பொருத்து), வர்-உத்து (வருத்து$_1$), வர்-உத்து (வருத்து$_2$), வழ்-உத்து (வழுத்து)

7.3.2.3.23 *-உந்து* வடிவாக்கி

-உந்து என்ற வடிவாக்கி ர் என இறுதியுறும் 2 வினை வேர்கள் மட்டுமே சேர்ந்து வினையடியாக்கம் செய்கின்றது.

திர்-உந்து (திருந்து), வர்-ந்து (வருந்து)

7.3.2.3.24 *-உப்பு* வடிவாக்கி

-உப்பு என்ற வடிவாக்கி ர், ல், ன் என இறுதியுறும் 4 வினை வேர்களுடன் சேர்ந்து வினையடியாக்கம் செய்கின்றது.

அன்-உப்பு (அனுப்பு), உல்-உப்பு (உலுப்பு), சில்-உப்பு (சிலுப்பு), திர்-உப்பு (திருப்பு)

7.3.2.3.25 -*உம்பு* வடிவாக்கி

-உம்பு என்ற வடிவாக்கி த், ர், ல், ழ், ள் என இறுதியுறும் 5 வினை வேர்களுடன் மட்டுமே சேர்ந்து வினையடியாக்கம் செய்கின்றது.

சில்-உம்பு (சிலும்பு), திர்-உம்பு (திரும்பு), தழ்-உம்பு (தழும்பு), துள்-உம்பு (துளும்பு), வெத்-உம்பு (வெதும்பு).

7.3.2.3.26 -ஐஞ்சு வடிவாக்கி

-ஐஞ்சு வடிவாக்கி ள், ற் என்பதில் இறுதியுறும் 2 வினை வேருடன் சேர்ந்து வினையடியை உருவாக்கும்.

இற்-ஐஞ்சு (இறைஞ்சு), இள்-ஐ-ஞ்சு

7.3.2.4 நெட்டுயிர்-மெய்-மெய்-குற்றுயிர் (Vஆஆஅ) வடிவாக்கிகள்

7.3.2.4.1 -ஆங்கு வடிவாக்கி

-ஆங்கு வடிவாக்கி ர் என்பதில் இறுதியுறும் 1 வினை வேருடன் சேர்ந்து வினையடியை உருவாக்கும்.

நர்-ஆங்கு (நராங்கு)

7.3.2.4.2 -ஆத்து வடிவாக்கி

-ஆத்து வடிவாக்கி ல் என்பதில் இறுதியுறும் 1 வினை வேருடன் சேர்ந்து வினையடியை உருவாக்கும்.

உல்-ஆத்து (உலாத்து)

7.3.2.5 குற்றுயிர்-மெய்-மெய்-மெய்-குற்றுயிர் (VCCCV) வடிவாக்கிகள்

7.3.2.5.1 -அர்-த்து வடிவாக்கி

-அர்-த்து என்ற கூட்டு வடிவாக்கி ச், ண், ம், ர், ல், வ், ள் என இறுதியுறும் 10 வினை வேர்களுடன் சேர்ந்து வினையடிகளை உருவாக்கும். –அர் என்ற வடிவாக்கி ச், ண், ம், ர், ல், வ், ள் இறுதியுறும் வினைவேர்களுடன் இணைந்து உருவாக்கப்பட்ட வினையடிகளுடன் -த்து என்ற வடிவாக்கி மேலும் சேர்ந்து புதிய வினையடிகளை ஆக்கும்.

அச்-அர்-த்து (அசர்த்து), அம்-அர்-த்து (அமர்த்து), உண்-அர்-த்து (உணர்த்து), உய்-அர்-த்து (உயர்த்து), உல்-அர்-த்து (உலர்த்து), கிள்-அர்-த்து (கிளர்த்து), தள்-அர்-த்து (தளர்த்து), துவ்-அர்-த்து (துவர்த்து), மல்-அர்-ர்த்து (மலர்த்து), வள்-அர்த்து (வளர்த்து)

7.3.2.5.2 -அழ்த்து வடிவாக்கி

-அழ்-த்து என்ற கூட்டு வடிவாக்கி ழ்-இல் இறுதியுறும் 2 வினைகளுடன் சேர்ந்து வினையடிகளை உருவாக்கம் செய்கிறது. –அழ் ழ்-இல் இறுதியுறும் வினையடியுடன் இணைந்து உருவாக்கப்பட்ட வினையடிகளுடன் -த்து என்ற வடிவாக்கி மேலும் சேர்ந்து புதிய வினையடிகளை ஆக்கியுள்ளது. சாத்தியமான புக்-அழ்-த்து (புகழ்த்து) போன்ற வினையடிகள் திராவிட மொழிகளின் பிறப்பியல் அகராதியில் தரப்படவில்லை.

திக்-அழ்-த்து, நிக்-அழ்-த்து (நிகழ்த்து)

7.3.2.5.3 -இர்த்து வடிவாக்கி

இர்-த்து என்ற கூட்டு வடிவாக்கி ம்-இல் இறுதியுறும் 1 வினையடியுடன் சேர்ந்து வினையடியை உருவாக்கும். –இர் ம்-இல் இறுதியுறும் வினையடியுடன் இணைந்து உருவாக்கப்பட்ட வினையடியுடன் -த்து என்ற வடிவாக்கி மேலும் சேர்ந்து புதிய வினையடியை ஆக்கும்.

நிம்-இர்-த்து (நிமிர்த்து)

7.3.2.5.4 இழ்-த்து வடிவாக்கி

இழ்-த்து என்ற கூட்டு வடிவாக்கி ம்-இல் இறுதியுறும் 1 வினையடியுடன் சேர்ந்து வினையடியை உருவாக்கும். –இழ் ம்-இல் இறுதியுறும் வினையடியுடன் இணைந்து உருவாக்கப்பட்ட வினையடியுடன் -த்து என்ற வடிவாக்கி மேலும் சேர்ந்து புதிய வினையடியை ஆக்கும்.

அம்-இழ்-த்து

7.3.2.5.5 இழ்-ந்து வடிவாக்கி

இழ்-ந்து என்ற கூட்டு வடிவாக்கி ம்-இல் இறுதியுறும் 1 வினையடியுடன் சேர்ந்து வினையடியை உருவாக்கும். –இழ் ம்-இல் இறுதியுறும் வினையடியுடன் இணைந்து உருவாக்கப்பட்ட வினையடியுடன் -ந்து என்ற வடிவாக்கி மேலும் சேர்ந்து புதிய வினையடியை ஆக்கும்.

அம்-இழ்-ந்து

7.3.2.6 மெய்-குற்றுயிர்-மெய்-குற்றுயிர்

7.3.2.6.1 -புளி வடிவாக்கி

-புளி என்ற கூட்டு வடிவாக்கி ம்-இல் இறுதியுறும் 1 வினையடியுடன் சேர்ந்து வினையடியை உருவாக்கும்.

சிம்-புளி

7.3.2.7 மெய்-நெட்டுயிர்-மெய்-மெய்-குற்றுயிர்

7.3.2.7.1 லா-த்து வடிவாக்கி

–லா-த்து என்ற வடிவாக்கி ல் என இறுதியுறும் ஒரு வினை வேருடன் மட்டுமே சேர்ந்து வினையடியாக்கம் செய்கின்றது. ல்-இல் இறுதியுறும் வினைய வேருடன் -லா என்ற வடிவாக்கி சேர்ந்து உருவாக்கப்பட்ட வினையடியுடன் -த்து என்ற வடிவாக்கி மேலும் சேர்ந்து மற்றொரு வினையை உருவாக்கியுள்ளது.

மல்-லாத்து (மல்லாத்து)

7.3.3 வடிவாக்கிகளின் புள்ளியல் விவரங்கள்

வடிவாக்கிகளின் அசையமைப்புகளும் அவற்றின் வகைகளும் அவை சேரும் வினையடிகளின் இறுதிகளும் அவை சேரும் வினை வேர்களின் எண்ணிக்கையும் கீழே அட்டவணைப்படுத்தித் தரப்பட்டுள்ளன. அட்டவணைகள் வடிவாக்கிகளையும் அவை சேரும் வினைவேர்களின் இறுதிகளையும் வடிவாக்கிகள் சேர்ந்து உருவாக்கப்படும் வினையடிகளின் எண்ணிக்கையையும் தருகின்றன. இவ்வட்டவணைகளிலிருந்து வடிவாக்கிகள் சேரும் கட்டுப்பாடுகளையும் வடிவாக்கிகளின் விளைவாக்கத்தையும் அறிய முடிகின்றது.

குற்றுயிர் வடிவாக்கிகள் (ஏ)

வரிசை எண்	வடிவாக்கிகள்	வடிவாக்கிகள் சேரும் வினைவேர்களின் இறுதிகள்	வடிவாக்கிகள் சேரும் வினையடிகளின் எண்ணிக்கை
1	-அ	க், ச், ட், த், ற், ன், ய், ர், ல், வ், ள்	30
2	-இ	ச், ட், ண், த், ம், ய், ல், வ், ழ், ள், ற், ன்	104
3	-உ	க், ச், ட், த், ற், ண், ன், ய், ர்,	74

		ல், வ், ழ்	
4	-ஐ	க், ச், ட், த், ற், ண், ன், ய், ர், ல், வ், ழ், ள்	74
மொத்தம்			280

நெட்டுயிர் (Ṽ) வடிவாக்கி

எண்	**வடிவாக்கிகள்**	**வடிவாக்கிகள் சேரும் வினையடிகளின் இறுதிகள்**	**வடிவாக்கிகள் சேரும் வினையடிகளின் எண்ணிக்கை**
1	ஆ	க், ண், ல்	2
மொத்தம்			2

உயிர்-மெய் (ஏஊ) வடிவாக்கிகள்

வரிசை எண்	**வடிவாக்கிகள்**	**வடிவாக்கிகள் சேரும் வினையடிகளின் இறுதிகள்**	**வடிவாக்கிகள் சேரும் வினையடிகளின் எண்ணிக்கை**
1	-அண்	ர்	1
2	-அர்	க், ச், ட், ண், த், ம், ய், ர், ல், வ், ள், ற், ன்	27
3	-அல்	க், ய், ர், ல், ழ், ன்	6
4	-அழ்	க், வ்	2
5	-அள்	ர், ற், வ்	6
6	-இர்	க், த், ம், ல், வ், ள்	14
7	-இல்	ய்	2
8	-இழ்	க், வ், ம்	5
9	-உள்	க், ர்	7

மொத்தம்	68

நெட்டுயிர்-மெய் (Vஉ) வடிவாக்கி

வரிசை எண்	**வடிவாக்கிகள்**	**வடிவாக்கிகள் சேரும் வினையடிகளின் இறுதிகள்**	**வடிவாக்கிகள் சேரும் வினையடிகளின் எண்ணிக்கை**
1	-ஆய்	ய், ர்	3
மொத்தம்			3

மெய்-உயிர் வடிவாக்கிகள்

எண்	**வடிவாக்கிகள்**	**வடிவாக்கிகள் சேரும் வினையடிகளின் இறுதிகள்**	**வடிவாக்கிகள் சேரும் வினையடிகளின் எண்ணிக்கை**
1.	-கு	க், ங், ல், ழ்	27
2.	-சி	ச், ஞ்	2
3.	-சு	ச், ஞ்	8
4.	-டி	ட்	2
5.	-டு	ட், ண்	33
6.	-ணு	ண்	4
7.	-தி	த்	1
8.	-து	த், ந், ய்	21
9.	-பி	ப்	2
10.	-பு	ப், ம்	18
11.	-மு	ம்	5
12.	-லு	ல்	2
13.	-வு	வ்	3

14.	-ஞு	ள்	2
15.	-று	ற், ன்	20
16.	-ஞு	ன்	3
மொத்தம்			151

மெய்-நெட்டுயிர் வடிவாக்கிகள்

எண்	**வடிவாக்கிகள்**	**வடிவாக்கிகள் சேரும் வினையடிகளின் இறுதிகள்**	**வடிவாக்கிகள் சேரும் வினையடிகளின் எண்ணிக்கை**
1	-கா	ங்	1
2	-ணா	ண்	1
3	-லா	ல்	1
மொத்தம்			3

மெய்-மெய்-குற்றுயிர் வடிவாக்கிகள்

வரிசை எண்	**வடிவாக்கிகள்**	**வடிவாக்கிகள் சேரும் வினையடிகளின் இறுதிகள்**	**வடிவாக்கிகள் சேரும் வினையடிகளின் எண்ணிக்கை**
1	-த்து	ர், ழ்	3
2	-ச்சு	ய்	2
3	-ப்பி	ய்	1
மொத்தம்			6

மூவசை வினையில் வரும் வடிவாக்கிகள்

குற்றுயிர்-மெய்-குற்றுயிர் (ஏஊஏ) வடிவாக்கிகள்

வரிசை எண்	**வடிவாக்கிகள்**	**வடிவாக்கிகள் சேரும் வினையடிகளின் இறுதிகள்**	**வடிவாக்கிகள் சேரும் வினையடிகளின் எண்ணிக்கை**
1	-அகு	ச், ல், ள், ன்	4
2	-அசு	ர், ல்	2
3	-அடு	ர்	1
4	-அது	ர்	1
5	-அலி	ட்	1
6	-அவி	ட்	1
7	-அவு	க், ட், த், ர், ல்	7
8	-அறு	க், ட், த், ர், ல்	5
9	-இடு	ம், ர்	2
10	-இவி	ர், ற்	2
11	-இளி	ம்	1
12	-இறு	ச்	1
13	-உகு	ர், ள், ற்	13
14	-உடு	ர்	2
15	-உமு	ர், ற்	2
16	-உவி	ர்	2
17	-உவு	ர், ழ், ற்	5
18	-உஞு	த்	1
19	-ஐவி	ள்	1
மொத்தம்			46

நெட்டுயிர்-மெய்-குற்றுயிர் (V̄CV) வடிவாக்கிகள்

வரிசை எண்	**வடிவாக்கிகள்**	**வடிவாக்கிகள் சேரும்**	**வடிவாக்கிகள் சேரும்**

		வினையடிகளின் இறுதிகள்	வினையடிகளின் எண்ணிக்கை
1	-ஆடு	ல், ர்	1
2	-ஆசு	ட், ள்	2
3	-ஆவு	ச், ட், ர், ள்	6
4	-ஆறு	ம்	1
மொத்தம்			9

குற்றுயிர்-மெய்-மெய்-குற்றுயிர் (VCCV) வடிவாக்கிகள்

வரிசை எண்	வடிவாக்கிகள்	வடிவாக்கிகள் சேரும் வினையடிகளின் இறுதிகள்	வடிவாக்கிகள் சேரும் வினையடிகளின் எண்ணிக்கை
1	-அக்கு	ச், ட், த், ய், ல், ள், ற்	17
2	-அங்கு	ச், ட், ண், த், ய், ர், ல், ள், ற், ன்	26
3	-அட்டு	க், த், ர், ல், வ்	10
4	-அட்டி	ர்	1
5	-அண்டு	ர்	2
6	-அத்து	ட், ம், ர்	7
7	-அப்பு	ச், த், ர், ழ்	5
8	-அம்பு	ர், ல், ள்	6
9	-அற்சி	ற்	1
10	-அற்று	க், ய், ர், ழ்	5
11	-இஞ்சு	ற்	1
12	-இட்டு	ம்	1
13	-இண்டு	ம்	1
14	-இப்பி	ட்	1
15	-இற்று	-ய்	1
16	-உக்கு	ச், ட், த், ம், ர், ல், ற், ன்	35

17	-உங்கு	ச், ட், ண், த், ம், ர், ல், ற், ன்	18
18	-உட்டு	ர், ம்	7
19	-உத்தி	க்	1
19	-உத்து	ட், ர், ல், ற்	11
20	-உந்து	ர்	8
21	-உப்பி	க்	1
22	-உப்பு	ர், ல், ன்	4
23	-உம்பு	த், ர், ல், ழ், ள்	5
24	-ஐஞ்சு	ள், ற்	2
மொத்தம்			147

நெட்டுயிர்-மெய்-மெய்-குற்றுயிர் (Vஉஉஎ) வடிவாக்கி

வரிசை எண்	**வடிவாக்கிகள்**	**வடிவாக்கிகள் சேரும் வினையடிகளின் இறுதிகள்**	**வடிவாக்கிகள் சேரும் வினையடிகளின் எண்ணிக்கை**
1	-ஆங்கு	ர்	1
1	-ஆத்து	ல்	2
மொத்தம்			3

குற்றுயிர்-மெய்-மெய்-குற்றுயிர் (ஏஉஉஉஎ) வடிவாக்கிகள்

வரிசை எண்	**வடிவாக்கிகள்**	**வடிவாக்கிகள் சேரும் வினையடிகளின் இறுதிகள்**	**வடிவாக்கிகள் சேரும் வினையடிகளின் எண்ணிக்கை**
1	-அர்த்து	ச், ண், ம், ர், ல், வ், ள்	10
2	-இர்த்து	ம்	1
3	-இழ்த்து	ம்	1
4	-இழ்ந்து	ம்	1

மொத்தம்	9

7.4. சுருக்கவுரை

மேற்கண்ட விளக்கங்களிலிருந்து பின்வரும் முடிபுகள் பெறப்பட்டுள்ளன:

1. நாம் வினை வேர்களின் வாப்பாட்டு வடிவுகளாக நிறுவும் அசையமைப்புகளை பின்வருமாறு எட்டு வகைகளில் அடக்கலாம்:

குற்றுயிர் (v) எ.கா. ஒ

நெட்டுயிர; (Ṽ) எ.கா. ஈ

குற்றுயிர்-மெய் (vc) எ.கா. எண், அல்

நெட்டுயிர்-மெய் (Ṽc) எ.கா. ஆய், ஆழ்

மெய்-குற்றுயிர் (cv) எ.கா. தை, நை

மெய்-நெட்டுயிர் (cṼ) எ.கா. பூ, யா

மெய்-குற்றுயிர்-மெய் (cvc) செய், கல்

மெய்-நெட்டுயிர்-மெய் (cṼc) எ.கா. தீர், தூர், நூல்

2. ஓரசை வினையடிகள் 91 உள்ளன. ஓரசை வினையடிகளின் அசை வகைகளும் அவற்றின் எண்ணிக்கையும் பின்வருமாறு அமையும்:

வ.எண்	**ஓரசை வினையடிகளின் அசை வகைகள்**	**எண்ணிக்கை**
1	cvc	17
2	cṼc	41
3	cv	5
4	Ṽc	9
5	cṼ	13

6	vc	3
7	Ṽ	1
8	v	1
மொத்தம்		91

3. ஈரசை வினையடிகள் 608 உள்ளன. ஈரசைவினையடிகள் ஓரசை, மூவசை, நாலசை, ஐந்தசை வினையடிகளைக் காட்டிலும் எண்ணிக்கையில் மிகக் கூடுதலாக உள்ளன. ஈரசை வினையடிகளின் அசை வகைகளும் அவற்றின் எண்ணிக்கையும் பின்வருமாறு அமையும்:

வரிசை எண்	**ஈரசை வினையடிகளின் அசை வகைகள்**	**எண்ணிக்கை**
1	vcv	80
2	vcvc	16
3	vcvcc	1
4	vccṼ	1
5	Ṽcv	12
6	Ṽccv	10
7	ṼcṼc	1
8	vccv	18
9	vcṼc	1
10	cvcv	214
11	cvccv	89
12	cvcvc	33
13	cṼccv	50
14	cṼcccv	3
15	cṼcv	50
16	cvccṼ	1
மொத்தம்		607

ஈரசை வினையடிகளில் CVCV வகை எண்ணிக்கையில் முதலாவதாகவும் ஊஏஊஊஏ வகை இரண்டாவதாகவும் ஏஊஏ வகை மூன்றாவதாகவும் உள்ளன.

4. மூவசை வினையடிகள் 264 உள்ளதாகக்க கணக்கிடப்பட்டுள்ளன. இவற்றுள் சில வினையடிகள் பெயர் + துணைவினை உள்ள கூட்டு வினையடிகளாகும் *அல்லாடு* (*அல்* - *ஆடு*),

ஏற்பது (ஏற்-படு), *ஏமாறு* (ஏம்-ஆறு), *குண்டிக்காய்* (*குண்டி-காய்*), *சில்லிடு* (சில்-இடு), *வீரிடு* (*வீர்-இடு*) சில வினை + துணைவினை உள்ள கூட்டு வினையடிகளாகும் எ.கா *வீற்றிரு* (வீற்ற்-இரு), வைத்துக்கொள் (வைத்துக்-கொள்) மூவசை வினையடிகளின் அசை வகைகளும் அவற்றின் எண்ணிக்கையும் பின்வருமாறு அமையும்:

வரிசை எண்	**மூவசை வினையடிவகைகள்**	**எண்ணிக்கை**
1	VCVCCV	47
2	VCVCV	16
3	VCCVCṼC	1
4	VCVCCCV	5
5	VCṼCV	4
6	VCṼCCV	1
7	VCCVCV	1
8	ṼCVCCV	1
9	ṼCṼCV	1
10	ṼCCṼCV	1
11	CVCVCCV	106
12	CVCṼCV	4
13	CVCVCCCV	5
14	CVCVCV	43
15	CVCCVCṼC	1
16	CVCCVCV	7
17	CṼCVCV	1
18	CVCVCṼCV	1
19	CVCCVCCVC	1
மொத்தம்		264

மூவசை வினையடிகளில் CVCVCCV என்ற அசை அமைப்பு உள்ளவை கூடுதலாகக் காணப்படுகின்றது. அதற்கு அடுத்தபடியாக VCVCCV என்ற அசை அமைப்பும் உஎஉஎஉஎ என்ற அசை அமைப்பும் வருகின்றன. இவைகளுக்கு அடுத்தபடியாக எஉஎஉஎ என்ற அசை அமைப்பு வருகின்றது.

5. 13 வேர்கள் உயிரில் இறுதியுறும் அல்லது உயிராக வரும் தனி வினையடிகளாகும் எ.கா. (ஈ, ஒ, கா, கோ, சா, தா, பா, நோ, மு, மோ, யா, வே, வை).

6. வினை வேர்கள் அ, ஆ, இ, உ, ஊ, எ, ஐ, ஒ என்ற உயிர்களாலும் க், ங், ச், ஞ், ட், ண், த், ப், ம், ய், ர், ல், வ், ள், ற், ன் என்ற மெய்களாலும் இறுதியுறுவன.

7. க், ங், ச், ஞ், ட், த், ப், வ், ற் இறுதியுறும் வினை வேர்கள் யாவும் கட்டுண்டவையாகும்.

8. ண், ய், ர், ல், ள், ன் என இறுதியுறும் வினை வேர்கள் தனி வினையடிகளாக கட்டுறாது வரவியலும்.

9. வடிவாக்கிகளை உயிர் வடிவாக்கிகள், உயிர்-மெய் வடிவாக்கிகள், மெய்-உயிர் வடிவாக்கிகள் எனவும் ஓரசை வடிவாக்கிகள், ஈரசை வடிவாக்கிகள் எனப்பிரிக்கலாம். அசை அடிப்படையில் அவற்றைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்:

1. ஓரசை வடிவாக்கிகள்
1.1. குற்றுயிர் வடிவாக்கிகள்
1.2 நெட்டுயிர் வடிவாக்கிகள்
1.3 குற்றுயிர்-மெய் வடிவாக்கிகள்
1.4. நெட்டுயிர்-மெய் வடிவாக்கிகள்
1.5 மெய்-குற்றுயிர் வடிவாக்கிகள்
1.6. மெய்-நெட்டுயிர் வடிவாக்கிகள்
1.7. மெய்-மெய்-குற்றுயிர் வடிவாக்கிகள்
2. ஈரசை வடிவாக்கிகள்
2.1. குற்றுயிர்-மெய்-குற்றுயிர் வடிவாக்கிகள்
2.2. குற்றுயிர்-மெய்-மெய்-குற்றுயிர் வடிவாக்கிகள்

10. குற்றுயிர் வடிவாக்கிகளில் -இ கூடுதல் விளைவாக்கமுள்ள வினையடியாக்கியாகத் தெரிகிறது அதற்கு அடுத்தப்படியாக -உ வடிவாக்கியும் -ஐ வடிவாக்கியும் வருகின்றன. உயிர்-மெய் வடிவாக்கிகளில் -அர் கூடுதல் விளைவாக்கமுள்ள வினையடியாக்கியாகத் தெரிகின்றது அதற்கு அடுத்தப்படியாக -இன் வருகின்றது. மெய்-உயிர் வடிவாக்கிகளில் -டு, -து, -ணு, -பு, -சு என்பன இறங்கு வரிசையில் விளைவாக்கமுள்ள வினையடியாக்கிகளாகத் தெரிகின்றன. குற்றுயிர்-மெய்-குற்றுயிர் வடிவாக்கிகளில் -உகு, -அவு என்பன விளைவாக்கமுள்ள வினையடியாக்கிகளாகத்

தெரிகின்றன. குற்றுயிர் -மெய் - குற்றுயிர் வடிவாக்கிகளில் -உக்கு, -அங்கு, -உங்கு, -அக்கு, -உத்து, -அட்டு இறங்கு வரிசையில் விளைவாக்கமுள்ள வினையடியாக்கிகளாகத் தெரிகின்றன.

இயல் 8
முடிவுரை

தமிழறிஞர்களால் பழந்தமிழ், இடைக்காலத்தமிழ், தற்காலத்தமிழ் என்று மூன்று பெரும் பிரிவுகளாக பகுக்கப்பட்ட காலக்கட்டங்களில் வினையடிகள் அடைந்துள்ள மாற்றங்களையும் வினையடிகளின் வடிவாக்கிகளையும் வேர்களையும் வரலாற்று மொழியியல் அடிப்படையில் ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும். இவ்வாய்வேடு ஆறு பகுதிகளாக பிரிக்கப்பட்டு முதல் பகுதி அறிமுகம் ஆகும். இரண்டாம் பகுதியில் தொல்காப்பியம் முதல் முத்துவீரியம் வரையுள்ள பத்து இலக்கண நூல்களிலிருந்து பெறப்பட்ட தகவல் அடிப்படையில் வினையடிகளின் அமைப்பு பற்றி ஆயப்படுகிறது. மூன்றாவது இயலில் தமிழ் வினையடிகள் குறித்த முந்தைய ஆய்வுச்சுருக்கமும், வினையடி பற்றிய மொழியியலாரின் பன்நோக்கு பார்வையும் தொகுத்துக் கூறப்படுகிறது. நான்காம் இயலில் தமிழ் வினையடிகள் அடைந்துள்ள மாற்றங்கள் குறித்தும், ஐந்தாம் இயலில் வினையடிகளின் சொற்பிறப்பியல் பற்றியும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆறாவது பகுதி முடிவுரையாகும்.

தமிழ் வினையடிகளை கால அடிப்படையிலும் காலமாற்ற அடிப்படையிலும் ஆய்ந்து கட்டுரைகளும் ஆய்வேடுகளும் நூற்களும் வெளிவந்துள்ளன. இவற்றில் பெரும்பான்மையானவை ஆங்கிலத்தில் உள்ளன. இவற்றையெல்லாம் தொகுத்துத் தமிழில் இவ்வாய்வேட்டில் தரப்பட்டுள்ளது. வினையடிகள் பற்றி தமிழ் மூலம் அறிய விரும்பும் ஆய்வாளர்களுக்கும் மாணவர்களுக்கும் இவ்வாய்வு மிகவும் பயனுள்ளதாய் அமையும். தமிழ் வினையடிகளை வரலாற்றுமொழியியல் அடிப்படையில் முழுவதுமாக ஆய்ந்து ஆய்வுக்கண்டுபிடிப்புகளைத் தமிழில் தரும் ஆய்வேடாக இது விளங்குகின்றது எனக் கூறலாம். செம்மொழியாக விளங்கும் தமிழின் தொன்மையை அறுதியிட்டு வெளிப்படுத்துவது வினையடிகளேயாகும். தமிழமைப்பில் சொல்லியல் நிலையில் ஏற்பட்டுள்ள கால அடிப்படை மாற்றங்களை வெளிப்படுத்தும் இவ்வாய்வு ஒரு தொடக்கமாக அமைந்து வரலாற்றுமொழியியல் மாணவர்களையும் ஆய்வாளர்களையும் ஆற்றுப்படுத்தத் துணைபுரியும். இவ்வாய்வேட்டில் விளக்கப்பட்டுள்ள வினையடிகளின் சொற்பிறப்பியல் ஒரு தொடக்கமாகும். இதுகுறித்துச் செய்யப்படும் ஆய்வுகளுக்கு இது முன்னோடியாக அமையும்.

தமிழ் மொழியில் வினைச் சொற்கள் மிக இன்றியமையாத பங்கு வகுக்கின்றன. வாக்கியத்தின் இன்றியமையாத உறுப்பாக வினைச்சொல் அமைந்துள்ளது. ஒரு சொற்றொடரை அமைக்கும் ஆற்றல் வினைச்சொல்லுக்கு உண்டு. வினை அல்லது தொழிலைக்குறிப்பிடும் சொல் வினைச்சொல் ஆகும். வினைச்சொல் சொல்நிலையில் காலம் ஏற்கும் வேற்றுமை

ஏற்காது. வாக்கிய நிலையில் எழுவாயும், செயப்படுபொருளும் ஏற்று வரும். வினைச் சொல் திணை, பால், எண், இடம், காலம் உணர்த்தக் கூடியது. "கால இடைநிலைகளையும் பாலிட விகுதிகளையும் ஏற்கவல்லதாக அமைந்த சொற்களை வினைச்சொற்கள்" என்று பொற்கோ குறிப்பிடுகிறார். மரபிலக்கணங்கள் வினைச் சொற்களைப் பல வகைகளாகப் பாகுபடுத்துகின்றன. திரிபுற்ற வினைச் சொற்களைப் பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் எனப் பகுபத உறுப்புகளாக மரபிலக்கணங்கள் பிரிக்கும். பெரும்பாலும் ஏவலை உணர்த்த வினையடிச் சொற்கள் (பகுதி) பயன்படுத்துகின்றன. "இன்றைய தமிழில் இலட்சக்கணக்காண பெயர்ச்சொற்கள் இருக்க இரண்டாயிரத்திற்கும் குறைவாகவே வினைச்சொற்கள் உள்ளன என்றும், சங்கக்காலத்திலும் ஆயிரத்து நூறை ஒட்டியே வினைச்சொற்கள் காணப்படுகின்றன" என அகஸ்தியலிங்கம் குறிப்பிடுகிறார். வினைச்சொல் தொடரியலில் முதன்மை பங்கு வகுக்கிறது. தமிழ் மொழித்தொடர்கள் பொதுவாக வினையைப் பயனிலையாகக் கொண்டு முடிகின்றன. மொழியியலார் வினையை மொழியின் சொல்லியல் மற்றும் தொடரியல் அடிப்படையில் செயப்படுபொருள் குன்றாவினை, செயப்படுபொருள் குன்றியவினை எனப் பாகுபாடுத்துவர். பொருள் அடிப்படையில் மரபிலக்கணத்தார் வினைச்சொற்கள் ஒரு செயலினைக்காட்டும் பயனிலை எனக் கொள்வர். பொருளடிப்படையில் மரபிலக்கணத்தார் வினையின் செயல்பாடு குறித்து வினைகளைத் தன்வினை, பிறவினை எனப் பாகுபாடு செய்துள்ளனர்.

தொல்காப்பியத்தைத் தொடர்ந்து பல இலக்கண நூல்கள் வெளி வந்துள்ளன. அவற்றில் வினையடிகள் பற்றி இலக்கணநூலோர் கருத்துக்கள் முதலியலில் தொகுக்கப்பட்டு விளக்கப்பட்டுள்ளன. தொல்காப்பியார் சொல்லதிகாரத்தில், வினையியலில் வினைச் சொல் இலக்கணத்தைக் கூறுகின்றார். வடிவ அடிப்படையில் முற்று, எச்சம் என்று இருவகையாக வினை சொற்களைப் பாகுப்படுத்துகிறார். வினையடிகள் பற்றிய கருத்துக்கள் தொல்காப்பியத்தில் பல இடங்களில் சுட்டப்படுகிறது. மேலும் வினையடிகள் பற்றிய விரிவான செய்திகளை உரையாசிரியர்கள் மூலமாக அறிய முடிகின்றன. தொல்காப்பியத்தில் வினையடிகள் ஏவலை உணர்த்தியும் குறை வினையடிகளாகவும் பயின்று வருகின்றன. தன்வினை, பிறவினை அமைப்புகளைத் தன்பாலனும், பிறன்பாலனும் என்று குறிப்பிடுகின்றது. -ஆய்- என்னும் விகுதி வினையடிகளோடு வரும்பொழுது 'செய்' என்னும் வினையடிப் பொருளையே உணர்த்துகின்றது. (செய் - ஆய் - செய்யாய்)

வீரசோழீய ஆசிரியர் புத்தமித்திரனார் வினையடிச் சொற்கள் சிலவற்றைத் தாதுப்படலத்தில் பட்டியலிட்டுக் காட்டுகின்றார். மேலும் தன்வினையைக் கேவலத்தாது என்றும், பிறவினையைக் காரிதத்தாது என்றும் குறிப்பிடுகிறார். வினையச்சங்களான செய்து, செய்யா, செய்பு போன்ற சொற்கள் வினையடிப் பொருளையே உணர்த்தும் என்று நேமிநாதம் கூறுகிறது. நன்னூல் தமிழ் வினையடிகளை மொழியீற்று எழுத்து அடிப்படையில் தொகுத்துச் சுட்டுகிறது. மொழியீற்றில் வரும் உயிர், மெய் எழுத்துக்களை அகர நிரல் அடிப்படையில் நிரல்படுத்திக் கூறுகிறது. வினையெச்சச் சொற்கள் பெரும்பாலும் ஏவலை உணர்த்துகின்றன என்றும் மேலும் ஈரவேல் பற்றியும், காரண வினை பற்றியும் கூறுகிறது.

செயப்படுபொருள் குன்றியவினை, குன்றாவினை மற்றும் தன்வினை, பிறவினை அமைப்புகள் பற்றியும், குன்றியவினைகளை 'சகன்மம்' என்றும், குன்றா வினைகளை 'அகன்மம்' என்றும் பிரயோகவிவேகம் குறிப்பிடுகின்றது. பெயர், வினை, இடை, உரி இவை நான்கையும் அடிப்படையாகக் கொண்டு வினை பிறக்கும் என்றும், மேலும் தன்வினை, பிறவினையைப் பொதுவினை என்றும் இலக்கணக்கொத்துக் குறிப்பிடுகின்றது. ஏவல் வினைப் பற்றிக் குறிப்பிடும் வைத்தியநாத தேசிகர் வினையடிச் சொற்களோடு -வி, -பி என்ற விகுதிகள் இணையுமாயின் அவை ஈரேவலாக வரும் என்று இலக்கணவிளக்கம் குறிப்பிடுகின்றது.

வரல், தரல், கொடை, செலல், என்ற சொற்களை முறையே மரபு வழியே விளக்கி இவை, வா, தா, கொடு, செல் என்ற வினையடிப் பொருளையே உணர்த்தும் என்று தொன்னூல்விளக்கம் கூறுகின்றது.நன்னூலைப் போலவே மொழியீற்று அடிப்படையில் வினையடிச் சொற்களைப் பட்டியலிட்டு, பிறவினை, ஏவல்வினை, ஈரேவல் பற்றியும் சுவாமிநாதம் விவரிக்கிறது. பிறவினைச் சொற்கள் முதல் வினையைக் கொண்டு முடியும் என்றும், முதல்வினையென்பது வினையடியைக்குறிக்கும் என்றும், எச்ச வாய்பாட்டுச் சொற்கள் வினையடிச்சொல்லோடு பொருந்திவரும் என்று முத்துவீரியம் தெளிவுபடுத்துகிறது.

மேற்கண்ட பத்து இலக்கண நூல்களும் கால அடிப்படையில் தெகுத்துக்கூறப்பட்டுள்ளன. மரபிலக்கணங்களில் வினையடிகள் பற்றிய செய்திகள் வெளிப்படையாக இல்லாமல் குறிப்பாகவே உள்ளன. இதனை "பெயர்ச் சொற்களைப் போலீ வினைச் சொற்களையும் திணையடிப்படையில் பாகுபடுத்தியால் வினைகளின் உண்மையான பாகுபாடான வினையடிகளின் பாகுபாடு பற்றி வினையியல் நேரடியாக எதவும் பேசவில்லை. எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் முழுமையும் பார்க்கும் போது வினையடிகள் பற்றி இலைமறை

காயாக சில பாகுபாடுகள் குறிப்பிடப்பட்டிருப்பது தெரியவருகிறது" என்ற செ.வை.சண்முகம் கூற்று நோக்கத்தக்கது. பெரும்பாண்மையான இலக்கணங்கள் தன்வினை பிறவினையையே வினையடிகளாக கூறுகின்றன. இவற்றுள் நன்னூல் ஏவல் வினைப்பகாப்பதம் என்றும் வீரசோழியம் தாது என்றும் வினையடிகளைக் கூறுகின்றன.

ஐந்திலக்கணம் மற்றும் எழுத்து, சொல்லுக்கு இலக்கணம் கூறும் தொல்காப்பியம் முதல் முத்துவீரியம் வரையுள்ள பத்து நூல்களிலிருந்து வினையடிகள் பற்றிய செய்திகள் இவ்வியலில் தொகுத்தும் வகுத்தும் கூறப்பட்டுள்ளன. தமிழ் வினையடிகள் பற்றிய முந்தைய ஆய்வுகள் என்ற இயலில் தமிழ் வினையடிகள் பற்றிய முந்தைய ஆய்வுகளின் சுருக்கம் தரப்பட்டுள்ளது. எல்.வி. இராமசாமி, வ.சுப. மாணிக்கம், மு.வரதராசன், சி. சிவதாணு ஆகியோர் வினையடிகளைப் பற்றிக் கூறிய செய்திகள் திரட்டப்பட்டு இங்குத் தரப்பட்டுள்ளன. தமிழ் வினையடிகள் பற்றிய முன்னோடி ஆய்வுகளில் எல்.வி இராமசாமி ஐய்யரின் ஆய்வுக் குறிப்பிடத்தக்கது. இதில் தனிநிலை அல்லது முதன்மை அடிகள், -க்க்-ஒட்டைக்கொண்ட சில அடிகள், செயப்படுபொருள் குன்றா-காரண வினைகளின் ஆக்கம் போன்றவைப் பற்றித் தெளிவாகத் தொகுத்துத் தரப்பட்டுள்ளது.

வ.சுப.மாணிக்கனாரின் ஆய்வில், வினை வேர்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்களில் உயிர் ஈறு, மெய் ஈறு மாற்றங்களும், பழைய வினை வேர்களின் இழப்பு, கடன் வாங்களின் விளைவு, பதிய வினை வேர்களின் வருகை, ஒலிக்குறிப்பு வேர்களிலிருந்து சொற்கள், பொருள் மாற்றம் ஆகிய பல்வேறு நிலைகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஆய்வைச் சுருக்கித் தொகுத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. மு.வரதராசனார், அடிச்சொற்கள் பற்றிய பல் வேறு செய்திகள் இங்குக் குறிப்பிடப்பட்டுள்ளன.பெயர் வினை வேறுபாடு, வினையடி பெயராதல், அடிச்சொல்லோடு சேர்வன, ஒலித்துணையாவன, பொருட்சிறப்புப்பயப்பன, இலக்கண வேறுபாடு உணர்த்துவன, துணையறுப்புகளின் தோற்றம் ஆகிய நிலைகளில் இங்குத் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. சிவதாணு, பழந்தமிழின் வரலாறு, தமிழ்ச் சொற்களின் அமைப்பு, தமிழ் வினையடிகளின் பாகுபாடு போன்ற பல்வேறு நிலைகளில் அமைந்த ஆய்வு இங்கு சுருக்கமாக தரப்பட்டுள்ளது.

"தன்வினை, பிறவினை என்ற பாகுபாடு தொல்காப்பிய உரையாசிரியர்கள், பிற்கால இலக்கண நூலார் செய்திருந்தாலும், மேலை நாட்டினரின் வருகைக்குப் பிறகே வினையடி பற்றிய ஆய்வு தெளிவாக வளர்ச்சி அடைந்தது" என்ற சுபாஸ்சந்திரபோஸின் (சுபாஸ் சந்திரபோஸ்,2005:49) கூற்று நோக்கத்தக்கது.

தமிழ் வினையடிகளின் பாகுபாடு, மொழியியலாரின் பன்முகப் பார்வையில் பெஸ்கியின் பாகுபாட்டிலிருந்து, சுபாஸ்சந்திரபோஸின் பாகுபாடு வரை தொகுத்துத் தரப்பட்டுள்ளது. இவற்றில் சென்னைப் பல்கலைப் பேரகராதி ஒழுங்கில்லா வினையடிகள் பற்றி குறிப்பிடுகிறது. முன்றாவது பகுப்பில் தமிழ் வினையடிகளின் முன்னோடி ஆய்வுகளை மட்டும் தொகுத்துத் தரப்பட்டுள்ளதற்கான காரணம், மொழி ஆய்வைப் பொறுத்த வரையில் விளக்கமுறை ஆய்வே மிகுதியாக நடந்தேறியுள்ளது. வினையடிகள் பற்றிய ஆய்வு மிக குறைவான எண்ணிக்கையே கொண்டுள்ளன. இவற்றுள் வரலாற்று முறை ஆய்வுகள் மிக சிலவே உள்ளன. வரலாற்று முறை ஆய்வுகளை மரபு வழிப்பட்ட ஆய்வுகள், மொழியியல் ஆய்வுகள் என்று இரண்டாகப் பாகுப்படுத்தலாம். மரபு வழிப்பட்ட ஆய்வாக வ.சுப.மாணிக்கம் மற்றும் மு.வரதராசனும், மொழியியல் ஆய்வாக எல்.வி. இராமசாமி ஐய்யர் மற்றும் சி.சிவதாணுவும் மேற்கொண்டுள்ளனர். எனவே இவர்களுடைய ஆய்வு முறைமையே இவ்வாய்வுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆங்கிலத்தில் இருந்த ஆய்வு நூல்களை தமிழாக்கம் செய்து இனி வரும் ஆய்வாளர்களுக்கும், மாணவர்களுக்கும் பயன்பெறும் வகையில் சுருக்கித் தரப்பட்டுள்ளது.

சேதுப்பிள்ளை, வையாபுரிப்பிள்ளை, தேவநேசன், இராஜமாணிக்கம் மற்றும் இலக்குவனார் போன்றோர் சில சொற்களின் இழப்பைக் கூறுகின்றனர். இதுபோன்று வசு.ப. மாணிக்கம் குறிப்பாக வினைகளின் இழப்பைச் சுட்டிக்காட்டியுளார். இலக்குவனார் வினைகளின் பல வடிவங்களை இழப்பாகக் காட்டியுள்ளார். நான்காவது இயலில் பழந்தமிழ் இலக்கியங்களிலும் அதற்குப் பிற்பட்ட கால நூல்களிலும் பயின்று வரும் வினையடிகளை அவைப் பயின்று வரும் பனுவல்கள் அடிப்படையில் முன்பழந்தமிழ் வினைகள், பின்பழந்தமிழ் வினைகள், முன்னிடைத்தமிழ் வினைகள், பின்னிடைத்தமிழ் வினைகள், தற்கால வினைகள் எனப்பகுத்து இவ்வினையடிகளின் இழப்பு, உருமாற்றம், உருவாக்கம், பொருள் மாற்றம் என்பனவற்றை ஆய்ந்து வரலாற்று மொழியில் ஆய்வுமுறை அடிப்படையில் தொகுத்துத் தரப்பட்டுள்ளது.

ஐந்தாம் இயல் இவ்வாய்வேட்டின் முக்கியமான இயலாக இருப்பதுடன் இதில் இவ்வாய்வேட்டின் கண்டுபிடிப்புகள் விளக்கப்பட்டுள்ன. பின்வரும் தகவல்கள் இதனை உணர்த்தும்.

நாம் வினை வேர்களின் வாப்பாட்டு வடிவுகளாக நிறுவும் அசையமைப்புகளை பின்வருமாறு எட்டு வகைகளில் அடக்கலாம்:

குற்றுயிர் (v) எ.கா. ஒ

நெட்டுயிர் (Ṽ) எ.கா. ஈ

குற்றுயிர்-மெய் (vc) எ.கா. எண், அல்

நெட்டுயிர்-மெய் (Ṽc) எ.கா. ஆய், ஆழ்

மெய்-குற்றுயிர் (cv) எ.கா. தை, நை

மெய்-நெட்டுயிர் (cṼ) எ.கா. பூ, யா

மெய்-குற்றுயிர்-மெய் (cvc) செய், கல்

மெய்-நெட்டுயிர்-மெய் (cṼc) எ.கா. தீர், தூர், நூல்

ஓரசை வினையடிகள் 91 உள்ளன. ஓரசை வினையடிகளின் அசை வகைகளும் அவற்றின் எண்ணிக்கையும் பின்வருமாறு அமையும்:

வ.எண்	**ஓரசை வினையடிகளின் அசை வகைகள்**	**எண்ணிக்கை**
1	cvc	17
2	cṼc	41
3	cv	5
4	Ṽc	9
5	cṼ	13
6	vc	3
7	Ṽ	1
8	v	1
மொத்தம்		91

ஈரசை வினையடிகள் 608 உள்ளன. ஈரசைவினையடிகள் ஓரசை, மூவசை, நாலசை, ஐந்தசை வினையடிகளைக் காட்டிலும் எண்ணிக்கையில் மிகக் கூடுதலாக உள்ளன. ஈரசை வினையடிகளின் அசை வகைகளும் அவற்றின் எண்ணிக்கையும் பின்வருமாறு அமையும்:

வ.எண்	**ஈரசை வினையடிகளின் அசை வகைகள்**	**எண்ணிக்கை**
1	vcv	80
2	vcvc	16
3	vcvcc	1
4	vccṼ	1
5	Ṽcv	12
6	Ṽccv	10
7	ṼcṼc	1
8	vccv	18
9	vcṼc	1
10	cvcv	214
11	cvccv	89
12	cvcvc	33
13	cṼccv	50
14	cṼcccv	3
15	cṼcv	50
16	cvccṼ	1
மொத்தம்		607

ஈரசை வினையடிகளில் ஊஏஊஏ வகை எண்ணிக்கையில் முதலாவதாகவும் ஊஏஊஊஏ வகை இரண்டாவதாகவும் ஏஊஏ வகை மூன்றாவதாகவும் உள்ளன.

மூவசை வினையடிகள் 264 உள்ளதாகக்க கணக்கிடப்பட்டுள்ளன. இவற்றுள் சில வினையடிகள் பெயர் + துணைவினை உள்ள கூட்டு வினையடிகளாகும் *அல்லாடு* (*அல்* - *ஆடு*), *ஏற்படு* (ஏற்-படு), *ஏமாறு* (ஏம்-ஆறு), *குண்டிக்காய்* (*குண்டி-காய்*), *சில்லிடு* (சில்-இடு), *வீரிடு* (*வீர்-இடு*) சில வினை + துணைவினை உள்ள கூட்டு வினையடிகளாகும் எ.கா *வீற்றிரு* (வீற்ற்-இரு), வைத்துக்கொள் (வைத்துக்-கொள்) மூவசை வினையடிகளின் அசை வகைகளும் அவற்றின் எண்ணிக்கையும் பின்வருமாறு அமையும்:

வ.எண்	**மூவசை வினையடிவகைகள்**	**எண்ணிக்கை**
1	vcvccv	47
2	vcvcv	16
3	vccvcṼc	1

4	vcvcccv	5
5	vcṼcv	4
6	vcṼccv	1
7	vccvcv	1
8	Ṽcvccv	1
9	ṼcṼcv	1
10	ṼccṼcv	1
11	cvcvccv	106
12	cvcṼcv	4
13	cvcvcccv	5
14	cvcvcv	43
15	cvccvcṼc	1
16	cvccvcv	7
17	cṼcvcv	1
18	cvcvcṼcv	1
19	cvccvccvc	1
மொத்தம்		264

மூவசை வினையடிகளில் உஎஉஎஉஉஎ என்ற அசை அமைப்பு உள்ளவை கூடுதலாகக் காணப்படுகின்றது. அதற்கு அடுத்தபடியாக எஉஎஉஉஎ என்ற அசை அமைப்பும் உஎஉஎஉஎ என்ற அசை அமைப்பும் வருகின்றன. இவைகளுக்கு அடுத்தபடியாக எஉஎஉஎ என்ற அசை அமைப்பு வருகின்றது.

வேர்கள் உயிரில் இறுதியுறும் அல்லது உயிராக வரும் தனி வினையடிகளாகும். (எ.கா. ஈ, ஒ, கா, கோ, சா, தா, பா, நோ, மூ, மோ, யா, வே, வை.). வினை வேர்கள் அ, ஆ, இ, உ, ஊ, எ, ஐ, ஒ என்ற உயிர்களாலும் க், ங், ச், ஞ், ட், ண், த், ப், ம், ய், ர், ல், வ், ள், ற், ன் என்ற மெய்களாலும் இறுதியுறுவன. க், ங், ச், ஞ், ட், த், ப், வ், ற் இறுதியுறும் வினை வேர்கள் யாவும் கட்டுண்டவையாகும்.ண், ய், ர், ல், ள், ன் என இறுதியுறும் வினை வேர்கள் தனி வினையடிகளாக கட்டுறாது வரவியலும்.

வடிவாக்கிகளை உயிர் வடிவாக்கிகள், உயிர்-மெய் வடிவாக்கிகள், மெய்-உயிர் வடிவாக்கிகள் எனவும் ஓரசை வடிவாக்கிகள், ஈரசை வடிவாக்கிகள் எனப்பிரிக்கலாம். அசை அடிப்படையில் அவற்றைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்: ஓரசை வடிவாக்கிகள், குற்றுயிர் வடிவாக்கிகள், நெட்டுயிர் வடிவாக்கிகள், குற்றுயிர்-மெய் வடிவாக்கிகள், நெட்டுயிர்-மெய்

வடிவாக்கிகள், மெய்-குற்றுயிர் வடிவாக்கிகள், மெய்-நெட்டுயிர் வடிவாக்கிகள், மெய்-மெய்-குற்றுயிர் வடிவாக்கிகள், ஈரசை வடிவாக்கிகள், குற்றுயிர்-மெய்-குற்றுயிர் வடிவாக்கிகள், குற்றுயிர்-மெய்-மெய்-குற்றுயிர் வடிவாக்கிகள்

குற்றுயிர் வடிவாக்கிகளில் -இ கூடுதல் விளைவாக்கமுள்ள வினையடியாக்கியாகத் தெரிகிறது அதற்கு அடுத்தப்படியாக –உ வடிவாக்கியும் -ஐ வடிவாக்கியும் வருகின்றன. உயிர்-மெய் வடிவாக்கிகளில் -அர் கூடுதல் விளைவாக்கமுள்ள வினையடியாக்கியாகத் தெரிகின்றது அதற்கு அடுத்தப்படியாக –இன் வருகின்றது. மெய்-உயிர் வடிவாக்கிகளில் -டு, -து, -ணு, -பு, -சு என்பன இறங்கு வரிசையில் விளைவாக்கமுள்ள வினையடியாக்கிகளாகத் தெரிகின்றன. குற்றுயிர்-மெய்-குற்றுயிர் வடிவாக்கிகளில் -உகு, -அவு என்பன விளைவாக்கமுள்ள வினையடியாக்கிகளாகத் தெரிகின்றன. குற்றுயிர் -மெய் - குற்றுயிர் வடிவாக்கிகளில் -உக்கு, -அங்கு, -உங்கு, -அக்கு, -உத்து, -அட்டு இறங்கு வரிசையில் விளைவாக்கமுள்ள வினையடியாக்கிகளாகத் தெரிகின்றன.

பின்னிணைப்பு

திராவிட சொல் பிறப்பு அகராதியில் வரும் விளையடிகளும் சங்ககால நூற்களில் வரும் வினையடிகளும்

பரோ மற்றும் எமினோ (Emeneau & Burrow) என்போரால் உருவாக்கப்பட்ட திராவிட மொழிகளின் சொல் பிறப்பு அகராதியில் (திமொசொபி அகராதி) (Dravidian Etymological Dictionary=DED) காணப்படும் வினையடிகள் சங்கத்தமிழ் நூல்களில் காணப்படும் வினையடிகளுடன் பொருத்தப்பட்டு இங்கு பட்டியலிடப்பட்டுள்ளன. வினையடிகளின் பொருளும் திராவிட மொழிகளின் சொல் பிறப்பு அகராதியின் குறிப்பு வரிசை எண்களும் தரப்பட்டுள்ளன. இவைகளில் 184 வினையடிகளை திராவிட சொல் பிறப்பு அகராதியில் வரும் இனமொழிச் சொற்களுடன் தொடர்புபடுத்தி சிவதாணு (1990) ஆய்ந்து அத்தகைய சொற்களை இயற்சொற்கள் எனக்குறிப்பிட்டு விளக்கம் தருகிறார். இங்கு திராவிட சொல் பிறப்பு அகராதியிலிருந்து மொத்தம் 947 வினைச் சொற்கள் எடுக்கப்பட்டு சங்க இலக்கிய வினையடிகளுடன் தொடர்பு படுத்தித் தரப்பட்டுள்ளன. பொருள்கள் தற்காலம் ஒட்டியே தரப்பட்டுள்ளன.

எண்	**வினைச்சொற்கள்**	**பொருள்**	**திமொசொபி அகராதியில் காணப்படும் நோக்கிட்டு எண்**
1.	அகட்டு	பரப்புதல்	5
2.	அகட்டி	பரப்புதல்	6
3.	அகப்படு	பிடிபடுதல், சிக்குதல், மாட்டுதல்	8
4.	அகல்	விலகுதல்	9
5.	அகவு	கரகரப்பான குரலில் ஒலி எழுப்புதல்	11
6.	அகற்று	நீக்குதல், இல்லாதபடி ஆக்குதல்	9
7.	அங்கலாய்	குறையை தெரிவித்து புலம்புதல்	33

8.	அசங்கு	அசைதல், கலைதல்	39
9.	அசை[1]	மேலும் கீழும் அல்லது பக்கவாட்டில் மென்மையாக ஆடுதல்	41
10.	அசை [2]	ஆட்டுதல்	43
11.	அசை [3]	குழம்பு	39
12.	அஞ்சு	பயப்படுதல்	51
13.	அடக்கு	கட்டுப்படுத்துதல்	56
14.	அடங்கு	தணித்தல், அடங்குதல்	56
15.	அடர்	இடைவெளியில்லாமல் செறிந்திருத்தல்	74
16.	அடி	அறைதல், தாக்குதல்	67
17.	அடுக்கு	ஒன்றன்மேல் ஒன்றாக வைத்தல் (அல்லது) ஒன்றன் பின் ஒன்றாக வைத்தல்	70
18.	அடு	பொருத்தமாக இருத்தல்	68
19.	அடை[1]	பெறுதல்	69
20.	அடை[2]	மூடுதல்	73
21.	அடை[3]	சேகரித்தல்	74
22.	அடை[4]	-	75
23.	அணி	ஆடை, அணிகலன்களை உடலில் செல்லுதல், நெருங்குதல்	98
24.	அணர்	-	96
25.	அணுகு	அருகில் செல்லுதல், நெருங்குதல்	69
26.	அணை	நெருப்பு, விளக்கு போன்றவை நின்று போதல்	69
27.	அண்ணா	தலையை மேல் நோக்கி நிமிர்த்துதல்	112
28.	அண்மு	ஓர் இடத்தை நெருங்கதல்	69
29.	அதட்டு	அதிகாரமாக உரத்த குரலில் பணித்தல் (அல்லது) கண்டித்தல்	117
30.	அதிர்	விசையுடன் கூடிய அழுத்தத்தால் கண்ணுக்கு தெரிவதை விட காதுக்கு கேட்கும்படி குலுங்கி ஆடுதல் (அல்லது) நடுங்குதல்	117

31.	அதுக்கு	வாயில் ஒதுக்குதல்	114
32.	அதை	வீங்குதல்	120
33.	அப்பு	சந்தனம், மை முதலியவற்றை அதிகமாக பூசுதல்	133
34.	அமர்	உட்காருதல்	137
35.	அமர்த்து[1]	வாடகைக்கு அல்லது குத்தகைக்கு ஏற்பாடு செய்தல்	137
36.	அமர்த்து[2]	அணைத்தல்	137
37.	அமுக்கு	கீழ்நோக்கி, உள்நோக்கி அபத்துதல் (அல்லது) கைகளால் பற்றி பலமாக நெருக்குதல்.	143
38.	அமுங்கு	பளு காரணமாக அமைதல்	143
39.	அமை[1]	உருவாகுதல், உருப்பெறுதல்	144
40.	அமை[2]	உருவாக்குதல், ஏற்படுத்தல்	1934
41.	அம்மு	அமுக்கதல்	159
42.	அயர்	அதிக ஆச்சரியம் அடைதல்	41
43.	அரக்கு	உள்ளங்கையில் ஒன்றை வைத்து கசக்கி, அல்லது காலால் மிதித்து அழுத்தித் தேய்த்தல்	191
44.	அரண்	மீதிதரும் நிகழச்சியால் மிரட்சி அடைதல், திகில் அடைதல்	2980
45.	அரற்று	துக்கம் தாங்காமல் புலம்பி அழுதல்	312
46.	அராவு	அரத்தால் தேய்த்தல்	191
47.	அரி [1]	சிறு சிறு துண்டுகளாக நறுக்குதல்	175
48.	அரி [2]	புழு, கரையான் முதலான சிறிது சிறிதாக கடித்து அல்லது குடைந்து குறைத்தல்	-
49.	அரிவி	-	175
50.	அருகு	குறைதல்	184
51.	அரை	நீர்கலந்து நைத்து மாவாக்குதல் அல்லது கூழாக்குதல்.	191

52.	அலசு	அழுக்கு நீங்குவதற்காக துணி, பாத்திரம் போன்றவற்றை நீரில் முக்கி ஆட்டியெடுத்தல்	200
53.	அலம்பு	கழுவுதல்	208
54.	அலர்	-	209
55.	அலறு	கதறுதல், கூக் கூறலிடல்	211
56.	அலு	சலித்துப்போதல், ஆர்வம் குறைதல்	200
57.	அலை [1]	சுற்றித்திரிதல்	200
58.	அலை [2]	மனதை அலைபாயச்செய்தல்	200
59.	அலுக்கு	குலுக்குதல்	203
60.	அலட்டு	சிறிய விஷயத்தை பெரிதாக்கி மனத்தை வருந்துதல், கவலைக்கு உள்ளாக்குதல்	206
61.	அல்லாடு	திண்டாடுதல்	200
62.	அவி [1]	வேகுதல், புழுங்குதல்,	227
63.	அவி [2]	அணைதல்	226
64.	அவி [3]	வேக வைத்தல்	1933
65.	அறி	தெரிந்துகொள்ளுதல்	235
66.	அறிவி	அறியச் செய்தல், அறிவித்தல்	236
67.	அறு [1]	துண்டாக்குதல்	240
68.	அறை	வலிக்கும்படி வேகமாக மோதுதல்	240
69.	அள [1]	ஒரு பொருளின் முப்பரிமாணங்களையோ, எடையையோ, அதற்கான கருவிகளால் கணக்கிடுதல்	258
70.	அள [2]	(ஒன்றை) பல மடங்காக்கி (சொந்தக் கற்பனையோடு) கூறுதல்	253
71.	அளாவு	(வானம், உலகு முதலிய சொற்களுடன் இணைந்து வரும்பொழுது) தொடும் அளவுக்குப் போதல்	253
72.	அளி	வழங்குதல், கொடுத்தல்	257

73.	அளவளாவு	மனம் விட்டுப் பேசுதல்	253
74.	அளை	(விரல்களால் அங்கும் இங்கும்) ஒதுக்குதல்.	261
75.	அள்ளு	(தானியம், மணல், போன்றவற்றை கூடை, கை முதலியவற்றால்) நிறைய எடுத்தல்.	249
76.	அனுங்கு	(வேதனையில்) முணுகுதல்	56
77.	அனுப்பு	ஓர் இடத்திற்கு ஒருவரை போகச் செய்தல், தகவல் தொடர்பு வழியாக ஒரு செய்தியை சென்றடையச் செய்தல்.	278
78.	ஆகு	(குறிப்பிட்ட) தன்மையில், நிலையில் இருத்தல்.	282
79.	ஆடு	அங்கும் இங்கும் அசைதல்	290
80.	ஆட்டு	வால், தலை அல்லது கொடி போன்றவற்றை அசைத்தல்.	290
81.	ஆய்	கிள்ளிக்களைதல்	306
82.	ஆரவாரி	பெரும் ஓசையிடுதல்	312
83.	ஆராய்	(உண்மையை அறிவதற்காக) பரிசீலித்தல்	319
84.	ஆள்	ஆட்சி செய்தல்	341
85.	ஆறு	சூடு குறைதல்	-
86.	ஆற்று	(கொதிநிலையில் இருக்கும் ஒன்றின்) சூட்டைக் குறைத்தல்	346
87.	இசை$_1$	உடன்படுதல், சம்மதித்தல்	399
88.	இசை$_2$	பாடுதல்	- கிர்யா
89.	இச்சி	(ஒன்றை அடைய) தீவிரமாக விரும்புதல்	390
90.	இடி$_1$	உடைத்தல், தகர்த்தல்	-
91.	இடி$_2$	பேரொலியை எழுப்புதல்	372
92.	இடு	(உணவு, மாவு போன்றவற்றை பாத்திரம் போன்றவற்றில் போடுதல், கொட்டுதல்	375
93.	இடுக்கு	(கவட்டையில், கவட்டைப் போன்ற உடலின் பகுதியில் ஒரு பொருளை வைத்து)	378

		அழுத்திப்பிடித்தல்	
94.	இடுங்கு	சுருங்குதல்	378
95.	இணங்கு	(பிறர் விருப்பம், வேண்டுகோள் போன்றவற்றிற்கு) இசைதல்	387
96.	இணை	(தனித்தனியாக இருப்பவை அல்லது இருப்பவர்) ஒன்று சேர்தல்.	387
97.	இமை	(கண்ணை) முடித்திறத்தல்	2097
98.	இயக்கு	(இயந்திரம் முதலியவற்றை) இயங்கச் செய்தல்	-
99.	இயங்கு	செயற்படுதல், தொழிற்படுதல்	397
100.	இயல்	(ஒருவரால் ஒன்றைச் செய்ய) முடிதல்.	-
101.	இயற்று	(இலக்கியம் போன்றவற்றை) படைத்தல்.	399
102.	இயை	(முரண்பாடு இல்லாமல்) இணைதல், பொருந்துதல்.	399
103.	இர	கெஞ்சிப் பெறுதல், தயவுடன் வேண்டுதல்.	400
104.	இரங்கு	வருந்துதல்	594
105.	இரட்டி	இருமடங்காக்குதல்	401
106.	இரட்டு	இரட்டித்தல்	401
107.	இரு	(ஓர் இடத்தில்) காணப்படுதல் அல்லது வந்தமைதல்	-
108.	இருட்டு	இருளுதல்	2102
109.	இருள்	(வெளிச்சம் குறைந்து) கருமை கவிதல், ஒளி குறைதல், மங்குதல்	-
110.	இரை	உரத்த குரலில் திட்டுதல்	414
112.	இலங்கு	அனைவரும் அறியும்படியாக அமைந்திருத்தல், திகழ்தல்	707
113.	இளகு	(தார், மெழுகு போன்றவறை) வெப்பத்தால் கெட்டித்தன்மையை இழத்தல்	433
114.	இளக்கு	(கெட்டித் தன்மையிலிருந்து) நெகிழச் செய்தல், இளகச் செய்தல்.	-

115.	இளி	அர்த்தமில்லாமல் (பல்லைக்காட்டி) சிரித்தல்.	434
116.	இளை	மெலிதல் (முன்பு இருந்ததைக் காட்டிலும்)	-
117.	இளை	இரைத்தல் (ஓடினால் இளைக்கும்)	-
118.	இற	சாதல்	437
119.	இறக்கு	உயரத்திலிருந்து அல்லது இருந்த இடத்திலிருந்து கீழேக் கொண்டு வருதல்	-
120.	இறங்கு	மேலிருந்துக் கீழே வருதல்	439
121.	இறு [1]	(மரம், கம்பு போன்றவற்றை) உளுத்துப் பொடிந்து விடும் நிலையில் இருத்தல். (கயிறு, தோல் போன்றவற்றை) அறுதல்.	-
122.	இறு [2]	சொல்லுதல் / அளித்தல்.	-
123.	இறு [3]	(நீர் முதலியவற்றில் தெரிந்த பகுதியை) வடித்தல்.	-
124.	இறுகு	நெகிழ்வோ தொய்வோ இடைவெளியோ இல்லாமல்) அழுத்தமாக இருத்தல்.	447
125.	இறுக்கு	(நெகிழ்வோ தொய்வோ இல்லாமல் அல்லது கவ்விப் பிடித்து) அழுத்துதல்	447
126.	இறை$_1$	சிதறுதல், அலங்கோலமாக அல்லது தாறுமாறாக விழுதல்	735
127.	இறை$_2$	(தூறுமாறாக அள்ளி வீசுதல், சிதறச்செய்தல்.	-
128.	இறை$_3$	(நீரை) வெளிக்கொண்டு வருதல்	-
129.	இறைஞ்சு	கெஞ்சுதல், மன்றாடுதல்	-
130.	இனி	இனிப்புச் சுவைக் கொண்டிருத்தல்.	451
131.	ஈ	கொடுத்தல்.	2138
132.	ஈட்டு	(பொருள்) சம்பாதித்தல்.	458
133.	ஈர்	(பொருள்களைத் தன்னை நோக்கி) இழுத்தல்.	461
134.	ஈன்	கன்று போடுதல், குட்டிபோடுதல்	473
135.	உகு	(கண்ணீர்) வடித்தல், சிந்துதல்.	480
136.	உசாவு	கேட்டல், விசாரித்தல்	2358

137.	உடன்படு	இணங்குதல், ஒத்துப்போதல்	798
138.	உடு	உடுத்து	503
139.	உடுத்து	(பொதுவாக ஆடை) அணிதல், (குறிப்பாகப் புடவை, வேட்டி முதலியன) கட்டுதல்	-
140.	உடை	(அழுத்தத்தால், கீழே விழுவதால்) துண்டாதல், பிளத்தல்.	799
141.	உண்	(உணவு) சாப்பிடுதல், (நீர், கள்) குடித்தல்.	516
142.	உணர்	(உடலிலும் மனத்திலும் ஏற்படும் நிலையை) அனுபவித்து அறிதல்.	518
143.	உணர்த்து	தெரிந்து கொள்ளச் செய்தல்	-
144.	உதவு	பயன்படுதல், உபயோகமாக இருத்தல்	522
145.	உதறு	(தூசி, அடைப்பு முதலியவை போகும்படியாக) பலமாக அசைந்து வீசுதல். (கத்தையாக இருப்பது) பிரிந்து விழுமாறு ஆட்டுதல்.	422
146.	உதி	(சூரியன், நிலா, நட்சத்திரம் ஆகியவை கண்ணுக்குப் புலனாகும் படி வானத்தில்) தோன்றுதல்	-
147.	உதிர்	(பிரிந்து தனித்தனியாக) கீழே விழுதல்.	526
148.	உதை	(காலை) முன்னும், பின்னும் பலமாக உதறுதல்.	-
149.	உந்து	(முன்னோக்கிக்செல்வதற்கு வசதியாகத் தரையில்) முன்காலால் அழுத்துதல்.	536
150.	உப்பு	ஊதிப் பெருத்தல்	573
151.	உயர்	(ஒன்று தன் நிலையிலிருந்து) மேல்நோக்கி எழும்புதல்	555
152.	உயர்த்து	(தலை, கை முதலியவற்றை) தூக்குதல்.	555
153.	உரசு	ஊராய்தல்	572
154.	உராய்	(ஒன்றின் மீது) ஒழுங்கற்ற முறையில் படுதல், உரசுதல்.	572

155.	உரி	(உடம்பின் தோல், மரத்தின் பட்டை, முதலியன) பிரிந்து வருதல் அல்லது நீங்குதல்.	561
156.	உருகு	(பனிக்கட்டி, வெண்ணெய் போன்றவை) வெப்பத்தினால் இளகுதல்.	569
157.	உருக்கு	(உலோகம், வெண்ணெய் போன்றவற்றை வெப்பத்தின் மூலம்) இளகச் செய்தல்	569
158.	உருட்டு	(பந்துபோல்) உருண்டையாக்குதல்	571
159.	உருவு	(கட்டிலிருந்து அல்லது செருகியிருப்பதிலிருந்து அல்லது பிடிப்புடன் உள்ளதிலிருந்து ஒன்றை) பலமாக இருத்தல்.	-
160.	உருள்	(படுத்தநிலையில் பக்கவாட்டில் திரும்பத்திரும்ப செல்லுதல்; புரளுதல்.	571
161.	உரை	தேரிவித்தல், கூறுதல்	557
162.	உலம்பு	சப்தமிடுதல்	837
163.	உலர்	(ஈரம்) காய்தல்.	581
164.	உலர்த்து	(ஈரமாக இருப்பதை காற்றில் சூரிய ஒளியில்) காய வைத்தல்.	581
165.	உலவு	(பெரும்பாலும் மிருகங்கள் பறவைகள்) நடமாடுதல்.	-
166.	உலர்த்து	இய்குமங்குமாக நடத்தல்	-
167.	உலாவு	(மகிழ்ச்சியாகப் பொழுதைக் கழிக்க) நடத்தல்.	2218
168.	உலுக்கு	(பலமாக) அசைத்தல்: ஆட்டுதல்;	843
169.	உலுப்பு	உலுக்கதல்.	843
170.	உலை$_1$	(கட்டு) தளர்தல், நெகிழ்ந்து பிரிதல்.	843
171.	உலை$_2$	(கட்டை) பிரித்தல்	-
172.	உவ	விரும்புதல்	-
173.	உவர்	கரித்தல்	2201
174.	உளறு	(தூக்கத்தில் குடிபோதையில், பயத்தில்) குழறிப் பேசுதல், தெளிவில்லமல் பிதற்றுதல்.	-

175.	உஞ்சு	(காய்ந்த மரம், மரத்தாலான பொருள்கள் புழு, சிறுவண்டு முதலியவற்றால் அரிக்கப்பட்டு) பொடியாதல் ; வீணாதல்.	602
176.	உளை	(கை, கால், மூட்டு போன்ற இடயங்களில்) குத்திக் குடைந்து வலித்தல்.	2227
177.	உறங்கு	தூங்குதல்	-
178.	உறி	உறிஞ்சுதல்	2235
179.	உறிஞ்சு	உதடுகளை குவித்தோ சிறுகுழல் வழியாகவோ திரவத்தை உள்ளிழுத்தல் (மூக்கினால் பொடி முதலியவற்றை) உள்ளிழுத்தல்.	2235
180.	உறு	உணர்ச்சியை அல்லது ஒரு நிலையை அடைதல், பெறுதல் என்னும் பொருளில் குறிப்பிட்ட பெயர்ச் சொற்களோடு இணைந்து வரும் வினை.	-
181.	உறுத்து	தொல்லையான நெருடல் உணர்ச்சி தருதல்.	608
182.	உறுமு	சிங்கம் போன்ற விலங்குகள் இயல்பாக அல்லது நாய், குரங்கு போன்ற விலங்குகள் கோபம், வெறி முதலியவற்றை வெளிப்படுத்தும் வகையில்) 'உர்உர்' என்ற ஒலியை எழுப்புதல்.	616
183.	உறை$_1$	(நீர், எண்ணெய், இரத்தம் முதலியன) கெட்டித் தன்மை அடைதல், கெட்டியாதல்.	618
184.	உறை$_2$	காரமாக இருத்தல்	-
185.	ஊசு	(சமைத்த உணவுப் பொருள்) பதம் கெடுதல்.	645
186.	ஊடு	(காதலனிடம் காதலி அல்லது கணவனிடம் மனைவி) பொய்க் கோபம் கொள்ளுதல், பிணங்குதல்.	-
187.	ஊட்டு	(உணவைக் கையால் அல்லது கரண்டியால் எடுத்து) வாயில் கொடுத்தல். (பால்) குடிக்கத் தருதல்.	516

188.	ஊர்	(சில உயிரினங்கள்) பரப்பை ஒட்டியவாறே நகர்தல்.	642
189.	ஊற்று	(நீர் முதலிய திரவப் பொருளை) கீழே சாய்த்து வழியவிடுதல், வார்த்தல்.	648
190.	ஊறு	(நீர் எச்சில் முதலியன) வெளிவருதல், சுரத்தல்	648
191.	ஊன்று	(ஒரு நிலைக்கு ஆதரவாகக்கையையோ காலையோ கம்பையோ ஓர் இடத்தில்) அழுத்தமாகப் பதித்தல்.	650
192.	எக்கு	(இறுக்கமான ஆடையை அணிந்துகொள்ளவோ பிறவற்றிற்காகவோ வயிற்றை) உள்ளிழுத்தல்.	661
193.	எச்சரி	(பாதகமான விளைவுகள் ஏற்பட இருப்பதைக் குறித்து) கவனமாக இருக்கும்படி கூறுதல்.	723
194.	எஞ்சு	(கழிந்தது போக) மீதி அல்லது மிச்சம் இருத்தல்.	666
195.	எடு	(விரலால், கையால் பிடித்து) தூக்குதல்.	723
196.	எட்டு	(ஓர் இடத்தை, இலக்கை நிலையை) அடைதல்.	669
197.	எண்ணு$_1$	(வரிசையாக அல்லது முறைப்படி) எண்களைக் கூறுதல். (எத்தனை இருக்கின்றன என்று) கணக்கிடுதல்.	-
198.	எண்ணு$_2$	(நினைவுக்குக் கொண்டு வந்து ஒன்றை) சிந்தித்தல், நினைத்தல்.	678
199.	எதிர்	(ஒருவரை, ஒரு போக்கை, ஒரு நிலையை) மறுத்து மாறான நிலை மேற்கொள்ளுதல்.	680
200.	எய்	(வில்லில் அம்பைப் பொருத்தி இழுத்து) விரைந்து செல்லும்படி விடுதல்.	691
201.	எய்து	(ஒரு நிலை, உணர்ச்சி முதலியவற்றை) அடைதல்.	693
202.	எரி$_1$	(தீ) சுவாலையுடன் மேல் எழுதல்.	-
203.	எரி$_2$	(ஒன்றை) தீயினால் அழித்தல், தீக்கு	694

		இரையாக்குதல்.	
204.	எவ்வு	(உயரத்தில் இருக்கும் பொருளை எடுப்பதற்காக) எம்புதல்.	-
205.	எறி	(தள்ளி விழும்படி) வேகத்துடன் வீசுதல்.	731
206.	எற்று	(காலால்) உதைத்தல்	731
207.	எண்	(இது ஒருவருடைய கூற்று, கருத்துவரை என்பதைத் தெரிவிக்கும் பொருட்டு அவற்றின் பின்வரும் போது) (`. . . `என்று) சொல்லுதல், கூறுதல்.	737
208.	ஏகு	செல்லுதல்	740
209.	ஏசங்கு	இழந்ததைப் பெற விழைதல்	745
210.	ஏசு	(மோசமான வார்த்தைகளால்) திட்டுதல், வைதல்.	748
211.	ஏத்து	(புகழ்ந்து) சிறப்பித்தல்	739
212.	ஏந்து	(வில், கொடி முதலியவற்றைக் கையில் பிடித்து, தோளில் சார்த்திச் சற்று) உயர்த்திய நிலையில் தாங்குதல்.	756
213.	ஏமாறு	(எதிர்பார்த்து) நம்பிக்கை இழுத்தல்.	-
214.	ஏண்	(நம்பும் படியாக நடந்து) ஏமாற்றுதல்	-
215.	ஏல்	ஒப்புக்கொள்ளுதல், அங்கீகரித்தல்	-
216.	ஏவு	ஒருவரை அல்லது ஒரு விலங்கை) தூண்டுதல்.	-
217.	ஏறு	உணரமான ஓர் இடத்தை அடையும் பொருட்டு (மேலே) செல்லுதல்.	776
218.	ஏற்படு	(ஒரு சொல்லின் விளைவு) வந்து சேர்தல், வந்து நிலைத்தல்.	766
219.	ஏற்று	(வாகனத்தில்) ஏறச் செய்தல்.	776
220.	ஒ	(ஒன்று மற்றொன்றை) போல் இருத்தல், (ஒன்று மற்றொன்றுக்கு சமமாக இருத்தல்.	781
221.	ஒடி	(கழி, எலும்பு போன்ற உறுதித் தன்மை உடைய	799

		பொருள்கள்) இரண்டாகப் பிரித்தல், முறிதல், (மரக்கிளை, கொம்பு போன்றவை முல) இணைப்பிலிருந்து பிரிதல்.	
222..	ஒடுக்கு	(கலகம் செய்வோரை அல்லது போராட்டம் முதலியவற்றை) அடக்குதல்; (உரிமைகளைப் பறித்து) கட்டுப்படுத்துதல்.	-
223.	ஒடுங்கு	(அதிகமாக அல்லது முனைப்பாக இருந்த நிலையிலிருந்து) குறைதல்; (உயிர், மூச்சு) குறைந்து உள்ளடங்குதல்.	804
224.	ஒட்டு	(பச்சைத் தன்மை போன்றவற்றால் ஒரு பொருள் மற்றொன்றில்) கெட்டியாகப் பிடித்தல், நெருக்கமாக இணைதல்.	807
225.	ஒண்டு	(ஒன்றின் அல்லது ஒருவரின் அருகில் போல்) அல்லது ஒட்டினாற்போல் இருத்தல் ; (பொருளோடு பொருளாகத் தன்னை) சார்த்திக் கொள்ளுதல்.	807
226.	ஒண்ணு	(செய என்னும் வாய்பாட்டு வினையெச்சத்தின் பின்) இயலுதல்; முடிதல்.	-
227.	ஒதக்கு	(திரைச் சீலை, முடி முதலியவற்றை) ஒரு பக்கமாகத் தள்ளுதல்.	821
228.	ஒதுங்கு	(இருந்த இடத்திலிருந்து) அகலுதல்; விலகுதல்.	821
229.	ஒத்து	ஒற்று	-
230.	ஒப்பி	(மனப்பாடமாக இருக்கும் விஷயத்தை மாற்றாமல்) திருப்பிச் சொல்லுதல்.	-
231.	ஒப்பு	(ஒன்றைச் செய்வதற்கு அல்லது ஏற்பதற்கு) இணங்குதல்.	781
232.	ஒலி	ஒலி எழுப்புதல்	837
233.	ஒவ்வு	(ஒன்று மற்றொன்றுக்கு) பொருந்த வருதல் ; ஏற்றுக் கொள்ளும்படி இருத்தல்.	-

234.	ஒளி	(ஒருவர் பிறர்) கண்ணில் படாதவாறு இருத்தல், மறைதல்.	853
235.	ஒற்று	(நீர், வியர்வை முதலியவற்றைத் துணி முதலியவை கொண்டு மென்மையாக) உறிஞ்சிச் செய்தல்.	860
236.	ஒன்று	இரண்டும் வெவ்வேறு என்று சொல்ல முடியாதபடி இணைதல், ஐக்கியமாதல்.	-
237.	ஓங்கு	(அடிக்கவோ, வெட்டவோ ஒன்றை) உயர்த்துதல்.	870
238.	ஓட்டு	(பெரும்பாலும் வீட்டு விலங்குகளை) துரத்துதல் ; விரட்டுதல்	877
239.	ஓம்பு	பேணுதல்	891
240.	ஓய்	(தன் போக்கிலேயே நிகழ்ந்து தானாகவே) ஒரு முடிவான நிலைக்கு வருதல் ; முடிதல்.	-
241.	கக்கு	(உணவு முதலியவற்றை வாய் உபசியாக) வெளித் தள்ளுதல் ; வாந்தியெடுத்தல்.	909
242.	கச	பாகற்காயில் இருப்பது போன்ற சுவை கொண்டிருத்தல்.	1047
243.	கசக்கு	(ஒன்றை உள்ளங்கையில் வைத்து மற்றொரு கையால் அல்லது ஒன்றை இரு கையிலும் பிடித்து) அழுத்தித் தேய்த்தல் ; (கண்களைக் கையால்) தேய்த்தல்.	915
244.	கசங்கு	(துணி, தாள் போன்றவறை) தாறுமாறான மடிப்புடையாதல் ; சுருக்கம் உடையதாக இருத்தல்.	-
245.	கசி	(இரத்தம், கண்ணீர், வியர்வை முதலியவை) மிகச் சிறிய அளவில் வெளிவருதல்.	918
246.	கட	(ஒரு பரப்பின்) ஒர பக்கத்திலிருந்து எதிர்ப் பக்கத்தை அடைதல், (இடத்தை, பொருளை, நபரை) கழிந்து நீங்குதல்; தாண்டிச் செல்லுதல்.	929

247.	கடகட	(உறதித் தன்மையுடன் அல்லது இறுக்கத்துடன் இருக்க வேண்டியவை) ஆட்டம் காணுதல்; (அரசால் தடை செய்யப்பட்ட பொருளை) அனுமதி இல்லாமல் எடுத்துச் செல்லுதல்.	-
248.	கடத்து	(ஒருவரை) விருப்பத்துக்கு மாறாகக் கொண்டு போதல்; (அரசால் தடை செய்யப்பட்ட பொருளை) அனுமதி இல்லாமல் எடுத்துச் செல்லுதல்.	-
249.	கடாசு	வீசி எறிதல்.	929
250.	கடாவு	(ஆணி, ஆப்பு முதலியவற்றை) செலுத்துதல்.	929
251.	கடி [1]	கடிந்து கொள்ளுதல்.	-
252.	கடி [2]	(பொருளை நொறுக்குதல், துண்டாக்குதல் போன்றவற்றிற்காக) பற்களைப் பதித்துப் பலமாக அழுத்துதல்; (நாய், பாம்பு முதலியன) பல் பதித்துக் கவ்வுதல்.	945
253.	கடு	(கை அல்லது கால் ஒரு செயலைத் திரும்பத் திருமபச் செய்வதால் அல்லது நீண்ட நேரம் செய்வதால்) குத்துவது போன்று வலித்தல்; (வயிற்றில்) பிசைவது போன்ற வலி ஏற்படுதல்.	952
254.	கடுகடு	(பேச்சில், செயலில் ஒருவர் தன் கோபத்தின்) கடுமையை வெளிப்படுத்துதல்.	-
255.	கடை	(மத்து, கோல் முதலியவற்றை ஒன்றில் வைத்து) வலமாகவும் இடமாகவும் மாறி மாறிச் சுழலச் செய்தல்.	957
256.	கட்டு	(வீடு, பாலம் முதலியவற்றை வடிவமைத்த படி) உருவாக்குதல்) (பறவை, தேனீ முதலியவை வசிப்பதற்கான) இடம் அமைத்தல்.	961
257.	கத்து	அலறுதல்.	1013

258.	கப்பு	செறிந்து படிதல்; கவிதல்.	-
259.	கமகம	அதிகமாக மணத்தல்	1045
260.	கம்மு	(தொண்டை கட்டிக்குரல்) ஒலி குறைந்து வெளிப்படுதல்.	1044
261.	கரகர	(ஜலதோஷம் முதலியவற்றால் தொண்டை) அரித்தல்.	1227
262.	கரி$_1$	கருகுதல், தீய்தல்	1073
263.	கரி$_2$	(நெருப்பில் எரித்து) கரியாக்குதல்; தீய்த்தல்.	-
264.	கரி$_3$	உப்புச் சுவை தெரிதல்; கைத்தல்.	1227
265.	கருக்கு	(ஒரு பொருளைச் சூட்டில் அல்லது நெருப்பில்) கருகச் செய்தல்;	1073
266.	கரை	(மழையில் அல்லது நீர் முதலிய திரவங்களில் ஒரு திடப் பொருள் பௌதிக வடிவத்தை) இழத்தல்; (பௌதிக வடிவத்தை) இழத்தல் (பௌதிகம் வடிவம்) குறைதல்.	1086
267	கரை	(காகம்) 'காகா' என்று ஒலி எழுப்புதல்.	-
268.	கல்	(அறிவு பெறும் முறையில்) படித்தல்; (ஒரு துறையில்) தேர்ச்சி பெறுதல்.	1090
269.	கல	(ஒரு திட அல்லது திரவப் பொருளோடு மற்றொரு திட அல்லது திரவப் பொருளை) தேர்த்தல்.	1092
270.	கலகல	(ஒன்றாக இருக்கும் சிறு பொருள்கள் ஒன்றோடொன்று) மோதி அல்லது உருண்டு ஒலி உண்டாக்குதல்.	1095
271	கலக்கு	(ஒரு திரவத்தை அல்லது ஒரு திரவத்தல் ஒன்றைப் போட்டு) சுழலச் செய்தல்; (தெளிந்த நீர் முதலியவற்றை) கலங்கச் செய்தல்.	1096

272.	கலங்கு	(நீர், எண்ணெய் போன்ற திரவங்கள் பிறவற்றுடன் சேர்ந்து) தெளிந்த நிலை கெடுதல்; குழும்புதல்	1096
273.	கலை	(அடுக்கு, வரிசை முதலியவற்றை) ஒழுங்கற்றதாக ஆக்குதல்; குலைத்தல்; உலைத்தல்.	-
274.	கவர்	(சிறப்பான தன்மை காரணமாக) கவனத்தை இழுத்தல்; (விரும்பத் தகுந்த ஒன்றை அளிப்பதன் மூலம்) வசப்படுத்துதல்.	-
275.	கவி	(இருள், மேகம் முதலியவை குடை விரிவது போல்) கீழ்முகமாக இறங்குதல்; பரவுதல்.	1024
276	கவை	(ஒன்றிலிருந்து) கிளைத்துப் பிரித்தல்	1113
277	கவ்வு	(பற்களுக்கு, தாடைகளுக்கு அல்லது அலகுகளுக்கு இடையில்) அழுத்திப் பிடிப்பது.	1025
278	களி	(பார்ப்பது, கேட்பது முதலியவற்றால்) இன்பம் அடைதல், மகிழ்தல்.	1158
279	களை$_1$	பயனற்ற செடி, புல் முதலியவற்றை) பிடிங்கி எடுத்தல், நீகுதல்.	1157
280	களை$_2$	(வேலை செய்து) சோர்வடைதல்.	-
281	கற	பசு, ஆடு முதலிய விலங்குகளின் மடிக் காம்பிலிருந்து பாலை பீய்ச்சி எடுத்தல்.	1166
282	கறு	இருட்டிக் கொண்மு வருதல்	1175
283	கறுவு	முன் விரோதம், போட்டி, சண்டை முதலியவை காரணமாக மனதிற்குள் வஞ்சம் வளர்த்தல்.	-
284	கன	துக்கும் போது சிரமத்தை தரக்குடிய அளவில் அதிக எடை அல்லது பளு உடையதாக இருத்தல்.	1181
285	கனல்	கடும் சூட்டுடன் இருத்தல்	1183
286	கனி	பெரும்பாலும் வாழைப் பழம் குழைவான நிலை அடைதல்.	1183

287	கனை	குதிரை அல்லது கழுதை கத்துதல்	1185
288	கன்று	அடிபட்ட இடம் பொட்டாகவோ, வரியாகவோ கறுத்துக் கணப்படுதல்.	-
289	கா	பாதுகாத்தல்	1192
290	காட்டு	கையால், விரலால் காணும்படியாகச் சுட்டுதல், (ஒன்றைக்கையில் பிடித்து) காணும்படி செய்தல்.	1209
291	காந்து	(அடுப்பில் வைக்கப்பட்ட உணவும் பொருள் அதிக சூட்டால்) கருகுதல்	1219
292	காய்	(வெப்பத்தல்) ஈரப்பசை இல்லாமல் போதல்.	1219
293	காய்	(மரம், செடி, கொடி முதலியன) காய் தருதல்.	1220
294	காய்	(கருவிகளை அடிக்கடிப் பயன் படுத்துவதால் உள்ளங்கையிலும் அல்லது ஒரே இடத்தில் பட்டுப்பட்டு காலிலும்) தடித்த தளும்பு ஏற்படுதல்.	1220
295	காய்ச்சு	(நீர்,பால் முதலியவற்றை) சுட வைத்தல்.	1219
296	காவு	(தோளில் இல்லது கையில்) தூக்குதல், எடுத்துச் செல்லுதல்.	1193
297	காறு	(தொண்டையில், வாயில் உள்ளதை) வெளிக் கொண்டு வருவதற்கான ஒலி எழுப்புதல்.	-
298	கிடந்து	(குழந்தையை மடியில், கட்டிலில்) படுக்க வைத்தல்; (உணர்வு இழந்த வரை, நோயளியை, பிணத்தை) படுத்த நிலையில் போடுதல்.	1277
299	கிடை	(ஒருவருக்கு) வாய்த்தல்; (ஒன்றிற்கு) அமைத்தல்.	1287
300	கிட்டி	(வெடி மருந்து முதலியவற்றைத் துப்பாக்கிக் குழாய் முதலியவற்றிளுள் இருக்கமாக) இடித்து அமுக்குதல்.	-
301	கிட்டு	வந்து சேர்தல்: வந்தடைதல்: கிடைத்தல்.	1287

302	கிண்டு	(கம்பு, கை முதலியவற்றால், பறவைகள்காலால் ஒன்றை) மேல் கீழாகவோ, பக்கவாட்டிலோ புரட்டுதல், கிளருதல்.	1290
303	கிளர்	(உணர்ச்சி முதலியவை) வெளிப்படுத்தல் தோன்றுதல்	1317
304	கிளம்பு	(ஓர் இடத்திலிருந்து) புறப்படுதல்.	-
305	கிளர்த்து	(ஆர்வம், பயம் முதலியவற்றை) வெளிப்படச் செய்தல், தோற்றுவித்தல்	-
306	கிளை	(மரத்தின் தொடர்ச்சியாக) பல பிரிவுகள் ஏற்படுத்தல், கப்பு விடுதல்.	1317
307	கிளறு	கிண்டுதல்	1321
308	கிள்ளு	(இலை, காம்பு முதலியவற்றை) நகத்தல் துண்டாக்குதல்.	-
309	கிறுகிறு	(ஏதேனும் ஒன்றால் கவரப்பட்டு) தன்னிலை அல்லது வசம் இழத்தல்	-
310	கிறுக்கு	படித்து அறிந்து கொள்ள இயலாதபடி எழுதுதல்.	1352
311	கீறு	(கூறிய முனையுடைய பொருள் ஒரு பரப்பில்) கிழித்தல்: கோடு ஏற்படுத்துதல்.	1352
312	குசுகுசு	கிசு கிசுத்தல்	1365
313	குடி	(பானத்தையோ திரவ உணவையோ வாய் வழியாக) உட்கொள்ளுதல்.	1378
314	குடை	(சில பறவைகள், வண்டு முதலியவை) துளைத்து ஊடுருவுதல் (கருவியால் மரச்சாமான்களை) துளைத்தல்.	-

315	குட்டு	விரல் முட்டியால் (தலையில்) குத்துதல் அல்லது (தலையின் பக்கவாட்டில்) தட்டுதல்.	1391
316	குண்டிகாய்	பசியால் வாடுதல்	-
317	குதப்பு	(வெற்றிலை, பாக்கு, மிட்டாய் முதலியவற்றை) வாய்க்குள் அடைக்குதல்; (கடிக்காமல்) சப்புதல்.	-
318	குதி	(காலால் உந்தி) மேல் எழும்பிக் கீழே வருதல், (உயரமான இடத்திலிருந்து) கீழே பாய்தல்.	1419
319	குதிர்	(விற்பவர் அல்லது வாங்குபவர் எதிர்பார்த்தபடி வீழு முதலியவற்றின் விலை) முடிவுக்கு வருதல்.	-
320	குத்து	(விரல்களை மடக்கிக் கொண்டு) கலமாக அடித்தல்.	1429
321	குந்து	முழங்காலை மடித்து முகத்துக்கு முன் கொண்டுவந்து இடிப்பின் கீழ் பகுதி தரையில் படாமல் உட்காருதல்.	1438
322	குமட்டு	(வாந்தியெடுக்கும் உணர்வில் வயிற்றை) புரட்டுதல், வாந்தி வருதல்.	1447
323	குமி	அதிகளவில் சேர்த்தல்; நிறைத்தல்	1449
324	குமுறு	(எரிமலை வெடிக்கும் முன்) முழங்குதல், (காற்றால் கடல்) ஆரவாரிக்கும்.	1452

325	குமை	(புகை, நெருப்பு முதலியவை வெளியேற வழியில்லாமல் ஒரே இடத்தில்) சுழன்று வருதல்.	-
326	கும்பிடு	(தெய்வத்தை வழிபடும் போது அல்லது பெரியவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் போது) இரு கை கூப்பி வணங்குதல்.	1458
327	கும்மு	(துவைக்கும் போது துணியை ஒரு பந்தாகச் சுருட்டி இரு கைகளாகலும் தூக்கி) ஒரு பரப்பில் அழுத்தி அழுத்தி எடுத்தல்.	1536
328	குரை	(நாய்) சாத்தம் எழுப்புதல், குலைத்தல்.	1496
329	குலுக்கு	(கையில் பிடித்து அல்லது உயரே துக்கி) மேலும் கீழும் ஆட்டுதல்; (பெட்டி முதலியவற்றை) பக்கவாட்டில் அசைத்தல்.	1501
330	குலுக்கு	(சில செயல்களில்) அதிர்ந்து ஆடுதல்	1501
331	குலை	(உடல் கட்டு) தளர்தல்	1501
332	குவி	(ஓர் இடத்தில் அல்லது ஒருவரிடம்) அதிகளவில் சேர்தல்.	1449
333	குளறு	தெளிவில்லாமல் பேசுதல், (வாய், நாக்கு) தடுமாறுதல்.	-
334	குளி	நீரின் மூலம் உடலை சுத்தம் செய்தல்.	1522
335	குளிர்	(ஒரு திரவம்) சராசரி வெப்பநிலைக்கும் குறைவான நிலையை அடைதல்.	1523
336	குறி	(ஒருவரின் பேச்சு, முகவரி முதலியவற்றை) சுருக்கமாக எழுதுதல்.	1533
337	குறுகு	(பெயர், சொல் முதலியன நிளத்தில்) குறைத்தல்.	1537
338	குறுக்கு	(நீளம், அகலம் முதலியவற்றை வெட்டி) குறைத்தல்.	1537
339	குறை	(இருக்கும் அல்லது எதிர்பார்க்கும் எண்ணிக்கை, அளவு முதலியவை) கீழ் இறங்குதல், கம்மியாதல்	1537

		(பயன்படுத்துவதால் அளவு) தீருதல்.	
340	குனி	(தலை அல்லது உடல்) கீழ் நோக்குதல், வளைத்தல்.	1605
341	குன்று	(முன்பு இருந்த நிலைக்கும்) கீழ் வருதல், குறைதல்	1537
342	கூசு	(உடல் உறுப்போடு இணைந்து வரும்போது) ஒவ்வாத தன்மையால் அல்லது மோசமான நிலைமையால் தயங்குதல், பின்னடைதல், வெட்கமடைதல்.	-
343	கூடு	(ஓர் இடத்தில்) வந்து சேர்தல் குழுமுதல்.	1562
344	கூட்டு	குப்பையை வாரி சேர்த்தெடுத்தல்; (குப்பை நிறைந்திருக்கும் இடத்தை) பெருக்குதல்.	1567
345	கூப்பு	(வணங்கும் போது) உள்ளங்கை ஒன்றோடொன்று தொடும்படி (கைகளை) மார்புக்கு நேராக இணைத்தல்.	1574
346	கூம்பு	(மலரின் இதழ்கள்) ஒன்றாக இணைத்தல் குவித்தல்.	1574
347	கூர்	(பெரும்பாலும் இறந்தகால வடிவங்கள் மட்டும்) (அன்பு, அருள், கருணை போன்ற உணர்வுகளை பிறர்மேல்) வைத்தல்; செலுத்துதல்; கொள்ளுதல்.	-
348	கூவு	(குயில், கோழி முதலிய பறவைகள்) ஏற்ற இறக்கத்தொடு ஒலி எழுப்புதல்.	1551
349	கூறு	(பேச்சு அல்லது எழுத்து மூலமாக) (பிறர்) அறியத்தருதல்; சொல்லுதல்; வெளியிடுதல்.	-
350	கூறு	(அவமானம், குற்றம் போன்றவற்றால்) உடல் (சுருங்குவது போல்) தொய்தல்.	1605
351	கெக்கலி	(உரக்க) ஏளனமாகச் சிரித்தல்.	1608

352	கெஞ்சு	தயவாக வேண்டுதல்: இரக்கத்துடன் மன்றாடுதல்.	1612
353	கெடு$_1$	மோசமான நிலை அடைதல்; சமநிலை குலைதல், சீர்குலைதல்.	-
354	கெடு$_2$	மோசமான நிலையை அடையச் செய்தல்; சமநிலையைக் குலைத்தல்; சீர்குலைத்தல்.	1614
355	கெட்டி	(ஒன்றைக் கடினமாகும்படி) இறுக்குதல்.	-
356	கெலி	(போட்டியில்) ஜெயித்தல்; வெற்றி பெறுதல்.	-
357	கெல்லு	தோண்டுதல்	1108
358	கேரு	(முட்டை போடும் சமயத்தில்) கோழி ஒரு விதமான ஒலியை எழுப்புதல்.	1672
359	கேள்	பதில் வேண்டுகிற அல்லது எதிர்பார்க்கிற முறையில் தெரிவித்தல், வினவுதல்,(கேள்வி) எழுப்புதல்.	1677
360	கை	உப்பு சுவை தெரிதல்,கர்த்தல்.	-
361	கொக்கரி	(எச்சரிப்பது போல் கோழி) கூவுதல்.	1688
362	கொஞ்சு	ஆசைப்பட வைக்கும் முறையில் குழைந்து பேசுதல் அல்லது நடத்தல்	1697
363	கொடு	(ஒருவர் ஒன்றை) பெற உதவுதல், (பெற்றதை) திருப்பச் சேர்த்தல்.	1708
364	கொட்டு	(ஓர் இடத்திலிருந்து திரவம்) வழிதல் அல்லது வசையுடன் கீழே விழுதல், பாய்தல்.	1719
365	கொதி	(திரவங்கள்) சூடாகி ஆவி எழும் நிலைக்கு வருதல்.	1735
366	கொத்து	(பறவை அலகாலும், பாம்பு, அணில் முதலியன பல்லும்) குத்துதல்.	1740
367	கொந்தளி	(காற்றால் கடல்நீர்) அலைக்கப்பட்டு பொங்குதல்.	1745

368	கொந்து	(பறவைகள் அலகால்) கொத்துதல், (கூர்முனை கொண்ட கருவியால்) குத்துதல்.	1740
379	கொப்பளி	(வாய்க்குள் நீரை வைத்து) அலைத்து சுத்தம் செய்தல்.	1753
370	கொல்	குடித்தல்	1772
371	கொள்	(ஒன்றை ஒரு பாத்திரம்) ஏற்றல், பிடித்தல்.	1788
372	கொளுத்து	(நெருப்பால்) எரியச்செய்தல்.	1794
373	கொறி	(பல்லால் அல்லது அலகால்) பிரித்து அல்லது உர்த்து தின்னுதல்.	1798
374	கோ$_1$	(நூல், கம்பி போன்றவற்றை ஒன்றில்) இணைக்கும் முறையாக நுழைத்தல்.	1809
375	கோ$_2$	(வியர்வை, சீழ் முதலியவை திரள்தல்: (கானியத்தில் பால்) பிடித்தல்.	1809
376	கோணு	(நேராக இல்லாமல்) வளைந்திருத்தல்; (இயல்பாக இல்லாமல்) ஒரு பக்கமாக இழந்த நிலையில் இருத்தல்.	1834
377	கோது	(பறவை சிறகுகளின் ஊடே அலகை நுழைத்து) நீவுதல்: குடைதல், (முடியின் இடையே விரல், சீப்பு முதலியவற்றைக் கொடுத்து, நீளவாக்கில் மெதுவாக இழுத்தல்.)	1786
378	கோர்	(நூல், கம்பி போன்றவற்றை ஒன்றில்) இணைக்கும் முறையாக நுழைத்தல்.	1809
379	கோரு 1	(உரிமையுடன்) கேட்டல்: (முறையாக) வேண்டுதல்.	1848
380	கோரு 2	(நீர் முதலியவற்றைக் கையால் அல்லது பாத்திரத்தால்) அள்ளுதல்: முகத்தல்.	1847
381	கோலு	வகுத்தல், ஏற்படுத்துதல், அமைத்தல்.	-
382	கௌவு	(பற்களுக்கு, தாடைகளுக்கு அல்லது	1025

		அலகுகளுக்கு இடையில்) அழுத்திப்படித்தல்.	
383	சப்பளி	உருத்தெரியாமல் தட்டையாக்குதல்	1924
384	சப்பு	(கடிக்காமல்) வாயிக்குள் வைத்து அழுத்திப்பிடித்தல்.	1927
385	சமை	(உணவுப் பொருள்களை) உண்பதற்கு தகுந்தபடியாக செய்தல்: (உணவு) ஆக்குதல் அல்லது தயாரித்தல்.	1934
386	சரசர	உரசல் சத்தம் எழுதல்	1946
387	சரி	(மேடு, மலை, கட்டிடம் முதலியவை) குழைந்து ஒரு பக்கமாக சாய்தல்.	1950
388	சலசல	நீர் உருணடோடும் அல்லது இலைகள் உரசும் ஒலி எழுதல்.	-
389	சலி	(சல்லடையில் போட்டு) பக்கவாட்டில் ஆட்டி அல்லது கையால் அலைத்து வேண்டாதவற்றை (மேலே தங்குமாறு செய்து) நீக்குதல்.	1959
390	சவு	நமர்த்தல்	1930
391	சவை	மொல்லுதல்	1927
392	சறுக்கு	(இருக்கும் நிலையிலிருந்து) பிடிப்பு தவறி சரிதல்.	2048
393	சா	உயிர் நீங்குதல், மரணமடைதல்.	2002
394	சாடு	(குற்றம் கூறி) கடுமையாக விமர்சித்தல் ஏ தாக்குதல்.	-
395	சாத்து	அடித்தல், புடைத்தல்.	2029
396	சாய்	நேர் நிலையிலிருந்து ஒன்றை நோக்கி பக்கவாட்டில் தாழ்த்தல், பக்கவாடை நோக்கி அமைத்தல்.	-
397	சார்	(மற்றொருவரை) ஆதரவாக நம்பி இருத்தல், (மற்றொன்றை) பொருத்து அமைத்தல்.	2030

398	சார்ந்து	முடுதல்	-
399	சிக்கு	மாட்டுதல், மாட்டிக் கொள்ளுதல்	-
400	சினுங்கு	(முறைபட்டுக் கொண்டு) மெல்லிய குரலில் அழுதல், முணங்குதல்.	2080
401	சிதறு	(உடைந்து, சிதைந்த) தனித்தனியாகப் பிரித்தல், (பிரிவுபட்டு) விலகுதல், தனித்தனியாகுதல்.	1294
402	சிதை	(ஒன்றின் வடிவம், தன்மை, இயல்பு முதலியவற்றை) கெடுத்தல், குலைத்தல்.	2083
403	சிந்து	(நீர், பூக்கள், தானியம் முதலியவை) பரவலாக கீழே விழுதல். (நீர் முதலியவற்றை) கொட்டுதல்	1294
404	சிமிட்டு	(கண்) இமைத்தல்	-
405	சிம்பு	(சண்டை, தகராறு ஆகியவற்றின்போது) துள்ளுதல், எகிறுதல்.	-
406.	சிரி	முகபாவத்தின் மூலமோ பல்தெரிய உதடுகளை விரிப்பதன் மூலமோ சில வகைக் குரல் ஒலிகள் எழுப்புவதன் மூலமோ மகிழ்ச்சி, கேலி முதலியவற்றை வெளிப்படுத்துதல்.	1304
407.	சிரை	(முடியை) நீக்குதல்; மகிழ்த்தல்.	1305
408.	சிராய்	(கரடுமுரடான அல்லது கூர்மையான முனை) உராய்ந்து கீறல் ஏற்படுதல்;	1305
409.	சிலிர்	(குளிர், பயம் முதலியவற்றை) பக்க வாட்டில் வேகமாக அசைத்தல், உதறுதல்.	2113
410.	சிலுப்பு	(முடி, இறகு முதலியவற்றை) பக்க வாட்டில் வேகமாக அசைத்தல், உதறுதல்.	2118
411.	சிலும்பு	(முடி) படியாமல் நீண்டு நிற்றல்;	-
412.	சில்லிடு	(உடல் முதலியவை வெப்பம் இழந்து) குளிர்தல்.	2124
413.	சிவ	சிவப்பு	1607

414.	சிற	உயர்ந்த நிலை பெறுதல்; மேம்பாடு அடைதல்.	2131
415.	சிறு	(உடல்) சுருங்குதல் (அவமானம், அவமதிப்பு முதலியவற்றால் ஒருவரின் முகம், உடல்) குறுழுதல்.	1326
416.	சின	கோபித்தல், கோபப்படுதல்.	1332
417.	சீண்டு	சிறு தொல்லை தருதல், செயற்பட வைக்குமாறு தூண்டுதல்.	2094
418.	சீந்து	(ஒருவரை) பொருட்படுத்துதல் ; மதித்தல்	-
419.	சீவு	(கத்தி முதலியவற்றால்) மெல்லிய சுருளாக வெட்டி நீக்குதல்.	2140
420.	சுடர்	ஒளிவிடுதல்	2183
421.	சுடு	(வெப்பம், வெயில் ஆகியவற்றால்) உஷ்ணம் அடைதல்	2183
422.	சுட்டு	குறிப்பிடுதல்	2187
423.	சுணங்கு	(வேலை ஆரம்பமாக அல்லது நடக்கும் வேலை) தாமதமாதல்)	-
424.	சுண்டு	(சிறு பொருளை விரலால் விசையுடன் சுண்டுதல்.	2192
425.	சும	(கனமான பொருளை, தலை, முதுகு போன்ற இடங்களில்) தாங்குதல்.	2204
426.	சுமத்து	(பாரத்தை) சமக்கச் செய்தல், ஏற்றுதல்.	2204
427.	சுர	(பால், நீர், எச்சில் முதலியவை தம் ஆதார இடத்தில்) ஊறி வெளியேறுதல்.	2353
428.	சுரண்டு	(ஒரு பரப்பின் மீது ஒட்டி இருப்பதை அல்லது மேற் பரப்பை நீக்குவதற்காக கத்தி, கம்பி, முதலியவற்றால்) அழுத்தித் தேய்த்தல்.	1305

429.	சுருக்கு	சொற்பொழிவு, எழுத்து போன்றவற்றை அல்லது செலவை முன்யிருந்த அளவைவிடச் சிறிதாகும் வகையில் குறைத்தல்.	2213
430.	சுருங்கு	அளவில் சிறிதாதல்	2213
431.	சுருட்டு	உள் மடங்குமாற சுற்றுதல்	2211
432.	சுருள்	உள்நோக்கி வட்டவடிவமாக மடக்குதல்	-
433.	சுவை	ருசி அறிதல் ; ருசித்தல்	1981
434.	சுளி	முகத்தை சுருக்குதல் ; சுழித்தல்	-
435.	சுளுக்கு	(வலியும் வீக்கமும் ஏற்படும்படி) தசை நார்கள், அல்லது தசை நாண்கள் புரண்டு விடுதல்	2227
436.	சுற்று	(ஒரு பொருள் இரக்கும் இடத்தில் இருந்தவாறே) குறிபிட்ட திசையில் சுழலுதல் (ஒரு பொருளை) சுழலச் செய்தல்.	2238
437.	சூடு	(தலையில் மலர் போன்றவற்றை அல்லது கழத்தில் மாலையை) அணிதல்	2247
438.	சூட்டு	(விழா நடத்தி ஒரு பெயரை) இடுதல், கொடுத்தல்	-
439.	சூப்பு	(வாயுக்குள் வைத்து நாக்கால் அழுத்தி) உறிஞ்சுதல் ; சப்புதல்	2154
440.	சூம்பு	சூப்புதல்	2754
441.	செதுக்கு	(மரம், கல் முதலியவற்றின் அளவைக் குறைக்க) சிறிது சிறிதாக வெட்டுதல்.	1624
442.	செய்	ஒரு செயலில் ஈடுபட்டிருத்தல்	1628
443.	செருகு	ஒரு பிடிப்பில் நிற்கும்படி (ஒன்றை) நுழைத்தல் அல்லது திணித்தல்	2285
444.	செருமு	இருமுதல்	1634

445.	செல்	(ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்தை நோக்கி நகர்ந்து பெயர்தல்; போதல் (வாகனம்) இடம் பெயர்தல்; ஓடுதல்.	2286
446.	செலுத்து	(வண்டி முதலிய வாகனங்களை) ஓட்டுதல் ; (ஏவுகணை முதலியவற்றை) போகச் செய்தல்.	2286
447.	செறி	அடர்ந்து நிறைதல்.	-
448.	சேந்து	(நீர்) இறைத்தல்	2310
449.	சேர் [1]	கூட்டாக இருத்தல்	2312
450.	சேர் [2]	(நபர்களை) ஒன்று திரட்டுதல்; (பொருள்களை) சேகரித்தல்	2372
451.	சொக்கு	(அழகு, திறமை முதலியவற்றால்) தன்வசம் இழத்தல் ; கிறங்குதல்; மயங்குதல்.	-
452.	சொட்டு	(திரவம் கீழே விழும்போது) சிறு உருண்டை வடிவ அளவிலானது; துளி.	2324
453.	சொரி	(உடலில் ஏதேனும் ஓர் இடத்தில் நகத்தால் அல்லது ஏதேனும் ஒன்றால்) தேய்த்தல்.	2343
454.	சோம்பு	(ஒரு செயலைச் செய்ய) விருப்பம் காட்டாமல் இருத்தல்; சோம்பல் அடைதல்.	2352
455.	சோர்	(உடல் அல்லது மனம்) மேற்கொண்டு செயல்படச் சக்தியற்றுத் தளர்தல்.	-
456.	தகர்	(தாக்கப்பட்டு அழிந்துபோகும் வகையில்) சிதறுதல்; உடைதல்; உருக்கலைதல்.	2429
457.	தகை	பொருத்தமாக அமைதல் அல்லது கிடைத்தல் ; குதிர்தல்.	-
458.	தங்கு	(குறிப்பிட்ட நோக்கத்துக்காக ஓர் இடத்துக்குச் சென்று) குறிப்பிட்ட காலம் வரை இருத்தல் ; வசித்தல்.	2449
459.	தடவு	(உடலை) வருடுதல்	2454

460.	தடி	(அடிபடுதல், பூச்சிக்கடி முதலியவற்றால் உடலின் மேல் பரப்பு) சிறிய அளவில் வீங்குதல், புடைத்துக் காண்ப்படுதல்.	2457
461.	தடு	(ஒரு செயலை) நிகழாமல் இருக்கச் செய்தல்; தொடர்ந்து மேற்கொள்ளாதவாறு செய்தல்.	2460
462.	தடுக்கு	(கால்) இடறுதல்.	-
463.	தடுமாறு	(இயக்கத்தின்போது ஒழுங்காகச் செயல்பட முடியாமல்) நிலை தவறி ஆட்டம் காணுதல்.	2462
464.	தட்டு	மெதுவாக அடித்தல்.	2466
465.	தனி	(வெப்பம், பசி, கோபம் முதலியவை) குறைதல் ; தாழ்தல்.	2475
466.	தண்டி	(ஒருவர் செய்த குற்றத்திற்காக, தவறுக்காக) தண்டனை தருதல்.	-
467.	தத்து	(பறவைகள், சிறு பிராணிகள்) கால்களை ஒரு சேர ஊன்றியவாறு தாவுதல்.	2490
468.	தப்பி	(அடைத்து வைக்கப்பட்ட நிலையிலிருந்து அல்லது பிடிபடும் நிலையிலிருந்து) விடுபட்டு, நீங்குதல் அல்லது வெளியேறுதல்.	2498
469.	தப்பு	(அடைத்து வைக்கப்பட்ட நிலையிலிருந்து அல்லது பிடிபடும் நிலையிலிருந்து) விடுபட்டு, நீங்குதல் அல்லது வெளியேறுதல்	2498
470.	தரி	(உடை, மாலை முதலியவை) அணிதல் (திருநீர், சந்தனம் முதலியவை பூசுதல்)	-
471.	தருவி	வரவழைத்தல், வரச்செய்தல்	2526
472.	தவறு	முடியாமல் போதல்	2498
473.	தவிர்	(ஒன்று) நிகழாதவாறு பார்த்துக் கொள்ளுதல்.	2539
474.	தளர்த்து	(பிடி, முடிச்சு போன்றவற்றை) இறுக்கும் இழக்கச் செய்தல் ; நெகழச் செய்தல்.	2551

475.	தளிர்	துளிர்விடுதல்	2555
476.	தறி	வெட்டுதல்	2562
477.	தன	(யாருடனும் அல்லது எதனுடனும் கூட்டாக இல்லாமல்) பிரிக்கப்படுதல் ; விலக்குதல்.	2612
478.	தா	(ஒருவர் ஒன்றை) பெற உதவுதல் (தன்னிடம்) வரச் செய்தல் (பெற்றதை) திரும்ப சேர்த்தல் (உரியதை) செலுத்துதல்.	-
479.	தாக்கு	அடித்தல், வெட்டுதல் முதலியவற்றுக்கு உட்படுத்துதல்	2570
480.	தாங்கு	(உடலில் வலி, மனதில் துள்ளும் முதலியவற்றை) பொறுத்தல் (ஒரு நிகழ்ச்சி விளைவிக்கம் பாதிப்பை) ஏற்றல்	2573
481.	தாண்டு	(இடைப்பட்ட ஒன்றை கடப்பதற்காக) தாவுதல், (ஒன்றை) தாவிக்கடத்தல்.	2578
482.	தாவு	உந்திப்பாய்தல்	2596
483.	தாளி	கொதிக்கும் எண்ணெயில், படபடவென்று பொறியும் கடுகு, உளுத்தம் பருப்பு முதலியவற்றை மனம் சேர்ப்பதற்காக (குழம்பு, சட்னி போன்றவற்றோடு) கலத்தல்.	2604
484.	திகை [1]	மலைத்தல்	2621
485.	திகை [2]	(எதிர்பாராமல் நிகழ்வதை அல்லது இயல்புக்கு மாறாக இருப்பதை) உடனடியாகப் புரிந்துகொண்டு செயல்பட முடியாத நிலைக்கு உள்ளாதல்.	2621
486.	திக்குமுக்காடு	மிகவும் திணறுதல்	2622
487.	திக்கு	(பேச்சு உறுப்பின் குறைபாடு காரணமாக அல்லது துக்கம், அதிர்ச்சி முதலியவற்றின் காரணமாக) சொற்கள் தடைபடுதல்.	2624

488.	திடுக்கிடு	(எதிர்பாராத அல்லது பயம் அளிக்கக் கூடிய ஒன்றினால்) திடீரென்று அதிர்ச்சியடைதல்.	-
489.	திட்டு	(கோபத்தில்) மனதைப் புண்படுத்தும்படி பேசுதல்.	2632
490.	தித்தி	இனித்தல்	2674
491.	திமிறு	(பிறரின் பிடியை) உதறி விடுபட முயலுதல்.	-
492.	திரட்டு	பலரிடமிருந்து, பல இடங்களிலிருந்து) பெற்று ஒன்றாக்குதல்; சேகரித்தல்.	-
493.	திரி	(நார் முதலியவற்றைக் கயிறாக அல்லது துணி, பஞ்சு முதலியவற்றைத் திரியாக) முறுக்குதல்.	2655
494.	திருகு	(திருகாணி முதலியவற்றை) சுற்றி உட்செலுத்துதல், திருப்புதல்	2655
495.	திருடு	தனக்கு சொந்தமில்லாத ஒன்றை உரியோரின் அனுமதியில்லாமல் எடுத்தல்; சட்ட விரோதமாக அபகரித்தல்	2658
496.	திருத்து	(பேச்சு, எழுத்து ஆகியவற்றிலுள்ள) தவறுகளை நீக்கி சரி செய்தல்	2659
497.	திருந்து	தவறான பழக்க வழக்கங்களிலிருந்து விலகுதல்; நல்வழிப்படுதல்	2659
498.	திருப்பு	இருக்கும் அல்லது செல்லும் திசையிலிருந்து மாற்றதல்	2655
499.	திரும்பு	புரப்பட்ட இடத்திற்கோ பழையை நிலைக்கோ வருதல், செல்லுதல்	2655
500.	திரை	(பால்) திரிதல்	-
501.	திளை	(ஒன்றில் முழ்கு) சுகம் அனுபவித்தல்	-
502.	திற	(கதவு போன்றவற்றை) நுழைவதற்கு ஏற்ற நிலைக்கு நகர்த்துதல்	2667
503.	தின்	சாப்பிடுதல்	2670

504.	தீட்டு	(கத்தி, கத்திரிகோல் போன்றவற்றை சாணை கல்லில்) கூராக்குவதற்கு தேய்த்தல்	2628
505.	தீய்	(தீயினால் அல்லது அதிகப்படியான சூட்டினால்) எரிந்து போதல், கருகுதல்	2672
506.	தீர்	ஒரு பொருளை உபயோகத்திற்கு எடுத்துக்கொண்டே இருப்பதால் இல்லாமல் போதல்	2683
507.	தீற்று	(மை, வர்ணம் போன்றவை) தீட்டுதல்	2678
508.	துஞ்சு	தூங்குதல்	2693
509.	துடி	நடுக்கத்துடன் துள்ளி அசைதல்	2696
510.	துடிதுடி	(மிகுதியைக் காட்டி அழுத்தம் தருவதற்கு) துடி என்னும் வினையின் இரட்டித்த வடிவம்	-
511.	துடை	(ஈரம், அழுக்கு முதலியவற்றை) தேய்த்து நீக்குதல்	2703
512.	துணி	(பயமோ, தயக்கமோ இல்லாமல் ஒன்றை செய்ய) தைரியம் கொள்ளுதல் தைரியத்துடன் (ஒன்றை) எதிர்கொள்ள அல்லது செய்ய முன்வருதல்	2708
513.	துதி	தொழுதல்; வழிபடுதல்	-
514.	துப்பு	வாயில் உள்ள எச்சில் உணவு முதலியவற்றை விசையுடன் வெளியே தள்ளுதல்	2725
515.	தும்மு	(மூக்கில் ஏற்படும் அரிப்பால் அல்லது ஜலதோசத்தால்) மூச்சுக்காற்றை வெடிப்பொலியோடு வெளிப்படுத்துதல்	2740
516.	துய்	(இன்பத்தை, பயனை அனுபவித்தல்)	2685
517.	துரத்து	(பிடிப்பதற்காக) ஓடி பின் தொடர்தல், விரட்டுதல்	2744

518.	துருதுரு	(ஒன்றை செய்ய வேண்டும் என்று) வேகம் கொள்ளுதல், துடித்தல்	-
519.	துருத்து	(பை முதலியவற்றிலிருந்து அல்லது ஒரு பரப்பிலிருந்து ஒன்று) வெளியே நீட்டிக் கொண்டிருத்தல் ; வெளித்தள்ளிக் காணப்படுதல்.	2772
520.	துருவு	(தேங்காய்ப் பருப்பு, கேரட் முதலியவற்றை) தேய்த்து மெல்லிய துகள்களாக விழச் செய்தல்.	2743
521.	துலக்கு	(பற்களை) சுத்தம் செய்தல் ; (பாத்திரத்தை) (அழுக்கு நீக்கி) பளிச்சிடச் செய்தல்	2763
522.	துலங்கு	(ஒன்று) தெரிய வருதல் ; வெளிப்படுதல்.	2763
523.	துவக்கு	தொடங்குதல், ஆரம்பித்தல்	2754
524.	துவங்கு	தொடங்குதல் ; ஆரம்பித்தல்	2754
525.	துவட்டு	(உடலில் உள்ள ஈரத்தைத் துணியால்) அழுத்தித் துடைத்தல்	-
526.	துவர்	துவர்ப்புச் சுவை கொண்டிருத்தல்	2756
527.	துவள்	(செடி, கொடி, முதலியவை) விறைப்பு இழந்து வளைதல்	-
528.	துவை	துணிகளை தூய்மை செய்தல்	2759
529.	துளிர்	(மரம், செடி முதலியவற்றில்) இலை தோன்றுதல் தளிர்த்தல் மண்ணிலிருந்து முளை (தோன்றதல்)	2765
530.	துளும்பு	தளும்புதல்	2764
531.	துளை	(ஒன்று) சிறு வழி உண்டாக்கி உள்ளே செல்லுதல் ; துவாரம் போடுதல்	2907
532.	துள்ளு	சற்று விரைவாக மேலெழும்பிக் கீழே வருதல்	-
533.	துற	(பதவி, பாகம் முதலியவற்றை வேண்டாம் என்று) நீங்குதல்	2768
534.	தூக்கு	(ஒன்றை அல்லது ஒருவரை ஒரு பரப்பிலிருந்து)	2777

		மேலே உயர்த்துதல்	
535.	தூங்கு	(ஓய்வெடுக்க) தூக்கம் கொள்ளுதல்; உறங்குதல்.	2777
536.	தூண்டு	(எரிவதற்காக விளக்கின் திரியை) முன் தள்ளுதல்	-
537.	தூர்	(கிணறு, ஆறு முதலியவற்றை அல்லது வயல் போன்றவை) மண், கல் போன்றவை கொட்டி மூடுதல் ; மேடாக்குதல்; அடைபடுதல்;	2787
538.	தூவு	(பூ, விதை போன்றவற்றை அல்லது உரம் பூச்சி மருந்து முதலியவற்றை) பரவலாக விழச் செய்தல்.	2791
539.	தூறு	சிறுசிறு துளிகளாக விழுதல்	2794
540.	தூற்று	ஒருவரை பேச்சாலோ, எழுத்தாலோ பழித்தல்	2793
541.	தெண்டி	முயலுதல், முயற்சி செய்தல்	-
542.	தெரி	கண்ணுக்குப் புலனாதல், கண்ணுக்குப் புலப்படுதல்	2815
543.	தெரிவி	(ஒரு செய்தியை பேச்சால் எழுத்தால் ஒருவருக்கு அறிவித்தல்; வெளிப்படுத்தல்	-
544.	தெரிவு செய்	தேர்ந்தெடுத்தல்	-
545.	தெவிட்டு	திகட்டுதல்	2800
546.	தெளி	(நீர் முதலிய திரவத்தை அல்லது பொடியாக உள்ள உரம் போன்றவற்றை கையால் அல்லது ஒரு சாதனத்தால்) பரவலாக விழச் செய்தல்	2827
547.	தெறி	(நீர்த்துளி, தீப்பொறி முதலியவை) சிதறி விசையுடன் விழுதல்	2830
548.	தெற்று	பேசும் போது சொற்கள் தொடர்ச்சியாக இல்லாமல் தடைபட்டும் முழு ஒலிப்பு பெறாமலும்) திக்குதல்	2835

549.	தேக்கு	ஓடும் அல்லது வழியும் திரவத்தைத் தடுத்து (ஓரிடத்தில்) தங்கச் செய்தல்	-
550.	தேங்கு	(தண்ணீர் போன்றவை ஓடாமல்) தங்குதல்	2843
551.	தேடு	(முன்னே இல்லாத ஒருவரை அல்லது தேவைப்படுகிற ஒன்றை அலைந்து விசாரித்து) கண்டறிய முயலுதல்	2844
552.	தேம்பு	(அழும்போது) மூச்சுத் தடைபட்டு ஒலியுடன் வெளிப்படுதல்	-
553.	தேய்	(ஒரு பொருள் மற்றொன்றின் மீது) உரசுதல்; உராய்தல்	2846
554.	தேர்	(ஒரு துறையில்) நுணுக்கமான அறிவும் திறமையும் பெற்றிருத்தல்	-
555.	தேறு	(தேர்வு, பரிசீலினை ஆகியவற்றில்) தகுதியுடையதாகத் தேர்ந்தெடுக்கப்படுதல்; தேர்வு பெறுதல்	2856
556.	தேற்று	(வருந்துபவரை) அமைதியடையச் செய்தல்; ஆற்றுதல்.	2856
557.	தை	(துணி முதலியவற்றில்) ஊசியை இரு புறமும் மாறிமாறிச் செலுத்தி நூலை இழுத்து இணைத்தல் அல்லது பொருத்துதல்	2858
558.	தொகு	பொதுவாக உள்ள அம்சத்தை அடிப்படையாகக் கொண்டு சேகரித்தல்	2861
559.	தொங்கு	மேல் முனையில் மட்டும் பிடிப்புடன் இருந்து அல்லது ஒன்றில் மாட்டப்பட்டுக் கீழ் நோக்கியவாறு இருத்தல்	2863
560.	தொடங்கு	(குறிப்பிட்ட ஒன்றைச் செய்ய அல்லது நிகழ்த்த) செயல்பாட்டில் இறங்குதல் (ஒன்று நடைபெறுவதற்கான) சூழ்நிலை ஏற்படுதல்.	2866
561.	தொடர்	(ஒருவரை) விட்டுவிடாமல் பின் செல்லுதல்	2865

562.	தொடு	(கையை) படச் செய்தல் ; படுவதன் மூலம் உணர்தல்	2865
563.	தொணதொண	ஏரிச்சலையும் வெறுப்பையும் உண்டாக்குகிற வகையில் ஒன்றையே திரும்பத் திரும்பத் பேசுதல்	2876
564.	தொத்து	பாய்ந்து பிடித்தல்	-
565.	தொய்	இறுக்கம் அல்லது விறைப்பு இழந்து தளர்ந்து தாழ்தல்; துவளுதல்	2894
566.	தொலை	(எளிதில் கண்டுபிடிக்க முடியாதபடி) காணாமல் போதல்	2900
567.	தோண்டு	(கையில் அல்லது கருவியால்) மண்ணை (பள்ளம் ஏற்படும் படி) அகற்றுதல்	2927
568.	தோய்	(நீர், பால் முதலிய திரவங்களில்) முக்கி நனைத்தல்	2933
569.	தோல்	சண்டை, பந்தயம் முதலியவற்றின் முடிவில்) வெற்றி (வாய்ப்பை) இழத்தல்	2937
570.	தோற்று	புலப்படுதல்	-
571.	தோன்று	(பார்வைக்கு) தெரிதல் ; காணப்படுதல் ; காட்சி தருதல்	2942
572.	நகர்	மெதுவாக இடம் விட்டு இடம் பெயர்தல் ; மெள்ளப்போதல்	2943
573.	நக்கு	நாக்கினால் தடவுதல்	2945
574.	நசி	குறைதல், நசிதல்	-
575.	நசுக்கு	(ஒன்றை ஒரு பரப்பில்) அழுத்தித் தேய்த்தல், (ஒன்றின் பரப்பை) இரு பக்கங்களிலும் விசையுடன் அழுத்துதல்	2949
576.	நசுங்கு	(விழுவதால், அழுத்தப்படுவதால்) சிதைதல் ; உருக்குலைதல்	2949

577.	நட	இடம்பெயரும் பொருட்டு இயல்பான வேகத்தில் கால்களை மாற்றி மாற்றி முன் வைத்தல்	2957
578.	நடத்து	(ஒன்றை குறிப்பிட்ட முறைப்படி அமைத்து) நிகழ்த்துதல்	-
579.	நடமாடு	(மனிதர் தொடர்பாகக் கூறும்போது) நடந்து இயங்குதல் (விலங்கு தொடர்பாக கூறும் போது) உலவுதல்	2957
580.	நடு	(மரம், செடி முதலியவை வளர்வதற்கு அவற்றின் வேர்ப்பகுதியை நிலத்தில்) செருகி வைத்தல் ஊன்றுதல்	2958
581.	நடுக்கு	நடுங்க செய்தல்	2960
582.	நடுங்கு	(உடல் அல்லது உடலின் பகுதி) கட்டுப்பாடு இல்லாமல் அசைதல்	2960
583.	நமர்	(அப்பளம் முதலிய உணவும் பொருள்கள், அல்லது பட்டாசு முதலியவை) ஈரம் ஏற்று மொரமொரப்பு தன்மையை இழத்தல்	2969
584.	நம்பு	உறுதியான எண்ணம் கொள்ளுதல், மனதில் உறுதியாக ஏற்றல்	2975
585.	நய	(குறிப்பிட்ட காரணத்திற்காக ஒருவரிடம் பேசுதல், பழகுதல் போன்றவற்றில்) கனிவை வெளிப்படுத்துதல்	-
586.	நரை	(பெரும்பாலும் முதுமையின் அறிகுறியாக முடி) வெள்ளை நிறமாக மாறுதல்; வெளுத்தல்	2984
587.	நல்கு	(பெரும்பாலும் பொருள் அல்லாத பிறவற்றை) அளித்தல் ; வழங்குதல்; தருதல்	2989
588.	நறுக்கு	(காய்கறி, பழம் முதலியவற்றைக் கத்தி போன்றவற்றால் சிறு துண்டாக வெட்டுதல் ; அரிதல்	3001
589.	நனை	(தண்ணீர், இரத்தம் முதலிய திரவப் பொருளால்)	3006

		ஈரமாதல் ; தோய்தல்; நனையச் செய்தல்	
590.	நாடு	விரும்பித் தேடுதல்	3011
591.	நாட்டு	நாடுதல்	2958
592.	நாணு	நாணம் அடைதல்	3016
593.	நாறு	நாற்றம் வீசுதல்	2379
594.	நிகர்	ஒத்தல்	3028
595.	நிமிண்டு	கட்டைவிரலுக்கும் சுட்டு விரலுக்கும் இடையே பிடித்து அழுத்தி முன்பின் அசைத்தல்	2386
596.	நிமிர்	(தலை, உடல் குனிந்த நிலையிலிருந்து) உயர்தல்	2382
597.	நிமிர்ந்து	(தலையை, நெஞ்சை) இருக்கும் நிலையிலிருந்து உயர்த்துதல்	2382
598.	நிர	நிறைவடைதல்	3041
599.	நிரப்பு	(ஒன்றின் கொள்ளளவைப் பொருளால்) அடைத்துக் கொள்ளச் செய்தல்; நிறைத்தல்	3041
600.	நிரம்பு	(ஒன்றின் கொள்ளவு) முழுமையாதல்; நிறைதல்	3041
601.	நிரவு	மேடு பள்ளமாக உள்ள இடத்தைச் சமதளமாக்குதல் ; சமப்படுத்துதல்	3041
602.	நிலவு	அறியக்கூடிய வகையில் காணப்படுதல்	3043
603.	நிலை	நீண்ட காலத்திற்கு நீடித்து அமைதல்	3043
604.	நிறு	(பொருளைத் தராசில் வைத்து) எடையைக் கணக்கிடுதல் ; எடைபோடுதல்	3043
605.	நிறுத்து	(ஒரு காரணத்திற்காக வாகனத்தை) நிற்கச் செய்தல்	3043
606.	நிறுவு	(பத்திரிக்கை, அமைப்பு முதலியவற்றை முதன்முதலாக) தொடங்குதல் ; ஏறுபடுத்துதல்	-

607.	நிறை	நிரம்புதல், நிரப்புதல்	3049
608.	நிறைவேறு	(மேற்கண்ட நடவடிக்கையால்) முடிவு அல்லது பயன் கிடைத்தல்	3049
609.	நிறைவேற்று	முடிவுபெறும்படி அல்லது பயன் கிடைக்கும் படி நடவடிக்கை மேற்கொள்ளுதல்; செயல்படுத்துதல்	3049
610.	நீ	துறத்தல் ; விடுத்தல்	3052
611.	நீக்கு	(இருக்கிற ஒன்றை) இல்லாதபடி ஆக்குதல்; அகற்றுதல்	3052
612.	நீங்கு	(பசி, நோய் முதலியவை) இல்லாமல் போதல்; தீர்தல்	-
613.	நீடி	(கால அளவில்) தொடர்தல்; முடிவுக்கு வருவது தள்ளிப் போதல்.	3059
614.	நீட்டி	(நிர்ணயிக்கப்பட்ட கால வரம்பை) மேலும் அதிகரித்தல் கால வரம்பிற்குள் முடிய வேண்டியதை) முடிக்காமல் வளர்த்தல்	3059
615.	நீட்டு	(கைகால் முதலியவற்றை இருக்கும் நிலையிலிருந்து முன்னோக்கிப் போகச் செய்தல் (ஒன்றை) நீளச் செய்தல்	3059
616.	நீந்து	(நீரில் மிதப்பதற்காக அல்லது குறிப்பிட்ட திசையில் செல்வதற்காக) கை, கால்களை அசைத்து நீரைத் தள்ளுதல் (மீன் முதலியவை) நீரினுள் நகர்தல்	3054
617.	நீர்	(திரவத்தை) அடத்தியைக் குறைத்தல் ; (மோர் போன்றவற்றில்) நீர் கலந்து நீர்த் தன்மை உடைய தாக்குதல்	-
618.	நீவு	(உடலின் பகுதியை விரலால்) தடவுதல்	3058
619.	நீள்	நீளத்தில் கூடுதல்	3059
620.	நீற்று	(வெள்ளையடிப்பதற்கு ஏற்ற வகையில்	3060

		சுண்ணாம்புக் கட்டிகளை நீரில் போட்டு) குழையச் செய்தல்	
621.	நுகர்	(புலன்களால் உணர்ந்து அனுபவித்தல்	3062
622.	நுணுக்கு	(கல் முதலியவற்றால் தட்டி அல்லது அம்மியில் வைத்து) பொடியாக்குதல் ; தூளாக்குதல்	3066
623.	நுரை	நுரை உருவாதல் ; நுரை தருதல்	3074
624.	நூல்	(கையால் அல்லது இயந்திரத்தின் உதவியால்) இழைகளைச் சேர்த்து மெல்லிய நீண்ட தொடராக இருக்கும் படி சுற்றுதல்; (நூல்) முறுக்குதல்.	3087
625.	நெம்பு	(ஏதேனும் ஒரு கருவி, கழி போன்றவற்றை ஒரு பொருளின் அடியில் கொடுத்து) மேலே உயரும்படி விசையுடன் அழுத்துதல்	-
626.	நெய்	(துணி, பாய் முதலியவற்றை உருவாக்குவதற்காகத் தறியல்) நீளவாட்டில் நூலில் அல்லது கோரையை வைத்துக் குறுக்குவாட்டில் கோத்துப் பின்னுதல்	3103
627.	நெரகு	(ஒன்றின் மீது சிறிய பொருள் அல்லது சமதளமற்ற பரப்பு) அழுத்தி உராய்தல்; உறுத்துதல்	-
628.	நெரி	இறக்கி அழுத்துதல்	-
629.	நெருங்கு	(ஓர் இடத்தை, ஒன்றை, ஒருவரை) அணுகுதல்; சமீபித்தல்	3124
630.	நெருகு	(ஒன்றின் மீது சிறிய பொருள் அல்லது சமதளமற்ற பரப்பு) அழுத்தி உராய்தல்; உறுத்துதல்	-
631.	நெளி	(புழு, பாம்பு முதலியவற்றை) மடங்கியோ வளைந்தோ அசைதல்	2393

632.	நெறி	(கோபம் முதலியவற்றால் நெற்றியைச் சுருக்கிப் புருவங்களை) நெருங்கச் செய்தல்	-
633.	நேசி	அன்புசெலுத்துதல் ; விரும்புதல்	2977
634.	நேர்	(இவ்வாறு செய்ய வேண்டும் என்ற நோக்கம் இல்லாமலேயே) நிகழ்தல் ; (தடுக்க முடியாதபடி) ஏற்படுதல்	3124
635.	நை	(துணி) இற்றுப் போதல்; நூல் நூலாகப் பிரிதல்; நசுங்கதல்	2950 (49)
636.	நொடி	ஓடிதல்	2396
637.	கோண்டு	(பாதத்தை முழுமையாக பதிக்க முடியாமல்) ஒரு பகுதியை மட்டும் ஊன்றுதல்	3138
638.	நொறுக்கி	சிறுசிறு பகுதிகளாக ஆகுமாறு உடைத்தல்	3089
639.	நொறுங்கு	உடைந்து சிறுசிறு பகுதிகளாக ஆதல்; (நசுங்கி) உருக்குலைதல்	3089
640.	நோ	(பெரும்பாலும் நிகழ்கால முற்று வடிவங்களும் 'நோக' என்னும் எச்ச வடிவமும்) (உடல், கை, கால் முதலிய உறுப்புகள்) வலித்தல்	3143
641.	நோக்கு	பார்த்தல்	3144
642.	நோல்	(நோண்பை) மேற்கொள்ளுதல்	-
643.	பகர்	சொல்லுதல் ; கூறுதல்	-
644.	பகட்டு	ஆடம்பரமாக நடந்து கொள்ளுதல்	-
645.	பகிர்	இருப்பவர்களுக்குக் கொடுப்பதற்காக) பிரித்தல்	3154
646.	பகு	பங்கிடுதல் ; பகிர்தல்	3154
647.	பகை	(ஒருவரை) எதிரியாக ஆக்குதல்	3154
648.	பசப்பு	(தன் செயலை நிறைவேற்றிக் கொள்ள) ஒருவரின் அனுதாபத்தைப் பெறம் வகையில் பேசுதல்	-

		அல்லது நடந்து கொள்ளுதல்	
649.	பசி	ஒருவருக்கு உணவு உண்ண வேண்டும் என்ற உணர்வு ஏற்படுதல்	3165
650.	படர்	(செடி, கொடி முதலியவை) பரவலாகுதல் அல்லது விரிதல்	3182
651.	பட பட	(இமைகள், சிறகுகள் முதலியவை) வேகமாக அடித்துக்கொள்ளதல் ; (இதயம்) வேகமாகத் துடித்தல் ;	-
652.	படி	(பனி, ஈரம் அல்லது தூசு போன்றவை ஒரு பரப்பின் மீது) பரவித் தங்குதல்	3186
653.	படு	ஒரு பரப்பின் மீது வந்தமைதல் அல்லது விழுதல்	3191
654.	படுத்து	(துன்பம், தொல்லை, தொந்தரவு முதலியவற்றிற்கு உள்ளாக்குதல்)	3191
655.	படை	(புதிய முறையில் ஒன்றை) உருவாக்குதல்	3191
656.	பணி	உத்தரவிடுதல் ; கடடளையிடுதல்	3212
657.	பண்ணு	ஒரு செயலில் ஈடுபட்டிருத்தல்	3209
658.	பதறு	நடுங்கிக் கலங்குதல்	-
659.	பதி	அழுந்துதல் ; உட்செல்லுதல்	3232
660.	பதுக்கு	(பணம் முதலியவற்றை சட்டவிரோதமாக) மறைத்து வைத்தல்	-
661.	பதுங்கு	(வெளியில் இருப்பது ஆபத்து அல்லது நோக்கத்திற்கு இடையூறு என்ற நிலைமையால்) ஒளித்தல்: மறைந்திருத்தல்	3233
662.	பதை	பொறுக்க முடியாமல் தவித்தல்	3231
663.	பத்து	போதுமானதாக இருத்தல்	-

664.	பம்மு	(ஒருவரைக் கண்டு வெளிவரும் பயந்து) ஒளிதல்; பதுங்குதல்	-
665.	பய	(தீங்கு அல்லது ஆபத்து நேரக்கூடிய வேளையில்) பாதுகாப்பு இல்லை என்பது போன்ற கலக்க என்பது போன்ற கலக்க உணர்வு தோன்றுதல்	-
666.	பயில்	(கல்வி, கலை முதலியவை) கற்றல்; படித்தல்	3251
667.	பயிற்று	கற்றுக் கொடுத்தல்; கற்பித்தல்	3251
668.	பர	ஓர் இடத்தில் நிறைதல்; விரிந்தமைதல்	3255
669.	பரத்து	(இடத்தை அடைத்து) நிரப்புதல்; பரப்புதல்	3255
670.	பரப்பு	பலரும் அறியச் செய்தல்	3255
671.	பரவு	(திரவம், வாயு முதலியவை) சுற்றிலும் செல்லுதல்	3255
672.	பரு	சதைப்பற்று மிகுதல்; பெருத்தல்	-
673.	பருகு	குடித்தல்; அருந்துதல்	3279
674.	பல	(மழை பெய்வது, காற்று அடிப்பது) வலுத்தல்; அதிகமாதல்	3289
675.	பள பள	(ஒன்றின் பரப்பு ஒளியால்) மினுங்குதல்; பிராகாசித்தல்	3303
676.	பற	வானவெளியில் வேகமாகச் செல்லுதல்	3311
677.	பறி	இழுத்துத் துண்டித்தல்; துண்டித்தெடுத்தல்	3317
678.	பற்று	பிடித்தல்	3320
679.	பனி	(குளிர்காலத்தில்) காற்றில் உணர்கிற குளிர்ச்சி அல்லது காற்றில் இறங்குகிற ஈரம்	3322
680.	பாடு	(பாடலை) இசையோடு வெளியிடுதல்	3348
681.	பாதி	இயல்பான தன்மைக்கு அல்லது நிலைக்குக்கேடு	-

		அல்லது தடைவிளைத்தல்	
682.	பாய்	(குறிப்பிட்ட திசையில்) வேகத்துடன் தாவுதல் ; தரையிலிருந்து கிளம்பி ஓர் இலக்கு நோக்கி விரைந்து விழுதல்	3362
683.	பாய்ச்சு	(பயிர், செடி போன்றவற்றிற்கு) நீர் செல்லும்படி செய்தல் ; இறைத்தல்	3362
684.	பார்	(தோற்றம் உடையவற்றை) கண்கள்மூலம் அறிதல் அல்லது உணர்தல் ; காணுதல்	-
685.	பாரி	(உடம்பு) பருத்தல்	-
686.	பாவு	(கல், பலகை போன்றவற்றைத் தளத்தில் வரிசையாக) பரப்புதல்	3362
687.	பிசகு	(கால், கை போன்ற உறுப்பு) சுளுக்குதல்	3400
688.	பிசுபிசு	(மழை) அடித்துப்பெய்யாமல் சிறு தூறலாக விழுதல்	3401
689.	பிசை	(கையால்) அழுத்திப் புரட்டி உருட்டுதல்	3404
690.	பிடி	(ஒரு கைக்குள் அல்லது இரு கைகளுக்குள்) இருக்கும் படி செய்தல்	3412
691.	பிடுங்கு	(ஓர் இடத்தில் பதிந்திருப்பதை அல்லது ஒருவர் வைத்திருப்பதை) விசையுடன் அகற்றுதல் அல்லது எடுத்துக் கொள்ளுதல் ; பறித்தல்	3416
692.	பிணங்கு	(ஒருவரோடு) மாறுபாடு கொள்ளுதல்	3423
693.	பிணி	சேர்த்துக் கட்டுதல் ; ஒருசேர இணைத்தல்	3420
694.	பிணை$_1$	(ஒன்றோடு ஒன்று) நெருக்கமாக இணைதல்	3423
695.	பிணை$_2$	கட்டுதல் ; (முறுக்கியோ முடிச்சு போட்டோ) இணைத்தல்	3423
696.	பிதுக்கு	(உள்ளிருப்பதை வெளியேற்ற) பக்கவாட்டில் அழுத்துதல்	3426

697.	பிந்து	(ஒருவருக்கு அல்லது ஒன்றிற்கு) இணைந்த நிலையில் இல்லாமல் பின்னால் அமைதல்	3426
698.	பிந்து	(ஒருவருக்கு அல்லது ஒன்றிற்கு) இணைந்த நிலையில் இல்லாமல் பின்னால் அமைதல்	3452
699.	பிய்	(இணைந்திருக்கும் நல்ல நிலையிலிருந்து) பிரிந்து வருதல் ; கிழிதல்	3431
700	பிரி	(கட்டு, முடிச்சு போன்றவை) பிணைக்கப்பட்டிருக்கும் நிலையிலிருந்து விடுபட்டு வருதல்: ஒட்டியிருக்கும் நிலையிலிருந்து விடுபடுதல்.	3435
701	பிள்	(உணவுப் பொருள்ப் பிய்த்து அல்லது உடைத்து) துண்டாக்குதல்.	-
702	பிள	(நிலம், பாறை,மரம் முதலியன) தனித்தனியாகப் பிரியும்படி இரண்டதல் (பாறை, மரம்,முதலியவற்றை) இரண்டாக்குதல்.	3446
703	பிற	(நன்காம் வேற்றுமை உருபோடு)குழந்தை பெறுதல்/விலங்கினத்தை குறிப்பிடும் போது வெளிவருதல்.	3622
704	பின்னு	(தலைமுடிப் பகுதிகளாக பிரித்து சடை போட அல்லது நார் போன்றவற்றை கயிறாக ஆக்க) ஒன்றின்மிது ஒன்றாக மாற்றி வைத்து இறுக்குதல்.	3454
705	பீச்சு	(நீர் முதலியதிரவம்) வேகத்துடன் தாரையாக வெளிவருதல் பாய்தல்/(நீர் முதலியவற்றை)வேகத்துடன் வெளியேற்றுதல்,பாய்ச்சுதல்.	3462
706	புகு	(குறுகிய இடத்தில் அல்லது ஒன்றினுள்)நுழைதல்.	3481
707	புடை	(அதிசி முதலியவற்றை அவற்றில் உள்ள தூசி,தவிடு முதலியவை நீங்குமாறு) முறத்திலிட்டு மேலும் கீழுமாக ஆட்டுதல் அல்லது தட்டுதல்.	3493
708	புணர்	உடலுறவு கொள்ளுதல்; கலத்தல்.	3423
709	புதுக்கு	(பாத்திரம் முதலியவை) பளபளப் படையும்படி செய்தல் ; மெருகுகெற்றுதல்.	-
710	புதுப்பி	(பழுதற்றநிலையல் உள்ளதை அல்லது பழைய பாணியில் இருப்பதை) புதுப்பொலிவுடன் மாற்றி அடைத்தல்.	3511
711	புதை	(மணல், சேறு போன்ற) உள்ளிறுக்கும் அழுத்தி	3686

		அல்லது அழுத்தப்பட்டு உட்செலுத்துதல்.	
712	புரட்டு	(ஒருவரை அல்லது ஒரு பொருளை) ஒரு பக்கமாக உருட்டுதல்: மறுபக்கம் வரும் படியாகச் செய்தல்.	3516
713	புரள்	(பக்கவாட்டில் உருளுதல்.	3516
